தமிழ் வாழ்க

மடைமாறிய தமிழிலக்கணநூல்கள்

30299



பாவலரேறு ச. பாலசுந்தரம்

தமிழ் வாழ்க

மடை மாறிய தமிழ் இலக்கண நூல்கள்

ஆசிரியர்

பாவலரேறு ச. பாலசுந்தரம்

(தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகை உரையாசிரியர்)

தாமரை வெளியீட்டகம்

367, மேல வீதி, தஞ்சாவூர் 613 009.

நூலாசிரியன் சொந்த வெளியீடு
முதற்பதிப்பு ஜூலை 1998
நூல் டெம்மி 1x8 பக்கம் 112

படைப்பு

ந.மு.வே.நாட்டார் திருவருள் கல்லூரி நிறுவனர்
பேராசிரியர் **பி. விருத்தாசலனார்** அவர்கட்கு

விலை. 30/-

அச்சிட்டோர் :
ராசி அச்சகம், 1077, கீழ ராஜ வீதி, தஞ்சாவூர்.
போன் : 31386

அணிந்துரை

(பெரும்புலவர் தி.வே. கோபாலையர்)

பாவலர்ஏறு திருபாலசுந்தரனார் ஆசிரியர் நச்சினார்கினியர் போலவே தொல்காப்பியம் ஒன்றே நிரம்பிய இலக்கணத்தது. பிறர் கூறியுள்ள நூல்கள் வழுவின்றி நிரம்பிய இலக்கணத்தவல்ல என்னும் உறுதியான கருத்துடையவர் அவைகள் தாம் தோன்றிய காலத்து அரசியல் சமுதாய சமயச்சூழ்நிலைகளால் மடைமாறிய தமிழ் இலக்கண நூல்களாயின என்று கருதுகிறார். இடைக்காலத்துத் தோன்றிய வீரசோழியம் நேமிநாதம் என்னும் சின்னூல் நன்னூல் என்பன மடைமாறிய செய்திகளைத் தொகுத்துக் கூறுதற்கென்றே இச்சிறு நூலை இயற்றியுள்ளார்.

தொல்காப்பியனார் தம் காலத்து வழங்கிய சான்றோர் பேச்சு வழக்கினையும் செய்யுள் வழக்கினையும் முந்து நூல்களையும் அறிந்து தேர்ந்து கற்றுத் தமிழ் வழக்கு வடமொழி முதலிய அயல்மொழிக் கலப்பால் சிதைந்து போகக்கூடாது என்ற அருள் உணர்வோடு எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று உறுப்பும் அடக்கிய பிண்டமாகத் தொல்காப்பியம் (தொன்மையான மரபுகளைக் காக்க இயம்புவது) என்னும் தலைப்பில் நூலைப்படைத்தார்.

உரியடிச் சொற்களிலிருந்து இருதிணை ஐம்பாற் சொற் களைப் படைத்து அகமும் புறமும் பற்றிய இலக்கியக்கியங்களைச் செய்வதற்குக் கருவி நூலாகத் தொல்காப்பியம் செய்யப்பட்டமையான் தனிச் சொல்லாக்க முறைமைகள் அதன்கண் கூறப்படவேண்டிய தேவை ஏற்படவில்லை. அதனால் காலங்காட்டும் இடைச்சொல் முதலியன விதந்து கூறப்படவில்லை. தொல்காப்பியனார் காலத்து வடமொழியிலும் தனிச்சொல்லமைப்பிலக்கணம் முறையாகத் தோன்றவில்லை. சொல்லுறுப் புக்களைப் பிரித்துணர்ந்து பெயர்ச்சொல், வினைச் சொற்களை உருவாக்கும் இலக்கணத்தை விரிவாகச் செய்தவர் பாணினி முனிவராவார். தொல்காப்பியர் பாணினிக்குப் பிற்பட்டவராய் இருந்திருப்பின் தனிச்சொல்லாக்க மரபினையும் எடுத்து கூறியிருப்பார். அவர் குறிப்பிடாது விடுத்த தமிழின் தனிச்சொல்லாக்க மரபினை நெறியறியாது விளக்க வீரசோழியம் முற்பட்டுள்ளது. அத்துறையில் நன்னூல் ஓரளவு வெற்றி கண்டுள்ளது.

தொல்காப்பியம் தோன்றிய ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் அகப் பொருள் பற்றிய இறையனார் களவியல் என்றநூலும், அதனையடுத்துப் புறப்பொருள் பற்றிய புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூலும் தோன்றின. சிலப்பதிகாரத்தில் உள்ள வரிப்பாடல் குரவைப்பாடல்கள் சைவ சமயச்சான்றோர் அருளிய திருமுறைகள், ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் முத்தொள்ளாயிரம் போல் வனவற்றை இலக்கியமாகக் கொண்டு அவற்றிற்கும் இலக்கணம் வகுக்கும் வகையில் அறிஞர் பலர் ஒன்று கூடி ஒருமைப்பட்டு ஓரேவிதச் செய்திகளைக்கூறும் யாப்புநூல் பலவற்றை வரைந்து புதியசெய்திகளைத்தம் மாணாக்கரிடையே பரப்பினர் அவைகள் தோன்றிய ஒரு நூற்றாண்டிற்குள் யாப்பருங் கலமும்,

யாப்பருங்கலக் காரிகையும் விரிவான உரைகளோடு வெளிவர அந்த யாப்புநூல்கள் யாவும் அவ்விரு நூல்களின் உரையுள் அடக்கப்பட்டன. இவையாவும் 9,10 ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை அணிநூல்கள் வடமொழியில் தோன்ற அவற்றை மொழிபெயர்த்துத் தமிழிலும் கொள்ள வேண்டும் என்று தமிழ்ச்சான்றோர்கள் கருதினர். எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பகுப்புள்ளதாக இருந்த தமிழிலக்கணத்தை யாப்பு அணி என்பனவற்றை உட்கொண்டு ஐந்து பகுப்பினதாக விரித்துக் கொள்ள வேண்டும் என்று சான்றோர்கள் பதினோராம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கருதினர். அக்காலத்தில்தான் ஐந்திலக்கண நூலாகிய வீரசோழியம் தோன்றியது.

பழந்தமிழ் மன்னர்களின் ஆட்சிக்குப்பின் தோன்றிய களப்பிரர் பல்லவர் ஆகியோர் ஆட்சியில் பாகதமும் வடமொழியும் தமிழைவிடச் செல்வாக்குப் பெற்றன. அவர்கள் ஆட்சி நீங்கிய பின்னரும் வடமொழியின் செல்வாக்கு தொடர்ந்தது. இடைக்காலச் சோழ, பாண்டியர் தம் பெயர்களையும் வடமொழிப்பெயர்களாகவே வைத்துக்கொண்டனர். பாரததேயத்திலுள்ள எல்லாமொழிகளுக்கும் தாய் வடமொழியே என்றதவறான எண்ணம் கற்றுவல்ல சான்றோர்களிடையும் உறுதியாக நிலவுவதாயிற்று. இத்தகைய சூழ்நிலை 11 ஆம் நூற்றாண்டில் நிலவியது. பாகதம் வடமொழி இவற்றில் வல்ல சமண, பவுத்தச் சான்றோர்கள் தமிழும் பயின்று தமிழ் இலக்கணங்களும் வகுக்கத் தொடங்கினர். வீரராசேந்திரன் கி.பி (1062-68) என்ற சோழமன்னன் ஆட்சிக்காலத்தில் பொன்பற்றி என்ற பகுதியில் குறுநில மன்னராக ஆண்ட புத்தமித்திரனார் என்ற அறிஞர் தாம்பெற்ற பாலிமொழி, வடமொழி தமிழ் மொழி ஆகியவற்றின் அறிவைக்கொண்டு தமிழுக்கு முழுமையானதொரு இலக்கணநூல் இயற்ற முற்பட்டார். மூன்றுபகுப்பினதாகப் பண்டு இருந்த தமிழ் இலக்கணம் இவர்காலத்தில் யாப்பு அணி என்பவற்றுடன் ஐம்பகுப்பினதாக இருத்தல் வேண்டும் என விரும்பினார். தெளிவாகச் செய்திகளை நூற்பாயாப்பில் தெரிவிக்கலாம். யாப்பருங்கலக்காரிகைக் கட்டளைக்கலித் துறையாப்பில் இயற்றப்படின் மக்களிடையே பெரிதும் பரவும் எனக் கருதிப் புத்தமித்திரனார் தம் ஐந்திலக்கணநூலை 180 கட்டளைக் கலித்துறைகளில் அமைத்து வைத்தார். அந்நூலுக்குத்தம் பேரரசன் பேரால் "வீரசோழியம்" என்று பெயரிட்டார். அந்நூலுக்கு அவர் மாணாக்கரான பெருந்தேவனார் அவர் கருத்தினை உட்கொண்டு கடனாகவே உரைவரைந்தார். அவ்வுரை இலதேல் அந்நூலை இப்பொழுது விளங்கிக் கொள்ளும் அளவிற்கு மூலத்தைக் கொண்டு விளங்கிக் கொள்ளுதல் என்பது இயலாத செயலாகும். இனி அந்நூலுள் கூறப்பட்ட செய்திகளை நோக்குவோம்.

சார்பெழுத்தாகிய குற்றியலிகரமும் குற்றியலுகரமும் இகர உகரங்களின் குறுக்கங்கள் எனக் கொள்ளப்பட்டுள்ளது. சார்பெழுத்தாகிய ஆய்தம் உயிர், மெய் என்பன போலக் கொள்ளப்பட்டுத் தமிழ் எழுத்துக்கள் உயிர் 12, ஆய்தம் 1, மெய் 18 ஆக 31 என்று வரையறுக்கப்பட்டுள்ளன.

அருளாளர் பாசுரங்களில் ளகரத்திற்கு ழகரம் எதுகையாய் ஓரோ வழி வருதலையும் சூழ்ச்சியே என்பது சூட்சியமே. வாழ்நாள் என்பது வாணாள் எனவும் பாழ்நனேன் என்பது பாணனேன் எனவும் ஓரோ வழி வருதலை உட்கொண்டு ளகரத்திற்குரிய புணர்ச்சி விதி ழகரத்திற்கும் கொள்ளப்பட்டுப் புகட்சி, இகட்சி, தமிட்சொல் முதலிய சொற்களும் ஆளப்பட்டுள்ளன. இடைநிலை மெய்மயக்கம் உடனிலை மெய்மயக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. வகர மெய் மொழியிறுதியில் வாராதென்று கூறப்பட்டுள்ளது இகர, ஈகர ஐகார ஈற்றுச் சொற்களின் முன் வருமொழி முதல் நகரம் ஞகரமாகத்திரியும் என்று ஒருசார் பேச்சு வழக்கிற்கு இலக்கணங் கூறப்பட்டுள்ளது. அஃது முதலியன அது முதலியவற்றின் திரிபு எனக் கூறப்பட்டுள்ளது. புணர்ச்சி கூறுமிடத்து அல்வழி வேற்றுமை என்ற பகுப்பே கொள்ளப்படவில்லை. தேவையற்ற வடமொழிப் புணர்ச்சிக்கு விதிகள் கூறப்பட்டுள்ளன. சுருக்கமாக அமைந்த எழுத்ததிகாரப்பகுதி இத்தகைய பொருந்தாத செய்திகளுக்கு இருப்பிடமாயுள்ளது.

சொல்லதிகாரம் பொருந்தாத வடமொழி இலக்கணக் கொள்கைகளைக் கூறிச் சிறுபான்மை தமிழ் மரபினை ஒப்பிட்டும் ஒப்பிடாமலும் அமைந்துள்ளது.

பால்பாகுபாட்டில் சிறப்பித்த சொல் என்ற புதிய பகுப்பு - உருபுகளே வேற்றுமை செய்யும் என்ற கருத்து. தமிழிலும் பிராதிபதிகம் வேறு பிரதமாவிபத்தி வேறு என்று கொண்டுள்ளமை பெயர்ச் சொற்களைப் பிராதிபதிகம் எனவும் பிரத்தியம் எனவும் வினைச்சொற்களைத் தாது எனவும் பிரத்தியம் எனவும் தம் விருப்பப்படிப் பிரித்து இலக்கணம் கூறும் செயல் தமிழுக்கு ஒவ்வாத பலதத்திதப் பிரத்தியங்கள் போல்வன தமிழ் பயில்வாரைத் திசை திருப்பும் மயக்கச்செய்திகளாம்.

தொகை இலக்கணத்தில் வடமொழித் தொகைஇலக்கணம், தமிழ் மொழித்தொகை இலக்கணம் என்ற இரண்டும் குறிப்பிடப் பட்டுள்ளன. இவர் குறிப்பிடும் தத்தித பத இலக்கணம், பலபகுபதங்கள், ஆகுபெயர், குறிப்புவினை முதலியவற்றை நன்குணரப் பயன்படுகிறது. வடசொற்கள் தமிழில் வந்து வழங்கும் விதம் பற்றிய செய்திகள் பலவும் நன்னூலாருக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன. "ஆவி பின் தோன்றக்கெடும் குற்றுகரம்" (காரி - 21) என்ற தொல் காப்பியத்திற்கு முரணான செய்தியை வீரசோழியம் குறிப்பிட அதுவே நேமிநாதம் நன்னூல் முதலிய பின்னூல்களிலும் இடம் பெற்றுள்ளது. தெளிவாக உணரப்படவேண்டிய எழுத்து, சொல் பற்றிய செய்திகளை வடமொழி மரபுகளோடு கலந்து குழம்பிப் பயில்வோர்க்கு மயக்கமேயன்றித் தெளிவுதராத நிலையில் வீர சோழியம் எழுத்து, சொல் பற்றிய படலங்களை அமைத்துள்ளது.

தொல்காப்பியத்தின்பின் ஆயிரம் ஆண்டுகள் கழித்துத் தமிழுக்கு முழு இலக்கணநூல் ஒன்றைத்தம் காலத்து விரிவிற்கேற்ப அவலோகிதனுக்குத் தனிச் சிறப்பளித்து ஐம்பகுப்புகளாகக் கொண்டு சுருக்கமாக அமைத்துவிட்டமை கருதிப் புத்தமித்தரனார் மனநிறைவு கொள்ள, அவர் மாணாக்கர் பெருந்தேவனார் அந்நூலுக்குக் கடனாகவே உரைவரைந்து தம் கடமையை நிறைவேற்றிய நிறைவு கொண்டார்.

இதனைக் கண்ணுற்ற சமயச்சான்றோர்கள் வீரசோழியத்தின் வடமொழிச் சார்புபற்றிய செய்திகள் தமிழுக்கு ஏலாதனவாதலின் தமிழுக்குச் சிறப்பான வகையில் சமணர்கள் வாயிலாக எழுத்து, சொல் இலக்கணம் வெளிவரவேண்டுமென்று கருதினர். அவ் அடிப்படையில் எழுத்ததிகாரத்தில் தமிழ்ச் சந்திகளோடு தமிழில் பயில வழங்கும் வடமொழிச் சந்திகள் சிலவற்றையும் குறிப்பிட்டுச் சொல்லதிகாரத்தைத் தொல்காப்பியத்தை உட்கொண்டு அதன் சுருக்கமாக அமைத்துத் 97 வெண்பாக்களில் நேமிநாதம் என்ற பெயரால் எழுத்து - சொல் என்பவற்றின் இலக்கணங்கூறும் இன்னூலை குணவீர பண்டிதர் என்ற சமணச் சான்றவர் இயற்றினார்.

உயிர் 12, ஆய்தம் 1, மெய் 18, இவை முதல்வைப்பு எழுத்துக்கள். இரண்டாம் வைப்பு எழுத்துக்கள் உயிர்மெய் 216 உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐ, ஔக் குறுக்கங்கள் ஒவ்வொன்றுக்கும் 11/2 மாத்திரை மகர - ஆய்தக் குறுக்கங்கள் ஒவ்வொன்றும் கால் மாத்திரை என்று நேமிநாதம் குறிப்பிடுகின்றது. இவற்றையே நன்னூல் பெரும்பாலும் உட்கொண்டு முதலெழுத்து 30, சார்பெழுத்து 10 என்று ஆய்தத்தைச் சார்பெழுத்தாகக் கொண்டு குறிப்பிடுகிறது. வீரசோழியம் யகரவருக்கத்தில் ஆறும் ஞகரவருக்கத்தில் நான்கெழுத்தும் மொழிமுதலில்வரும் என்று குறிப்பிடவும் நேமிநாதம் ஞ-ய என்ற இவ்விரண்டன் கண்ணும் மும்மூன்றே குறிப்பிடுகின்றது. வீரசோழியம் வகரம் ஈற்றில் வாராது என்னவும் நேமிநாதம் வரும் என்கின்றது. இந்நூல் வடமொழிப் புணர்ச்சிகளை முற்கூறிப்பின் தமிழ் மொழிப்புணர்ச்சிகளைச் சுருக்கமாக அல்வழி வேற்றுமை என்னும் வேறுபாடு காட்டாமல் குறிப்படுகின்றது. இதன் சொல்லதிகாரம் தொல்காப்பியச் சொல்லதிகாரச்சுருக்கமே. இந்நூல் பத்துவகை எச்சம் பற்றி யாதும் குறிப்பிடவில்லை. இது நூற்பாப் போலத் தெளிவாகக் குறிப்பிட இயலாத வெண்பா யாப்பில் இயற்றப்பட்டதாலும் மிகமிகச் சுருக்கமாக அமைத்ததாலும் பெரும்பாலும் பயிலப்படாதாயிற்று.

உயிர்மெய்யை 216 என எண்ணிட்டுச் சார்பெழுத்தெனல், ஆய்தத்தை முதலெழுத்தாக அடக்கல் குற்றியலிகரமும், குற்றியலுகரமும் இகர, உகரங்களின் குறுக்கம் எனக் கொள்ளுதல் ஏனைய குறுக்கங்களையும் சார்பெழுத்தாகக் கோடல் வருமொழிமுதல் உயிர்வரின் நிலைமொழி ஈற்றுக் குற்றியலுகரம் கெடும் எனக் கோடல் போல்வன தொல்காப்பிய மரபிற்கு மாறுபட்ட செய்திகளாம்.

சின்னூலாகிய நேமிநாதம் பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றியது. இதனை அடுத்துப் பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியது நன்னூல் இது. பவணந்தி முனிவர் எனும் சமணப்பெரியாரால் வீரசோழியத்தில் காணப்படும் தீங்குகள் தன்னிடத்திற் கலவாத நன்னூல் என்ற பெயரில் சின்னூலைப் போல மிக மிகச் சுருக்கமாக அமையாமல் தேவையான செய்திகளை யெல்லாம் உட்கொண்டு தொல்காப்பியத்தை நோக்கச் சுருக்க நூலாக நூற்பாயாப்பில் இயற்றப்பட்டதாகும்.

இன்று தமிழ்ச்சான்றோரால் போற்றப்படும் எழுத்தும் சொல்லும் பற்றிய இலக்கணநூல் நன்னூலே என்பதில் ஐயமில்லை. எனினும் இதன்கண் தொல்காப்பிய நெறிக்கு மாறுபட்ட பல செய்திகளையும் பாவலரேறு குறிப்பிடும் பொழுதுதான் இத்தகைய குறைகள் இந்நூலில் உள்ளன என்று நமக்குத் தோன்றுகின்றது.

"மொழி முதற்காரணமாம் அணுத்திரள் ஒலி" எழுத்து "எனல் - உயிர் மெய் முதலிய பத்தனையும் சார்பெழுத்தாகக் கோடல்" - உயிர்மெய் 216, ஆய்தம் 8, உயிரளபு 21, ஒற்றளபு 42, என்றாற் போல சார்பெழுத்துக்களுக்கு எண்ணிக்கை கூறல் - "ஓரேழுத்தொரு மொழி, ஈரேழுத்தொரு மொழி இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி" என்ற தொல்காப்பிய மரபை மாற்றி எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம் எனல் - தொல்காப்பியம் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் கூறவும், நன்னூல் எழுதப்பட்ட வரிவடிவச் சொற்றொடர்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளதால் வரிவடிவு ஒலிவடிவு இரண்டனையும் கலந்து கொண்டு செய்யும் குழப்பம் - முதலியகுறைபாடுகள் (வழுக்கள்) பகாப்பதம், பகுபதம் பகுதிபற்றிய நூற்பாக்களின் குறைபாடு - சந்தி, விகாரம் இவற்றைப் பகுபத உறுப்பாகக் கொண்டுள்ள பொருத்தமின்மை - இடுகுறிப்பெயர் என்னும் தமிழ் மரபிற்குப் பொருந்தாத பகுப்பு - 'உயிர்மெய்' என்பதன் உண்மைப்பொருள் உணராமை - ஆவி, உடம்பென்பன அவற்றின் பரியாயம் எனக்கோடல் ஐகார, ஔகாரங்கள் ஒரு மாத்திரைய என்பதனால் யாப்பில் ஏற்படக் கூடியதவறுகள் நிலைமொழி, வருமொழி என்னும் இலக்கணக் கலைச்சொல்லின் குறைபாடு. மெய்பதினெட்டும் மொழிக்கு உறுப்பாக வருமிடத்துத் தத்தம் ஒலிமயங்குதற் குரியனவே உடன்வரும் என்பதனைக் குறிப்பிடும் மெய்ம்மயக்க இலக்கணத்தை உள்ளவாறு உணராமல் கூறும் செய்திகள்.

தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மரபுச் சொற்களின் குறைபாடுகள், பகாப்பதம் ஏழெழுத்து பகுபதம் ஒன்பது எழுத்து உயர் அளவையாகத் தமிழிற் பொருந்தும் என்பதன் குறைபாடு - உயர்திணையில் நேமிநாதம் போல மக்களோடு தேவர் நரகரை இணைத்துக் கூறிய பொருத்தமின்மை - பண்பிற்பகாநிலைப் பதமும் அவற்றின் புணர்ச்சி பற்றிய விதிகளும் பழைய மரபிற்குப் பொருந்தாமை - பலர் பாலுக்கும், பலவின்பாலுக்கும் கள் ஈறு புணர்த்தல் தன்மைப் பெயர்களைப் பொதுப்பெயர் எனல் பற்றியசிக்கல் பெயரெச்சம் வினையச்சம் வினைவகை என்பதன்கண் உள்ள பொருந்தாமை - தொகையின் பொதுவிலக்கணம் - வேற்றுமைத்தொகை, வினைத்தொகை - பண்புத்தொகை - அன்மொழித்தொகை பற்றிய நூற்பாக்களில் காணும் குறைபாடுகள் இடை, உரி இலக்கணம் பற்றிய நூற்பாக்களில் காணும் குறைபாடுகள் - நடவாமடிசீ (நூ-137) பதமுன் விகுதியும் பதமும் (நூ-243) ஆல் ஆன் ஒடு ஒடு உருபு---- (நூ-297) நீங்கல் ஒப்புஎல்லை ஏது (நூ-299) ஒருமொழி தொடர்மொழி, பொதுமொழி - (நூ-259) ஆண் பெண் பலர் என . . . (நூ-262) பேடுபற்றிய நூற்பா (நூ-294) இயற்சொல் திரிசொல் (நூ-270) இடுகுறிகாரணமாபோடு (நூ-275).

போன்ற நூற்பாக்களின் குறைபாடுகளை விரிவாக விளக்கிக் கூறியுள்ளார். பாவலரேறு இங்ஙனம் இந்நூலில் உள்ள குறைபாடுகளை எடுத்து விளக்கிய பின்னரே நன்னூல் அமைப்பிலும் இவ்வளவு குறைகள் உள்ளனவா என்றுநாம் வியக்கிறோம். இவர் குறிப்பிடும் பல குறைகளில் சில வழுவமைதியாகக் கொள்ளப்படலாம், பல குறைகளுக்கு அமைதி காண்டல் எளிதன்று.

இவ்வளவு குறைகள் இருந்தும் முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினும் நன்னூல் தனக்கு மற்று எந்நூலேனும் இணையோ என்னும் துணிவே மன்னி அதனையே மிகுதியாகப் பயின்றும் பயிற்றியும் வருகிறோம். அதன் நூற்பாக்களில் உள்ள குறைகளை உரையான் நிறைவு செய்து அமைதியுறலன்றி அதன் குறைகளை விளக்கிக் கொண்டிருப்பதனால் கிட்டும் பயன் ஏதுமின்று எனினும் நன்னூலில் உள்ள குறைகளைத் தெரிந்துகொள்ளுதல் இனி வரைய இருக்கும் நூல்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் என்ற கருத்தில் பாவலரேறு தம் நுண்மாண் நுழைப்புலத்தால் கண்டு கூறியவை நம் புலவர்கள் உள்ளத்து நிலையான இடம் பெற வேண்டியன. அவை தமிழ் இலக்கணத்தை உள்ளவாறு உணரத்துணை செய்யும் என்பது உறுதி பாவலரேற்றின் முயற்சி வெல்க !

புதுச்சேரி | அன்பன்

24-03-1998 | **தி.வே. கோபாலையன்**

ஆசிரியவுரை

தமிழ் மொழியின் சொற்பொருள் அமைதிகளையும் இலக்கண அடிப்படைகளையும் தெரிந்துகொள்ளவும் செய்யுளியற்றும் புலமை பெறவும் வேட்கையுற்றுக் கரந்தைப்புலவர் கல்லூரியிற் சேர்ந்து பயிலத்தொடங்கிய காலத்தில் உயர்நிலைப்பள்ளிகளில் பாடநூலாக இருந்த இலக்கணப் புத்தகங்களையும் ஆறுமுக நாவலர் இலக்கணச் சுருக்கம், நன்னூல் காண்டிகை உரைகளையும் படித்து வந்தேன் புலவர் முதனிலை வகுப்பிற்கு நன்னூல் சிவஞான முனிவர் விருத்தியுரை பாடமாக இருந்தது. புலவர் நிறைநிலை வகுப்பிற்குத் தொல்காப்பியம் எழுத்ததிகார நச்சினார்க்கினயர் உரையும் சொல்லதிகாரச் சேனவரையருரையும் பாடமாக இருந்தன. மாணவர்களோடு கலந்து பயிலுங்காலை, தொல்காப்பியத்தை விட நன்னூல் தெளிவாக உள்ளது என வாதிடுவேன். மறைமலையடிகளார் போன்ற பெரும் புலவர் எழுத்திற்கும் சொல்லிற்கும் நன்னூலையே கற்றுத் தேரினர் என ஆசிரியர் கூறுவது கேட்டு மகிழ்வேன். அதனால் நன்னூலில் ஆழ்ந்த புலமை பெறவிரும்பி மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர், இராமாநுசக்கவிராயர், கிருட்டிணமாச்சாரியார் உரைகளைத் தேடிப்படித்தேன். இலக்கணக்கொத்துரை சுவாமிநாததேசிகர் இடைக்கால நூல்களுள் நன்னூலுக் கினையான நூல்கள் ஒன்றுமில்லை என்று கூறியிருத்தல் கண்டு பெருமிதங் கொள்வேன்.

பின்னர் நிறைவுநிலை வகுப்பில் தொல்காப்பிய உரைகளைப் பயிலும்போது நன்னூலோடு ஒப்பிட்டு நோக்குவேன். நன்னூலில் ஐயங்கள் தோன்றும் தடுமாறும் போதெல்லாம் நன்னூல் கூறுவதே சரியாக இருக்கும் என்று அமைதிகொள்வேன். ஒரு சமயம் சிவஞான முனிவரின் இலக்கணச்சூறாவளியைப் படிக்க நேர்ந்தது அவரின் திறனாய்வுரை என் நெஞ்சைத் தொட்டுக் கலக்கியது. பின்னர் இலக்கண விளக்க நூலைத் தேடிப்படித்தேன். அதன்கண் எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமும் சிறு சிறு மாற்றங்களோடு பெரிதும் நன்னூல் நூற்பாக்களாகவே இருத்தலைக்கண்டு துணுக்குற்றேன். அதுபற்றி ஆசிரியர்களிடம் கேட்டபோது நாவலர் சோமசுந்தரபாரதியார் பவணந்தி முனிவர் தமிழ் நெறியை மாசுபடுத்திவிட்டார் என்று கூறுவார். எனினும் அவர் விளக்கமாக யாதும் எழுதவில்லை. நன்னூலார் அப்படியேதும் தவறுசெய்ததாக கூறவியலாது. அவர் காலத்தில் வளர்ந்திருந்த இலக்கியவழக்கையும் வடமொழியையும் நோக்கி வழிநூலாகச் செய்துள்ளார். என அமைதி கூறுவர். பின்னர் பா.வே. மாணிக்கநாயக்கர் கட்டுரைகளைப் படிக்க நேர்ந்தபோது அவர் நன்னூலைக் குற்றமே மலிந்த குறுஞ்சுவடி என்று கடிந்து கூறியிருத்தலைக் கண்டேன். அதுமுதல் நன்னூலையும் அதன் உரைகளையும் திறனாய்வுக் கண்ணோட்டத்தோடு சிந்தித்து வந்தேன்.

தொல்காப்பியத்தையும் அதன் உரைகளையும் பயிலும்போது உரையாசிரியன்மார் சில பல நூற்பாக்களுக்குக் கூறியுள்ள கருத்துரைகள் மொழியியலுக்கும் தொல்காப்பிய நூற்பா அமைப்பிற்கும் ஏற்புடையனவாக இல்லாமையை உணர்ந்தேன். தொல்காப்பியத்தை சொல்லாக்க மரபுகளோடு

அறிவியல் நோக்கில் சிந்தித்து வந்தேன் அதன் விளைவே ஆராய்ச்சி காண்டிகையுரை மலர்ந்தது. நன்னூலின் குறைபாடுகள் முரண்பாடுகள் ஓரளவு புலனாயின. அவைபற்றி நன்னூலில் ஐய வினாக்கள் என்னும் தலைப்பில் ஒரு தொடர்க்கட்டுரை எழுதினேன். அதற்குத் தமிழ் அறிஞர்களிடமிருந்து ஒப்போ, மறுப்போ இதுவரை வரவில்லை.

பேரறிஞர்கள் சிலர்தம் இலக்கண ஒப்பாய்வுக் கட்டுரைகளைப் படிக்கும்போது அவர்கள் நன்னூலைப் பாராட்டி எழுதியுள்ளதையும் தொல்காப்பியமும் நன்னூலும் எனச் சில ஆய்வுநூல்களைக் கண்டபோது தமிழின் இலக்கண நெறிமரபுகளில் அவர்தம் சோர்வுகள் வருத்தத்தை அளித்தன. நன்னூலில் இத்தகு முரண்பாடுகளும் குறைபாடுகளும் அமைந்தமைக்குரிய காரணங்களை ஆராய முற்பட்டேன் நன்னூலுக்கு முன் தோன்றிய நூல்களுல் வீரசோழியமும், நேமிநாதமுமே இன்றைக்குள்ளன அவற்றை முறையே படித்துப்பார்க்கும் போது நன்னூலின் தோற்றத்திற்கும் அதன்கண் அமைந்துள்ள குறைபாடுகட்கும் ஓரளவு காரணம் புலப்பட்டன. (அவற்றை நூல் முகவுரையில் கண்டு கொள்க) அந்நூல்கள் தமிழ் நெறி மரபுகட்கும் தொல்காப்பியத்திற்கும் மாறாகக் கூறும் செய்திகளையும் சேர்த்துக் குறிப்புகள் எடுத்தேன். அவற்றை ஒரு நூலாக வெளியிடின் மாணவர்கட்குப் பெரிதும் பயன்படும் என்று கருதி மீண்டும் ஒருமுறை நன்கு நோக்கிச் செம்மை செய்து மடைமாறிய தமிழ் இலக்கண நூல்கள் என்று தலைப்பிட்டேன்.

இந்நூல் விரைந்து வெளியீடுக என என் நண்பர் தமிழ்த்தென்றல் அவர்கள் வற்புறுத்தி வந்தார்.

அதனை அச்சிடுவதற்குமுன் என் கருத்துக்கள் தகவுடையவைதாமா? என்று அவற்றை மேற்பார்த்துத் திறனாய்வு செய்துதரும் ஆசிரியர் ஒருவரின் ஒப்புதலைப்பெற விரும்பினேன். வீரசோழியம், நேமிநாதம், நன்னூல் முதலியவற்றில் தேர்ந்த பயிற்சியும் தொல்காப்பியத்தில் ஆழ்ந்த புலமையும் உடையோர் சிலர் இருப்பினும் முதுபெரும்புலவர் மும்மொழிப்புலமை சான்ற ஆசிரியர் தி.வே. கோபாலையர் மட்டுமே எனக்குப் புலப்பாடாயினார். எனது தொல்காப்பிய ஆராய்ச்சிகாண்டிகையுரையை நடுவுநிலையோடு திறனாய்வு செய்தவர் ஆதலின் அவரிடமே இந்நூலைத்தந்து விருப்பு வெறுப்பின்றி ஓர் அணிந்துரை தருமாறு வேண்டினேன். தடையின்றி ஏற்று ஊன்றி நோக்கி ஓர் அரிய அணிந்துரையை வரைந்து தந்தார் அவர்தம் புலமைக்கு வணக்கமும், அன்பிற்கு நன்றியும் தெரிவித்துமகிழ்கின்றேன்.

இந்நூலை அழகுற அச்சிட்டுதவிய இராசி ஆப்செட் அச்சகத்தார்க்கு என் நன்றி உரியது. இப்படி ஒரு நூலை ஆக்குதற்குரிய சிந்தனையை தோற்றுவித்து இவ்வளவில் நிறைவுசெய்து தமிழன்னைக்குப் படைக்கச்செய்த திருவருளினைப் போற்றி வணங்குகின்றேன்.

அன்பன்

ச. பாலசுந்தரம்.

நூன் முகம்

தமிழகத்தில் தோன்றி நிலவும் சங்கத் தொகைப் பாடல் முதலாகிய இலக்கியக் கொள்கைகளையும் தொல்காப்பியம் முதலாகிய இலக்கணக் கொள்கைகளையும் ஆராய்ந்து முடிவு காணுதற்குத் தமிழக வரலாற்றினையும் இந்திய வரலாற்றினையும் குறிப்பாகச் சமய வரலாறுகளையும் ஓரளவு கருத்திற்கொள்வது பயனுடையதாக அமையும்.

உலகப்புகழ் பெற்ற இலக்கியங்கள் சிறுபான்மை இவ் உலக வாழ்வையும் பெரும்பான்மை மறுமை வாழ்வையும் பற்றியமைந்துள்ளன. கல்வியறிவின் பயன் இறைநெறி ஒழுகி இறையருள் பெற்றுப் பேரின்ப நிலை எய்துதலே என்பது சான்றோர்களின் கருத்தாகும்.

உலகில் இற்றைக்குப் போரும் பூசலும் சமாதானப் பேச்சுக்களும் பிறநாடுகளை ஏதாவதொரு நிலையில் அடிமைப்படுத்த எண்ணுதலும் மறைமுகமாகத் தீங்கிழைத்தலும் முகம்நக நட்புக் கொள்வதும் பிறவுமாக நிகழ்வதற்கு அடிப்படைக் காரணங்கள் பொருளாதார வளம் பெறுதலும் வாணிகத்தாற் பொருள் திரட்டி உயர எண்ணுதலும் மறைமுகச் சுயநலமும் ஆகும் இவற்றிற்குத் துணையாகப் பேணப்படுவன சமயக் கொள்கையும், மொழியாளுமையும் இனவுணர்வுகளுமாகும்.

வரலாற்று முறையிற் காணின் ஓரளவு நாகரிகம் பெற்று மக்கள் வாழத் தொடங்கிய நாள் முதல் குழுவின உணர்வும் சமயக் கொள்கையுமேயாகும். அவை காரணமாக மக்கள் பகை, நட்பு, நொதுமல் என்னும் வகையில் பிறரொடு கலந்து வாழ்ந்து வருதலையறியலாம்.

பாரதநாடென்னும் இந்தியாவின் தென்பகுதி வரலாற்றிஞர்களால் நிறுவ இயலாத தொன்மையும் நாகரிகமும் மொழி வளமும் பண்பாடுமுடையதாகத் திகழ்கிறது. எவ்வளவு பின் தள்ளினும் தமிழக நாகரிகம் கி.மு. 2000க்கு முற்பட்டிருத் தலைக் காணலாம். இலெமூரியா என்னும் குமரிக்கண்டம் கடல் கோட்பட்டபின்னர் தென்னகம் முப்பெருங்கடல்களால் சூழப்பட்டுக் கடல்களே அரணாக நிற்றலின் கிழக்கு மேற்கு தெக்கு ஆகிய திசைகளினின்றும் அயலவர் குடியேற்றமும் படையெடுப்புமின்றித் தனித் தன்மையோடு நிலவுகிறது.

வடஇந்தியா ஆசிய ஐரோப்பிய நாடுகளுடன் நில வழித் தொடர்புடையதாய் இமய மலைத் தவிர வேறு அரணின்றி அயல்நாட்டவர் வந்து புகுதற்கு வாய்ப்புடையதாய் அமைந்துள்ளது.அதனான் ஐரோப்பாவினின்றும் மத்திய ஆசியா கிழக்காசியப்பகுதிகளினின்றும் மக்கள் பல்வேறு முறையில் குடியேறத் தலைப்பட்டமையான் அங்குத் தொன்று தொட்டு வாழ்ந்து வந்த மக்களுக்கு நெருக்கடி ஏற்பட்டுக் கிழக்குப் பகுதியிலும் தெற்குப் பகுதியிலும் பரவினர். போர் முதலிய காரணங்களால் சிலர் விந்திய மலையைக் கடந்து தெற்கில் குடியேறினர் என்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.

இருக்குவேத காலமுதலாக அங்ஙனம் வடநாட்டிலிருந்து மக்கள் தென்னகத்திற்கு வரத்தலைப்பட்டனர். தீயை வளர்த்து மந்திரங்களைச் சொல்லி தெய்வங்களை வழிப்பட்டு வந்த ஆரியர்கள் பின்னர்த் தீயில் அவ்வப் பொருள்களையிட்டுத் தெய்வங்களை உவப்பிக்கும் முறையில் வேள்வி முறைகளை வகுத்த நிலையில் சாமவேதமும் யசுர் வேதமும் ரிக்வேதத்தின் பிரிவுகளாகத் தோன்றின. பிராமணங்களும் ஆரண்யகங்களும் தோன்றின. அக்காலகட்டங்களில் வடக்கே வாழ்ந்த பழங்குடியினராகிய திராவிடர் என்று சொல்லப்படும் மக்கள் தெய்வ வழிபாட்டுக் கொள்கையில் வேறுபட்டிருந்தனர்.

வேதங்களை அடிப்படையாகக் கொண்டு ஒழுகியவரின் சமயம் வைதீகம் எனப்பட்டது. இருக்கு வேதத்தில் பஞ்சபூதங்களின் அடிப்படையில் பல்வேறு தெய்வங்கள் படைக்கப் பெற்றன. வேள்வித் தீயில் பல்வேறு பொருள்களுடன் விலங்குகளையும், பறவைகளையும் இட்டுப் பொசுக்குவதையும் 'சுரா' என்னும் ஒருவகைக்கள்ளினை உண்டு செருக்குவதையும் சிலர் எதிர்த்தனர். அந்நிலையில் அரசர் குடியில் தோன்றிய மகாவீரர் என்னும் பெருமகனார் புதிய தொரு கொள்கையை உருவாக்கிப் பரப்பினார். பேராசையற்றுப் புலன்களை ஒடுக்கி உயிரினங்களிடம் அன்பு செய்து ஒழுகுதலே மக்கள் பிறவித்துன்பம் நீங்கி வீடுபெறுதற்குரிய நெறி என வற்புறுத்தினார். அக்கொள்கையே சைன சமயமாக உருப்பெற்று வளர்ந்தது. முதன் முதல் வைதிகத்திற்கு மாறாகத் தோன்றிய சமயம் சமண சமயமாகும்.

மகாவீரருக்குப்பின் நேபாள அரசக் குடியில் தோன்றிய சுத்தோதனர் என்னும் பெருமகனார் சைனத்தின் கடுமையான கோட்பாடுகளுள் சிலவற்றை நீக்கிப்புதியதொரு அறிவுபூர்வமான கொள்கையை உருவாக்கினார். அது புத்தசமயமாக நிலைபெற்றது.

இம் மூன்று சமயங்களும் உருப்பெறுவதற்கு முன்பே தென்னகத்தில் உலகளாவிய ஆற்றலின் அடிப்படையில் தெய்வக்கொள்கை நிலவிற்று. யாதொரு பற்றுக்கோடுமின்றி வேண்டுதல் வேண்டாமையிலதாய் அறிவே வடிவானதாய் உள்ள செம்பொருளே பரம்பொருள் என்னும் தெய்வக்கொள்கை தமிழகத்தில் நிகழ்ந்துவந்தது. கந்தழியே வழிபாட்டுப் பொருளாக மேற்கொள்ளப்பட்டது. நானில மக்கள் நிலத் தெய்வங்களாக மாயோன், சேயோன் இந்திரன் வருணன் ஆகியோரையும் வெற்றித் தெய்வமாகக் கொற்றவையையும் படைத்து வழிபட்டனர். செம்பொருள் நெறி பின்னர்ச் சிவநெறி எனப் பெயர் பெற்றுச் சைவ சமயம் என வழங்கலாயிற்று. மாயோனாகிய திருமாலின் நெறி பிற்காலத்தில் வைணவ சமயம் எனப் பெயர் பெறுவதாயிற்று.

மிகப்பழங்காலத்திலேயே தமிழகக் கல்வியாளர் உலகளாவிய அறிவைப் பெறும் பொருட்டுப் பிறநாடுகளுக்குச் செல்லும் வழக்கத்தினை மேற்கொண்டிருந்தனர். இதனை இலக்கண நூலார் கல்வியிற் பிரிவு" என்னும் கோட்பாடாகவே வகுத்தனர். அம் முறையில் வடமாநிலங்களுக்குச் சென்று மீண்ட அறிஞர்களால் வடக்கே நிலவிய மூவகைச் சமயக் கோட்பாடுகளும் ஆரிய மொழியும் தமிழகத்திற்கு அறிமுகமாயின.

அந்நிலையில் வடஇந்தியாவிலிருந்து பல் வேறு காரணங்களால் தென்னகத்திற் குடியேறியவர்கள் வைதீகச் சமயத்தைச் சார்ந்த ஆரியப் பெருமக்களாவார். தமிழர் கடவுட் கொள்கை ஒருபுடை ஒற்றுமையாக அமைந்த வேதக் கொள்கைகளைத் தமிழகத்திற் பரப்பினர். வடமொழியை ஒப்பத் தமிழ் மொழியிலும் புலமை பெற்று இலக்கியங்களைப் படைத்தனர் தமிழக நான் மறை நெறி பற்றி வாழ்ந்த நூலோர் என்னும் தமிழகப் பார்ப்பாரொடு உறவு கொண்டு சைவநெறியொடு வைணவ நெறியையும் பாரத, இராமாயண இதிகாசங்களையும் வளர்த்தனர். மூவேந்தரையும் வேள்விகளை மேற்கொளச் செய்தனர். தமிழக நாற்பாற் கோட்பாடுகளை வருணக் கோட்பாடாக மாற்றினர் ஆட்சியாளர்களின் மதிப்பிற்குரியராயினார். இவையெல்லாம் சங்கத் தொகைப் பாடல்களில் வரும் குறிப்புக்களால் அறியப்படுவனவாகும்.

வடக்கே வைதிகக் கோட்பாடுகளையும் வேள்விச் சடங்குகளையும், எதிர்த்துத் தோன்றிய சமணசமயத் தவரும் புத்த சமயத்தவரும் பல்வேறு காரணங்களால் தென்னகத்திற்கு வரத் தலைப்பட்டனர். அசோகனுடைய காலத்தில் புத்தசமயத்தைப் பரப்பப் பலர் தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் வந்தனர். பழந்தமிழ்ச் சைவநெறி ஓரளவு சமண சமயக் கேட்பாட்டிற்கு ஒத்திருந்தமையான் சமணசமயம் எளிதாக மக்களிடத்திற் செல்வாக்குப் பெற்றது. சமயச் சான்றோர்கள் பெரிதும் முரண்பாடின்றித் தத்தம் கடமைகளைச் செய்து வாழ்ந்து வந்தனர். சமண - பவுத்தச் சான்றோர்கள் தமிழ்மொழியில் புலமை பெற்று இலக்கிய நூல்களையும் இலக்கண நூல்களையும் படைத்தனர். சங்கங்களையும், பள்ளிகளையும், மடங்களையும், உருவாக்கிச் சமயத் தொண்டும் கல்வித் தொண்டும் புரிந்து வந்தனர்.

சமண - பவுத்தக் கொள்கைகள் அறிவொடு பொருந்தியிருந்தமையாலும் சாதி வருண வேறுபாடுகளின்றி அப்பெரு மக்கள் ஒழுகி வந்தமையானும் வைதீக நெறியாளர்கள் பிராமணியத்திற்குத் தலைமை தந்து பிற சாதியார்க்கும் கீழ்ச் சாதியாருக்கும் கல்விகற்பிப்பதற்கும் சமய ஒழுக்கங்களைப் பின்பற்றுதற்கும் திருக்கோயில்களில் புக்கு வழிபடுதற்கும் உரிய உரிமைகளை ஏற்காமலும் முரண்பட்டிருந்தமையால் பொதுமக்கள் சமண சமயத்தையும் பவுத்த சமயத்தையும் பெரும்பான்மையாகத் தழுவினர் அச்சமயத்தவர் செல்வாக்குப் பெருகிற்று ஆட்சியாளர்களைத் தம் வயப்படுத்தி வைதிக சமயச் செல்வாக்கைத் தகர்க்க எண்ணினர்.

அந்நிலையில் பல்லவர்களும் களப்பிரர்களும் தலையெடுத்தனர் அவர்கள் முறையே சமணத்தையும் பவுத்தத்தையும் ஆதரித்தனர் சோழ பாண்டியநாடுகள் அவர் தம் ஆட்சிக்கு உட்பட்டன. அந்நிலையில் சமணசமயக் கல்வியாளர் பலர் அறநூல்களையும் இலக்கணநூல்களையும் படைத்தனர். காப்பியங்கள் படைக்க முற்பட்டனர். பழந் தமிழ் நூல்களைப் பாதுகாத்தனர். சமண பவுத்த சமயத்தார் இருவரும் பொதுவாகப் பாதுகாத்துப் பயின்று வந்த நூல்களுள் சிறப்புடையவை தொல்காப்பியமும் திருக்குறளுமாகும்.

ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டியரும் ஒன்பதாம் நூற்றாண்டில் சோழரும் தலையெடுத்தனர். பல்லவர்கள் வைதிகச் சமயத்தைப் போற்றினர் அதனான் ஒடுங்கியிருந்த வைதிகச் சமயம் மீண்டும் தலையெடுத்து

வளரத் தொடங்கியது. வைதிகச் சமயச் சான்றோர்கள் சங்கங்களையமைத்துப் பழந் தமிழ் நூல்களைத் திரட்டினர். நீதி நூல்கள் சில தோன்றின. சைவ-வைணவ அருளாளர்கள் சிறந்த தோத்திர நூல்களை அருளினர். ஆறாம் நூற்றாண்டளவில் இலக்கண நூல்கள் தோன்றத் தொடங்கின. இறையனார் களவியல் என்னும் பொருளதிகாரக் குறைநூல் வைதிகப்புலவர் ஒருவரால் இறைவன் பெயரால் செய்யப்பட்டது. யாப்பியல் நூல்கள் பலரால் பல இயற்றப் பெற்றன. யாப்பருங்கலமும் யாப்பருங்கலக்காரிகையும் தோன்றிய பின்னர் பல யாப்பு நூல்கள் வழக்கிறந்தன. அலங்காரநூல்கள் தமிழில் தோன்றவில்லை. வடமொழியில் தண்டி என்பவரால் ஓர் அலங்கார நூல் பத்தாம் நூற்றாண்டளவில் இயற்றப்பெற்றது. பதினோராம் நூற்றாண்டு வரை தொல்காப்பியம் மட்டுமே நிறைந்ததொரு நூலாகப் பயிலப்பட்டு வந்தது. அது சமணர்களால் பேணப்பட்டு வந்தமையின் அதனை ஒரு சமண சயத்தவர் நூலாகவே வைதிகர்களும் பவுத்தர்களும் கருதிவந்தனர். தொல்காப்பியர் அகத்தியரின் தலைமாணாக்கர் என்னும் புராண வரலாற்று நோக்கில் சைவர்களும் போற்றி வந்தனர்.

பவுத்த சமயக் கோட்பாடுகளும் நீதிகளும் பாலி மொழியில் அமைந்திருந்தமையின் பாலிமொழியைத் தம் சமய மொழியாகவே பவுத்தர்கள் போற்றி வந்தனர் நாலு ஐந்தாம் நூற்றாண்டுகளில் பாலி மொழியில் சில இலக்கணநூல்கள் தோன்றின எனினும் அவை பெரிதும் பயிலப்படவில்லை.

சோழர்களின் ஆதிக்கம் ஓங்கியிருந்த் காலத்தில் அரசியல் முதலிய காரணங்களால் இராசராசன் முதலாகிய சோழ மன்னர்கள் பவுத்த சமயத்திற்குப் பேராதரவு தந்தனர். புத்த சமயத்தவர் செல்வாக்கு ஓங்கியது வீரராகேந்திரன் காலத்து வாழ்ந்த பவுத்த சமயக் கல்வியாளர்கள் சமண சமயத்தவரால் செய்யப்பெற்றுப் பயிலப்பட்டு வருவதாகக் கருதி தொல்காப்பயத்திற்கு இணையாக ஒரு முழுமையான இலக்கண நூலைச் செய்ய விரும்பினார். வடமொழி-பாலிமொழி-தமிழ்மொழி ஆகிய மூன்றிலும் புலமை பெற்று விளங்கிய புத்தமித்திரர் என்னும் பேரறிஞர் அப்பணியை ஏற்றுச் சோழ மன்னன் பெயரால் ஒருநூலைச் செய்தார்.

தமிழ் எழுத்திலக்கணம் வடமொழியொடு பெரிதும் வேறுபட்டிருந்தலான் அவர் அதனைச் சுருக்கியும் சொல்லதிகாரத்தில் வடமொழிக் கொள்களை விரித்தும் பொருளதிகாரத்தில் அடங்கியிருக்கும் யாப்பிலக்கணத்தைத் தனியதிகாரமாகப் பாலிமொழி இலக்கணங்களைத் தழுவி விரித்தும் வடமொழித் தண்டியலங்காரத்தை மொழி பெயர்த்தும் ஐந்ததிகாரம் கொண்டதொரு முழுநூலாக அந்நூலைச் செய்தளித்தார்.

புத்தமித்திரனார் தம் நூலுக்கு முதனூல்களாகத் தொல்காப்பியத்தையோ பாணினீயத்தையோ கூறவில்லை. பாலிமொழிக் கொள்கைகளை முழுமையாகவும் கூறவில்லை. புத்தர் பெருமான் அருளைப் பெற்ற அகத்தியன் கூறிய தமிழ் நெறியைப் பின்பற்றித் தம் நூலைச் செய்ததாகக் கூறுகின்றார்.

இதுகாறும் கூறப்பெற்றுள்ள கருத்துக்களை ஊன்றி நோக்கின்

தொல்காப்பியத்திற்குப்பின் இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் எழுந்த இலக்கண நூல்கள்யாவும் தம்தம் சமயங்கள் செல்வாக்குப் பெற வேண்டும் என்னும் வேட்கையால் செய்யப் பெற்றவையே என்பதும் அவ்வக் காலங்களில் தோன்றிய இலக்கியங்களையோ மக்களின் எழுத்து வழக்கு, பேச்சு வழக்குகளையோ அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்றவை அல்ல என்பதும் அறிவியல் நோக்குடையன வல்ல என்பதும் புலனாகும்.

புத்தமித்திரனார் தொல்காப்பிய நெறிகளைப் புறக்கணித்துத் தமது சமயச் செல்வாக் கொன்றையே கருதி வடமொழி-பாலிமொழிக் கொள்கைகளின் அடிப்படையில் செய்துள்ளார் என்னும் கருத்தால் தொல்காப்பிய மரபுகளை வலியுறுத்திச் சமண சமயச் சான்றோர் சிலர் நூல் இயற்ற முற்பட்டனர் அவருள் நேமிநாதர் செய்த சின்னூல் ஒன்றே இற்றைக்குக் கிடைத்துள்ளது. இந்நூலில் அவ் ஆசிரியர் எழுத்திலக்கணத்தைப் போதிய அளவு விரித்துக் கூறவில்லை. மேலும் ஒருமொழியாக்க இலக்கணம் பற்றி யாதும் கூறாமற் போயினார்.

பதிமூன்றாம் நூற்றாண்டளவில் சோழர்கள் செல்வாக்குச் சரிந்து பாண்டி நாட்டில் பாண்டியர் தலையெடுத்தனர் சோழநாட்டில் தொல்காப்பிய நெறியாளர் வாய்மொழியாகப் பாடஞ்சொல்லி வந்த தொல்காப்பிய விளக்க உரையைப் பதிவு செய்து கற்பித்தனர். அவை இனம்பூரணர் என்னும் சைன சமய ஆசிரியர் பெயரால் வழங்கி வந்தது.

அக்காலகட்டத்தில் கன்னடப் பகுதியில் சமண சமயம் செல்வாக்குப் பெற்றிருந்தது மொழியறிஞர் பலர் வாழ்ந்தனர் பவணந்தி என்னும் புலவர் பெருமான் சோழ நாட்டிற்கு வந்து தமிழாராய முற்பட்டபோது தமிழ் மொழி மரபிற்கு வீரசோழியம் முரண்பட்டிருந்தலை அறிந்து தொல்காப்பியத்தை ஒட்டிப் பதவியலை விரித்து நூல் செய்தளித்தார். தொல்காப்பியக் கோட்பாடுகளை இளம் பூரணர் உரைவழிப் பயின்றதனால் அவ்வுரையே தொல்காப்பியர் கருத்தாகக் கொண்டு சில மாற்றங்களைச் செய்து நன்னூலையியற்றினார்.

வீரசோழிய ஆசிரியர் ஒருமொழியாக்கம் பற்றிய பத இலக்கணத்தை தமிழ் நெறி வழியைப் போற்றாமலும் வடமொழியை முழுவதும் உணராமலும் பெயர்ப் பகு பதங்களையும் வினைப் பகுபதங்களையும் இரண்டே கூறுகளாக வெட்டிப் பெயர்ப் பகுதி களைப் பிரகிருதி என்றும் வினைப் பகுதிகளைத் தாது வென்றும் கூறி இடைநிலை சாரியை விகுதியாவற்றையும் பிரத்தியம் என வகுத்து இலக்கணங் கூறிப் போந்தார். வேற்றுமைக் கொள்கையையயும் தமிழ் நெறி யொடு பொருந்தாமல் புதிய நோக்கில் கூறிச் சென்றார்.

இக் குழப்பங்களையும் முரண்பாடுகளையும் நன்கு தெரிந்த பவணந்தி முனிவர் வேற்றுமைக் கொள்கையை வடமொழி பற்றி வரிவடிவ அடிப்படையில் சுருக்கமாகச் செய்து பதவிலக்கணத்தைத் தனி ஒரு இயலாக அமைத்துப் பகுதி விகுதி இடைநிலை சாரியைகளைப் பிரித்துக் காட்டி வடமொழி மரபை ஒட்டிச் சந்தியையும் விகாரங்களையும் உறுப்பாக்கிச் செம்மை செய்தார். வீரசோழியம் தமிழ்நெறி மரபிற்கு முரணாக அமைந்த தொரு தீயநூல் என்பதை மறைமுகமாகச் சுட்டும் வகையில் தனது நூலுக்கு நன்னூல் என்று பெயரிட்டு வழங்கினார் எனத் தெரிகிறது. நன்னூல் தோன்றியபின் வீர சோழியம் மதிப்பிழந்தது.

நன்னூல், கருத்துக்களின் அடிப்படையில் விதிகளைக் கூறாமல் வரிவடிவங்களையும் சொற்றொடர்களையும் அடிப்படையாகக் கொண்டு இலக்கண விதிகளைக் கூறுதலான்-தொல்காப்பிய மரபினைப் போற்றி வந்த கல்வியாளர்கள் குறிப்பாக வைதிகச் சமயத்தை சார்ந்த நல்லறிஞர்கள். புதிய உரைகளை எழுத முற்பட்டனர். அவற்றுள் சேனாவரையர், பேராசிரியர் தெய்வச்சிலையார் நச்சினார்க்கினியர் கல்லாடர் ஆகியோர் உரைகளே இன்றைக்குக் கிடைத்துள்ளன. நன்னூல் மிக அருகியே பயிலப்பட்டு வந்தது.

நன்னூலைச் சிறப்பாக நடைமுறைக்குக் கொண்டுவரல் வேண்டுமென்று கருதிச் சமண சமயப் புலவர் முயன்றனர். அம்முயற்சியின் தொடக்கமாக மயிலைநாதர் உரை எழுந்தது. அதன் பின்னர் சைவ வைணவ சமயத்தைச் சார்ந்த பெரும்புலவர்கள் நன்னூலுக்கு உரை எழுதினார். இவர் யாவரும் நன்னூலைத் தொல்காப்பியத்திற்கு வழிநூலாகவே கருதிப் போற்றி வந்தமையின் நன்னூல் இன்றளவும் பயிலப்பட்டு வருகின்றது.

மேற்கூறிய வரலாற்றில் மறைந்து கிடக்கும் உண்மைகளைத் துணையாகக் கொண்டு இவ் ஆராய்ச்சிக் கட்டுரைநூல் வரையப்படுகின்றது. இவ்வாராய்ச்சி நூல் முடிந்த முடிபுடையதன்று தமிழ் மரபினைப் பேணும் நோக்கில் ஆராய்வார்க்கு ஓர் எடுத்துக் காட்டு என்னும் அவ்வளவினதேயாகும்.

தொல்காப்பியத்தின் பின் ஏன் மூன்றாம் நூற்றாண்டு வரை எழுந்தநூல்களுள் இறையனார் களவியல் நூலைத் தவிர்த்த பிறயாவும் சமண பவுத்த சமயத்தைச் சார்ந்த அறிஞர்களால் செய்யப்பெற்றவையே அவற்றுள், பன்னிருபடலம் அவிநயம் முதலிய நூல்கள் மறைந்துவிட்டன. பொருளிலக்கணமும் அதன்கூறுகளாகிய யாப்பிலக்கணமும் அணியிலக்கணமும் தனியே ஆராயப்பட வேண்டியவையாதலின் இந்நூலுள் எழுத்திலக்கணம் சொல்லிலக்கணங்கள் மட்டுமே ஆராயப்படுகின்றன ஆதலின் கால வரிசைப்படி வீரசோழியம், எழுத்துப்படலம் சொற்படலங்களும், நேமிநாதமும் நன்னூலும் எடுத்துக் கொள்ளப் பெற்றன. நன்னூலாய்வு முன்னுரையில் சில குறிப்புக்கள் தரப்பெற்றுள்ளன. அவற்றையும் இம்முன்னுரையோடு சேர்த்துத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். சில இலக்கணச் செய்திகள் இந்நூலுள் சுருக்கமாகவும் குறிப்பாகவும் கூறப்பட்டுள்ளன. அவை பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டின் எனது தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுள் கண்டு கொள்ளலாம். இவ் ஆராய்ச்சியுள் காணப்படும் பலவற்றிற்கு அறிஞர்கள் அமைதி கூறமுற்படலாம். அது நன்னீர் இருப்பவும் அங்ஙணத்து நீரைக் காய்ச்சி வடிகட்டி உண்ணலாம் என்பது போலாவதன்றி மனச் சான்றுடன் கூறுவதாகாது. இவ்வாராய்ச்சியுள் நேர்ந்திருக்கும் குறைகளை நடுவுநிலையோடு எடுத்துக் காட்டும் சான்றோர்களின் அறிவுரைகளை ஏற்க என்றும் அணுக்கனாவேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

ச. பாலசுந்தரம்.

வீரசோழியம்

எழுத்து, சொல், பொருள், என முத்திறமாக முன்னோர் ஆராய்ந்து செய்த பன்னூல்களையும் ஆராய்ந்த தொல்காப்பியனார் தமிழ் கூறும் நல்லுலகத்து அவர்காலத்து வழங்கிய வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச் செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணித் தமது நூலை மூன்று அதிகாரங்களாகப் படைத்தருளினார்.

பின்னர் வடபுலத்திருந்து தென்னகத்தே நிலைபெற்ற சமண பவுத்த சமயச்சான்றோர்கள் தத்தம் சமய நெறிகளைப் பரப்பத் தமிழ் மொழியை நன்கு பயின்று நூல்களை இயற்ற முற்பட்டகாலைத் தொல்காப்பியம் கூறும் செய்யுளிலக்கணம் அரிதுணர் பொருள வாயும் பரப்புடையதாயும் இருப்பதாகக் கருதி வடமொழி பாலிமொழி இலக்கணங்களைக் கருத்திற் கொண்டு எழுத்து அசை, சீர், தளை அடி தொடை என்னும் அடிப்படை உறுப்புக்களையும் பரிபாடல் தவிர்ந்த வெண்பா ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐவகைப் பாக்களையும் இலக்கணங் கூறி விளக்க முற்பட்டு அவற்றுடன் வடமொழியில் உள்ள சந்தம், விருத்தம், தண்டகம் முதலியவற்றைத் தமிழ் மரபிற்குப் பொருந்துமாறு தாழிசை, துறை, விருத்தம் என்னும் கிளைகளை அமைத்துச் சுருக்கமாக யாப்பிலக்கண நூல்களைச் செய்தனர்.

இவை பெரும் பான்மையும் நான்கடிகளாக அமைந்து எதுகை மோனை, வண்ணம், இயைபுத் தொடை பொருந்தி தனித்தும் ஒருபொருள் மேல் மூன்றடுக்கியும் கேட்பதற்கு இனியவாக அமைந்தமையின், யாவரும் விரும்பிப் பயிலும் நிலை எய்தின. இம் முறையில் பலர் நூல்களை இயற்றினமையின் யாப்பியல் ஒரு தனி அதிகாரமாகக் கொள்ளும் நிலை எய்திற்று. இலக்கியம் படைக்க முற்படுவோர்க்கு எளிமையாகவும் சுருக்கமாகவும் செய்யுள் இலக்கணம் அமைய வேண்டும் என்பதற்காகப் பலர் யாப்பிலக்கண நூல்களை மட்டுமே செய்தனர். அமிதசாகரர் முதற்கண் தமது நூலைச் சூத்திரயாப்பில் செய்தவர் மேலும் எளிமையும் இனிமையுமாக அமைக்க விரும்பி அதனையே சுருக்கியாப்பருங் கலக்காரிகை என்னும் பெயரில் நூலைச் செய்துள்ளமை அதனைப் புலப்படுத்தும்.

அக்கால எல்லையில் வைதிகச் சமயத்தைச் சார்ந்த பெரும் புலவர் ஒருவர் தொல்காப்பிய மரபினின்றும் பிறழ்ந்தும் பிறழ்ந்தமை தென்றெனத் தோன்றாவாறு இறைவன் பெயரால் இறையனார் அகப்பொருள் என்பதொரு ஒரு நூலைச் செய்தார். ஏழாம் நூற்றாண்டளவில் இயற்றப் பெற்ற இந்நூலின் உரை விளக்கம் ஒன்பதாம் நூற்றாண்டுவரை நீண்டு செப்ப முற்று இன்றைக்குள்ள வடிவத்தைப் பெற்று நிலவுகின்றது. இந்நூல் உரையில் தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு என்னும் நான்கதிகாரங்களை உடையது என முதன்முதலாகக் காணப்படுகின்றது.

அக்காலகட்டத்தில் வடமொழியில் அலங்கார நூல்கள் சில தோன்றின. தமிழகத்தில் வாழ்ந்த 'தண்டி' என்னும் பேரறிஞர் வட மொழியில் அமைந்த

"காவியதர்சம்" என்னும் நூலை ஒட்டித் தண்டியலங்காரம் என்னும் அணிநூலைச் செய்தார் இவர் பவுத்த சமயத்தவர் எனக்கருதுவாருமுளர். வீரசோழியம் கூறும் அலங்கார இலக்கண முறையையும் தமிழ்த்தண்டியாசிரியர் கூறும் முறையையும் ஒப்பிட்டுக் காணின் இவர் வைதிகச் சமயத்தவராக இருக்கலாம் என்பது விளங்கும்.

7, 8, 9, 10 ஆம் நூற்றாண்டுகளில் பல்லவர்கள் வைதிக சமயத்தை மேற் கொண்டொழுகியமையானும் பாண்டியர்கள் சமணசமயத்தைப் போற்றாமல் விலக்கியமையானும் திருஞான சம்பந்தர் முதலிய நாயன்மார்களாலும் நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களாலும் வைதிகச் சமயத்தைச் சார்ந்த சைவ, வைணவச்சமயங்கள் தலை எடுத்தமையானும், சமண, பவுத்த சமயத்தவரின் செல்வாக்குச் சரிந்தது. சோழ நாட்டில் இருந்த அச்சான்றோர்கள் நிகண்டு நூல்கள் சிலவற்றை இயற்றினர் 'பாட்டியல்' என்னும் புதுவகை இலக்கணம் ஒன்று தோற்றம் பெற்றது.

பத்தாம் நூற்றாண்டிற் சோழ வேந்தர்கள் அரசியல் காரணங்களால் புத்தசமயத்தினர்க்குப் பேராதரவு தந்தனர், புத்தமடங்கள் ஆங்காங்குத் தோன்றின. பவுத்தமதத் துறவிகளும் அறிஞர்களும் தம்சமயமொழியாகிய பாலிமொழியொடு வடமொழி, தமிழ்மொழி மரபுகளை ஆராய முற்பட்டனர். அம்முறையில் பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவரான "புத்தமித்திரர்" என்னும் பெரியார் பாலிமொழி மரபிற்கேற்ப வடமொழி நூல்களின் துணையோடு தமிழில் ஓர் இலக்கணநூலைச் செய்யமுற்பட்டு அது காறும் நான்காக வழங்கிவந்த அதிகாரங்களோடு அணியிலக்கணத்தையும் சேர்த்துத் தமது நூலை ஐந்ததிகாரங்களாகச் செய்தருளினார். அந்நூலைத் தமது சமயத்திற்குப் பேராதரவு தந்துவரும் சோழ மன்னன் பெயரால் இயற்றிப் பாயிரத்துள்ளும் நூலுள்ளும் அவனைப் போற்றுகின்றார்.

வீரராசேந்திர சோழ மன்னன் இந்நூலை இயற்றியருள வேண்டியதனால் புத்தமித்திரர் அவன் பெயரால் தம் நூலை இயற்றினார் எனக் கருதுவாருமுளர் இந்நூற்பாயிரம் முன்றாம் செய்யுளில்

> **"தேமேவிய தொங்கல் தேர் வீரசோழன் திருப்பெயரால்**
> **பூமே லுரைப்பன்"**

என்கிறார். இதன் கண் அவன் வேண்டிக்கொண்டதாகக் குறிப்பொன்றுமில்லை. மேலும் ஏழாம் நூற்பாவில்,

> **"மேவிய வெண்குடைச் செம்பியன் வீரராசேந்திரன்றன்**
> **நாவியல் செந்தமிழ்ச் சொல்"**

என அவனைத் தமிழ் மொழிக்கு அடையாகவே கூறுகின்றார்.

இந்நூலுள் தற்சிறப்புப் பாயிரமாக உள்ள மூன்று செய்யுளுள், முதற்செய்யுளுள் தன்னைப் படர்க்கையிலும், ஏனைய இரண்டனுள் தன்மையிலும் வைத்துப் பேசுகின்றார். முதற் செய்யுளுள் இறை வணக்கங்கூறிச் செயப்படு பொருளையும் ஆக்கியோனாகிய தன் பெயரையும் கூறுகின்றார். 'புத்தமித்திரர்'

என்பதற்குப் புத்தர் பிரானிடம் நேயமுடையவர் என்பது பொருள் இது காரணப் பெயரா இயற்பெயரா? என்பது தெரியவில்லை. இப்பெயரால் இவர் பவுத்த சமயத்தில் பெரிதும் ஈடுபாடுடையவர் என்பது விளங்குகின்றது.

இவர் காலத்தில் சமணப்பள்ளிகளிலும் பிற இடங்களிலும் பெரிதும் பயிற்சியிலிருந்த தொல்காப்பிய நூலின் நெறி மரபுகளையோ பாணினீயம், மகாபாடியம் முதலிய வடமொழி நூல்களையோ இவர் தமது நூலுக்கு முதல் நூலாகக் கொள்ளவில்லை. பாலிமொழி நூல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளமையையும் வெளிப்படையாகக் கூறவில்லை.

"ஆயுங் குணத்து அவலோகிதன் பக்கல் அகத்தியன் கேட்டு
ஏயும் புவனிக்கியம்பிய தண்டமிழ்"

ஈங்குரைக்கப் புக்கதாக்கக் கூறுதலின் தமது நூலை அகத்தியன் வழங்கிய தமிழின் அடிப்படையில் முதல் நூலாகவே செய்துள்ளார் எனக் கொள்ளவேண்டும். தமிழ் என்பதனை ஆகுபெயராக்கி அகத்தியன் சொன்ன இலக்கணநூல் எனக் கொள்ளின் அதன் வழிச் செய்யப்பட்ட வழிநூல் எனலாம் அந்நூல் இன்று காணக் கிடைக்க வில்லை. மேலும் சொல்லதிகார இறுதியில்

"பன்னூராயிரம்
விதத்திற் பொலியும் புகழ் அவலோகிதன் மெய்த்தமிழ்"

என்று கூறுதலான் 'தமிழ்' என்றது தமிழ் இலக்கண நூல் எனக் கொள்ள இடந்தருகின்றது. அந்நூலும் இற்றைக்குக் காணுமாறில்லை ஆதலின் அவற்றை உபசார வழக்காக கொண்டு இவர் இந்நூலைப் படைத்துள்ளமையின் இதனை முதல் நூலாகவே கொள்ளலாம். இதற்குத் துணையாக

"நாமே எழுத்துச்சொல் நற்பொருள் யாப்பலங் காரமென்னும்
பாமேவு பஞ்ச அதிகாரமாம் பரப்பைச் சுருக்கித்
தேமேவிய தொங்கல் தேர் வீரசோழன் திருப்பெயரால்
பூமேலுரைப் பன் வடநூன் மரபும் புகன்று கொண்டே"

என்னும் பாயிரச் செய்யுள் அமைந்திருப்பதைக் காணலாம். இதனான் தமிழில் ஐந்ததிகாரங்களைக் கொண்ட நூலாக முதன் முதல் இயற்றப்பட்டது இந்நூல் என்பது விளங்குகின்றது.

இந்நூலுள் "வடநூன் மரபும் புகன்று கொண்டே" உரைப்பன் என்பதற்கு ஏற்பச் சந்திப் படலம் உபகாரகப் படலம், தத்திதப்படலம் தாதுப்படலம், கிரியாபதப்படலம் என்னும் தலைப்பிட்டு இயல்களைக் கூறுகின்றார். அவற்றுள் வரும் இலக்கணக் கலைச் சொற்களையும் வடசொற்களாலேயே குறிப்பிடுகின்றார் எனினும் பாணினீய மரபுகளை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் வேறு மரபுகளையும் கூறுதலான், வடமொழி என்பதற்குச் சமற்கிருதம் எனப் பொருள் கொள்ளாமல் தமிழகத்திற்கு வடபால் வழங்கும் மொழி எனப் பொருள் கொள்ளல் வேண்டும் என்பார் பேராசிரியர் சு. இராசாராம் அவர்கள்.

இந்நூல் தமிழகத்தில் இருவகை வழக்கிலும் வழங்கும் தமிழ் மொழியைப் பொருளாகக் கொண்டு செய்யப்பட்டுள்ளமையின் இதனைத் தமிழ் இலக்கணநூல்களுள் ஒன்றாகவே பெரும் பான்மை யான தமிழறிஞர்கள் கொள்கின்றனர். அதனான் மடைமாறிய தமிழ் இலக்கணநூல்களுள், இது முதலாவதாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் என்னும் ஐந்து அதிகாரங்களைக் கொண்டிருப்பினும் ஏனையநூல் களோடு பொருந்த எழுத்து-சொல் என்னும் இரண்டு அதிகாரச் செய்திகளே ஈண்டு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

எழுத்ததிகாரம்

எழுத்திலக்கணம் என்பது ஒருமொழியில் உள்ள சொற்கள் ஆக்கம் பெறுதற்கு அடிப்படையான இசை, ஓசை, ஒலிகளாலான எழுத்துக்களைத் தொகை வகை விரியாக எடுத்துக்காட்டி அவற்றின்பிறப்பமைதிகளையும் அவை ஒன்றோடுடொன்று புணர்ந்து தொடருமிடத்து எய்தும் நிலைமைகளையும் பிறவற்றையும் அறிவியல் நோக்கில் விளக்குவதாகும்.

இந்நூலாசிரியர் எழுத்ததிகாரத்தைச் 'சந்திப்படலம்' எனப் பெயரிட்டுத் தொடங்கி அதன் கண்ணேயே எழுத்துக்களின் தொகை வகை பிறப்பு மாத்திரை முதலியவைகளைக் கூறி முடிக்கின்றார். "அவலோகிதன்பக்கல் அகத்தியன் கேட்டுப்புவனிக்கியம்பிய தண்டமிழில்" அகரமுதல் 'ஆவி' பன்னிரண்டு ககரமுதல் மெய்பதினெட்டு இவற்றின் இடைநிற்கும் ஆய்தம் ஒன்று ஆக எழுத்துக்கள் தமிழில் முப்பத்தொன்றென்றும் மெய்கள் வலி மெலி இடை எனமுத்திறப்படும் என்றும் எழுத்ததிகாரமுதல் நூற்பாவில் கூறுகின்றார்.

"அறிந்த எழுத்தம் முன் பன்னிரண்டாவிகளான : கம்முன்
பிறந்த பதினெட்டு மெய் : நடுவாய்தம்: பெயர்த்திடையா
முறிந்தன யம் முதலாறும் ஙஞணநமன வென்று
செறிந்தன மெல்லினம்: செப்பாத வல்லினம் தேமொழியே"

முதன்முதல் இவர்தாம் உயிர் எழுத்துக்களை ஆவி என்று பெயரிட்டுக் கூறுகின்றார். பின்னர் வந்த இலக்கணியர் சிறிதும் சிந்தியாமல் இதனை உயிர் என்பதற்கு மாற்றுப் பெயராக ஏற்றுக் கையாள்கின்றனர். 'ஆவி' என்பது வெப்பக்காற்று. அதற்கு ஒலியில்லை. மற்று உடம்பின்றேல் அது தோன்றாது. உயிர் என்னும் சொல் உய் + இர் என்னும் இரு உரிச் சொற்கள் கூடி ஆக்கம் பெற்றதோர் சொல. 'உய்' என்பது ஒலிக்குறிப்பையும் வெளிப்படுதலையும் உணர்த்தும் இர் இரிதல்-வெளிப்படுதல் இஃது இதன்கண் சொல்லாக்க ஒட்டாக நிற்கின்றது. எனவே உயிர் என்பதன் பொருள் கண்டத்தினின்றும் ஓசையோடு வெளிப்படுதல் என்பதாகும். மூச்சுக் காற்றுக்கும் உயிர்ப்பு என்பது பெயர். அதற்கு ஆவி என்பதும்

பெயர். சொற்பொருள் தேறாமல் மூச்சுக்காற்றிற்கு உரிய பெயரை இலக்கணக் கலைச் சொல்லாக ஆளுகின்றார். ஆவி உடம்பின்றி இயங்காது. உயிரெழுத்து மெய்யின்றியும் இயங்கும்.

ஆய்தஎழுத்தை உயிருக்கும் மெய்யுக்கும் நடுவென்கின்றார். நடு என்பதற்குப் பொருள் எழுதப்பெறும் உயிர் வரிவடிவங்களுக்கும் மெய்வடிவங்களும் இடையேநிற்பது என்பது இவர் கருத்தாகத் தெரிகின்றது. இவர் கூறியுள்ள முறையில் ஆய்தம் தனித்து வரல் எழுத்தா சார்பெழுத்தா எனத் தெரிய இயலாது. சார்பெழுத்து என்னும் வகையை இவர் கொள்ளவில்லை. எனவே வரிவடிவை நோக்கித் தமிழில் எழுத்துக்கள் முப்பத்தொன்று என்ற அளவில் முடித்துக் கொள்கிறார்.

அடுத்து ஆவியுள் குறில் ஐந்து நெடில் ஏழு இது உயிர் மெய்க்கும் பொருந்தும் என்றும் இசை நீளின் அளபெடையாம் என்றும், வல்லினமும் மெல்லினமும் தம்முள் வர்க்கம் என்றும் வல்லெழுத்தின் மேல் வரும் உகரம் நெடிற் பின்னும் தொடர் மொழிப்பின்னும் குறுகும் என்றும் கூறுகின்றார். இதனை

"இறுதிமெய் நீங்கிய ஈராறில் ஐந்து குறில் நெடில் ஏழ்
பெறுவரியான்; நெடுநீர்மை அளபு; பிணைந்த வர்க்கம்
மறுவறு வல்லொற்றும் மெல்லொற்றுமாம்;வன்மைமேலுகரம்
உறுவது நையும் தொடர்மொழிப் பின்னும் நெடிற் பின்னுமே"

என்பதனால் அறியலாம் வருக்கம் என்றது வரிவடிவில் உள்ள உயிர்மெய்களைக் குறிக்கும். நேமிநாதநூலார் இவற்றை இவ்வாறே மேற்கொண்டுள்ளார்.

அடுத்து, அய், அவ் இரண்டும் எழுத்துப் போலியாக வரும் என்றும் ஆ, ஏ, ஓ சொல்லிறுதியில் வினாப் பொருளில் வரும் என்றும், எகரமும் ஒகரமும் மெய்களும் புள்ளிபெறும் என்றும் அ, இ, உ என்பவை சுட்டாகவரும் என்றும் யவ்வின்முன் இகரம் குறுகும் என்றும் கூறுகின்றார்.

"அகரம் வகரத்தி னோடியைந்து ஔவாம் யகரத்தினோடு
அகரம் இணைந்து ஐயதாகும். ஆஏஓ வினா அந்தமாம்
எகர ஒகர மெய்யிற் புள்ளி மேவும் அ இ உச்சுட்டாம்
இகரங் குறுகிவரும் குற்றுகரம் பின் யவ்வரினே"

என்பது காரிகை.

இதன் கண் இகரம் சார்பெழுத்து என்று கூறவில்லை அசைச் சொல்மியாவின்வரும் இகரம் கூறப்படவில்லை. குற்றுகரத்தின் பின் வந்து இகரம் குறுகுமென்கிறார் குற்றுகரம் என்னாகும் என்று கூறவில்லை எ.ஒ. மெய் இவை எதற்காகப்புள்ளி பெறும் என்பதற்கு விளக்கமில்லை எகர ஒகரங்களுக்கு இவர் நூலிலும் புள்ளியில்லை. தொல்காப்பிய நூற்பாவைத் தவறாக எழுதிக் கொண்டதன் விளைவு இத்தடுமாற்றத்திற்குக் காரணம் என்பதை எனது தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரையுள் கண்டுகொள்க.

அடுத்து, ஏ,யா,எ இவை மொழிமுதற்கண் வினாவாக வரும் என்றும் எடுத்தல் படுத்தல் நலிதல் உரப்பல் என்னும் நால் வகையிற் பிறக்கும் மெய்கள் தம்முன்னர்த்தாம் வந்து மயங்கியும் பிறவாறு மயங்கியும் ஈரொற்றுடனிலையாயும் வரும் என்றும் கூறுகிறார் மெய்ம் மயக்கம் பற்றியாதும் கூறவில்லை அக்காரிகைவருவறு

ஏயாஎச் சொல்முன்வினா எடுத்தல் படுத்தல் நலிதல்
ஓயாதுரப்பல் என நால் வகையாற் பிறக்கும் மெய்கள்
சாயாமயக்கந்தம் முன்னர்ப் பிறவொடுதாமும் வந்து
வீயாத ஈரொற்று மூவொற்றுடனிலை வேண்டுவரே (சந்-4)

வேண்டுவரே என்றதனான் விளக்கங்களை அந்நூல்களில் கண்டு கொள்க என்பது கருத்துப் போலும்.

அடுத்து எழுத்துக்களின் மாத்திரைபற்றியும் உயிர்மெய் இலக்கணம் பற்றியும் பின்வருமாறு கூறுகின்றார்.

குற்றெழுத்தொன்று ஒன்றரையாகும் ஐஔ இரண்டு நெடில்
ஒற்றெழுத்தாய்தம் இஉ அரை மூன்றளபு, ஓங்குயிர்மெய்
மற்றெழுத்தன்று உயிர்மாத்திரையே பெறும் மன்னுநின்ற
ஒற்றெழுத்தின்பின் உயிர்வரின் ஏறும் ஒளியிழையே

ஐகாரக் குறுக்கம் ஒரோவழி ஒருமாத்திரையே பெறும் என்பதையும் நீட்டம் வேண்டின் நெடில் நான்கு மாத்திரையளவும் நீளும் என்பதையும் இவர் கருதவில்லை குற்றியலிகரம் குற்றியலுகரம் என்னும் சார்பெழுத்துக் கொள்ளாதவர் அவற்றிற்கு மாத்திரை கூறுகின்றார். ஒற்றெழுத்தின் பின் உயிர்வரின் ஒற்றின் மேல் உயிர்ஏறும் என்றும் உயிர்மெய் என்பது வரிவடிவத்தில் ஒன்றாக இருக்குமேயன்றி அது தனியொரு எழுத்தன்று என்றும் உயிர்மெய் உயிரினளவே பெறும் என்றும் கூறுகின்றார்.

நேமிநாதநூலாரும் நன்னூலாரும் உயிர்மெய்யை வரி வடிவ வேறுபாடாகக் கருதாமல் அதனைச் சார்பெழுத்தாகக் கொண்டும் வரிவடிவை நோக்கி இருநூற்றுப்பதினாறு எழுத்து எனக் கொண்டும் கூறியுள்ள பெரும் பிழையை இவர் செய்யாமை போற்றத்தகுவதாம் உயிர்மெய்பற்றிய ஆய்வினை நன்னூலாய்விற் கண்டு கொள்க. அடுத்து எழுத்துக்களின் பிறப்பிலக்கணத்தைப் பின் வருமாறு கூறுகிறார்.

"உந்தி முதலெழுங்காற்றுப் பிறந்து உரமும் சிரமும்
பந்தமலி கண்டமும் மூக்கும் உற்று அண்ணம் பல்லுடனே
முந்தும் இதழ்நா மொழியுறுப் பாகும் முயற்சியினால்
வந்து நிகழும் எழுத்தென்று சொல்லுவர் வாணுதலே"

அடுத்து மொழிக்கு முதலாகவரும் எழுத்துக்கள் பற்றிப் பின் வருமாறு கூறுகிறார்.

"ஆவியனைத்தும் கசதநபம அவ்வரியும், வவ்வில்
ஏவிய எட்டும் யவ்வாறும் ஞந்நான்கும் எல்லாவுலகும்
மேவிய வெண்குடைச் செம்பியன் வீரரா சேந்திரன்றன்
நாவியல் செந்தமிட் சொல்லின் மொழிமுதல் நன்னுதலே"

ஐ, ஔ வுடன் சதரமும் உ ஊ ஔ வுடன் யகரமும் வடசொல்லாகவன்றித் தமிழ்ச் சொல்லாக மொழிக்குமுதலில் இதுகாறும் வரவில்லை. பின்நூலாரும் இப்பிழையைப்புரியத் தவறவில்லை. அடுத்துமொழியிறுதியில் வரும் எழுத்துக்களைப் பின் வருமாறு கூறுகின்றார்

"ஈறும் மகரணகரங்கள் தாமும் இடையினத்தில்
ஏறும் வகரம் ஒழிந்தைந்தும் ஈரைந் தெழிலுயிரும்
வீறுமலி வேங்கடம் குமரிக்கிடை மேவிற்றென்று
கூறுந் தமிழினுக் கீற்றெழுத்தா மென்பர் கோல்வளையே"

இதனான் மெல்லினத்துள் ஞ், ந் என்பனவும் இடையினத்தில் வ் என்பதும் உயிருள் எ,ஒ என்பவையும் மொழியிறுதிவரா என்பது இவர் கருத்தாதல் புலனாகின்றது. எவ் அடிப்படையில் இங்ஙனம் கூறுகின்றார் என்பது புலப்படவில்லை. உரிஞ், உறிஞ், வெரிந் பொருந், தெவ் அவ் இவ் உவ் என்னும் சொற்கள் இவர் கால இலக்கியங்களில் இல்லையா? எகரம் அளபெடையிலும் ஒ கரம் நொ என்னும் ஓரெழுத்தொரு மொழியிலும் ஈறாதலை இவர் காணவில்லை யா? தொல்காப்பியநூலை இவர் பார்க்கவில்லையா? என்று தெரியவில்லை. "வேங்கடம் குமரிக்கிடை மேவிற்றென்று கூறுந்தமிழ்" என இறந்தகாலமாகக் கூறுதலின் இவர் காலத்தில் தமிழக எல்லை. அவ்வாறில்லை போலும்.

சந்தி இலக்கணம் - (புணரியல்)

இந்நூல் ஒன்பதாம் நூற்பாமுதல் புணர்ச்சி இலக்கணம் கூறுகிறார். தமிழ்மொழிக்கே உரியதும் இன்றியமையாச் சிறப்பினதுமான, வேற்றுமைப் புணர்ச்சி - அல்வழிப் புணர்ச்சி என்னும் பாகுபாட்டினை இவர் மேற்கொள்ளவில்லை. சொல் நோக்கில் இயல்புப் புணர்ச்சி, விவகாரப் புணர்ச்சி என்னும் வகைகளை மட்டுமே மேற்கொண்டு கூறுகின்றார். இஃது எவ்வாறு தமிழ் இலக்கணநூலாகும்? தமிழ்ச் சொற்றொடர்களை அறிதற்குப் பெரிதும் தேவைப்படாத வடமொழிச் சந்தி பற்றிய இலக்கணங்களை மிக விரித்துக் கூறுகின்றார். இருமொழிச் சந்தியேயன்றி ஒருமொழிப்புணர்ச்சி (அகச்சந்தி) பற்றியும் கூறுகின்றார்.

தொல்காப்பியர் மெய்பிறிதாதல், மிகுதல், குன்றல் என அறிவியல் நோக்கில் கூறிய கலைச் சொற்களை விடுத்துத் திரிதல், தோன்றல், கெடுதல் என்னும் குறியீட்டுச் சொற்களை மேற் கொண்டுள்ளார். அவ்வாறே நிறுத்தசொல் குறித்து வருகிளவி என்னும் குறியீடுகளை விட்டு நின்ற சொல் வருஞ்சொல் எனக் கூறுகின்றார். (இவை பற்றிய விளக்கங்களை நன்னூலாய் விற்கண்டுகொள்க) புணரியலின் பொது விலக்கணத்தைப் பின்வருமாறு கூறுகின்றார்.

நின்றசொல் ஈறும் வரும் சொல் முதலும் நிரவித் தம்முள்
ஒன்றிடும் போதும் ஒருமொழிக் கண்ணும் உலகிற்கொப்பின்
நன்றிய மும்மை விகாரம் வந்தெய்திடும் நன்கியல் பிற்
குன்றுதலின்றி வருதலும் உண்டென்று கூறுவரே (சந்-9)

என்று கூறி, அடுத்து வடமொழிச் சந்தி கூறுகின்றார். அவற்றுள் இவர் மரபு பிறழ்ந்து புதுமையாகக் கூறும் இலக்கணங்களை இனிக் காண்போம்

இ.ஈ.ஐ என்னும் ஈறுகளின் முன் நகர முதன்மொழிவரின் நகரம் ஞகரமாகத் திரியும் என்கிறார். சான்றோர் இலக்கியங்களில் இந்நிலைகாணப் படவில்லை இந்நூலின உரையாசிரியர் பின் வருமாறு எடுத்துக்காட்டுக்கள் வரைந்துள்ளார் (காரிகை-15)
கவி+நன்று = கவிஞன்று தீ+நன்று=தீஞன்று. பனை+நன்று = பனைஞன்று

ஞகரத்திற்கு நகரம் ஒரோ வழிப் போலியாக் வருதல் உண்டு அது புணரியல் இலக்கணமன்று. இப்புது விதியினால் தமிழ் மொழிக்கு விளைந்த ஆக்கமொன்றுமில்லை. இங்ஙனம் இவர் இல்லாததைப் பொருந்தாதை ஒருவிதியாக் கூறற்குக் காரணம் புலப்படவில்லை. (காரிகை-15)

அடுத்து ழ - ள என்னும் புள்ளியீற்றின் முன் தகரம் வரின் டகரமாகத் திரியும் என்கிறார். இதற்கு உரையாசிரியர் தரும் எடுத்துக் காட்டுக்கள்.

பாழ் + தீமை = பாட்டீமை - பாடீமை
நாள் + தீமை = நாட்டீமை - நாடீமை

மெய்யெழுத்துக்கள் திரிதற்குக் காரணம் பிறப்பிடமுரண் அல்வழிவேற்றுமைப் பொருள்நோக்கு. ளகரமெய் தகரத்தொடு மயங்காமையின் ளகரம் டகரமாகத்திரியும் இது தமிழ் மரபு. ழகரம் வாழ்த்து முகிழ்த்தது. மகிழ்துணை ஏழ்தளை என ழகரமும் தகரமும் மயங்குமாதலின் அது திரிதற்குக் காரணமில்லை. இத்தமிழ் மரபைச் சிதைத்து ழகரத்தை ளகரத் தொடு வைத்து இவர் விதி கூறியுள்ளார். ழகரம் தமிழ் மொழிக்கே உரிய சிறப்பெழுத்து என்னும் தனித்தன்மையை ஒழிப்பதே இவர் நோக்கென்பது சிலர் கருத்து இவ்விதிகளை.

நான்கொடு மூன்று ஒன்பது ஆம் உயிரின் பின்பு நவ்வருமேல்
ஏன்று ஞகரமதாகும் பதினைந்தொடு எண்ணிரெண்டாய்த்
தோன்றுடற் பின்னர்த் தகரம்வரின் இரண்டும் தொடர்பால்
ஆன்ற ஐந்தாம் உடல்ஆம் முன்பில் ஒற்றுக்கு அழிவு முண்டே (கா.15)

என்னும் காரிகையில் கூறுகின்றார். முன்னர் உயிர் எழுத்தை ஆவி என்றாங்குமெய்யெழுத்தை ஈண்டு உடல் என்கிறார். நன்னூலார் உடம்பு என்பார்.

இவ்விதிகள் எந்த இலக்கியத்தைப் பார்த்துச் செய்யப்பட்டன என்று விளங்கவில்லை. கந்தபுராணத்தில் வரும் "திகடச் சக்கரம் செம்முகமைந்துளான்"

எனவரும் தொடரைக் காட்டி அமைதி கூறுவார் சிலர் கந்தபுராணம் வீரசோழியம்த்திற்குப் பல்லாண்டுகள் பிற்பட்டது அவர் விளையாட்டுக்காக வீரசோழிய விதியைக் கூறுவார் போன்று அவ் ஒரே அடியில் மட்டும் கூறிச் சென்றார் தம் நூலுள் பிற இடங்களில் இவ்விதியை மேற்கொள்ளவில்லை. இந்நூலாசிரியர் மட்டுமே. சில காரிகையுள் இவ்விதியை மேற்கொண்டுள்ளார். அடுத்துப் பதினெட்டாங்காரிகையுள்.

ழகர ஈற்றின் முன் வல்லினம் வரின் ழகரம் டகரண கரங்களாகத் திரியுமென்றும் நகரம் வரின் அது கெட்டு நகரம் ணகரமா கத்திரியும் என்றும் விதி கூறுகின்றார். உரையாசிரியர் தரும் எடுத்துக் காட்டுக்கள்.

தமிழ் + சொல் = தமிட்சொல் பாழ் + செய் = பாண்செய்
பாழ் + நன்று = பாணன்று முகிழ்+முலை = முகிண் முலை

இவ்விதிகள் வேற்றுமை என்னும் பொருளையோ, இடை நிலை மெய்ம் மயக்கத்தையோ ஆய்ந்து கூறியவை யல்ல ழகரத்தை ளகரத்தொடு சார்த்திக் கூறும் அழுக்காறு பற்றிய அவ்வளவேயாகும்.

மற்று சோழன் + நாடு (சோழனாடு) என்பவை சோணாடு என்றும் வாழ் + நன் என்பவை வாணன் என்றும் வருவனவற்றைத் தமிழ் நூலறிஞர்மார் மரூமுடிபாகக் கொள்வதன்றிப் புணர்மொழியாகக் கொள்வதில்லை. மற்று அப்பரடிகள் தேவாரத்தில் வரும் "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்" என்னும் அடியிற் குமிண் சிரிப்பு என ழகரம் ணகரமாகத் திரிந்துள்ளதால் எனின் அன்று. நன்மை - வெண்மை, பொன்மை முதலியபண்புச் சொற்கள் நல்-நல்லன்-வெள்-வெள்ளேறு-பொல் = பொலந்தார் என லகர ஈறாயும் நன்-நன்னர், நன்காடு, வெண், வெண்ணாறு வெண் பளிங்கு-பொன்-பொன்னாடு பொன் வயல் என இருதிறனாயும் வருமாறு போல குமிழ்-குமிண் என்பன செஞ்சொற்களேயாம் இவ்வறே எள்-எண் என்பவை ஒருபொருட் சொல்லாக வரும்.

இப்புணர்மொழியிலக்கணங்களைச் சான்றோர் மேற் கொள்ளாமை காணலாம். இப்படலத்தில் கூறும் ஏனைய சந்தி இலக்கணங்கள் பெரும்பாலும் பிழைபடாமல் அமைந்துள்ளன.

இப்படலத்தில் ழகரமெய்யின் சிறப்பைச் சிதைக்கும் முயற்சியும் ஞ், ந், வ் என்பவற்றை மொழியிறுதியில் வாரா என விலக்கியதும் தவிர பிறவற்றால் பெரிதும் தமிழ் நெறிக்கு இழுக்கு நேரவில்லை.

சொல்லதிகாரம்

இந்நூலாசிரியர் சொல்லிலக்கணங்களை வேற்றுமைப் படலம், உபகாரகப்படலம், தொகைப்படலம், தத்திதப் படலம், தாதுப்படலம், கிரியாபதப்படலம் என்னும் ஆறு படலங்களுள் தொகுத்துக் கூறுகின்றார். வேற்றுமைப் படலம் தொகைப் படலம் என்னும் இரண்டும் தமிழ்க் குறியீடாகவும் ஏனைய நான்கும் வடமொழிக் குறியீடாகவும் அமைந்துள்ளன. பிரத்தியயம் என்னும் இடைச் சொற்களைப் பெயர் வினைகளுடன் இவர் இணைத்தே கூறுதலின் அவற்றிற்குத் தனியாகப் படலம் வகுக்கப்படவில்லை எனத் தெரிகிறது. உரிச் சொல் என்னும் வகை வடமொழியில் இன்மையின் பெயரடிகளைப் பிராதிபதிகம் என்றும் வினையடி களைத் தாது வென்றும் வகுத்துக் கூறுவர் அம்முறைமைகளையே இவரும் ஏற்றுள்ளார். பிராதிபதிகங்கள் வேற்றுமை உருபுகளை ஏற்றேபதங்களாகும் என்னும் வடமொழிக் கொள்கை பற்றிப் பெயர்ச் சொல்லுக்குரிய இலக்கணங்களை வேற்றுமைப் படலம் முதலாக நான்கு படலங்களிலும், வினைச் சொல்லுக்குரிய இலக்கணங்களை இறுதி இரண்டு படலங்களிலும் அமைத்துக் கூறுகின்றார் இனி ஒவ்வொரு படலத்தையும் பற்றிக் காண்போம்.

வேற்றுமைப் படலம்

தமிழில் நிரம்பிய உரியடிச் சொற்கள் வடமொழியில் பிராதிபதிகம் எனப்படும். அவை வேற்றுமை உருபிடைச் சொற்களை ஏற்று நிற்குமிடத்துச் சுபந்தம் எனப்படும் சுப் என்பது வேற்றுமை உருபுகள் யாவற்றையும் அடக்கி நிற்கும் தொகைக் குறியீட்டுச் சொல்லாகும்.

சுபந்தங்களாக நிற்கும் பதங்கள் வினையான் வேறுபடுமிடத்துக் 'காரகம்' எனப்படும் வேற்றுமை உருபேற்றுத் தொடர்ப் பொருள் உணர்த்துமிடத்து 'விபத்தி' எனப்படும். இச் சமற்கிருதக் கோட்பாடுகளை ஒட்டியே இந்நூலாசிரியர் தம் இலக்கணக் கொள்கையைக் கூறுகின்றார்.

முதல் நூற்பாவில் வேற்றுமைகளின் தொகையும், காரகத் தொகையும் அவற்றின் பெயர்களும் கூறுகின்றார் ஆறாம் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் தவிர்ந்த பிற ஆறும் காரகமாக வரும் என்கிறார்.

எட்டாம் எழுவாய் முதற் பெயர் வேற்றுமை, ஆறுளவாம்
சுட்டார்க் கருத்தா முதற்காரகம் அவைகட்டுரைப்பின்
ஒட்டார் கருத்தா கருமம் கரணம் ஒண்கோளியொடும்
சிட்டார் அவதியொடு ஆதாரம் என்றறி தேமொழியே (வே-1)

அடுத்து உருபேற்கும் பெயர்கள் இயல்பென்றும் சிறப்பென்றும் அமைந்து எட்டு வகைப்படும் என்கிறார். அவை யாவன

1. ஒருவனைச் சுட்டும் சொல் „ எ-டு-சாத்தன், கொற்றன்
2. ஒருவனைச் சிறப்பித்த சொல் „ சாத்தனார், கொற்றனார், இராமர்
3. ஒருத்தியைச் சுட்டும் சொல் „ சாத்தி - கொற்றி
4. ஒருத்தியைச் சிறப்பித்த சொல் „ சாத்தியார் - கொற்றியார்
5. பல்லோரைச் சுட்டுஞ்சொல் „ நாட்டார், ஊரார்
6. ஒன்றனைச் சுட்டுஞ் சொல் „ மரம், மலை, கடல்
7. ஒன்றனைச் சிறப்பித்த சொல் „ நரியார், யானையார், நாலடியார்
8. பலவற்றைச் சுட்டுஞ் சொல் „ யானைகள், மரங்கள், நரிகள்

சிறப்பித்த சொல் என இவர் கூறுவது பொருள் ஒருமை எண்ணாக இருக்க அவற்றொடு பன்மை விகுதிகளைச் சேர்த்துச் சொல்லப்படும் நிலையை, பலர்பாலும் பலவின்பாலும் பன்மைச் சொல்லாயே நிற்றலின் அவற்றிற்குச் சிறப்பித்த சொல் என்னும் வகைகள் இல்லை.

இவ் எட்டுப் பெயர்களும் 'சு' என்னும் முதல் வேற்றுமை உருபொடு கூடியே நிற்கும் பிற உருபுகள் வருமிடத்துக் கெட்டு விடும் என்பார் அர், ஆர், அர்கள், கள், மார் என்பவை முதல் வேற்றுமை உருபுகளாகப் புணர்ந்து கெடாமல் வெளிப்படநிற்கும். எட்டாம் வேற்றுமையாகிய விளிக்கண் இவை கெடும் என்றும். எண்வகைப் பெயர்களுடன் எட்டு வேற்றுமைகளையும் வைத்துப் பெருக்க அறுபத்து நான்கு காரக பதங்கள் உண்டாகும் என்றும் கூறுகின்றார். அவை வருமாறு

ஒருவன் ஒருத்தி ஒன்றாம் சிறப்பொடு பல்லோர் பலவை
கருது முறையிற் கலப்பன வேற்றுமைகாண், முதல்சு
மருவும்அர்ஆர்அர்கள் ஆர்கள் கள் மார்முதல் வேற்றுமையின்
உருவம் விளிவேற்றுமை ஒழித் தெங்கும் உறப் பெறுமே (வே.2)

ஒருவன் ஒருத்தி பலர் ஒன்றொடு பலவும் சிறப்பின்
உருபுகள் மூன்றும் உடன் வைத்துப் பின் எட்டு வேற்றுமையும்
மருவநிறுவி உறழ்தர ஆம் காரக பதங்கள்
உருவுமலியும் அறுபத்து நான்குள ஒண்டொடியே (வே-3)

இதற்கு முன்பு இவ்வாறு கூறும் தமிழ் இலக்கண நூல்கள் எவையுமில்லை என்பது வெளிப்படை. பின்னர் இவரே வடமொழி யாளர் கூறும் காரக பதங்களை விதந்து கூறுதலான் இவர் கொள்கை பாணினீயம் முதலிய வடமொழிக் கொள்கையுமன்று என்பது தெளியப்படும். எனவே இது தமிழ்மொழி வடமொழி இரண்டு மல்லாத வேறொரு மொழி வழக்காகக் கருதிக் கொள்ளல் வேண்டும். இதனைத் தமிழ் இலக்கணமாக இவர் கூறுதலான் பயன் யாது? நன்னூலை ஏற்றுக் கொண்டமை போல இந்நூலை ஏற்று இடைக்காலத் தமிழாசிரியன் மார் பயிற்துவியாமல் புறஞ் செய்தமை தமிழ் மொழி செய்த ஒரு கூற்றுத் தவப் பயன் என ஆறுதலடையலாம்.

அடுத்து வடமொழியில் அமைந்துள்ள காரகபாதங்களை அவர் தம் கொள்கை வழிநின்று கூறுகின்றார். வடமொழியில் உயர்திணை அஃறிணை என்னும் திணைப் பாகுபாடு இல்லை. ஆண்பால், பெண்பால், அலிப்பால் என்னும் பால் மூன்றும் ஒருமை, இருமை, பன்மை என்னும் எண் மூன்றும் உள. வடமொழியில் எட்டு வேற்றுமைகளுள் விளி வேற்றுமைக்கு உருபு இல்லை. ஆதலின் அதனை நீக்கி விபத்தி ஏழாகக் கொள்வர். அவ் ஏழினையும் பாலொடும் எண்ணொடும் வைத்துப் பெருக்க (7X3=21X3=63) அறுபத்து மூன்று பதங்கள் வரும். இதனைப் பின்வரும் காரிகையுள் கூறுகின்றார்.

ஆதியி லாண்பெண் அலிஎன்று நாட்டி அதினருகே
ஒதிய வேற்றுமை ஏழையும் சேர்வித்து ஒருங்கதன் பின்
வாதிய லொன்று இரண்டு பலவென வைத்து உறழத்
தீதிய லாத அறுபத்து மூன்றுறுந் தேர்ந்தறியே (வே-4)

இதனான் தமிழ் மொழி இலக்கணத்திற்கு எய்திய பயன் யாது என்று தெரியவில்லை. இனி அடுத்து அவலோகிதன் பக்கல் அகத்தியன் கேட்டுச் செய்த இலக்கணத்தை ஒட்டி வேற்றுமை உருபுகள் வருமாறு கூறுகின்றார்.

எழுவாய் வேற்றுமைப் பெயரில் 'சு' வ்வும் 'கள்'ளும் ஆகிய உருபுகள் புணர்ந்து கெடும். பன்மைச் சொல்லில் கள் கெடாமலும் நிற்கும். அர், ஆர், அர்கள், மார் என்னும் உருபுகள் கெடாமல் நிற்கும் என்கிறார்.

கூறிய சொற்பின் பொருள் மாத்திரத்திற் குல வெழுவாய்
வீறுடை வேற்றுமை எய்தும் ஒருவன் ஒருத்தி ஒன்றின்
ஏறிய சுப் பலவிற் சுவ்வும் கள்ளும் எங்கும் அழியும்
ஊறிய சுச்சிறப்புப் பலரிற்கள் ஒழிந்தனவே. (வே-5)

அடுத்துக் கருமக்காரகமாகிய இரண்டாம் வேற்றுமைக்கு உருபு ஐ என்றும் அதுசில இடங்களில் அழியுமென்றும் கருத்தாவினும் காரணத்தினும் வரும் மூன்றாம் வேற்றுமைக்கு உருபு ஒடு ஓடு ஆல் என்றும் கோளிக் காரகமாகிய நான்காம் வேற்றுமைக்கு உருபு கு, பொருட்டு என்றும் கூறுகின்றார். அக்காரிகை வருமாறு.

ஐ என்பது கருமத்திரண்டாவது அது ஒருகால்
பைய அழிதரும், மூன்று ஒடு ஒடு ஆலாம், பகர் கருத்தா
வைய நிகழ் கரணத்தின் வரும் குப் பொருட்டென்பது
மெய்திகழ் வேற்றுமை நான்காவதாம் மிக்க கோளியிலே (வே-6)

அடுத்து ஒன்றனைத் துடக்கிக் கொடுநிற்றலே தனக்குப் பொருளாக உடைய ஆறாம் வேற்றுமைக்கு உருபு 'உடை' என்பது அஃது ஆன், ஆள், ஆர், ஆர்கள், அது இன(ன) என்பவற்றை இறுதி யிற் கொண்டு வரும் என்றும், உடை என்பது அகரம் பெற்று உடைய எனவும் நிற்கும் என்றும் ஆறாம் வேற்றுமை காரகமாகுமிடத்து கு என்னும் இடைச்சொல் மட்டுமே வருமென்றும் இடப்பொருள்பற்றி வரும் ஏழாம் வேற்றுமைக்கு உருபு கே, உழை, வயின் பக்கல்,

உழி இல் கண் என்பனவும் இடம் இடை முன், பின், கீழ்மேல், உள், புறம்பாய் முதலியனவும் ஆகும் என்றும், அவதி எனப்படும் ஐந்தாம் வேற்றுமைக்கு உருபு ஏழாம் வேற்றுமைக்குச் சொல்லப்பட்ட உருபுகளின் பின் நின்று என்னும்சொல்லைப் பெற்று வரும் என்றும் கூறுகின்றார். அக்காரிகை வருமாறு.

> **ஆனானார் ஆர்கள் அது இன ஆறிற்கு உடைப்பின் குவ்வேல்**
> **நூனாடிய பதமாநுவல் ஆதாரம் ஏழினிற் கே**
> **தானாம் உழைவயின் பக்கல் உழியில் கண் சார்பிறவும்**
> **வானாமலி நின்றவற்றில் வரூஉம் ஐந்தவதியிலே (வே-7)**

என்பதாகும். உரையாசிரியர் ஐந்தாவதற்கு 'இன்' என்பதும் வரும் என முட்டுக் கொடுத்துள்ளார். அடுத்து எட்டாம் வேற்றுமையாகிய விளி வேற்றுமைக்கு உருபுகள் ஆய், ஆள் ஆ. ஏ. அ. ஆ. ஆன் ஒல் ஒய், ஈர் என்பனவும் இவற்றின் அளபெடைகளுமாம் என்கிறார். விளி வேற்றுமை முன்னிலைக்கு மட்டும் வரும் ஏனைய மூன்றிடத்தும் வரும் என்கிறார்.

இவர் கூறும் வேற்றுமை உருபுகள் பற்றியும் பொருள் நிலைபற்றியும் இலக்கணங்களுள் தமிழ் நெறி முறைக்கு முரணாகவும் வழுவாகவும் அமைந்துள்ள செய்திகளை மட்டும் ஈண்டுச் சுருக்கமாக் காண்போம்.

வடமொழியில் 'பிராதிபதிகம்' என்னும் பொருட் பெயர் அடிச் சொற்களே ஆண், பெண், அலி என்னும் பால்களைக் காட்டி நிற்கும் (பாலை லிங்கம் என்பார் அவர் லிங்கம் = குறியீடு) அவை 'சுப்' என்னும் உருபுகளை ஏற்று நிற்குமிடத்து முடிக்கும் சொல் காரணமாகக் காரகபதங்களாகி விடும் (செயப்படுபொருள் முதலிய வேற்றுமைப் பொருளைக் காரகம் என்பர்) சுப் என்னும் உருபுகளைப் பெறாமல் தத்தி தாந்தங்களைப் பெற்றவிடத்து அவை உட்பிணைப்புச் சொல்லாகித் தொடர் மொழிப் பொருளுணர்த்தும். அவ்வாறு தொழில் பெயராக நிற்கும் தாது என்னும் வினையடிகள் 'திங்' என்னும் பிரத்தியயங்களை (இடைச் சொற்களை)ச் சேர்ந்து கிரியாபதங்களாக (வினைச்சொற்களாக) நிற்கும் அவை லகாரங்கள் என்னும் இடைச் சொற்களை உட்கொண்டு காலங்காட்டி வரும்.

அதனான் பிரத்தியங்கள் என்னும் இடைச் சொற்கள் ஒருமொழியின் முதலிடை கடைகளில் யாண்டு நிற்பினும் அவை வேற்றுமைப் பொருளையும், தத்திதப் பொருளையும் வினைப் பொருளையும் தரும் பாலிமொழி இலக்கணக் கோட்பாடும் வடமொழியை ஓரளவு ஒத்தே அமைந்திருக்கும் போலும் என்பது இந்நூலாற் புலனாகின்றது.

அவ்வடிப்படையில் இந்நூலாசிரியர் தமிழில் உரியடிச் சொல் எனப்படும் பெயர், வினைகளுக்கு அடிப்படையாக (பகுதியாக) முதனிலைச் சொல்லாக நிற்பனவற்றைப் பிரகிருதிகள் என்கிறார். பிரகிருதிகள் எனப்படும் முதனிலைகளோடு அவற்றின் பின் வந்து இணையும் பிரத்தியயங்களான், பெயர்ச் சொல்லாகவும், வினைச் சொல்லாகவும் உருப்பெறும், தத்திதாந்தங்கள் இணைந்த பெயர்கள் குறிப்பு வினை போலப் பொருள்தரும் என உணர்த்த முற்பட்டு அவற்றையே இலக்கணக் கொள்கையாக வகுத்துக் கொண்டு கூறுகின்றார்.

தமிழ்மொழியில் இடைச் சொற்கள், பால் இடம் எண் காட்டும் இறுநிலை (விகுதி) களாகவும், வேற்றுமைப் பொருள் நிலையைச் சுட்டும் உருபுகளாகவும் காலங்காட்டும் உருபுகளாகவும் சாரியையாகவும் வரும் சில வினை முற்றுகளில் விகுதிகளே காலங்காட்டும். வேற்றுமை உருபுகள் விரிந்தும் மறைந்தும் வரும். எழுவாய் வேற்றுமைக்கும் விளிவேற்றுமைக்கும் தனியே உருபுகள் இல்லை எழுவாயாகத் தோன்றிப் பயனிலையை அவாவிற்கும் பெயரே உருபின் பயத்ததாக நிற்கும். விளிவேற்றுமைப் பெயர் இயல்பும் திரிபும் பிறிதுவந்தடைதலு மாகநின்று விளிப்பொருளை உணர்த்தும். பொருளை வேற்றுமைப் படுத்துவன பயனிலையாக வரும் முடிக்குஞ் சொற்களேயாகும். பெயர்ச் சொற்கள் பயனிலையாகவும் நிற்கும் இவை ஆக்கச் சொல்லொடு கூடிய வினைமுற்றுக்களை அவாவிநிற்கும் அவ்வினைகள் மறைந்து நிற்கும்.

இரண்டாம் வேற்றுமை தவிர்ந்த ஏனை வேற்றுமைகள் சொல்லுருபுகளைப் பெற்றும் வரும். அவை உளி, மாறு, பொருட்டு, நின்று உடைய புறம் அகம் உள், உழை, கீழ், மேல் முதலியனவாகும்.

இந்நூலாசிரியர் தமிழாசிரியன் மார்கூறும் சொல்லுருபுகளுள் பலவற்றை வேற்றுமை உருபுகளாகவே கூறுகின்றார். பால், எண், உணர்த்தும் விகுதிகளை உருபுகளோடு இணைத்துக் கூறுகின்றார். இவ்வாறு கூறுதலான் தமிழ் மொழிக் கெனச் சிறப்பு இலக்கணக் கோட்பாடுகள் ஒன்றுமில்லை எல்லாம் வடமொழிக் கோட்பாட்டிற்குட் பட்டவையே என்று மறைமுகமாக வலியுறுத்துவதே இவர் நோக்கம் என்பது புலகின்றது. இக்கரந்த நோக்கத்தால் இந்நூல் அறிவியலுக்கு ஒவ்வாத முறையில் அமைந்து விட்டது.

அடுத்து மூவிடப்பெயர்கள் வேற்றுமை கொள்ளுமாறு கூறத் தொடங்கிச் சுட்டுப் பெயர் வினாப்பெயர்களையும் சேர்த்துப் பின் வருமாறு இலக்கணங் கூறுகின்றார்.

உன், என், தன், என்னும் மூவிடப்பெயர் மூன்றும் யா, ஆ, இ, உ எ, என்னும் ஐந்தும் ஆகிய எட்டுப் பிரகிருதியையும் வேற்றுமைப் பிரத்தியத்தோடு கூட்டிக் கூறுங்கால் சுப்பிரத்தியம் புணர்ந்து கெட்டு எழுவாய் வேற்றுமையில் உன் என்பது நீ எனவும் என் என்பது நான் எனவும் தன் என்பது தான் எனவும் திரியும். என்றும் இவற்றைச் சிறப்பித்த பெயராகக் கருதினவிடத்து அவை முறையே நீர், நாம், தாம் எனவரும் என்றும் கூறுகின்றார். மேலும், யா முதலிய ஐந்தும் வன், வள், து, வை என்னும் பிரத்தியங்களுடன் சேர்ந்து பெயராகும் என்றும் அவற்றைச் சிறப்பிக்கக் கருதினவிடத்து 'வர்' என்னும் பிரத்தியம் வரும் என்றும் இவ் எட்டினையும் பன்மையாக்குமிடத்துக் கள், வர்கள் என்னும் பிரத்தியங்கள் வரும் என்றும் கூறுகின்றார்.

உரையாசிரியர் யாம் என்பது யாங்கள் எனவும் தாம் என்பது நாங்கள் எனவும், நீர்கள் என்பது நீயிர், நீவிர் எனவும் நீ என்பது நின் எனவும் நான் என்பது யான் எனவும் நாங்கள் என்பது நாம் என்றும் உங்கள் என்பது நுங்கள் என்றும் வரும் எனச்சப்பைக் கட்டு கட்டிக் கூறுகின்றார்.

இவ்விலக்கணங்கூறும் காரிகை வருமாறு.

உன்னும் என்னும் தன்னும் யாவும் அவ்வும் இவ்வும் உவ்வும்
என்னும் இவற்றின் முன் நீநான் தான் சுவ்வரில் யாமுதல
வன்னும் வள்ளும் துவ்வும் வையும் சிறப்பின் நீர் நாமொடுதாம்
பின்னிலைந்தும் வர் பலரிற்கள் ளோடுவர்கள் என்பவே.

இதனான் இவர் கொள்கை மூவிடப்பெயர்கள் முதற்கண் வேற்றுமைப் பெயர்களாகத் தோன்றிப் பின்னர் எழுவாய்ப் பெயராகத் திரியும் என்பதாகத் தெரிகின்றது. மடைமாற்றத்தை இவ்வளவு துணிச்சலாக வேறு யாரும் செய்யவில்லை.

உபகாரகப்படலம்

வேற்றுமைப் படலத்துள் விரித்துக் கூறிய காரகபதங்களை விளக்கும் முறையில் அதற்குத் துணையாக இப்படலத்துள் காரகப் பதங்களில் நிற்கும் காரகப் பொருள் இவை எனக் கூறுகின்றார். (காரகம்-ஒருவினைநிகழ்தற்குரிய காரணமாக நிற்பது) முதல் நூற்பா கருத்தா முதலிய ஆறு காரகங்கள் இவை என்கின்றது.

யாதொருதொழில் அதனைச் செய்வது கருத்தாக காரகம். அத்தொழிலைச் செய்வதற்குக் கருவியாக இருப்பது காணக்காரகம் செய்யப்பட்ட பொருள் கருமக்காரகம். ஒன்றினின்றும் ஒன்று நீங்குவது அவதிக்காரகம் அத்தொழில் நிகழ்வதற்கு இடமாக இருப்பது ஆதாரக் காரகதும் ஒன்று ஒருபொருளைக் கொள்வது கோளிக்காரகம். இவற்றை

மேதகுநற்றொழில் செய்வான் கருத்தா, திறற்கருவி
தீதில் கரணம் செயப்பட்டதாகும் திறற்கருமம்
யாதனின் நீங்கும் அவதியதாம் இடம் ஆதாரமாம்
கோதறுகோளி மன் கொள்பவனாகும் கொடியிடையே.

எனக் கூறுகின்றார். அடுத்து இவை ஒவ்வொன்றும் சில உட்பிரிவுகளை உடையன. அவ்வாற்றான் அவை இருபத்து மூன்றாக விரிந்து வரும் என்கின்றார். அவை வருமாறு.

கருத்தா - இஃது ஐந்து வகைப்படும்

1. காரணக்கருத்தா (உ-ம்)	புத்தன் கண்ணனை உய்வித்தான்
2. தான் தெரிகருத்தா	சாத்தனால் எறியப்பட்டது கல்
3. தான் தெரியாக்கருத்தா	தேவதத்தன் சோற்றை அடுகின்றான்
4. கருமக்கருத்தா	நன்மைதானே வெளிப்படும் விழுமி யோர் பக்கல்
5. தலைமைக்கருத்தா	விழுமியோர் நன்மைசெய்வர்

அவதி (நீக்கல்) இஃது இருவகைப்படும்

1. அசலம் (அசையாப் பொருள்	உ-ம்	ஊரினின்றும் போனான்
2. சலம் (அசையும் பொருள்	உ-ம்	குதிரையினின்றும் விழுந்தான்

காரணம் - இஃது இருவகைப்படும்

1. புறக்கரணம்	உ-ம்	கோடாரியால் மரத்தை வெட்டினான்
2. அகக்கரணம்	உ-ம்	கண்ணாற் கண்டான்

கோளி - இஃது மூவகைப்படும்

1. ஆர்வக் கோளி	உ-ம்	அருந்தவர்க்கு உணவு கொடுத்தான்
2. கிடப்புக் கோளி	உ-ம்	தேவர்க்குப் பூ இட்டான்
3. இரப்புக் கோளி	உ-ம்	அந்தணர்க்குப் பொன்கொடுத்தான்

கருமம் - இஃது ஏழுவகைப்படும்

1. பற்றுக்கருமம்	உ-ம்	பொன்னை ஆசைப்பட்டார் வறியர்
2. வீட்டுக்குமம்	உ-ம்	ஒழுக்கத்தை இகழ்வர் தீயோர்
3. இருபுறக்கருமம்	உ-ம்	சோறுண்கின்றவன் அதன் கண் வீழ்ந்ததுளியினைத் தின்றான்
4. தான்தெரிகருமம்	உ-ம்	வீட்டைக்கட்டினான் தச்சன்
5. தான்தெரியாக்கருமம்	உ-ம்	வீடு தச்சன் கட்டினான்
6. கருத்தாக்கருமம்	உ-ம்	கொற்றனை ஊர்க்குப்போக்கினான்
7. தீபகக்கருமம்	உ-ம்	பசுவினைப் பாலைக் கறந்தான்

ஆதாரம் - இது நான்கு வகைப்படும்

1. சேர்வாதாரம்	உ-ம்	தடுக்கின் கண் இருந்தான் கொற்றன்
2. கலப்பாதாரம்	உ-ம்	எள்ளில் எண்ணெய் நின்றது
3. புலனாதாரம்	உ-ம்	காட்டின் கண் புலிதிரிகின்றது
4. அயலாதாரம்	உ-ம்	ஆலின் கட்பசுக்கிடந்தது

இவையெல்லாம் வேற்றுமையின் வகைகளல்ல. பொருள் நிலைகளின் அடிப்படையில் அணியும் தொனியும் பற்றிக் கூறும் முறைமைகளேயாம் பிரயோக விவேக நூலாகும் இலக்கணத் கொத்து நூலாகும் மேலும் சில வகைகளைக் கூறுவர்.

கருமக்காரகம், ஒன்று, மூன்று, ஆறு, நான்கு ஆகிய வேற்றுமை களொடு மயங்கும் என்கிறார்.

உ-ம். சோறு தேவதத்தனால் அடப்பட்டது (1)
சாத்தனொடு எதிரிட்டான் (3)
சாத்தானுக்கு உரிமை சொன்னான் (6)
செய்க்கு நீர்பாய்ச்சினான் (4)

கரணக்காரகம் ஐந்தாவதொடும் ஆறாவதொடும் மயங்கும் என்கிறார்.

உ-ம் நன்மையினின்றும் பிழைத்தான் (5)
செவியினுக்குக் கேட்கலாம் (6)

குகரத்தை இவர் ஆறாம் வேற்றுமைக்கு மாற்றுருபாகக் கொள்வார்.
கோளிக்காரகம் மூன்றாவதொடும் ஆறாவதொடும் மயங்கும் என்கிறார்.

உ-ம் பொன்னோடு வெள்ளியிட்டது (3)

ஆறாவதனொடு மயங்கம் வடமொழிக்கே உரியது. தமிழ்க்கில்லை என்கிறார் உரையாசிரியர்.

இங்ஙனம் இவர் கூறும் வேற்றுமை மயக்கம் உருபுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். உருபுகளே வேற்றுமை செய்யும் என்பது வடமொழிக் கொள்கையாதலின் பொருள் மயக்கம் பற்றிய இலக்கணம் வடமொழியில் இல்லை இவற்றிற்குரிய காரிகைகள்

ஆதிய தான் தெரியாக் கருத்தா அல்லாக் கருத்தா
ஆதியது ஆறொடு மூன்றும் பெறுமென்பர், ஆதியையே
ஓதினர் தான் தெரியாக் கருமத்திற்கு ஒழிகருமம்
மேதகு மூன்றிரண்டாறு நான்கா மென்பர் மெல்லியலே

மூன்றைந் தொடாறு கரணம்பெறும் முரட்கோளியதே
மூன்றிருமூன்றொரு நான்காந் தருமுறையால் அவதி
தோன்றுமைந்தாம் மற்றை யாதாரம் ஏழின் கண்ணே என்பவாம்
வான்றிகழ் தெய்வ வடநூற்புலவர்தம் வாய்மொழியே

இவ் உபகாரகப்படலத்துள் கூறும் இலக்கணமெல்லாம் வடமொழிக்குரியதாகவே கூறியுள்ளாமையின் தமிழ் இலக்கண நெறிக்குப் பெரிதும் கேடுபயவாது எனினும் தமிழில் உதாரணம் காட்டி உரையாசிரியர் விளக்கியுள்ளமை இழுக்குப் பயப்பதாக உளது.

தொகைப்படலம்

இப்படலத்துள் வடமொழிக்குரிய சமாசம் பற்றியும் தமிழ் மொழிக்குரிய தொகை மொழி பற்றியும் இலக்கணங் கூறுகின்றார்.. தொகைமொழி பற்றி வடமொழிக் கொள்கை வேறு தமிழ் நூற்கொள்கைவேறு இருமொழிக் கண்ணும் சில ஒத்தும் சில கூறுகள் ஒவ்வாதும் நிற்கும்.

தமிழில் தொகை மொழி என்பது வேறு தொகைச் சொல் தொடர் என்பது வேறு -வடமொழியில் இவ்விரண்டும் ஒன்றாகவே கூறப்படும். தமிழில் உம்மைத்

தொகை தவிர்ந்த ஐந்தும் இருமொழி களாகப் பகுத்துரைப்படும் ஒன்று பொருளைத் தரும் ஒன்று அதற்கு அடையாக நிற்கும் இரண்டும் சேர்ந்து ஒருபொருளையே சுட்டும்.

தொகைச் சொல் என்பவை தொடர்நிலையில் அமைந்து எழு வாயும் பயனிலையுமாயும் பிறவாறும் அமைந்து இரண்டும் இரண்டிற்கு மேற்பட்ட பொருளையும் சுட்டும்.

பழந்தின்னி (வௌவால்) பொற்றொடி, தேன்மொழி, சுடுசோறு என ஒருபொருளைச் சுட்டி இருசொல்லாக வருபவை தொகை மொழிகள் நிலங்கடந்தான்-கல்லெறிந்தான் என வருபவை தொகைச் சொற்றொடர் தமிழ்நூல் உரையாசிரியன்மார் சிலர் இவ்வேறுபாடுகளை அறியாமல் உரைகூறியும் உதாரணம் காட்டியும் சென்றனர்.

வடமொழி சமாசன் (தொகை)

வடமொழியிம் தொகைகள் ஆறுவகைப்படும் அவை வருமாறு.

1. தற்புருடசமாசன் - நஞ்ஞுத் தொகையும் வேற்றுமைத் தொகைகளும்
2. பலநெல் (வெகுவிரீகி) - தமிழ் அன்மொழித்தொகை போன்றது
3. கன்மதாரயன் - பண்புத்தொகை
4. துவிகுசமாசன் - எண் தொகை
5. துவந்துவ சமாசன் - தமிழ் உம்மைத் தொகை போல்வது
6. அவ்வியபாவசமாசன் - இடைச் சொல் தொகை

வடமொழி சமாசன் பற்றிய பொது இலக்கணத்தைப் பின் வருமாறு கூறுகின்றார். அஃதாவது பெயர்ச் சொற்கள் இரண்டும் பலவுமாக அமைந்து பொருந்திய பொருளால் ஒரு சொல் நீர்மையாகத் தொகும், வேற்றுமை உருபுகள் அழியும் வேற்றுமைக்குச் சார்வாகிய சொற்களும் தொகும். அவை அழியினும் பொருளை விளக்கி நிற்கும். இதனை

நாமங்களிற் பொருந்தும் பொருள் நற்றொகை அந்தொகைக் கன்
தாமங்கழியும் முன்சாற்றிய வேற்றுமை, வேற்றுமையைச்
சேமங்கொள் சார்பாக எய்திய சொல்லும் சிலவிடத்துப்
போமங் கதன்பொருள தன்னை எல்லார்க்கும் பொருட்படுத்தே

வடமொழியில் எழுவாய் வேற்றுமைக்கும் உருபுகள் உண்டு ஆகலான் வேற்றுமைத்தொகை கருத்தாமுதல் ஆதாரம் ஈறாக ஏழினும் வரும் இவற்றிற்கு உரையாசிரியர் தரும் எடுத்துக்காட்டுக்களும் அவை தமிழொடு முரண்படும் இடங்களும் பற்றி இனிக்காண்போம்.

வேற்றுமைத் தொகைகள்

முதல் வேற்றுமை	எ-டு.	மார்கழித் திங்கள் =மார்கழிஎனப்படும் மாதம் இது தமிழில் இருபெயரொட்டுப் பண்புத் தொகை எனப்படும்.
இரண்டாம் வேற்றுமை	எ-டு.	குடிதாங்கி - தமிழுக்கு ஒத்தது.
மூன்றாம் வேற்றுமை	எ-டு.	(தாயொடு நால்வர்) தாய்நால்வர்
நான்காம் வேற்றுமை	எ-டு.	குண்டலப் பொன்
ஐந்தாம் வேற்றுமை	எ-டு.	ஆட்டுப்பால்=ஆட்டினின்றும் கறந்தபால் எனப் பொருள் விரிப்பர். இஃது ஆட்டினது பலெனத் தமிழில் ஆறாவதாகும் நீக்கம் பெயரொடு முடியாது என்பது தமிழ்மரபு.
ஆறாம் வேற்றுமை	எ-டு.	கொற்றன் மகன்=கொற்றனுடைய மகன் என விரிப்பர். சாத்தன் வீடு இது தமிழொடு ஒக்கும்
எழாம் வேற்றுமை	எ-டு.	ஊர்க்குருவி = ஊரின்கண் வாழும் குருவி எனவிரிப்பர் இது பெரும் பாலும் தமிழொடு பொருந்தும்.

வேற்றுமை உருபுடன் சார்புச் சொற்களும் தொகுதற்கு உதாரணம். தயிர்ச் சோறு = தயிரினாற் குழைக்கப்பட்ட சோறு. ஒன்றற்கு மேற்பட்ட சொற்கள் இடையே தொகின் அதனை மத்திய பதலோப சமாசன் என்பர் உ-ம். இருப்பை நெய். இருப்பைப் பாலாற் கொள்ளப்பட நெய்.

பாண்டிக்கரை = பாண்டி நாட்டுக்கடலின்கரை. எனவரும்.

அடுத்து வடமொழியில் தொகை ஆறுவகைப்படும் என அவற்றை எடுத்துப்பின் வருமாறு கூறுகின்றார்.

தற்புருடன் பலநெற் கன்மதாரயம் தாங்கிய சீர்
நற்றுவிக்குத் தொகை நாவார் துவந்துவம் நல்ல தெய்வச்
சொற்பயன் மாந்தர்கள் அவ்விய பாவமிதென்று தொன்மை
கற்பகமாப் பகர்ந்தார் தொகையாறுங்கனங்குழையே.

பலநெல் என்றது பகுவிரீகி என்பதன் மொழி பெயர்ப்பாகும் அடுத்துத் தற்புருட சமாசத்தின் இலக்கணமும் துவிகு சமாசத்தின் இலக்கணமும் கூறுகின்றார்.

உருபுதொக்கு வரும் முதல் வேற்றுமை முதலாகிய ஏழும் முன்னொட்டாக நின்று எதிர் மறைப் பொருள் தரும் நஞ்னு ஒன்றும் ஆக எட்டும் தற்புருட சமாசமாகும். துவிகுத் தொகை எண்ணுப் பெயரை முதலாகப் பெற்றுத்தத்திதப்பொருள் மேல்வரும். அஃது ஓருமை ஒப்புத்துவிகு. பன்மை ஒப்புத்துவிகு என இருவகைப்படும் என்கிறார். அக்காரிகை வருமாறு.

எழுவாய் முதல் வேற்றுமை போடும் எழுந்தடையில்
வழுவாத நஞ்ஞெட்டாம் தற்புருடன்., வளர்துவிகு
தழுவார்ந்த எண்மொழி முன்னாய் வரும் தத்திதப் பொருண் மேல்
குழுவார் ஒருமை ஒப்புப் பன்மை யொப்புக் குறியிரண்டே.

தற்புருடசமாசவகை எட்டற்கும் உதாரணம் வருமாறு:-

முதல் வேற்றுமைத் தொகை	-	அரைக்கழஞ்சு - காலகம் - முற்பகல்
இரண்டாம் வேற்றுமைத் தொகை	-	மலைதாங்கி = மலையைத்தாங்குபவன்
மூன்றாம் வேற்றுமைத் தொகை	-	கற்றளி - கல்லால் ஆகிய தளி
நான்காம் வேற்றுமைத் தொகை	-	தாலிப்பொன் = தாலியின் பொருட்டுப் பொன்
ஐந்தாம் வேற்றுமைத் தொகை	-	கள்ளர்பயம் = கள்ளரினின்றும் அஞ்சும் பயம்
ஆறாம் வேற்றுமை	-	தாமரைக்கிழங்கு = தரமரைக்கிழங்கு =தாமரையினுடைய கிழங்கு
எழாம் வேற்றுமை	-	நீர்க்காக்கை = நீரின் கண்வாழும் காக்கை

நஞ்ஞு - எதிர் மறைப் பொருள்தரும் நகரம் என்பது கருத்து அது மெய்யின் முன்வரின் நகரம் மெய்கெட்டு அகரமாக இணையும். உயிர் முன்வரின் அந் என்றுமாறும். இதுவடமொழிக்கன்றித் தமிழ் மொழிக் குரியதன்று.

எடு. ந+நாதன் = அநாதன் ந +உசிதம் = அதுசிதம் எனவரும்

மூவர் கோக்கள் என்பது முக்கோக்கள் எனவருவது பன்மொழி ஒப்பு.

அடுத்து பலநெல் தொகை (வெகுவிரீகி) கூறுகின்றார்.

அது இருமொழித் தொகை, பன்மொழித்தொகை, எண்தொகை, இருமொழி எண்தொகை, விதியாரிலக்கணத் தொகை, சகமுன் மொழித் தொகை திகந்தராளத் தொகை என ஏழு வகைப்படும் என்று கூறுகின்றார். காரிகை

இருமொழி பன்மொழி பின்மொழி எண்ணோடிருமொழி எண்
மருவும் விதியாரிலக்கணம் மற்றைச் சகமுன் மொழி
பரவும் திகந்தராளத் தொகை என்னப் பல நெற்றொகை
விரியுமோ ரேழவை வேற்று மொழிப் பொருள் மெல்லியலே

இவற்றிற்கு உதாரணங்கள் வருமாறு

1. இருமொழித் தொகை :- கற்றலை = கல்லைத் தலையிலே கொண்டதொரு மீன் எனவிரித்து வெகுவிரீகி என்பார் - தமிழில் இஃது அடையடுத்த ஆகுபெயராவதல்லது அன்மொழித் தொகையாகாது

2. பன்மொழித் தொகை :- குரங்காடுதுறை = குறங்குகள் ஆடப்பட்டதொரு துறை யாதொரு ஊரில் உள்ளது அது குரங்காடுதுறை என அம்மொழிப் பொருட்டாகி நின்றது என்பர் தமிழில் இது காரணப் பெயராவதன்றித் தொகை மொழியாகாது.

3. பின்மொழி எண்தொகை : இன்னாநாற்பது = இன்னா என்னும் சொல்லையுடைய நாற்பது = இன்னா என்னும் சொல் லையுடைய நாற்பது என நூலை உணர்த்தலின் அன்மொழிப் பொருட் டாய் நின்றது என்பார். தமிழில் இஃது அடையடுத்த எண்ணாகு பெயராகும்.

4. இருமொழி எண்தொகை : ஐந்தாறு - ஏழெட்டு எனவரும் இவை அவ் எண்ணிக்கைகளையுடைய பொருள்களை உணர்த்தலின் அன்மொழிப் பொருட்குடையது என்பர். இவை தமிழில் எண்ணாகுபெயராகும்.

5. விதியாரிலக்கணத்தொகை:- தண்டாதண்டம் = தண்டுகளாலே அடித்து நிகழ்ந்தும் போர் என்னும் பொருள்தருதலின் அன்மொழித் தொகையாயிற்று என்பார் இது வடமொழியிலன்றித் தமிழில் வராது என்பார் உரையாசிரியர்.

6. சகமுன்மொழித் தொகை சக என்னும் சொல்லைமுன் பெற்று அவற்றுள் ஒன்றழிந்து வரும் சொல் அஃதாவது சகநீதி = சநீதி எனவரும் இதன் பொருள் நீதியொடு கூடி நிகழாதவன் யாவன் அவன் சநீதி என்னும் பொருள்தருதலின் அன்மொழித் தொகை என்பர் இது தமிழில் இல்லை.

7. திகந்தாரளத்தொகை : திசைப் பெயர்கள் இரண்டு இணைந்து ஒருகோணத்திசையை உணர்த்தும் வடகிழக்கு வடமேற்கு எனவரும். வடக்கிற்கும் கிழக்கிற்கும் நடுவே உள்ள திசையை உணர்த்தலின் அன்மொழித் தொகை என்பர். தமிழில் இஃது இருபெயரொட்டாகு பெயர்.

தமிழ்நூலார் கூறும் அன்மொழித் தொகைக்கும் வடமொழி யாளர் கூறும் வெகுவிரீகித் தொகைக்கும் இவ்வளவு வேறுபாடும் சிறிதளவு ஒற்றுமையுடைமை யையும் நோக்காமல் வெகுவிரீகிசமாசன் தமிழில் அன்மொழித் தொகையாயிற்று எனத் துணிந்து கூறும் வடமொழிப் பற்றாளர் பலர் இன்றும் உளர்.

அடுத்து கன்மதாரய சமாசன் பற்றிக் கூறுகின்றார். அது முன்மொழிப் பண்புத் தொகை இருமொழிப் பண்புத் தொகை, பின்மொழி ஒப்புத் தொகை முன்மொழி ஒப்புத் தொகை, முன்மொழிக் கருத்துத்தொகை முன்மொழித் துணிவுத் தொகை என ஆறு வகைப்படும் மென்பார். பண்பு எனினும் விசேடணம் எனினும் ஒக்குமென்பார் உரையாசிரியர் அதுவருமாறு.

முன்மொழிப் பண்பும் இருமொழிப் பண்பும் மொழிந்தமைந்த
பின்மொழி ஒப்பொடு முன்மொழி யொப்பும் பிணக்கொன்றிலா
முன்மொழி நற்கருத்தும் முன் மொழி நற்றுணிவும் என
நன்மொழி யார் கன்மதாரயன் ஆறென்ன நாட்டினரே.(ஆ-5)

இவற்றிற்கு உதாரணங்கள் வருமாறு

1. முன்மொழிப் பண்பு (உ-ம்) நீலக் குவளை - குறுங்கொற்றன்
2. இருமொழிப் பண்பு (உ-ம்) கருஞ்சிவப்பு - குறுமை என்றும் உதாரணம் உண்டு
3. பின்மொழி ஒப்பு (உ-ம்) பெண் அணங்கு, ஆண் மாணிக்கம்
4. முன்மொழி ஒப்பு. (உ-ம்) பவளவாய் (இது தமிழில் உவமத் தொகையாகும்
5. முன்மொழிநற்கருத்து (உ-ம்) அடையா நெடுங்கடை (இது பெயரச்ச தொடர்)
6. முன்மொழி நற்றுணிவு (உ-ம்) நச்சு மரம்

அடுத்து அவ்விய பாவ சமாசமும் துவந்துவ சமாசமும் கூறுகின்றார் அவ்வியபாவம் முன்மொழி அவ்வியத்தொகை, பெயர் முன் மொழித்தொகை என இருவகைப்படும். துவந்துவம் இதரேதரத்தொகை சமாகாரத் தொகை என இருவகைப்படும் என்பார். அவை வருமாறு.

முன்மொழி அவ்வியம் சேர்தொகை பேர் முன்மொழித் தொகையே
சொன்மொழி அவ்வியபாவம் மருவும் துவந்து வமும்
வன்மொழியாம் இத்ரேதரம் லாய்ந்த சமாகாரமாம்
நன்மொழியானு ரைத்தார்கள் சமாசம் நறுநுதலே (சூ-6)

உதாரணங்கள் வருமாறு.

1. முன்மொழியவ்வியம் எ-டு உபகும்பம் = கும்பத்தின் அருகில் நின்றது
2. பெயர் முன்மொழித்தொகை எ-டு சாகப்பிரதி = சாகத்தினுடைய பிரதி
3. இதரேதரத்தொகை எ-டு கபிலபரணர் = கபிலரும் பரணரும்
4. சமாகாரத்தொகை எ-டு உவாஅப்தினான்கு - உவாவும் பதினான்கும்

அவ்யயம் என்னும் வடச்சொல்லை அவ்வியம் எனத்தற்பவமாகக் கூறியுள்ளார். அவ்வியம் = இடைச்சொல் தமிழில் அவ்வியத் தொகை இல்லை அது கொன்னூர் - வாள்மன் என இடைச் சொற்றொடராகும் துவந்துவன் என்பது தமிழில் உம்மைத் தொகை எனப்படும்.

இவ்வடமொழி மரபை எடுத்துக் கூறியதனால் தமிழுக்கு யாதும் பயனில்லை எனினும் ஊன்றி நோக்கின் தமிழில் உள்ள தொகைமொழிக் கொள்கையே வடமொழியில் பலவாறாக விரித்துக் கூறப்பட்டுள்ளதை அறியலாம்.

அடுத்து வடமொழி சமாசத்தினின்றும் தமிழ்த் தொகை மொழி இலக்கணம் பெரிதும் வேறுபட்டது என்பதை உணர்ந்து அயற் கூற்று முறையில் தமிழ்த் தொகை மொழியிலக்கணத்தைப் பெயரளவில் கூறிமுடிக்கின்றார். பண்புத் தொகையையும் உம்மைத் தொகையையும் தொல்காப்பியத்தை ஒட்டி வகைப்படுத்திக் கூறுகின்றார்.

வேற்றுமை யும்மை வினைபண்புவமை அன்மொழி என்று
ஆற்றுந் தொகை செந்தமிணர்கள் ஆறென்பர் ஆய்ந்தபண்பால்
தோற்றும் அளவு வடிவு நிறஞ் சுவை சொல்பிறவும்
ஏற்றும் இருபல் அளவு நிறை எண் பெயர் உம்மையே (சூ-7)

அடுத்துத் தொகை மொழிகளை விரித்துக் கூறுமிடத்து வரும் சொற்களைத் தொக்கு நிற்பவனவாகவே கருதித் தொகை மொழிகள் இணைந்து நிற்குங்கால் சில சிதையும் என்றும் பொருள் சிறக்குமிடம் இவை என்றும் கூறுகின்றார் அக்காரிகை வருமாறு.

அன்மொழி நற்றொருகையில் தொகும் போதும் அல்லாவிடத்தும்
நன்மொழிப் பின்பும் நடுவும் கெடும் நன்கு ஒரோவிடத்து
முன்மொழி ஈறுகெடும் பன்மையாகும் முரட்பொருள் கோள்
பின்மொழி முற்சொற் பிறிதோர் மொழியொ டிரு மொழியே

1. கடுக்காய் - தாமரைப்பூ என்பவை கடு என்றும் தாமரை என்றும் வருதல் பின் மொழிச் சிதைவு
2. கவிழப் பூக்கும் தும்பை கவிழ் தும்பை என்றும் கொம் மட்டி போலக் காய்க்கும் மாதளை, கொம்மட்டி மாதளை என்றும் வருதல் இடைமொழிச் சிதைவு.
3. சிவக்கத் தோய்ந்த விளிம்பினையுடைய கூறை. செவ்விளிம்பன் எனவருவது இடையிலும் கடையிலும் சிதைந்த சிதைவு.
4. சோழன்கோன் சோழகோன் என வருவது முன்மொழியீற்றுச் சிதைவு.
5. பட்டர்கள் தெருவு என்பதில் முன்மொழியீறு பன்மைப் பொருளை விளக்கியது.

6. மாங்காய்	-	*பின்மொழிச்சிறப்பு*
7. புறங்கை	-	*முன்மொழிச்சிறப்பு*
8. கற்றலை	-	*அன்மொழிப் பொருட்சிறப்பு*
9. சோழ பாண்டியர்	-	*இருமொழிப் பொருட் சிறப்பு*

மேலும் உரையாசிரியர் "இனிக் கிடப்புத் தொகையும் மாறிடு தொகையும், நித்தத் தொகையும், அழிதொகையும், அழியாத் தொகையும் எனக் கூறுபடுப்பாகும் உளர் என்று கூறிப் பின்வருமாறு உதாரணங் காட்டுகின்றார்.

1. பலாக்காய் - கிடப்புத்தொகை
2. முன்றில் - மாறிடுதொகை
3. கருங்காக்கை - நித்தத்தொகை
4. எண்ணெய் - அழிதொகை
5. கழுத்திலாடை - அழியாத் தொகை.

இவை வடமொழியிலும் இன்மையின் இஃது எம்மொழியாளர் கொள்கை என்பது தெரியவில்லை. இங்ஙனம் இந்நூலாசிரியரும் உரையாசிரியரும் கூறுவனவெல்லாம் தமிழ் மரபிற்கு ஒத்தவையல்ல என்பது தெரிந்தும் இவ்வாறு வலிந்து கூறியிருப்பதன் நோக்கம் தமிழில் இவையெல்லாம் இல்லை என்று குறைகூறுவது போலும்.

தத்திதப்படலம்

வடமொழியாளர் மூன்று லிங்கங்களாக வகுத்துக் கொண்ட பெயர் முதனிலைகள். சுபந்தப் பிரத்தியங்களன்றிச், சொற்பொருளை அதனதன் தொடர்புகளுடன் விளக்கும் பிரத்தியங்களை (விகுதிகள்) ப் பெற்று வருவன தத்திதபதங்களாகும். அவை பெறும் பிரத்தியங்கள் தத்திதாந்தம் (தத்திதப்பொருள் தரும் விகுதிகள்) எனப்படும். இதுவடமொழிக் கொள்கை. அம் முறையில் இப்படலத்துள் உணர்த்தும் நிலைகளையும் அவற்றை ஒட்டி வடசொற்கள் தமிழில் திரிந்து வரும் நிலைகளையும் ஆசிரியர் கூறுகின்றார்.

தமிழில் நிரம்பிய உரியடிச் சொற்கள் காலங்காட்டும் இடைச் சொற்களல்லாத திணைபால் இடங்காட்டும். இறுதி இடைச் சொற்களொடு புணர்ந்து ஒரு சொல்லாக அமையுங்கால் அவை இருதிணைப் பொருளையும் காட்டும். அவற்றுள் அறுவகைப் பெயர் முதனிலைகளொடு கூடி நிற்கும் இடைச் சொற்களையும் செயல் நிலைகளையும் குறிப்பாக உணர்த்தும். அச்சொற்கள் ஓர் எழுவாய்க்குப் பயனிலையாக, முடிக் குஞ்சொல்லாக வருங்கால் தமிழில் அவை குறிப்பு வினைச் சொற்களாக அமையும். இத்தகு குறிப்பு வினைச் சொற்கள் வடமொழியில் தந்திதாந்தச் சொற்கள் எனப்படும். அச்சொற்கள் உட்பிணைப்பாக விகாரமடைந்தும் வரும் அவையெல்லாம் வடமொழியில் தத்திதாந்த பதங்கள் எனப்படும்.

தமிழில் அன் ஆன் ஆள் முதலிய பாலிடங்காட்டும் விகுதி களேயன்றிச் சொல்லாக்க உருபுகளாகிய இ. ஐ, அம், அல் என்பனவும் சிலதொழிற்பெயர் விகுதிகளும் பகுதியின் பொருள்நிலையை விளக்கி நிற்கும் எடுத்துக்காட்டாக.

பொன் என்னும் பொருட்பெயரொடு அன் விகுதிசேர்ந்து பொன்னன் எனவரின், பொன்னையுடையவன், என்னும் உரிமைப் பொருளை உணர்த்தும் பொன் போன்றவன் - பொன் போலும் நிறத்தை உடையவன் என்றும் பொருள்தரும் இவ்வாறே ஊரன் என்னும் சொல் ஊரினை உடையவன். ஊரின்கள் இருப்பவன் என்றும் பரணன் என்பது பரணிநாளிற் பிறந்தவன் என்றும் கண்ணன் என்பது அழகிய கண்களையுடையவன் என்றும் செம்பியன் என்பது செம்பு போன்ற மாநிறத்தை உடையவன் என்றும் பொருள்தரும் இவ்வாறே.

இகர இடைச் சொல் பெறுமிடத்து வெள்ளி என்பது வெண்ணிறமுடையது. என்றும் காளி என்பது கரிய நிற முடையவன் என்றும் துணி என்பது துணிக்கப்பட்ட ஆடை என்றும் வண்டி என்பது உருளையை உடைய ஊர்தி என்றும் மண்வெட்டி என்பது மண்ணை வெட்டுதற்குரிய கருவி என்றும் பொருள்தரும் ஐகார இடைச் சொல்லைப் பெறுமிடத்து மலை மல் + ஐ = மலை என்னும் பறவை என்பது பறக்கும் செயலினையுடையது என்றும் பொருள்தரும். அம் என்னும் இடைச் சொல்லைப் பெறுமிடத்து நிலம் என்பது (நில் + அம்) நிலையாக நிற்கும் இடம் என்றும் கோலம் என்பது கோலப்படும் செயலை உடையது என்றும் கூடம் என்பது. மக்கள் பொருள்கள் கூடியிருப்பதற்குரிய இடம் என்றும் பொருள்தரும்.

இவ்வாறே தொழிற்பெயர் விகுதிகளுள் உள் என்பது கடவுள் என்றுமிடத்து யாவற்றையும் கடவும் தன்மையது என்றும் காட்சி என்பது காண்டற்கமைந்த பொருள் என்றும் பொருள்தரும். இவ்வாறே பண்புப் பெயர் விகுதிகளும் பொருள் தரும். இவ்வுரியடிகள் கால இடைநிலைகளைப் பெறுமிடத்து வினை முற்றுச்சொல்லாக மாறும்.

எ-டு. ஊர் - ஊர்ந்தான். கூன் = கூனினான். வெள் - வெளுத்தான். புல் - புல்லினான். வினைமுற்றாயவழி வேற்றுமைப் பொருள்களைத் தாரா பெயராக நிற்குமிடத்து உடைமை இடம் முதலிய வேற்றுமைப் பொருள்களைக் காட்டும்.

இவையெல்லாம் சொல்லாக்கத்தின் கண் இயல்பாகவே அவ்வப் பொருள்களைப் பெற்றுவிடுதலின் ஒரு மொழியாக்க பற்றிய இலக்கணம் பற்றித் தொன்னூலார் விரிவாக விதி கூறி விளக்காமற் சென்றனர். விகுதி பெறும் நிலைகளையும் சாரியை பெறும் நிலைகளையும் மட்டுமே சுருங்கக் கூறிச் சென்றனர். இடைக்கால நூலாசிரியருள் நன்னூலார் ஓரளவு தனிமொழியாக்கம் பற்றி விரித்துக் கூறுகின்றார்.

பாணினியரால் பாஷா என்றும் வடமொழி வாணர்களால் லௌகீகி என்றும் வழங்கப்படும் இயற்கையாகப் பேசிய மொழியினின்றும் குறைகளைந்து செம்மைப்படுத்தப் பெற்றமொழியாகிய சமற்கிருதம் இலக்கணக் கட்டுக் கோப்புடைய இலக்கிய மொழி யாதலின் வடமொழி இலக்கண நூலோர் மூலவடிவமாக உள்ள அடிச்சொற்களை மூன்று லிங்கங்களாக வகுத்தும் பெயரடிகளை பிராதிபதிகம் என்றும் வினையடிகளைத் தாது வென்றும் வகுத்து அவற்றோடு பிரத்தியயங்களை (விகுதி இடைச் சொற்களை)ச் சேர்த்து சுபந்தம், தத்திதாந்தம், கிருத்தந்தம் என்னும் பதங்களைப் படைத்துக் கொண்டுள்ளமையின் அடிச் சொற்கள் தொடர்ப் பொருள் உணர்த்தும் ஆற்றலை அவ் அந்தங்கள் தருதலின் அவற்றால் பதங்களுக்குப் பெயர் உணர்த்தும் ஆற்றலை அவ் அந்தங்கள் ஒரு சொல்லாக்கத்தின் ஒரு கூற்றுச் சொற்கள் தத்திதாந்தம் எனப்பட்டன. சில சொற்கள் உட்பிணைப்பாகவும் அமைந்து தத்திதாந்தப் பொருள் தரும்.

தமிழ் மொழியை வடமொழியோடு ஒருவாறு இணைத்து இவ்வாசிரியர் இலக்கணங் கூறப்புக்கமையான் தத்திதாந்த இலக்கணத்தைத் தமிழுக்கு ஏற்றிக் கூறுகின்றார், அம் முறையிற் பெயர்ப் பகுபதங்களை முதனிலை (பகுதி) இறுதிநிலை (விகுதி) என இரண்டே கூறாகப் பிரித்துத் தந்திபத இலக்கணங் கூறுகின்றார். இவர் கூறும் முறைமை வருமாறு.

அவன் - அ+வன். வேதியன் - வேதம்+இயன். சுற்றத்தார் - சுற்றம்+தார். எனப் பிரிப்பார். தமிழ்நூலார் அ + அன் வகர உடம்படுமெய் பெற்று அவன் என்றும் வேதி+இ+அன். யகர உடம்படுமெய் பெற்று வேதியர் என்றும் சுற்றம் + அத்து + ஆர் - அத்து சாரிய பெற்றுச் சுற்றத்தார் என்றும் வரும் எனக் கூறுவர். இனி இவர் கூறும் தத்தித பதங்களின் அந்தங்கள் (பிரத்தியங்கள்) வருமாறு.

அன் இயன் ஈனன் இகன் ஏயன் வான் வதி அம் இகரம்
வன்னுழி அகரத்தொடு ஆன் ஆனன்மான் அகன் ஆதி மற்றும்
துன்னிய சீர் தத்திதத்தின் பிரத்தியம் சுவ்வென்பது
மன்னுமரபு பிழையாமல் எங்கும் வரப் பெறுமே (சூ-1)

உரையாளர் தரும் உதாரணங்களுள் சில வருமாறு.

வலை + அன் = வலையன் - ஞகரம்மிக்கு வலைஞன் என்றும் வருமென்பார் வேதம் + இயன் = வேதியன் - வேதம் என்பதன் கண் அம் கெட்டது. வல் + இ = வல்லி. அதிதிமகன் - ஆதித்யன் என்றும் ததிமகன்-தைத்தியன் என்றும் கங்கைபுத்திரன் - காங்கேயன் என்றும். குருவருக்கத்தான் - கௌரவன் என்றும் புத்தனைத் தெய்வமாகவுடையன் பௌத்தன் என்றும் வருமென்பார். விகுதியோடு சேரும்போது மூன்று விகாரமும்-பொருள் விரியுமிடத்து உட்பிணைப்பாயும் வருமென்பதற்குச் சில எடுத்துக் காட்டுத் தருகின்றார்.

தத்திபதங்கள் எவ்வெவ்வாறெல்லாம் விரிந்து பொருள் தரும் என்பதனை இரண்டு காரிகைகளால் உணர்த்துகிறார். அவை வருமாறு

உண்ணுமிதனால் உரைக்குமிதனை யுடையனிது
பண்ணுமிதனை; பயிலும் இதிற்பயன் கொள்ளுமித்தால்
எண்ணுமிதனை இதனுக்கு நாயகன் ஈங்கிருக்கும்
நண்ணுமிதனை இதையொக்கும் இங்குவன் நன்னயத்தே (சூ-2)

மகனிவனுக் கிவளுக் கிந்தவர்க்கத்தினன் இவனைத்
தகவிய தேவனெனும் யாவ னென்னும் நற்றத்திதங்கள்
நிகழும்; பிறபொருளின் கண்ணும் நிற்கும் நினைந்தவற்றைப்
புகண்மலி தெய்வப் புலவர்க்கும் பொச்சமடக்கரிதே (சூ-3)

உரையாளர் தரும் உதாரணம் - விளக்கம் - இவற்றுள் சில வருமாறு:-

வலையினால் வினைபுரிந்துண்பவன்	-	வலையன்
மருந்தைப் பண்ணுவான்	-	மருத்துவன்
விந்தைமகன்	-	வைந்தேயன்
பசுபதியைத் தெய்வமாக உடையவன்	-	பாசுபதன்

'ஆதி' என்றதனான்

பூனைக் காலை ஒப்பது	பூனைக்காலி
குலத்தினுள் விழுமியான்	குலீனன்
இருடி சம்பந்தமானது	ஆரிடம்
நீரில் தோன்றியது	அம்புசம்

சேற்றில் தோன்றியது பங்கசம் என்றுகூறி மேலும் குறிப்புச் சொற்களும் வினைச் சொற்களும் பிறவும் ஒரு பெயர்ச் சொல் தம் மேலேறிய பிரத்தியத்தை

உடையவாய் வேறு வேறு பொருள் பயந்து நிற்பின் அவை தத்திதப் பெயர்கள் என்றறிந்து உலகுக் கொப்ப முடிக்க என்கிறார்.

அடுத்து, குணக்குறிப்பையும் பொருள்களையும் விளக்கும் பிரத்தியங்களைக் கூறுகின்றார். அவை வருமாறு

மையம் புது வுகம் வல் அளவாதி குணக் குறிப்பில்
வையம் வலி நெடு வாதி பின்னும் மன் கன் ஆனன் வன்னாள்
ஐயம் அவனவள் மிம் முதலாகும் திரப்பியத்திற்
பைய மதிக்க உலகத்தவர்க்குப் பயன்படவே

இதற்கு உரையாசிரியர் தரும் உதாரணங்கள் வருமாறு (சூ-4)

மை	-	வலிமை	ஆன்	-	அரியான்
அம்	-	நீளம்	அன்	-	கரியன்
பு	-	மெலிப்பு	வன்	-	புலவன்
து	-	வலிது	ஆள்	-	செய்யாள்
வு	-	வலிவு	ஐ	-	வெள்ளை
கம்	-	குறுக்கம்	அம்	-	புறம்
வல்	-	கிளவல்	அவன்	-	கரியவன்
அளவு	-	தன்னளவு	அவள்	-	கரியவள்
மன்	-	குறுமன்	மி	-	கருமீ
கன்	-	கிறுக்கன்			

அடுத்துப் பெண்பாற் பெயரில் வரும் பிரத்தியங்கள் கூறுகின்றார். அவை

அச்சியோ டாட்டி அனிஅத்தி தியாளொ டள்ளி
இச்சிசி ஆதியும் பெண்மைத் தெளிவாம், எழில் வடநூல்
மெச்சிய ஆகாராந்தத்தினும் ஊர்ப்பின்னும் மிக்க ஐயாம்
நச்சிய ஏகாரந்தானே குறுகும் நறுநுதலே (சூ.5)

இவற்றிற்கு உரையாசிரியர் தரும் உதாரணங்கள் வருமாறு

அச்சி	- வேட்டுவச்சி	வடமொழி ஆகாரஈறு தமிழில் ஐகாரமாதல்
ஆட்டி	- வெள்ளாட்டி	வனிதா-வனிதை - தாரா - தாரை
அனி	- பார்ப்பனி	உமா - உமை மாலா - மாலை
அத்தி	- வண்ணாத்தி	ஊர் என்னும் விகுதிகெட்டு ஐகாரமாதல்
தி	- குறத்தி	தஞ்சாவூர் - தஞ்சை. உறையூர் - உறந்தை
ஆள்	- நல்லாள்	ஈகாரம் குறுதி இகரமாதல்
இச்சி	- கள்ளிச்சி	நதீ - நதி குமரீ - குமரி எனவரும்
சி	- பேய்ச்சி	

இங்ஙனம் தமிழில் இருவகை வழக்கினும் வழங்கும் சொற்களை, தொல்காப்பியம் பாலிடம் காட்டும் இறுதிநிலையாகக் கூறுவன வற்றை எல்லாம் பெயரிடைநிலைகளோடும் உடம்படு மெய்க ளோடும் சேர்ந்துப் பிரித்துப் பிரத்தியங்கள் எனவும் அவை தத்திதாந்தங்கள் என்றும் கூறுகின்றார்.

இவ்விடத்தில் தமிழறிஞர் பள்ளியகரம் நீ கந்தசாமி பிள்ளை அவர்கள் நகைச் சுவைக்காக் கூறிய ஓர் உரையாடல் நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வருகின்றது. அக்காலத்தில் செல்வாக்குடன் விளங்கிய ஒரு தமிழ்ப் பேராசிரியரிடம் இவர் ஐயா "கேட்டார்" என்னும் முற்றுச் சொல்லிற்குப் பகுபத இலக்கணம் எவ்வாறு கூறுவது என்று கேட்டாராம் உடனே அவர் கேள் பகுதிதார் விகுதி என்றாராம். இவர் உடனே நீங்கள் சொல்வது பொருத்தமாக இல்லை. நீங்கள் கூறியபடிப் பார்த்தால் கேள்த்தார் என்றல்லவோ அச் சொல் இருக்க வேண்டும் என்றாராம் அப்படியானால் உங்கள் கருத்தென்ன? என்று அவர் கேட்க இவர் கேட் பகுதி டார்விகுதி என்றால் பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன் என்றாறாம். அதற்கு அவர் அப்படியும் சொல்லலாம் என்று கூறிவிடை பெற்றுச் சென்றாராம். அப்பொழுது அது எனக்கு நகைப்பைத் தந்தது. பின்னர் வீரசேரழியத்தைப் பார்க்கிறபோது தான் அப்பேராசிரியர் வீரசோழியத்தில் புலமை பெற்றிருந்தமை தெரிந்தது. இது நிற்க.

அடுத்த மூன்று காரிகைகள் வடசொற்கள் தமிழில் எவ்வெவ்வாறு ஆக்கம் பெறும் என்று கூறுகின்றார். இனி அடுத்த படலத்தைப் பார்ப்போம்.

தாதுப்படலம்

தமிழில் முதனிலையடிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு என்னும் உணர்வுகளைச் சுட்டும் அடிப்படையில் தோன்றும் அவற்றை உரியடிகள் என்று கொண்டு நிரம்பிய உரிச்சொற்களை முதனிலையாக அமைத்துக் கொள்வது மரபு, நிரம்பிய உரிச்சொற்கள் ஒரெழுத்தாகவோ, ஓர் அசையாகவோ அமையும் அவற்றோடு எழுத்துக்களைக் கூட்டியும் கூட்டாமலும் அறுவகைப் பெயரடி களைப் படைத்துக் கொள்வர். எல்லாச் சொற்களும் பெரும் பான்மையும் வினைத் தன்மையுடையவாயினும் அறு வகைப் புலன்களாலும் அறியப்படுவனவாய், புடைபெயர்ச்சிக் கருத்து டையவாய் இறப்பு எதிர்வு நிகழ்வு என்னும் கால முனர்த்தும் இடைநிலைகளை ஏற்றற்குரியவாய் அமைந்தவற்றைத் தொழிற் பெயரடி என்றும் ஏனையவற்றை பொருள், இடம், காலம், உறுப்பு, குணம் ஆகியவற்றை உணர்த்தும் திணைப்பெயர்கள் என்றும் கொள்வது தமிழ் இலக்கண மரபாகும்.

அப்பெயர்கள் ஓர் எழுவாய்க்குப் பயனிலையாக வந்து ஆக்கவினைச் சொல்விரிவதற்கேற்ப நிற்பின் வினைக்குறிப்பாகக் கொளப் பெறும். காலம் விரிதற்கேலாதவை பெயர்ப்பயனிலை எனப்படும்.

அம்முறையில் முதனிலைச் சொற்களைப் பொருளை உணர்த்தும் சொல் தொழிலை உணர்த்தும் சொல் என இருவகையாக்கலாம். பொருளுணர்த்தும் சொற்கள் பால் இடம் காட்டும் இறுதி இடைச்சொல்லொடு கூடிப் பெயர்ச் சொல்லாகவும் தொழிலுணர்த்தும் சொல் பாலிடம் காட்டும் விகுதிகளொடும் காலம் காட்டும் இடைநிலை இறுதிநிலை இடைச் சொற்களொடும் கூடி வினைச் சொல்லாகவும் வரும் ஆதலின் தமிழ்ச் சொற்களை பெயர், வினை, இடை, உரி என நால் வகையாகப் பிரித்துணர்ந்தினர் இலக்கண நூலோர்.

வடமொழியில் எல்லாச் சொற்களும் தாது என்றும் அடிப்படையில் தோன்றும் என்னும் அவற்றுள் வேற்றுமை உருபுகளை ஏற்பவை பிராதிபதிகம் என்றும் வினைநிலை உணர்த்தும் உருபுகளை ஏற்பவை தாது என்றும் கூறுவர். வேற்றுமை உருபுகள் பெயர் நிலை உருபுகள், வினைநிலை உருபுகள் தொழிற் பெயர்நிலை உருபுகள் (சுபந்தம், தத்திதாந்தம், திங்ந்த்தம் கிருதந்தம்) ஆகியவற்றை (இடைச்சொற்களை) பிரத்யயம் என்றும் சுட்டு வினா முதலிய இடைச் சொற்களை அவ்யயம் என்றும் கூறுவர்.

தமிழில் தொழிலடிச் சொற்கள் எடுத்த லோசையால் முன்னிலை ஏவற் பொருள் உணர்த்தும் நட, வா, மடி, சீ, விடு கூ, வே என்றாற் போல வருவனவற்றை வினையடி அல்லது பகுதி என்பர். இவ்வமைப்பில் நிற்கும் வினையடிகளை வடமொழியில் தாது என்பர் அம் முறையில் வீர சோழிய ஆசிரியர் இப்படலத்தில் 'தாது' பற்றிய இலக்கணங்களைக் கூறுகின்றார்.

இப்படலமுதற்காரிகையில் வடமொழியை ஒட்டித் தமிழிலும் தாதுக்களைப் படைத்துக் கொள்க என்கிறார். அதுவருமாறு

மன்னியசீர் வடநூலிற் சரபச என்றுவந்து
துன்னிய தாதுக்களின் போலிபோலத் தொகு தமிழ்க்கும்
பன்னிய தாதுக்களைப் படைத்துக் கொள்க, முன்னிலையின்
உன்னிய ஏவலொருமைச் சொற்போன்று உலகிற்கொக்கவே (சூ-1)

இக்காரிகை உரையின்கண் உரையாசிரியர் ஏன் அவ்வாறு படைத்துக் கொள்ள வேண்டுமெனின்? தமிழ்ச் சொல்லிற் கெல்லாம் வடநூலே தாயாகித் திகழ்கின்றமையின் அங்குள்ள வழக்கெல்லாம் தமிழுக்கும் பெறும் என்கிறார். இதனான் இந்நூல் செய்யப்பட்டதன் நோக்கம் நன்கு புலனாகும். இக் கூற்றுக்கு முரணாக இவரே "அடுத்து அவை மூன்று வகைப்படும். அவையாவன தமிழ்த்தாதுவும் வடமொழித்தாதுவுமாம்" என்கிறார். எடுத்துக்காட்டாக நட, அடு, செய், பண்ணு எனவருவன தமிழ்த்தாது என்றும் சிந்தி, வந்தி, என்றாற்போல்பவை வடமொழித் தாது என்றும் நொடி (நொடிப்பாயாக) கோடி (கொள்வாயாக என்றாற்போல் வனதிசைச் சொல்தாது வென்றும் கூறுகின்றார்.

அடுத்து, சிலதாதுக்களை நூலாசிரியர் எடுத்துக்காட்டாகக் கூறுகின்றார். அவை வருமாறு.

நட வடு செய்பண்ணு நண்ணுபோ சிந்திநவில் உண் இரு
கிடவிடு கூறுபெறு கொள் அழை வாழ் கிளை வெல்
கடநடு தங்கு கசி பொசி பூசு மிகு புகு செல்
இடுமுடி ஏந்து கொல் இவ்வண்ணம் மற்றுமியற்றிக் கொள்ளே.

அடுத்து இங்ஙனம் ஆக்கிக் கொள்ளப் பெறும் தாதுக்களின் பின் வந்து இணையும் இடைச் சொற்கள் (பிரத்தியங்கள்) தாதுக்களைத் தொழிற் குறிப்புச் சொல்லாக (கிருத்தந்தம்)வும், வினை முற்றுச் சொல்லாகவும் (திஙந்தம்) காரகப்பதங்களாகவும் செய்யும் என்கிறார்.

வான், உமை அம்புகை வல்கி உதல் அல் அன் பால் அலைகுத்
தான் விதிவைசி முதல் சுப்பிரத்தியம் தாது வின்பின்
ஆன வினைக் குறிப்புக் காரகத்தில் அணையு மென்ப
ஊணமில் சொல் ஒன்று முன்பு நின்றாகலும் உண்டென்பரே *(காரி-3)*

எடுத்துக்காட்டு வருமாறு.

வான்	- போவான்	இ	- காணி	கு	- போக்கு
உ	- பூச்சு	வு	- அறிவு	தான்	- நடந்தான்
மை	- மென்மை	தல்	- போதல்	வி	- கேள்வி
அம்	- ஆட்டம்	அல்	- செல்லல்	தி	- உண்டி
பு	- கற்பு	அன்	- ஊணன்	வை	- போர்வை
கை	- அறிக்கை	பான்	- காப்பான்	சி	- காட்சி
வல்	- கிளவல்	அலை - சுடலை			

'முதல்' என்றதனான் உரையாசிரியர் பின்வருவனவற்றைச் சேர்த்துக் கொள்ளுமாறு கூறுகின்றார். ஐ. கொல்லை, கலை எனவரும் சுப்பிரத்தியத்தான். விதை, அவிழ், பார், முதலிய கொள்க. மற்றும் எண் (எண்ணு) பண் (பண்ணு) எனக்கடை குறைந்தும் தீன் (தின்) ஊண் (உண்) எனவிகாரப்பட்டும் வரும்.

இவை காரகத்தின் வருமாறு :- தறி முறி, பொது, துளை என வருவன கருமக்காரகம். விளக்கு அறிவு சாவு எனவருவன கருத்தாக்காரகம். அணி, மொழி, பேசு, எனவருவன கரணக்காரகம் கழி உறை வீடு எனவருவன அவதிக்காரகம்.

வினைக்குறிப்பின் வருமாறு :- வினைக் குறிப்பு = தொழிற் பெயர் கேட்டல், அறிதல், கூடு, நோக்கு காட்சி, காவல் எனவரும்.

இனி முன்பு சில பெயர் நின்று பின்பு தாது பெற்று முடியுமாறு:- கூத்தாடி, நீறணிந்தான், முற்சொல்லி, ஆறுகாட்டி நாடுகாணி, பழியஞ்சி, புகழேந்தி (இவற்றுள் முன்மொழிகள் பெயர் என்பது கருத்து) இவை எல்லாம் உரையாசிரியர் ஆசிரியர் கருத்துணர்ந்து காட்டியவை.

தமிழில் காரணப் பெயராயும் தொழிற்பெயராயும் பண்புப் பெயராயும் சிறுபான்மை தெரிநிலை வினைமுற்றாயும் அமைந்த சொற்களை எடுத்து இவர் இலக்கணக் கொள்கைப்படி இரு கூறாக வெட்டி முதனிலைகள் எல்லாம் தாதுக்கள் என்கின்றார். காற்று, வன்மை, இளவல் போல்வனவற்றுள் சிறிதும் வினைத் தன்மை இன்மை புணரலாம்.

எனவே இந்நூற்பாவான் வடமொழித்தாது பற்றிய இவர் கோட்பாட்டினை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம் மற்று இவ்விளக்கம் தமிழ் நெறி மரபிற்குப் பொருந்தா என்பது வெள்ளிடைமலை.

அடுத்து நான்காம் காரிகையில் வடமொழித்தாது பற்றியும் ஐந்தாம் காரிகையில் வடமொழிக் கொள்கையைத் தமிழ்ச் சொற்களின் அடிப்படையிலும் கூறுகின்றார். இவற்றான் தமிழாக்கத்திற்கு யாதும் பயனின்மையின் அவற்றை விடுத்து ஆறாவது காரியைப் பார்ப்போம். ஆறாம் காரிகையில் தாதுக்கள் பிறவினைப் பொருட்டாக வரும் இலக்கணம் கூறுகின்றார். தன்வினைப் பகுதிகளைக் கேவலத்தாது என்றும் பிறவினைப் பகுதிகளைக் காரிதத்தாது என்றும் குறியீடு செய்து பின் வருமாறு கூறுகின்றார்.

ஆட்டாற்று தீற்றாதி தாதுக்களை அடற்காரிதம் என்று
ஓட்டா அறிக. உரையின் படி ஒப்பில் விப்பி பின்பு
மூட்டா வறி காரிதக் காரிதம். முன்பின் தாதுவின் பின்
காட்டா அறி அவை காரிதக் காரிதக் காரிதமே (கா-6)

எ.டு. ஆடு - ஆட்டு, ஆட்டுவி, ஆட்டுவிப்பி இவை ஏவல்
ஆடினான், ஆட்டினான், ஆட்டுவித்தான் - என்றும்
உண்டான், ஊட்டினான், ஊட்டுவித்தான் என்றும் வரும்
இவை வினைமுற்று.

அடுத்து தாதுக்களுடன் பிரத்தியங்கள் சேர்ந்து காலமுணர்த்தும் (வினைமுற்றுக்களாம்) என்றும் அவ் இடைச் சொற்களாவன. த,ன,ய, என்பவை இறந்தகாலமும் கி,ற,க, ஆநின்று என்பவை நிகழ்காலமும் கும், டும், உம் என்பவை எதிர்காலமும் காட்டும். பிறவும் வரும். வரின் சந்திராந்தம் பிழையாமல் இயற்றிக் கொள்க என்கிறார். (சந்திராந்தம் = சம், திரம் என்னும் இறுதிநிலைகள் இவை வடமொழியிற் கூறப்பட வில்லை என்பது பழைய உரையாசிரியர் குறிப்பு. காரிகை வருமாறு.

தாதுவின் பின்பு தனய இறப்பின் நிகட்சியின்கண்
ஓதுங்கிற கவ்வொடு ஆநின்றவாம்; கும் உம்மொடு மஃகான்
பேதமலியும் எதிரின் கண்ணாகும், பிறவும் வந்தால்
ஏதமில் சந்திராந்தம் பிழையாமல் இயற்றிக் கொள்ளே (கா-7)

எ-டு. பிறந்தபிள்ளை - கண்டஎருது - நின்றீ்ம தகரம் இறந்தகாலம் காட்டிநற்று ஊட்டின -தீற்றின (ன) சொல்லிய, ஆய (ய்) இறந்தகாலம் காட்டின. செய்கிற சாத்தன் - செய்சாத்தன் - செய்யாநின்ற சாத்தன் என்கிற க, ஆநின்று நிகழ்காலம் காட்டின. செய் என்பதில் க புணர்ந்து கெட்டது நிற்கும் சாத்தன் (கும்) அறியும் சாத்தன் (உம்) சாங்கிழவி (ம்) கும், உம், ம் எதிர்காலங்காட்டின. இவை உரையாசிரியர் காட்டும் உதாரணங்கள்.

'பேதமலியும்' என்றதனான் எதிர் காலத்திற்குச் சொன்ன பிரத்தியம் மூன்று காலத்திற்குமாம் அது பிரயோகத்திற்காண்க என்கிறார். உரையாசிரியர் அவை எவ்வாற்றானும் இறந்த காலத்திற்கு வாரா. இவ்வாசிரியர் கொள்கைப்படி சொல்லிய என்பதனை சொல் + லிய அல்லது இய என்று தான் பிரித்தல் வேண்டும். இங்ஙனம் முரணும் விபரீதமுமாகப் பிரித்தல் தமிழ் மரபன்று என்பது விளங்கும்.

அடுத்துத் தமிழில் வினையெச்சப் பொருளில் வரும் சொற்களை எடுத்துத் துமந்தம் என்று பெயரிட்டு வடமொழியொடு சார்த்திக் கூறுகின்றார். அது வருமாறு.

> **மன்னும் துமந்தம் பொருட்டுக்கப்பான்தற்குவான என்று**
> **பன்னும் எழிற்றாதுவின் பின்பிலாகும் பகரில் முன்பு**
> **துன்னியதாது தொழிற்பொருட்டாக என்னும் தொடர்ச்சி**
> **உன்னிய போதென்று தெய்வப்புலவர் உரைத்தனரே (கா-8)**

எடுத்துக்காட்டு

பொருட்டு - உண்ணும் பொருட்டு வந்தான். க - கற்க வேண்டி வந்தான். பான் - உண்பான் வந்தான். தற்கு - போதற்கு நினைந்தான். வான் - போவான் கருத்தில் ல. அ - உண்ண வல்லன் இவை உரையாசிரியர் காட்டியன.

இவ்விலக்கணம் தமிழ் நெறிக்கு ஒவ்வாமை தெளிவு, தெய்வப்புலவர் என்றது யாரை என்பது விளங்கவில்லை. அகத்தியர் போலும்.

அடுத்து துவாந்தப் பிரத்தியம் கூறுகின்றார். து என முடியும் அந்தம் என்பது உரையாசிரியர் விளக்கம். அது வருமாறு.

> **ஆவுமிட்டுந்துவ்வும் உவ்வினொடு இய்யும் அரும்புலவர்**
> **ஏவுங்கருத்தா இருதொழிற் கொன்றிடின் முன்பு நின்று**
> **மேவும் பொருட்டாது வின்பின்வரும் மிக்கதன் பெயரே**
> **பாவும் துவாந்தமதா மென்றுரைப்பர் பணிமொழியே (கா-9)**

இதற்கு ஆ இட்டு து உ இ என்னும் ஐந்து பிரத்தியமும் ஒரு கருத்தா உடையனவாய் இரண்டு தாது உள்ள பொழுது முன்பு நின்ற தாதுவின் கண் வரும் அவையிற்றின் பெயர் துவாந்தமாம் என்று உரைகூறிப்பின் வருமாறு உதாரணந்தருகின்றார் உரையாசிரியர்.

ஆ - சொல்லா நின்றான். இட்டு - சொல்லிட்டு நின்றான். து - சொற்று நின்றான். உ - புக்குப் போனான். இ - சொல்லி நின்றான்.

இவ்வுதாரணங்களால் முதற்சொல் வினையெச்சம் என்பது விளங்கும். இவற்றால் தமிழில் உள்ள வினையெச்சங்களின் பரப்பினை அறிந்து கொள்ள இயலாதென்பது ஒரு தலை. சொல்லிட்டு நின்றான் என்பது வழக்குச் சொல் சொல்லிவிட்டு என்பதன் மரூஉ. விட்டு என்பது துணைவினை. இதனைப் பிரத்தியம் என்கிறார் இவர்.

அடுத்து தமிழில் குறிப்புவினைமுற்றாகவும் தெரிநிலை வினையெச்சமாகவும் நிற்கும் சொற்களை இடைச்சொல் முடிபாகக் கூறுகிறார். அது வருமாறு.

இல்லை உண்டாலில் இவை முதலா இடைச் சொற்களுக் கோர்
எல்லையுண்டாக இயற்ற வொண்ணா இசையும் பொருளும்
ஒல்லையுண்டாக நிற்கு மிடமும் தேர்ந்திவற் றொடொக்கச்
சொல்லையுண்டாக்குக என்பது நூலின் துணிபொருளே (கா-10)

எ.டு. - சார்வில்லை, சோர்வில்லை, சார்வுண்டு, சோர்வுண்டு எனவும் பிரிந்தால் அறியில், பிரியில் என்றும் வரும் என உதாரணந்தந்து மேலும் உரையாசிரியர் இல்லை, உண்டு, ஆல், இல், அ, ஆன் எனவும் இன்றி இன்னம், போலும், ஆம், ஆக்கும், ஏ, ஒடு, வாழி சாற்றி, நனி, ஒங்கு எனவும் பிறவாற்றானும் வரும் என்கிறார். "வரையறுக்கப்படா" என்றது வடமொழி நோக்கில் வரையறுத்துக் கூறப்படா என்றவாறு.

அடுத்துத் தடைப்பொருளில் (தடை = எதிர்மறை) வரும் பிரத்தியங்கள் இவை என வடமொழி நோக்கில் கூறுகின்றார். அவை ஆன், ஆள், ஆர்கள், ஆது, ஆ என்பனவும் இலன், இலள், இலர், இலர்கள், இலது, இல, என்பனவும் ஆதொழி பிறவுமாம் என்கிறார். அக்காரிகை வருமாறு.

ஆன் ஆள் ஆர் ஆர்களொடு ஆது ஆ இலன் மற்றிலள் இலரும்
தானாம் இலர்கள் இலது இல தாதுத் தடைப் பொருட்கண்
மேனாம் உரைத்த மரபே வரும் மிக்கு ஆதொழி முன்
நானாவுவ மற்று நற்றடை மன்னும் பிரத்தியமே (கா-11)

எடுத்துக்காட்டு வருமாறு.

நடவான், நடவாள், நடவார், நடவார்கள், நடவாது, நடவா எனவும் நடந்திலன், நடந்திலள், நடந்திலர், நடந்திலர்கள், நடந்திலது, நடந்தில எனவும், நடக்கிலன் - - - நடக்கில எனவும் வரும்.

'பிற' என்றதனான் நடவாதொழி, நில்லாவழி, மாயாப் புகழ் இது நடக்குதில்லை, இவை நடப்பனவன்று என வருவன கொள்க என்கிறார் உரையாசிரியர். இதனான் இவ்வாசிரியர் வடமொழி மரபுகளைத் தமிழில் திணிக்க எவ்வளவு இடர்ப்படுகின்றார் என்பது விளங்கும்.

இங்ஙனம் ஆணைப் பெண்ணாக்க இவர் செய்யும் ஒப்பனைகள் இரங்கத்தக்கனவாக உள்ளமையைக் காணலாம். இதனான் அறிவியல் நோக்கு ஆழப்புதைக்கப்பட்டுள்ளமை உணரலாம்.

கிரியா பதப்படலம்

கிரியாபதம் என்பது தமிழில் தெரிநிலை வினை முற்றுச் சொல்லை ஒப்பது அஃது ஒரு கருத்தாவின் செயலைக் காலத்தொடு உணர்த்தி வரும் அறுவகைக் கருத்தா வினைகளை மூன்று காலத்தொடும் உறழப் பதினெட்டுப் படர்க்கைக் கிரியாபதம் வரும் என்கிறார். காலத்தை வடமொழியொடு வைத்துக் கூறாமல் தமிழிலக்கண முறையில் மூன்றாக் வைத்துக் கூறுகின்றார். அது வருமாறு.

ஒருவன் ஒருத்தி சிறப்புப் பலர் ஒன்றொடு பலவை
மருவுபடர்க்கை யொடு காலம் மூன்றையும் வைத்துறழத்
துருவமலி பதினெட்டாம் தொழிற்பதம் தொல் கருத்தா
உருவமலியும் பொருள் மேல் நிகழும் ஒளியிழையே. (கா-1)

அடுத்துத் தன்மையிலும் முன்னிலையிலும் வரும் கிரியாபதங்களின் எண்ணிக்கை கூறுகின்றார். தன்மை முன்னிலைச் சொற்கள் ஆண்பால் பெண்பால் விரைந்து காட்டா ஆதலின் ஒருமை ஒருமைச் சிறப்பு பன்மை என மூன்றாக வகுத்து மூன்றுகாலத் தொடும் உறழ ஒன்பது ஒன்பதாகப் பதினெட்டு வரும் என்கிறார். இவற்றைப் படர்க்கைப் பதினெட்டொடும் கூட்டக் கிரியாபதங்கள் முப்பத்தாறாகும் என்கிறார். அது வருமாறு.

முன்னிலை தன்மை இடத்தினிற் காலங்கள் மூன்றையும் வைத்து
உன்னும் ஒருமையும் சிறப்பொடு பன்மையும் உய்த்துறழ்ந்தாற்
பன்னும் தொழிற்சொல் பதினெட்டுள கருத்தாப் பொருள் மேல்
மன்னிநிகழ் தொகை முப்பதொடாறும் வகுத்தறியே. (கா.2)

இனி, தன்மை, முன்னிலை, படர்க்கைக் கிரியாபதங்களுக்குரிய பிரத்தியங்கள் (விகுதிகள்) கூறத்தொடங்கிப் படர்க்கை வினைவிகுதிகள் முதற்கண் கூறுகிறார். அவையாவன.

தான், ஆன், தாள், ஆள், தார், ஆர், தார்கள், ஆர்கள், தது, அது தன், அன், என்னும் பன்னிரண்டு. இவை இறந்தகால வினைகளின் பிரத்தியங்களாக வரும் என்கிறார். இவர் கால இடைநிலைகள் சாரியைகள் என்னும் முறையைக் கொள்ளாமல் எல்லாவற்றையும் பிரத்தியங்களே தரும் என்னும் கோட்பாட்டினராதலின் வினைச் சொற்களைத் தாது, பிரத்தியம் என்னும் இருகூறுகளாகக் கொண்டு இங்ஙனம் கூறுகின்றார். என்பதை நினைவிற்கொள்க. அவை பற்றிய காரிகை வருமாறு.

தானானும் தாளாளும் தாராரும் தார்களொடு ஆர்கள் என்று
மேனாம் உரைத்த பிரத்தியமாகும் தது அதுவும்
தேனார் குழலி தனவும் அனவும் திகழ் படர்க்கை
ஆனாஇறப்பில் தொழிற்பதம் ஆறிற்குந் தேர்ந்தறியே

எடுத்துக்காட்டுக்கள்

உண்டான்-உண்+தான் உண்டாள் - உண் + தாள். உண்டார்கள்
உண் + தார்கள். உண்டாள் + உண் + தாள் - உண்டது-உண்+தது
உண்டார் - உண்+தார். உண்டன - உண் + தன
உறங்கினான் - உறங்கின் + ஆன் (இன் துவந்தப்பிரத்தியம் என்பார்)
உறங்கினாள் - உறங்கின் + ஆள். உறங்கியது - உறங்கி + அது
உறங்கினார் - உறங்கின் + ஆர் உறங்கியன உறங்கி + அன
உறங்கினார்கள் - உறங்கின் + ஆர்கள். இவர் இன் என்னும் காலங்காட்டும் இடைநிலையைப் பகுதியொடு சேர்த்துப் பிரித்து அதுவும் ஒரு பிரத்தியம் என்பது எத்துணை வலிந்து கூறுவதாக உள்ளது நகைப்பிற்கிடமாக உள்ளது.

அடுத்துப் படர்க்கை நிகழ்காலப்பிரத்தியங்கள் நின்றான், கிறான், கின்றாள், நின்றது, கின்றது. நின்றன கின்றன. என வரும் பன்னிரண்டுமாம்.

நின்றான் கிறானொடு நின்றாள் கிறாளிவை நின்றார்கிறார்
நின்றார்களோடு கின்றார்களும் நின்றதும் நிற்கின்றதும்
தென்றாத சீர் நின்றன கின்றனவும் திகழ்படர்க்கை
பின்றானிகழ்கை தொழிற்பதம் ஆறிற்கும் தேர்ந்தறியே (சா.4)

[library stamp]

உ.ம்.	உண்ணாநின்றான்	-	உண்கிறான்
	உண்ணாநின்றாள்	-	உண்கிறாள்
	உண்ணாநின்றார்	-	உண்கிறார்
	உண்ணாநின்றது	-	உண்ணாநிற்கின்றது
	உண்ணாநின்றன	-	உண்கின்றன. எனவரும்

உரையாசிரியர் ஒன்றின முடித்தல் என்பதனான் கிறுவை ஒப்பக் கிட, இரு என்பனவும் கொள்களண்பார். அவை உண்ணாகிடந்தான்.

உண்ணாவிருந்தான் எனவரும் என்பார் இவை நிகழ் காலப்பொருள் தரும் என்பது வலிந்து கொள்வதாகும்.

அடுத்துப் படர்க்கை எதிர்காலப் பிரத்தியங்கள், வான், பான், வாள், பாள், வார், வார்கள், பார்கள், வது, பது வன, பன எனப் பன்னிரண்டு ஆகும் என்பார். அக்காரிகை வருமாறு.

வான்பானும் வான்பாளும் வார்பாரும் வார்களும் பார்களும் சீர்
தான்பாவிய வதுவும், தத்தை யத்தை வென்ற
தேன்பாவும் சொல்லி வனவும் பனவும் திகழ்படர்க்கை
வான்பான் மலியும் எதிர்விற் றொழிற்பதம் ஆறிற்குமே (கா.5)

உ.ம்.	உறங்குவான்	உறங்குவது	உண்பார்	
	உறங்குவாள்	உறங்குவன	உண்பார்கள்	
	உறங்குவார்	உண்பான்	உண்பது	
	உறங்குவார்கள்	உண்பாள்	உண்பன	எனவரும்

அடுத்து முன்னிலை-தன்மையில் வரும் கிரியாபதங்களின் பிரத்தியம் தாய் ஆய் தீர் தீர்கள் ஈர்கள் என்பவை முன்னிலை இறந்த காலத்திற்கும் தேன் ஏன் தேம் ஏம் தோம், ஓம் என்பவை தன்மை இறந்தகாலத்திற்கும் பிரத்தியங்களாக வரும். இவை அகத்தியனார் சொன்ன மெய்த்தமிழ் என்கிறார்.

சூ.௬. **தாயாவும் தீரீரும் சாற்றிய தீர்களொடு ஈர்களுமாம்**
சாயாத முன்னிலை இறப்பாம்; தன்மைதன் இறப்பில்
தேயாத் தேன் ஏனும் தேமேமும், தோமோமும் ஆகும் என்ப
வேயார் பொதியத் தகத்தியனார் சொன்ன மெய்த்தமிழ்க்கே

உ.ம்.	நீஉண்டாய் (தாய்)	நான் உண்டேன் (தேன்)
	நீர் உண்டீர் (தீர்)	நாம் உண்டேம் (தேம்)
	நீங்கள் உண்டீர்கள் (தீர்கள்)	நாம் உண்டோம் (தோம்)
	உறங்கினாய் (ஆய்)	உறங்கினேன் (ஏன்)
	உறங்கினீர் (ஈர்)	உறங்கினேம் (ஏம்)
	உறங்கினீர்கள் (ஈர்கள்)	உறங்கினோம் (ஓம்)

அடுத்து முன்னிலை தன்மைகளில் வரும் நிகழ்காலவினைப் பிரத்தியங்கள் வருமாறு முறையே, கிறாய், கின்றாய் கிறீர், நின்கிறோம், நின்றோம் எனவும் வரும்.

சூ.7. **கிறாய் நின்றாய்கிறீர் நின்றீர் கிறீர்கள் நின்றீர்களுமாம்**
இறாநின்றனமுன் னிலையின் நிகழ்ச்சி, இதன்கண் தன்மை
கிறேஎன் நின்றேன் கிறேம் நின்றேம் கிறோமும்
நின்றோமும் என்றாம்
தெறாநின்ற கட்பவளந்திகழ் வாய் நற்றிருந்திழையே

உ.ம்.	உண்கிறாய்	உண்கிறேன்	
	உண்கிறீர்	உண்கிறேம்	
	உண்கின்றீர்கள்	உண்கிறோம்	
	உண்ணாநின்றாய்	உண்ணாநின்றேன்	
	உண்ணாநின்றீர்	உண்ணா நின்றேம்	
	உண்ணாநின்றீர்கள்	உண்ணாநின்றோம்	எனவரும்

அடுத்து முன்னிலை தன்மை எதிர்கால வினைகளில் வரும் பிரத்தியங்கள் முறையே வாய், பாய், வீர், பீர், வீர்கள் பீர்கள் என்றும் வேன் பேன் வேம் பேம் வோம் போம் என்றும் கூறுவர்.

சூ.8. வாய்பாய் வீர் வீர்கள் பீர்கள் இவை மன்னும் முன்னிலையில்
சாய்பாய் விடுமெதிர்காலம்; இதனுழித் தன்மை சொல்லின்
வேய்பாவிய தோளி! வேன் பேன் வேம் போயிடுவோம்
போமுமாம்
சேய்பாவிய செழும் போதிப் பிரான்தன் திருந்துரைக் கே.

உ.ம்.	உறங்குவாய்	உண்பாய்	உறங்குவேன்	உண்பேன்
	உறங்குவீர்	உண்பீர்	உறங்குவேம்	உண்பேம்
	உறங்குவீர்கள்	உண்பீர்கள்	உறங்குவோம்	உண்போம்
				எனவரும்

அடுத்து ஏவல் வினைப்பிரத்தியங்கள் கூறுகின்றார். இதன்கண் தமிழ்நெறிக்கு முரணான வேறுபட்ட முடிபுகள் கூறுகின்றார். வியங்கோளைப் பிரிக்காமல் இசைவு, பரோக்கம் என்னும் இருவகை கூறுகின்றார். முன்னிலை ஏவல் ஒருமையில் 'சு' என்னும் பிரத்தியம் புணர்ந்து கெடும் என்கிறார். உலகவழக்கில் ஒரு சார் நிகழும் 'நாம்' என்பதனை முன்னிலை சிறப்புச் சொல் என்கிறார் உரையாசிரியர். முன்னிலை ஏவற் சிறப்பின்கண் மின்கள், உம், கள் என்பனவும் இசைவுப் பொருளில் க என்பதும் பரோக்கப் பொருளில் போலும் ஆம் என்பனவும் வரும் என்கின்றார். பரோக்கமாவது தன் முகப்பன்றியொழிவது. என்கிறார் உரையாசிரியர் (அஃதாவது படர்க்கையாம்)

சூ.9. ஓங்காத முன்னிலைப் பாலேவல் ஆங்கால் ஒருமையிற் 'சு' ம்,
பாங்கார் சிறப்பியல் ஆமேயும் மின்கப்பன்மை யாயிடத்து
நீங்காத மின்களும் கள்ளாம், இசைவினிற் கவ்வென்பதாம்
தாங்காப்பரரோக்கத்தினிற் போலும் ஆம் என்பர் தாழ் குழலே!

உ.ம். *(1) முன்னிலை ஏவல் ஒருமை: உண், உறங்கு கிட நடு, படு நில்*
இரு (இவை சுப்பிரத்தியம் புணர்ந்து கெட்டவை.)
(2) முன்னிலை ஒருமை சிறப்புச் சொல் ஏவல் :-
நாம் போகாமே! (ஈண்டு நாம் என்பது முன்னிலைப் பெயர்போகாமே என்பதற்குப் போகலாமே என்பது பொருள் போலும்)

நாம் நில்லும்! நாம் போமின்! நாம் நிற்க! எனவும்
நீர்போமின்! நீருண்ணும்! நீர் உண்ணுமின்! எனவும்

(3) முன்னிலை ஏவற் பன்மை:- நீங்கள் போமின்கள்; நீங்கள் நில்லும்! நீங்கள் போங்கள்! எனவும் நீங்கள் போமின்! எனவும்

(4) இசைவுப் பொருளில் :- அவனென் செய்க! இவன் என்செய்க (என் செய்க என்பது எது வேண்டுமாயினும் செய்க என்னும் பொருட்டுப் போலும்) நீயுண்க நீயறிக எனவும்.

(5) பரோக்கப் பொருளில் :- உண்டான் போலும் உண்டானாம் எனவும் வரும் எனக் காட்டுகிறார் உரையாசிரியர்.

அடுத்துச் சில வினைச் சொற்களின் பொருண்மையை உட் கொண்டு மூன்றிடத்திலும் துணிவின் கண் பின்வரும் பிரத்தியங்கள் வரும் என்கிறார் இதனால் எய்தும் பயன் யாதென்று புரியவில்லை

சூ.10. தன்மைத் துணிவாம் ஒருமை வன்பன் தம் சம்போமொடு வோம் பன்மைக்கண் அன்றிப் படர்க்கையின் கண்ணும் ஒருமை யிலாம் பன்மைக் கண் வர்பர்கள் ளோடாகு முன்னிலை தன்னொரு மைத் தன்மை சிவைதிபன் மைக் கிவி சிப்பித்திப் பின்னரவே

இதன் பொருள்:- துணிவுப் பொருளின் கண் தன்மை ஒருமையில் வன், பன் என்பனவும் பன்மையில் தம், சம், போம், வோம் என்பவும் படர்க்கை ஒருமையில் உம்மும் பன்மையில் வர் பர் என்பவை தனித்தும் கள்ளொடு கூடியும் வரும் சி வை தி என்பவை முன்னிலை ஒருமையிலும் கிரி, விர், சிர், திர், பிர் என்பனவும் வரும்

உ-ம். அறிவன், நிற்பன் (னகரம் லகரமாயும் வரும்) அறிவல் கூறுவல் நாம் கண்டம், அறிசம், நிற்போம் அறிவோம் என்றும் அவன் அறியும், அவர் அறிவர் அவர்கள் அறிவர்கள் எனவும் நீ அறிசி, நீ அறிவை, நீ அறிதி எனவும் வரும் பன்மைக்கு உரையாசிரியர் உதாரணம் தரவில்லை. (காண்கிர், வருவிர், அறிசிர் பெறுதிர் உண்பிர் என்பவை உதாரணமாகலாம்)

அடுத்து வினைப் பெயரும் வினையாலணையும் பெயரும் பற்றிக் கூறுகின்றார் (இவர் வினைக்குறிப்பென்று கூறுவது தொழிற் பெயர்களாக நிற்கும் சொற்களையாம்) வினைக் குறிப்பு படர்க்கை ஒன்றன் பால் வினை முற்றுப் போல நிற்கும் என்றும் கருமக் காரகத்தில் (செய்யப்படு பொருளாக நிற்கும் நிலை) அகரத்தொடு கூடிய படுவொடு கூடிநிற்கும் என்றும் படுவை ஒத்த பிற சொற்களும் வரும் என்றும் கூறுகின்றார் அவை பெயராயும் வரும் என்கின்றார்.

சூ. 11. வினைக்குறிப்போடு கருமம் படர்க்கையின் மிக்க ஒன்றை அனைத் தென்னலாம்; அவ்வொடுபடுத்தாதுபின்னாமியற்கை தனைக்கருமம் பெறும்; தாதுக்கள் மற்றும் படுவினைப் போல் -நினைக்கவரும்; மற்றிவையும் பெயர்ச் சொல் நிகர்த்திடுமே

உ.ம்.:- தொழிற்பெயர் கருத்தாவில் வருதல் :-உண்டது, உறங்கியது, உறங்குவது

என வரும் மூன்று காலத்திலும் நிற்கும் கருமக்காரகத்தில் வருதல்; மூன்று பாலிலும் வரும்.

உண்ணப்பட்டது, உறங்கப்பட்டது எனவரும். இவ்வாறே ஏனையவும் அறியப்பட்டான், அறியப்படா நின்றான் அறியப்படுவான் எனவரும் பிற என்றதனால், அறியத்தகுவான், பர்குண்பான் எனவரும் என்பார் உரையாசிரியர். இவை பெயராயவழி உண்பான், உண்பானை உண்பானொடு உண்ணப்பட்டானை உண்ணப்பட்டானொடு என வேற்றுமை உருபுகளை ஏற்கும். இவை எல்லாம் செய்வினை, செயப்பாட்டு வினை எனத் தமிழிலக்கணத்தில் அடங்கும்.

அடுத்து, சொற்களில் எழுத்துப் பிழை நேராமல் காக்க என்கிறார். அறியாதவர் ள,ழ வேறுபாடு தெரியாமலும் ற,ச வேறுபாடு தெரியாமலும் பிழை செய்வார் (சூ-12) என்கிறார்.

கோழி - வாழை என்பனவற்றைக் கோளி, வாளை என்பதும், விளக்கு, இளமை என்பவற்றை விழக்கு, இழமை என்பதும், முற்றத்தை முச்சம் என்பதும் உச்சியம் போதினை உற்றியம் போது என்பதும் எழுத்துப் பிழை என்பதாம். உரையாசிரியர் சேத்து நிலம், கோயி முட்டை உசிர் என்றாற் போன்ற கொச்சை வழக்கினையும் எடுத்துக் காட்டுகின்றார்.

இறுதி·· ாக வடமொழிய மைப்பினையும் தமிழ் மரபினையும் நோக்கிக் காரகபதக் குற்றம் முதலியவை நிகழாமல் பதங்களை முடித்துணர்த்துக என்கிறார்.

சூ.13. **மதத்திற் பொலியும் வடசொற் கிடப்பும் தமிழ் மரபும்**
உதத்திற் பொலி ஏழைச் சொற்களின் குற்றமும் ஒங்குவினைப்
பதத்திற் சிதைவும் அறிந்தே முடிக்க, பன்னூறாயிரம்
விதத்திற் பொலியும் புகழுவ லோ கிதன் மெய்த்தமிழே

இது சொல்லதிகாரத்தின் புறனடைபோல அமைந்துள்ளது.

திறனாய்வுக் குறிப்பு

தொல்காப்பியனார் அவர்காலத்து விளங்கிய பேச்சு வழக்கு செய்யுள் வழக்கினையும் முந்து நூல்களையும் அறிந்து தேர்ந்து கற்றுத் தமிழ் வழக்கு அயல்மொழிக் கலப்பால் சிதைதல் கூடாது என மூன்றுறுப் படங்கிய பிண்டமாகத் தொல்காப்பியம் (தொன்மையான மரபுகளைக் காக்க இயம்புவது) என்னும் தமது நூலைப் படைத்தார்.

உரியடிச் சொற்களிலிருந்து இருதிணை ஐம்பாற் சொற்களைப் படைத்து

அகமும் புறமும் பற்றிய இலக்கியங்களைச் செய்வதற்குக் கருவிநூலாக அதனைச் செய்தமையான் தனிச் சொல்லாக்க முறைமைகளை அவர் கூறமுனையவில்லை. அதனான் காலங்காட்டும் இடைச் சொல் முதலியவற்றை விதந்து கூறாமற் போந்தார். இவர் நூல் செய்த காலத்து வடமொழியில் வியாகரண நூல்கள் (தனிச் சொல்லமைப் பிலக்கணம்) முறையாகத் தோன்றவில்லை. சொல்லுறுப்புக்களைப் பிரித்துணர்ந்து பெயர்ச் சொல் வினைச் சொற்களை உருவாக்கும் இலக்கணத்தை விரிவாகச் செய்தவர் பாணினி முனிவராவார்.

தொல்காப்பியம் பாணினியத்திற்கும் பின் தோன்றியிருப்பின் அந்நெறிமுறைகளை ஒப்பத் தமிழ்ச் சொல்லாக்க மரபினை விளக்கியிருக்கும். தமிழ் மக்களின் அல்லூழ் காரணமாகப் பாணினியத்தை கற்றறியும் வாய்ப்புத் தொல்காப்பியருக்கு நேராது போயிற்று.

தமிழகச் சமய நெறி வேதநெறியொடு கலந்து வழிபாடு வேள்வி முதலியவை தலைமை பெற்ற காலத்து, வேள்வி நெறியையும் வேதக் கோட்பாடுகளையும் எதிர்த்துத் தோன்றிய சமணமும், பௌத்தமும் இலக்கண இலக்கியக் கொள்கைகளிலும் வேறுபட்டன இவ்விரு சமயத்தை சார்ந்த சான்றோர்கள் சிலர் தத்தம் கொள்கைகளைப் பரப்பத் தென்னாட்டிற்கு புகுந்து நிலை பெற்றனர். தத்தம் சமயக் கொள்கைகளைப் பரப்பத் தமிழ்மொழியை முறையாகக் கற்று நூல் செய்யத் தலைப்பட்டனர். பெரும்பாலும் அறநெறி நூல்களையே இயற்றினர். தமிழின் பரப்பினையும் சொற்களையும் ஆராய்ந்து நிகண்டு நூல்களைச் செய்தனர். அக்கால நிலைமைப்படி யாவும் செய்யுள் வடிவத்தில் செய்ய நேர்ந்தமையின் தொல்காப்பியச் செய்யுளிலக்கணம் பரப்புடையதாயும் தெளிதற்கும் உணர்தற்கும் அருமையுடையதாயும் உள்ளமை நோக்கி வடமொழி யாப்பிலக்கண நெறியில் தமிழ்மரபும் முரணாத வகையில் யாப்பிலக்கண நூல்கள் பல செய்தனர்.

தொல்காப்பியங் கூறும் செய்யுளுறுப்புகளுள் அடிப்படையானவற்றை மட்டும் எடுத்துக் கொண்டு தங்கள் சமயநூல்களில் அமைந்த யாப்பு நெறியையும் வடமொழியாப்பு முறையும் கலந்து நூல்களை இயற்றத் தலைப்பட்டனர். பெரும்பாலும் நான்கடிச் செய்யுளாக செய்ய முனைந்தமையான் விருத்தம் தண்டகம் சந்தம் என்ற முறையில் அமைந்த வடமொழிக் கோட்பாடுகளை எளிதாக்கித் தாழிசை, துறை, விருத்தம், கட்டளைச் செய்யுளாகிய காரிகை முதலியவற்றை வகுத்துச் செய்தனர். அதனான் இடைக்கால் இலக்கண நூல்களுள் யாப்பிலக்கண நூல்களே மிகுதியாகப் படைக்கப் பெறுவனவாயின என்பது முன்னுரையில் கூறப்பட்டது.

தொல்காப்பியத்திற்குப்பின் பொருளிலக்கணநூல்களும் யாப்பிலக்கண நூல்களும் தோன்றினவே யன்றி எழுத்தும் சொல்லும் பற்றிய நூல்கள் தோன்றவில்லை, வடமொழியில் தனியே பிரிந்து வளர்ந்த அலங்கார இலக்கண நூல்களும் தோன்றவில்லை. இக்குறைபாடுகளை ஓருவாறு ஓர்ந்துணர்ந்த புத்த சமயத்தைச் சார்ந்த பெரியாராகிய புத்தமித்திரனார் அக்குறையைக் களைய எண்ணி

ஐந்து அதிகாரமும் பொருந்த ஒருநூலைச் செய்ய முற்பட்டார் என்பது தெரிகின்றது.

அக்காலை சமணப் பள்ளிகளில் தொல்காப்பியம் கற்பிக்கப்பட்டு உரைகள் பல எழுந்தன எழுத்தும் சொல்லும் பழந் தமிழ் நெறி முறையில் அமைந்துள்ளமையின் புதுமையான முறையில் வடமொழி பாலிமொழி இலயல்புகளைக் கலந்து யாப்பிலக்கணம் செய்யப்பட்டமை போல வடமொழிச் சொல்லாக்க மரபுகளையும் பாலிமொழி இலக்கணக் கோட்பாடுகளையும் முன்னிறுத்திச் சொல்லிலக்கணத்தைச் செய்ய இவர் விழைந்தனராதல் வேண்டும் மேலும் சமணப் பள்ளிகளைப் போலப் பௌத்த சங்கங்களும் தனித் தன்மையோடு கல்விப் பணியையும் நூல்கள் இயற்று தலையும் மேற்கொள்ள வேண்டும் என்பதும் இவரது வேட்கையாகத் தெரிகின்றது.

சோழமன்னன் இராசராசன், இராசேந்திரன் தம் ஆட்சிக் காலத்தில் இவர்கள் புத்த சமயத்தினர்க்குப் பெரிதும் ஆதரவுதந்தனர். சோழர்களின் ஆதரவிற்கு நன்றி தெரிவிக்கும் முறையில் வீரராசேந்திரன் பெயரால் இயற்றப்பெற்ற இந்நூலுக்கு வீர சோழியம் என்று பெயரிட்டு இவ்வாசிரியர் நூலின் இடையே வைத்தும் பாராட்டியுள்ளார். வீரராசேந்திரன் வேண்டிக் கொண்டதனால் அவன் பெயரால் இந்நூலியற்றப்பட்டது என்று கருதுவாரும் உளர்.

இந்நூற் பாயிரம் மூன்றாங்காரிகையில் "தேமேவிய தொங்கல் தேர்வீர சோழன் திருப்பெயரால் பூமேலுரைப்பன்" என்று ஆசிரியர் தன் விருப்பாமகவே கூறுகின்றார். மற்று ஏழாம் காரிகையில் மேவிய வெண் குடைச் செம்பியன் வீரராசேந்திரன் நாவியல் செந்தமிழ்ச் சொல்" என அவன் பெயரைத் தமிழுக்கு அடையாகக் கூறுவதன்றி அவன் வேண்டிக் கொண்டதாகக் கூறவில்லை. என்பது முன்னுரையிற் கூறப்பட்டது.

இவர் தொல்காப்பியம் முதலிய தமிழ் இலக்கண நூல்களையோ பாணினீயம் முதலிய வடமொழி இலக்கண நூல்களையோ தமது நூலுக்கு முதல் நூலாக யாண்டும் கூறவில்லை. அவர் தம் பெயர்களையும் குறிப்பிடவில்லை. "ஆயுங்குணத்து அவலோகிதன் பக்கல் அகத்தியன் கேட்டு ஏயும்புவனிக்கியம்பிய தண்டமிழ் ஈங்குரைகப்புக்க தாகவே கூறுகின்றார். கிரியாபதப்படலம் ஆறாங்காரிகையில்" வேயார் பொதியத்தகத்தியனார் சொன்ன மெய்த்தமிழ்" என்கிறார் பதின்மூன்றாங்காரிகையில்" பன்னூராயிரம் விதத்திற் பொலியும் புகழவ லோகிதன் மெய்த்தமிழே" என்கிறார். பாலிமொழி இலக்கண ஆசிரியர் எவரையும் குறிப்படவில்லை. எனவே அவலோகிதன்பக்கல் அகத்தியன் கேட்டு ஏயும் புவனிக்கியம்பிய தமிழின் அடிப்படையில் இந்நூலை ஒரு முதனூலாகவே செய்தனித்துள்ளார் எனக் கொள்ளலாம்.

நூலை ஆராயுமிடத்து வடமொழி தென்மொழி நூல்களொடு காதந்திரம் கச்சாயனம் முதலிய நூல்களின் அடிப்படையில் இந்நூல் இயற்றப்பட்டுள்ளமை காணலாம். பாயிரத்தில்

நாமே எழுத்துச் சொல் நற்பொருள் யாப்பலங்கார மென்னும்
பாமேவு பஞ்ச அதிகாரமாம் பரப்பைச் சுருக்கி
தேமேவிய தொங்கல் தேர்வீர சோழன் திருப்பெயராற்
பூமேலுரைப்பன் வடநூல் மரபும் புகன்று கொண்டே

என்றுகூறுகிறார் (உம்மையால் தமிழ்நூல் மரபும் உரைத்தல் பெறப்படும்) தமிழில் ஐந்ததிகாரங்களைக் கொண்ட முதல் நூல் இது என்பதில் ஐயமில்லை. நேமிநாதம் நன்னூல் முதலியவை எழுத்து சொல், என்னும் இரண்டதிகாரங்களே கூறுதலின் அவற்றொடு ஒப்ப இவ்வாராய்ச்சிக்கு எழுத்து, சொல் ஆகிய இரண்டதிகாரங்களே மேற்கொள்ளப் பெற்றன.

இந்நூலால் தமிழ்மொழிக்கு நேர்ந்த குறையும் நிறையும்

எழுத்து

தமிழ் எழுத்துக்ளை முதன் முதலாக முப்பத்தொன்று என்று கூறுபவர் இவரே தொல்காப்பியம் அறிவியல் நோக்கில் கூறியுள்ள சார்பெழுத்துக் கோட்பாட்டினைத்தகர்த்து ஆய்தத்தை முதலெழுத்துப் போலக் கூறிக் குற்றியலிகரம் குற்றியலுகரங்களை இகர உகர உயிர்களின் விகாரமாகக் கூறிச் சென்றது எழுத்து (ஒலியன்) என்பதன் பொருளை உணராமையான் நேர்ந்ததாகும்.

அடுத்து ழகரமெய் தமிழுக்கே உரிய சிறப்பெழுத்து என்னும் மரபைச் சிதைத்து அது ளகரத்தின் மாற்றெழுத்து என்பது போல வைத்துத் தமிட்சொல், புகட்சி, தமிணர் எனப்புணர்ச்சி விதி கூறியிருப்பது இவ்விரு எழுத்துக்களின் பிறப்பமைதியை நோக்காமையும் அதனைத் தமிழுக்கே உரியதாகக் கூறுவதை ஏற்க மனமில்லாமையுமே யாகும்.

அடுத்து அவ் இவ் உவ் தெவ் என்னும் வகரமெய்யீற்றுச் சொற்கள் இவர்காலத்து இலக்கியங்களில் பயின்று வந்துள்ளமை யறிந்தும் தமிழில் வகரமெய் ஈறாகவராது என்று கூறுவது வடமொழியிற் பன்மைச் சுட்டு இவ் இருவகையாக அமையாமையின் தமிழிலும் இருத்தல் கூடாது எனக் கருதியமையே எனலாம்.

அடுத்து இடைநிலை மெய்ம் மயக்கத்தை உடனிலை மெய் எனக்கருதிக் கூறியிருப்பது தொல்காப்பியத்தின் ஒலியிலக்கணக் கோட்பாட்டினை உணராமையே யாகும். பின் வந்தநூலாரும் தொல்காப்பிய உரையாசிரியன்மாரும் மெய்ம் மயக்கத்தைத் தவறாகப் புரிந்து கொண்டமைக்கு இவர் நூலே காரணம் என்பது தெரிகின்றது.

அடுத்து இகர ஈகார ஐகார ஈற்றுச் சொற்களின் முன்வரும் நகரம் ஞகரமாகத்திரியும் என்பதற்கு அவர் கால இலக்கியங்களினும் சான்றின்மையால் இது தன்னான் ஒருபொருள் கருதிக் கூறியதாகத் தெரிகின்றது. எண்ணுப் பெயர்ப்

புணர்ச்சி விதிகளை ஓர்ந்துணராமல் இவருடைய பிரத்தியக்கொள்கைகளுக் கேற்ப இவை இவற்றின் திரிபாகும் எனக் கூறிச் செல்வது இவரது சொல்லாய்வுத் திற வறுமையைக் காட்டுகின்றது.

அடுத்து, அஃது இஃது என்னும் ஆய்தச் சுட்டுப்பெயர்களை அது இது உது ஆகியவற்றின் விகாரமாகக் கூறுவது இவர் தமிழ்ச் சொற்களின் அமைதிகளை நன்கு நோக்காமையைப் புலப்படுத்தும் அவை வேறு வேறு இனங்களாகும். அது, இது, உது என்பவை அவை இவை உவை என்னும் பன்மைச் சுட்டுக்களுக்கும் அஃது இஃது உஃது என்பவை அவ் இவ் உவ் என்னும் பன்மைச் சுட்டுகளுக்கும் இனமாம். இந்நூல் எழுத்ததிகார இலக்கணத்தில் மற்றும் பிற பிற குறைகள் இருப்பினும் அவை தமிழ் நெறிக்குப் பெரிதும் சிதைவு புரிவன அல்ல.

சொல்

சொல்லதிகாரத்துள் பெரும்பான்மையும் வடமொழி இலக்கணக் கொள்கைகளைக் கூறிச் சிறுபான்மை தமிழ் மரபும் ஒப்பிட்டும் ஒப்பிடாமலும் கூறுகின்றார் ஒருவன், ஒருத்தி, ஒருவனைச் சிறப்பித்த சொல் ஒருத்தியைச் சிறப்பித்த சொல் பலர், ஒன்று, ஒன்றனைச் சிறப்பித்த சொல், பல, என இவர் பாலாக வகுத்துக் கொள்ளும் முறை வடமொழி தமிழ் மொழி மரபில் கூறப்படாதவை. சிறப்பித்த சொல் என்பது இவர் கண்ட புதிய நெறி.

வேற்றுமை இலக்கணம் வடமொழியை ஒட்டிக் கூறித் தமிழ் நெறியை அவற்றுள் திணித்துள்ளார். உருபுகளே வேற்றுமை செய்யும் என்னும் வடமொழி மரபை முதற்கண் தமிழிலக்கணத்தில் புகுத்தியவர் இவரே இவரைப் பின்பற்றியே பவணந்தியார் கூறுகின்றார். உருபுகளை வைத்துப் பதங்களைப் பெருக்கித் தொகை கூறும் பிழையைத் தொடங்கி வைத்தவர் இவரே எனத் தெரிகின்றது. கிரியா பதங்களையும் இவ்வாறே எண்ணிக் கூறுகின்றார்.

ஒடுப் பிரத்தியம் கிரியாபதத்தொடும் வருமென்று இவர் கூறவில்லை. உரையாசிரியர் கூறுகின்றார் உரையாசிரியர் ஆராயாது கூறிய இதனை உடனிகழ்ச்சிப் பொருள் என நன்னூலார் விதித்தார் பின் வந்த உரையாசிரியர் பலரும் அதனை ஏற்று வேற்றுமை என்பதன் பொருளின் சிறப்பைச் சிதைத்துவிட்டனர்.

தொகைமொழி இலக்கணம் இருமொழிகளின் மரபுகளை உணர்ந்து பிரித்துக் கூறுகின்றார். தத்திபதஇலக்கணம் தமிழில் கூறப்பெறவில்லை எனினும் தத்திதப் பொருள் அமைதிப் பெயர்கள் தமிழில் அமைத்துள்ளமை தோன்ற விளக்குகின்றார். ஆகுபெயர், குறிப்பு வினைகள் யாவும் ஓராற்றான் தத்திதப் பொருள் தருவனவாதலின் இவ்விலக்கணம் ஓரளவு தமிழை நன் குணரப்பயன்படும். தத்திதப் பிரத்தியங்களாக இவர் கூறும் விகுதி இடைச் சொற்பல தமிழ் நெறி யொடு ஒட்டாதவையாகும்.

அடுத்து வடசொற்கள் தமிழில் வந்து வழங்கும் விதம் என இவர் கூறும் நெறியைப் பெரும்பாலும் பவணந்தியார் ஏற்று வடமொழியாக்கம் பற்றிக் கூறுகின்றார். வடமொழிகளின் உருவங்களை அறிய ஓரளவு இது துணை புரியும்.

தாதுப்படலத்தில் இவர் கூறும் இலக்கணமுறை நன்னூலார் பதவிலக்கணங் கூறுதற்கு அடிப்படையாக அமைந்துள்ள மையறியலாம். தமிழில் உள்ள உரிச்சொற்பாகுபாடு பற்றி இவர் கூறவில்லை. இடைச் சொற்களைப் பற்றியும் தெளிவான விளக்கமில்லை. பிரத்தியங்களாக இவர் வகுத்துக் கூறும் இலக்கணம் தமிழ் நெறி மரபிற்குப் பெரிதும் முரணாக அமைந்திருத்தலை ஆங்காங்கு மேலே குறித்துள்ளேன். அது பற்றி ஈண்டு ஆராயவில்லை. அதனான் தமிழ் அறிஞர்கள் இதனைப் பார்வை நூலாக மட்டும் ஏற்றுள்ளமை விளங்கும்.

தமிழ்மொழிச் சொல்லமைப்புகளையும் எழுத்து நிலைகளையும் ஆக்க முறைகளையும் இலக்கண வாயிலாகத் தெரிந்து கொள்ள விரும்பும் மாணாக்கர்க்கும் தமிழ் இலக்கண நெறியை அறிந்து கொள்ள விரும்பும் பிறமொழியாளர்க்கும் பெரிதும் பயன்படாத முறையில் இந்நூல் அமைந்திருத்தலின் எவ்வகையான விளைவையும் பயனையும் நோக்கி இவ்வாசிரியர் இந்நூலைச் செய்தார் என்று தெற்றெனப் புலனாகவில்லை.

எனினும் ஆசிரியர் இந்நூலை செய்தகாலத்தில் நிலவிய சமயச் சூழலையும் தமிழிலக்கண இலக்கியச் சூழலையும் அரசிலையும் ஊன்றி நோக்கின் ஓரளவு காரணம் புலப்படும்.

கி.மு. 5,4,3, நூற்றாண்டுகளிலிருந்தே வடக்கிலிருந்து வைதிகச் சமயத்தை சார்ந்தவர்களும் சமண பௌத்த சமயத்தைச் சார்ந்த வரும் தென்னகத்தில் குடியேறித் தமிழ் மக்களொடு கலந்து வாழ் வாராயினர். வைதிக சமயத்துடன் தமிழர் சமயம் இரண்டறக் கலந்து விட்டநிலையில் சமணரும் பௌத்தரும் தத்தம் சமயங்கங்களைப் பரப்ப முற்பட்டுப் சமணப்பள்ளிகளையும் பௌத்தமடங்களையும் தோற்று வித்துப் பரப்பத் தலைப்பட்டனர். சமண பௌத்தச் சான்றோர்களின் அறநெறி தவ ஒழுக்கங்கள் தமிழர்களைக் கவர்ந்தன பலர் அந்நெறிகளைச் சார்ந்தனர். சமய ஒழுக்கங்களில் ஊற்றத்தையும் பற்றினையும் உண்டாக்க எண்ணி அவர்கள் தமிழில் நூல் செய்யத் தொடங்கினர். கி.பி.. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து வைதிகச் சமய ஆதிகத்தை மறை முகமாக எதிர்க்கும் நிலையில் சமணச் சான்றோர்கள் அறநூல்கலையும் காப்பியங்களையும் இலக்கண நூல்களையும் தமிழில் இயற்றத் தலைப்பட்டனர். வைதிக சமயத்தினர் பெரும்பான்மையும் வடமொழியிலேயே நூல்களை இயற்றி வந்தமையால் - சமணசமயம் செல்வாக்குப் பெற்று ஓங்கியது. அக்காலத்தில் பௌத்த சமயச்சான்றோர் தம் மொழியில் அமைந்த நூல்களையே பயின்று வந்தமையான் தமிழில் தம் சமயக் கருத்துக்களைப் பரப்பும் நூல்களை இயற்றும் எண்ணமில்லாதவராக இருந்தனர். ஒரு சில பௌத்தத் துறவியர் தமிழில் புலமை பெற்றுச் சில நூல்களை இயற்றத்தலைப்பட்டனர் - சமயப் பற்றுவெறியாக மாறியது வைதிக சமயத்தார் அவ் விருநெறிகளையும் வெல்லக் கருதினர் சைவ வைணவத்திரு முறைகள் திவ்வியப் பிரபந்தங்கள் படிப்படியாகத் தோன்றின.

சமண சமயத்தில் ஈடுபாடுகொண்டிருந்த பல்லவரும் பாண்டியரும் வைதிக சமயத்தினைச் சார்ந்தனர். ஒன்பதாம் நூற்றாண்டில் சோழர்கள் தலையெடுத்தனர்.

சமணச் சான்றோர்கள் ஐம்பெருங்காப்பியங்களுள் பலவற்றை இயற்றினார் பௌத்த சமயத்தைச் சார்ந்த சாத்தனார் மணிமேகலையை இயற்றினார் சமணர்கள் நிகண்டுகள் யாப்பிலக்கண நூல்கள் பலசெய்து செல்வாக்குப் பெற்றனர். பௌத்தர்கள் பெரிதும் செல்வாக்கின்றியிருந்தனர். இராசராசன், இராசேந்திரன் காலத்தில் பௌத்த சமயம் மன்னர்களின் ஆதரவைப் பெற்று வளரத் தலைப்பட்ட காலத்தில் தமது சமயச் சார்பாக அரிதும் பெருதமாக ஓர் இலக்கண நூலை இயற்ற வேண்டும் என்று புத்தமித்திரனார்க்குத் தோன்றியிருத்தல் வேண்டும்.

சமணசமய அறிஞர்கள் பெரிதும் தொல்காப்பிய நெறியையே பின்பற்றி நூல் செய்து வந்தமையின் வடமொழியையும் பாலிமொழி யையும் அடிப்படையாகக் கொண்டு ஐந்ததிகாரமும் அமைய நூல் செய்ய வேண்டுமென்னும் உந்துதல் இந்நூலாசிரியருக்கு ஏற்பட்டிருத்தல் வேண்டும் இதனைப் பாயிரந்தெளிவு செய்தலைக் காணலாம்.

வைதிக சகயத்திலும் சமணசமயத்திலும் அகத்தியனார் என்னும் முனிவர் சிறந்த நூலாசிரியராகப் போற்றப்படுகிறார் ஆதலின் அவர்கள் அல்லாத வேறு ஒரு அகத்தியரைப் படைத்து மொழி வழி (இலக்கணநெறி) த்தம் நூலை இயற்றியுள்ளதாக வற்புறுத்துக் கூறுகின்றார். பாலியும் வடமாநில மொழியாகலின் சமற்கிருதத்தையும் பாலியையும் பொதுவாக வடமொழி என்றே குறிப்பிட்டுத் தம் நூலை இயற்றியுள்ளார் எனப் புலனாகின்றது. வடமொழியில் அலங்கார நூல் செய்த 'தண்டி' என்னும் ஆசிரியரைப் பௌத்த சமயத்தவாராக இவர்கருதுகின்றார் அதனான்

"தரைமலி மானிடர் தம் மாலங்காரங்கள் தண்டி சொன்ன
கரைமலி நூலின்படியே உரைப்பன் கனங்குழையே"

என்று கூறுகின்றார், எனவே தம்சமயத்திற்குப் பெருமை சேர்கக வேண்டும் என்னும் கருத்தும் தமிழ் இலக்கண நெறி மரபுகள் வடமொழி இலக்கணத்தினின்றும் மாறுபட்டன வல்ல அங்குள்ளன வெல்லாம் இங்கும் உண்டு என்று காட்டும் முயற்சியும் ஐந்திலக்கணமும் அமைந்ததொரு முழு நூலைச் செய்ய வேண்டும் என்னும் விருப்பமும் சோழ மன்னனின் ஆதரவும் இந்நூலையியற்றியதற்குக் காரணம் என்பது புலனாகின்றது.

நேமிநாதம்

வீரசோழியத்திற்குப் பின்பும் நன்னூலுக்கு முன்புமாகத் தோன்றிய நூல் நேமிநாதம் இஃது எழுத்து- சொல் என்னும் இரண்டே அதிகாரங்களைக் கொண்டு இலக்கணம் கூறுகின்றது. இதற்குச் சின்னூல் என்பதொரு பெயருமுண்டு இந்நூலை இயற்றிய ஆசிரியர் இதனைத் தாம் வழிபடு கடவுளாகிய நேமிநாதர் பெயரால் படைத்துள்ளார். பௌத்த சமயத்தைச் சேர்ந்த புத்தமித்திரர் செய்த வீரசோழியத்துள் எழுத்ததிகாரம் தமிழ் நெறி யொடு பெரிதும் முரண்பட்டும் - சொல்லதிகாரம் முழுதும் வடமொழி மரபைத் தழுவியும் செய்யப்பட்டிருப்பதாகக் கருதித் தொல்காப்பிய வழிச் சொல்லிலக்கணத்தைச் செய்ய வேண்டும் என்னும் விருப்பத்தினால் இவர் இந்நூலைச் செய்திருத்தல் வேண்டுமெனத் தெரிகின்றது.

எனினும் வீரசோழியத்தில் கூறப்படும் பல இலக்கணச் செய்தி களை எழுத்ததிகாரத்தில் இவர் மேற்கொண்டுள்ளார். அவர் போலவே உயிர் எழுத்துக்களை ஆவியென்றும் மெய்யெழுத்துக் களை உடம்பு என்றும் ஆளுகின்றார். எழுத்தின் தொகை உயிர் பன்னிரண்டு மெய் பதினெட்டு ஆய்தம் ஒன்று ஆக முப்பத் தொன்று எனக் கூறுகின்றார். குற்றியலிகரம், குற்றியலுகரங்களைச் சார்பெழுத்தாகக் கூறாமல் முதலெழுத்தின் விகாரங்களாகவே கருதுகின்றார் வடமொழி எதிர் மறை முன்னொட்டாகிய நகரம் பற்றிய விதியை எடுத்துக் கூறுகின்றார். இயல்பிரிப்பின்றி எழுத்ததிகாரம் என்னும் ஒரு தலைப்பிலேயே எழுத்திலக்கணங் களைக் மிகச் சுருக்கமாக கூறி முடிக்கிறார். இனி இந்நூற் செய்திகளை முறையே காண்போம்.

தொடக்கத்தில் தற்சிறப்புப் பாயிரமுறையில் தெய் வணக்கமும் செயப்படு பொருளும் கூறுகின்றார் பின்னர் அவையடக்கம் சொல்கின்றார். அவற்றின்கண் பூவின் மேல் வந்தருளும் புங்கவன்றன் பொற்பாதம் ஏத்தி எழுத்திலக்கணத்தை உரைப்பன் தொகுத்து" என்பனவற்றால் இவர் சமண சமயத்தவர் என்பதும் சுருக்கமாகக் கூறுவது நோக்கம் என்பதும் புலனாகின்றன

அடுத்து

ஆவி அகரமுதல் ஆறிரண்டாம் ஆய்தம் இடை.
மேவும், ககரமுதல் மெய்களாம் - மூவாறும்;
கண்ணும் முறைமை யாற் காட்டிய முப்பத் தொன்றும்
நண்ணுமுதல் வைப்பாகும் நன்கு (சூ-8)

எனத் தமிழ் எழுத்துக்களின் தொகையை வீரசோழியம் கூறிய முறையால் கூறி இம் முப்பத்தொன்றும் 'முதல் வைப்பு' என்கிறார். பின்னர் உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு எனக் கூறுவதால் அதனை இரண்டாம் வைப்பு என்று கொண்டு இவ்வாறு கூறுகின்றார். எனத் தெரிகிறது. ஈண்டு இவர் கூறிய முதல் என்பதனையே நன்னூலவர் முதல் எழுத்து எனக் கொண்டு "உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே" எனக் கூறுகின்றார். நன்னூலார் முதலெழுத்து எனவகை செய்தமைக்கு இஃது அடிப்படை எனத் தெரிகின்றது.

அடுத்து உயிர் நிரலுள் குறில் ஐந்து நெடில் ஏழு என்றும் மெய் பதினெட்டும் வலி, மெலி, இடை என முத்திறப் படுமென்றும் வீரசோழியத்தை ஒட்டிக் கூறுகின்றார்-

இதனை

ஆன்ற உயிர் ஈராறும் ஐங்குறில் ஏழ் நெடி லாம்
ஏன்றமெய் மூவாறும் எண்ணுங்கால் - ஊன்றிய
வன்மையே மென்மை இடைமையாம் வாட்கண்ணாய்
தொன்மை முயற்சியாற் றொக்கு (சூ-4)

என்பதனால் அறியலாம்.

அடுத்து உயிர் உந்துதலான் வெளிப்படும் மெய்யின் நிலையை உயிரும் மெய்யும் கூடிய கூட்டத்தான் பிறக்கும் வேறுவகை எழுத்தாகக் கொண்டு வரிவடிவம் நோக்கி அவை இருநூற்றுப் பதினாறு என்கிறார். வீரசோழிய ஆசிரியர் இவ்வாறு கூறவில்லை. முதன் முதல் இப்பிழையைச் செய்தவர் இவ்வாசிரியரேயாவார்.

இதனை

ஓங்குயிர்கள் ஒற்றின்மேல் ஏறி உயிர்மெய்யாய்
ஆங்கிரு நூற்றொருபத் தாறாகும் -பாங்குடைய
வல்லொற்று மெல்லொற்று வர்க்கம் அளபெடைகள்
சொல்லொற்றி நீட்டத் தொகும். (சூ. 5)

என்கிறார்.

இதன்கண் வீரசோழியத்தைப் பின்பற்றி வல்லெழுத்துக்களும் மெல்லெழுத்துக்களும் தம் முள்வர்க்கம் என்றும் அளபெடைகள் மாத்திரை நீண்டு வரும் என்றும் கூறுகின்றார். அளபெடைகள் என்றதனான் உயிர் அளபெடை ஒற்றளபெடை இரண்டையும் கூறியதாகக் கருதலாம்.

அடுத்துக் குற்றியலுகரம் தொடர்மொழி, நெடில் இவற்றின் பின் வல்லெழுத்தை ஊர்ந்துவரும். யகரத்தின் பின் (இடப்பின்) குற்றியலிகரம் வரும் என்றும் மொழி மூன்றிடத்தும் வரும் ஐ, ஔ இரண்டும் மாத்திரை குறுகும் என்றும், மொழியிறுதியில் நிற்கும் ஒற்றின் மேல் வருமுயிர் ஏறும் என்றும் கூறுகின்றார்

இதனை

தொடர் நெடிற்கீழ் வன்மைமேல் உகரம் யப்பின்(பு)
அடைய வரும் இகரம், அன்றி -மடநல்லாய்
மும்மையிடத்து ஐஔவும் குன்றும், முன் ஒற்றுண்டேல்
செம்மையுயிர் ஏறும் செறிந்து (சூ. 6) என்பதனால் அறியலாம்

இதனான் உயிர்நிலையில் உள்ள உகரமும் இகரமுமே இடச் சார்பினால் குறுகும் என்பது இவர் கருத்தாதல் தெரியலாம். ஔகாரம் தமிழ் மொழியின் இடையிலும் கடையிலும் வராது என்பதைக் கருதவில்லை இவர் வீரசோழியத்தைப் பின்பற்றியே கூறியுள்ளார் என்பது விளங்கும்.

அடுத்து எழுக்களுக்குரிய மாத்திரையளவு (சூ-7) கூறி அடுத்து எழுத்துக்களின் பிறப்பியல்பு பொதுப் படக் கூறுகின்றார். (சூ-8) அடுத்து. மொழிக்கு முதலாம் எழுத்துக்களைக் கூறுகின்றார். மொழிமுதற்கண் கசதநபம வரிசைகளும் (பன்னிரண்டும்) உயிர் வரிசைகளும் வகரவரிசையில் எட்டும் ஞ, ய வரிசைகளில் மும் மூன்றும் மொழி முதலாகும் என்று வீரசோழியத்தை ஒட்டியே கூறிகின்றார் இதனை,

காட்டும் உயிரும் கசதநப மவ் வரியும்
ஈட்டிய வவ்வரியின் எட்டும் - மீட்டு
ஞயவின்கண் மும்மூன்றும் நன்மொழிக்கு முன்னென்று
அயர்விலார் கட்டுரைத்தார் ஆங்கு (சூ-9)

என்பதனால் அறியலாம். அடுத்து மொழியிறுதி நிற்கும் எழுத்துக்கள் கூறுகின்றார் உயிருள் (எ, ஒ ஔ தவிர்ந்த ஒன்பதும் மெல்லெழுத்துக்கள் (ண ன ம) மூன்றும் இடை எழுத்து ஆறும் மொழியிறுதியாக நிற்கும் என்கிறார். இதனை,

உயிரின்கண் ஒன்பான் உடல் மென்மையில் மூன்று
அயர்விலா இடையினங்கள் ஆறும் - நயனுணர்ந்து
நன்மொழிகட்கு ஈற்றெழுத்தாம் என்றுரைப்பர் ஞாலத்துச்
சொன்முடிவு கண்டோர் துணிந்து (சூ-10)

இதுவும் வீரசோழியத்தைப் பின்பற்றியதே எனினும் அவர் வகரமெய் மொழியிறுதியாகப் வாராதென்றார். இவர் வருமென்று கொண்டு இடையினங்கள் ஆறாம் என்று கூறுகின்றார். ஒ ந வரா என்பற்குக் காரணங் கூறவில்லை. அடுத்துப் புணரியல்பு கூறுகின்றார்.

புணரியல்பு கூறுமிடத்து உயிரீற்றின் முன் உயிர்வரின் இ.ஈ.ஐ யின் முன் யகரமும் பிறவற்றின் முன் வரகமும் உடம்புபடுமெய்யாக வரும் என்றும் குற்றுகரத்தின் முன் உயிர்வரின் குற்றுகரம் கெடும் என்றும் முற்றுகரமும் ஒரோ வழிக் கெடும் என்றும் மகர ஈறு ஒரோவிடத்துக் கெட்டு அகர ஈறாக நிற்குமென்றும் குற்றுகரத்தின் பின் வல்லினம் மிகுமென்றும் மெல்லொற்று வல்லெழுற்றாதலும் உண்டு என்றும் கூறுகின்றார். (சூ-15, 16)

அடுத்து உயிர்வரின் குற்றொற்று இரட்டுமென்றும் ணனலள ஈற்றுப்புணர்ச்சி வீரசோழியத்தை ஒட்டியும் கூறுகின்றார் எழுத்துக்களை வரிசை முறையில் அவ்வாறே எண்ணுப் பெயராற் கூறுகின்றார் சிலவிதிகளைத் தொல்காப்பியத்தை ஒட்டியும் கூறியுள்ளார்.

சொல்லதிகாரம்

எழுத்ததிகாரத்தை ஒப்ப ஈண்டும்பாயிரம் கூறித் தொடங்கு கின்றார். சொல்லிலக்கணத்தை விரித்துரைத்த நூல்களிலிருந்து வேண்டுவனவற்றை மட்டும் ஆய்ந்து கூறுவேன் என்கிறார்.

தாதார் மலர்ப் பிண்டித்தத்துவனை வந்தித்துப்
போதார் நறுந் தெரியற் போர் வேட்கண் - பேதாய்
விரித்துரைத்த, நூல்களினும் வேண்டுவன கொண்டு
தெரித்துரைப்பன் சொல்லின் திறம். (சூ-1)

இவ்வதிகாரத்துள் பெரும்பான்மையும் தொல்காப்பியத்தைப் பின்பற்றிக் கூறுவதோடு இயல்களையும் சிறிது பெயர் மாற்றத்துடன் ஒன்பதாகக் கொள்ளுகின்றார். அவை வருமாறு.

தொல்காப்பியம்	நேமிநாதம்
கிளவியாக்கம்	மொழியாக்கம்
வேற்றுமையியல்	வேற்றுமைமரபு
வேற்றுமை மயங்கியல்	உருபுமயங்கியல்
விளிமரபு	விளிமரபு
பெயரியல்	பெயர்மரபு
வினையியல்	வினைமரபு
இடையியல்	இடைச்சொல்மரபு
உரியியல்	உரிச்சொல்மரபு
எச் சவியல்	எச்சமரபு

மொழியாக்கம் :- முதற்கண் சொல்லிலக்கணம்த்துள் கூறப்படும் பொருள் இவை என்கிறார். அவையாவன திணை இரண்டு, பால் ஐந்து எழ் வழு, வேற்றுமை எட்டு. தொகை ஆறு இடம் மூன்று காலம் மூன்று இரண்டிடம் (வழக்கு) என்பவையாம்.

புத்திமித்திரர் திணைப்பாகுபாட்டை மேற்கொள்ளவில்லை பால்பகுப்பிலும் வேறுபட்டுள்ளார். இவர் தமிழ் மரபை ஏற்றுக் கூறுகின்றார். கூறினும் விளக்குமிடத்துத் தமிழ் மரபினின்றும் பிறழ்கிறார் அவை வருமாறு.

மக்கள் நரகரே வானோர் எனும் பொருள்கள்
தொக்க உயர்திணையாம் தூமொழியாய் - மிக்க
உயிருள்ளனவும் உயிரில்லனவும்
செயிரில் அஃறிணையாம் சென்று

ஒருவன் ஒருத்தி பலர் ஒன்றும் பல வென்னும்
மருவியபால் ஐந்தும் வகுப்பின் - பொருவிலா
ஓங்குதிணைப் பால் ஒரு மூன்று ஒழிந்தவை
பாங்கில் அஃறிணைப் பாலாம். என்கிறார்.

பண்பாடு ஒழுக்கம் பகுத்தறிவு என்னும் பொருளுடைய திணை என்னும் சொல்லுக்குச் சாதி இனம் என்னும் பொருளை முதன்முதற் கற்பித்து, மக்களொடு கற்பனைப் பொருளகிய நரகர் வானோர் என்பவரைப் பிறப்பிற்குரிய இனமாகக் கொண்டு அவற்றையும் சேர்த்து முதன் முதல் உயர்திணையாகக் கூறுபவர் இவரே என்பது புலனாகின்றது. ஐம்பாற் குறியீடுகளை விட்டுப் பெயரால் பாற்பகுப்பைச் சுட்டுகின்றார். திணை, பால் பற்றிய நன்னூலார் இலக்கணக் கொள்கைக்கு இந்நேமிநாதமே அடிப்படையாக உள்ளதை அறியலாம்.

அடுத்து ஐம்பாற் சொற்களுக்குரிய விகுதி இடைச் சொற்கள் பற்றிக் கூறுகின்றார். அன் ஆன் அள் ஆள் அர், ஆர் ப. உயர் திணை மூன்றுபாற்கும் து று டு அ ஆ வ. ஆஃறிணை இரண்டுபாற்கும் வினையீறாக வரும் என்கிறார். உயர்திணையுள் மார் ஈறு கூறப்படவில்லை.

அடுத்து பால், திணை, வினா, மரபு, காலம் செப்பு, இடம், சினை முதற்பிறழ்வு உறழ்வு ஆயவை பற்றி வழுவரும் என்கிறார். அடுத்து வழுவமைதி கூறுகின்றார். இவையாவும் தொல்காப்பியத்தை ஒட்டியவை, அவை :-

அன்னானும் அன்னாளும் அர் ஆர்ப ஈறுமாம்
முன்னை உயர்திணைப் பால் மூன்றற்கும் - தம்வினை கொண்டு
ஆய்ந்ததுறுடுவும் அஆவ ஈறுமாம்
ஏய்ந்த அஃறிணைப் பாற்கீங்கு (சூ-5)

பாலே திணையே வினாவே பகர்மரபே
காலமே செப்பே கருதிடமே - போலும்
பிறழ்வும் சினைமுதற்சொல் ஒவ்வாப் பிறழ்சொல்
உறழ்வும் சிதைந்த உரை (சூ-6)

ஓதும் எதிர்வினா உற்றதுரைத்தலும்
ஏதிலுறுவது கூற்றிந்நான்கும் - பேதாய்
மறுத்தலுடன்படுதல் அன்றெனினும் மன்ற
இறுத்தலே போலும் இவை (சூ-7)

ஐயந்திணைபாலிற் றோன்றுமே லவ்விரண்டும்
எய்தும் பொது மொழியா வீண்டுரைக்க -மெய் தெரிந்தால்
அன்மை துணிபொருள்மேல் வைக்க வொரு பேர்பொதுச்சொல்
பன்மைசிறப் பாலுரைக்க பண்பு (சூ-7) என்பனவாம்.

அடுத்து குழு, அடிமை, வேந்து, குழவி, விருந்து முதலிய சொற்கள் உயர்திணைப் பண்பின எனினும் சொல்லால் அஃறிணையே எனவும், எண்ணி முடிக்குமிடத்து இருதிணையும் அஃறிணை முடிபுறும் வியங்கோளில் இருதிணையும் ஒத்துவரும், சொன்ன மொழி தன்னினம் சுட்டியும் வரும் என்று தொல்காப்பியத்தை ஒட்டிச் சுருக்கமாகக் கூறுகின்றார். (சூ-9-10)

அடுத்து உயர்வு இழிவு ஒப்பு, சிறப்புப் பற்றி திணையும் பாலும் மயங்கும் என்றும் வழக்கும் தகுதியும் பற்றிச் சொள்பொருள் குறிப்பாகவரும் என்றும் தொல்காப்பியத்தை ஒட்டிக் கூறுகின்றார். (சூ-11) அடுத்துப் பெயரும் தொழிலும் பற்றிப் பொதுப் பெயரின் திணை பாலறிக என்றும். இனைத் தென அறிந்த சினை முதற் கிளவிக்கு உம்மை தர வேண்டுமென்றும் ஒருவர் என்னும் சொல் ஒருவன் ஒருத்தி என்றும் ஒருபொருள் மேல் பல பெயர்வரின் ஒருவினை கொடுத்தல் வேண்டுமென்றும் பலபொருளொரு சொல் இன்ன முறைமையால் பொருள்தரும் என்றும், சிறப்புப் பெயர் இயற்பெயர்க்கு முன் வரல் வேண்டுமென்றும். இனச் சுட்டில்லாப் பண்பு, கொள் பெயர் பற்றிய மரபு இதுவென்றும் வண்ணச் சினைச் சொல் இவ்வாறு வருமென்றும் தொல்காப்பியத்தை ஒட்டிக் கிளவியாக்கத்துள் கூறுப்படுவன வற்றுள் பலவற்றைச் சுருக்கமாகக் கூறுகின்றார். சிறப்புச் செய்திகள் யாதுமில்லை.

வேற்றுமை மரபு

இவ்வியல் முதற்கண் வேற்றுமை எட்டென்றும் பெயர்ஐ ஒடு கு இன் அது கண் விளி என்பவை உருபும் பெயரும் ஆகும் என்றும் விளிவேற்றுமை தவிர்ந்த உருபுகள் ஏழும் பெயரைச் சார்ந்து வரும் என்கிறார். பெயர் என்னும் எழுவாயுருபே ஏனை உருபுகளை ஏற்கும் என்கிறார். எழுவாய்ப் பெயர் ஈற்றில் ஐமுதலிய ஆறுஉருபும் இணைந்து வருமென்றும் எழுவாய்ப் பெயர் காலந்தோற்றாது என்றும் கூறுகின்றார்.

காண்டகுபேர் ஐ யொடுகு இன் அது கண் விளிஎன்று
ஈண்டுரைப்பின் வேற்றுமை எட்டாகும் - மூண்டவைதாம்
தோற்றும் பெயர் முன்னர் ஏழுந் தொடர்ந்தியலும்
ஏற்ற பொருள் செய் இடத்து (சூ-1)

பெயரெழுவாய் வேற்றுமையாம் பின்பதுதான் ஆறு
பயனிலையும் ஏற்கப்படுதல் - கயல்விழியாய்
ஈற்றின் உருபாறும் ஏற்றல் முக்காலமும்
தோற்றாமல் நிற்றல் துணிவு (சூ-2)

தொல்காப்பியம் எழுவாய் வேற்றுமை பற்றிக் கூறும் இலக்கணத்துள்

எழுவாய் வெளிப்படாமல் நிற்றலும் உண்டு, பலசொற்கள் தொக்க பெயரக வருதல் உண்டு என்னும் இவ்விரண்டைத் தவிர பிற இலக்கணங்களை அப்படியே உட்கொண்டு கூறியிருப்பது பாராட்டத் தக்கதாகும்.

அடுத்து இரண்டாம் வேற்றுமை வினையும் வினைக் குறிப்புமாகிய அடிப்படையில் வரும், மூன்றாம் வேற்றுமை வினை முதலும் கருவியும் பற்றி வருமென்கிறார். இவையும் தொல் காப்பியத்தை அடியொற்றினவே எனினும் தொல்காப்பியம் "வினை முதற்கருவி அனைமுதற்று" என்ற தொடர்க்கு வடமொழியை ஒட்டி விளக்கங் கொண்டு கூறியுள்ளார். வினை முதற்கருவி என்றது வினை செய்தற்கு அடிப்படையாகிய கருவி என்பது பொருள் அத்தொடரை இவர் உம்மைத் தொகையாகக் கொண்டு வினை முதலும் கருவியும் என்று பொருள் கொண்டு விட்டார். பின் வந்த நூலார், உரையாளர் இக்கால அறிஞர் பெருமக்கள் யாவரும் இவ்வாறே பொருள் கொண்டு பயின்றும் பயிற்றியும் வருகின்றனர். பிற தடை விடை விளக்கங்களை எனது தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரையுள் கண்டு கொள்க. இவை பற்றி இவ்வாசிரியர் கூறுமாறு:-

ஐயென் உருபு இரண்டாவது அது வினையும்
எய்தும் குறிப்பும் இயலவரும் - தையலாய்
ஆனொடு மூன்றாவது அதுதான் வினைமுதலும்
ஏனைக் கருவியு மாம் ஈங்கு (சூ-3)

'ஆன்' உருபு ஏதுப் பொருளில் வருமென்று கூறும் தொல்காப்பியத்தை ஒட்டி ஆனொடு மூன்றாவது என்கிறார். அடுத்து நான்கு, ஐந்து ஆறு ஏழு ஆகிய வேற்றுமை இயல்புகளைத் தொல்காப்பியத்தை ஒட்டிச் சுருக்கமாகப் பின்வருமாறு கூறுகின்றார்.

ஓதும் குகர உருபு நான்காவது அஃது
யாதிடத்தும் ஈ பொருளை ஏற்குமாம் - கோதிலா
இன்னுருபு ஐந்தாயது இது இதனின் இத்தன்மைத்து
என்னும் ஒரு நான்கிடத்து. (சூ-4)

அது வென்பது ஆறாம் உருபாம் இதனது
இதுவென் கிழமை இரண்டெய்தும் - விதிமுறையால்
கண்ணென்பது ஏழாம் உருபாகும் காலம்நிலம்
நண்ணும் வினையிடத்து நன்கு. (சூ-5)

3. உருபுமயங்கியல் 4. விளிமரபு

இதன்கண் வேற்றுமைப் பொருள் மயக்கம் பற்றி யாதும் கூறாமல் உருபு மயங்கிவரும் மயக்கமும் உருபுகள் இடைநிற்றல் இறுதிநிற்றல் பற்றியும் உருபு விரிந்தும் மறைந்தும்நிற்கும் என்றும் ஆகு பெயரிலக்கணமும் மிகச்சுருக்கமாகக் கூறுகின்றார். அவ்வாறே விளிவேற்றுமையையும் தொல்காப்பியத்தை ஒட்டிக் கூறுகின்றார்.

5. பெயர்மரபு

முதற்கண் சொல்வகை நான்கு என்று கூறிப் பெயர்கள் உயர்திணைப் பெயர் அஃறிணைப் பெயர் விரவுப் பெயர் என மூவகையாக வருமென்று அவற்றை எடுத்துக் காட்டிப் பொதுப் பெயர்கள் பின்வரும் சிறப்புப் பெயர் சிறப்பு வினைகளால் திணைபால் காட்டுமென்றும் மிகமிகச் சுருக்கமாகக் கூறுகின்றார். சில சொற்களின் திரிபுகளை எடுத்துக் காட்டிக் கூறுகின்றார்.

6. வினைமரபு

வினைச்சொல் காலம் பற்றி மூவகைப்படும் என்றும் இடம் பற்றியும் மூவகைப்படு மென்றும் விகுதிகளை எடுத்துக்காட்டியும் விகுதிகள் ஒருமை பன்மை காட்டும் என அவற்றை எடுத்துக் காட்டியும் வினை எச்சங்களின் வாய்பாடுகளையும் பெயரெச்சப் பொருளையும் எடுத்துக் காட்டித் தெரிநிலை வினைகளைச் சுருக்கமாகக் கூறிச் சில குறிப்பு வினையையும் கூறி முடிக்கிறார். விகுதி சில திரியுமென்பதையும் கூறி முடிக்கின்றார்.

7. இடைச் சொல் மரபு. 8. உரிச் சொல்மரபு

இவற்றையும் தொல்காப்பியத்தை ஒட்டி மிகச் சுருக்கமாகக் கூறுகின்றார் உரிச்சொல்லின் பொது விலக்கணத்தை

> ஒண்பேர் வினையொடுந் தோன்றி உரிச்சொல் இசை
> பண்பு குறிப்பாற் பரந்தியலும் - எண்சேர்
> பலசொல் ஒரு பொருட் கேற்றும் ஒரு சொற்றான்
> பலபொருட் கேற்குமாம் பட்டு (சூ - 1)

எனத் தொல்காப்பிய மரபு பிறழாமற் கூறுகின்றார்.

9. எச்சமரபு

இதன்கண் வேற்றுமைத் தொகை முதலிய ஆறு தொகைமொழி இலக்கணமும் - செய்யும் என்னும் வாய்பாட்டுச் சொல்லின் திரிபுகளும் முன்னத்தின் உணரும் கிளவி பற்றியும் கூறிப்பின் செயப்படு பொருளைச் செய்தது போலக் கூறும் மரபும் கூறிச் செய்யுள் விகாரங்களும் பொருள் கோளும். சொற்கள் தெரிபு வேறு நிலையிலும் குறிப்பிற்றோன்றலுமாய் பொருள் உணர்த்தும் என்றும் கூறுகின்றார். வினையுள் காலம் மயங்கிவரும் நிலை பற்றியும் மிகமிகச் சுருக்கமாகக் கூறுகின்றார் பத்து வகை எச்சம் பற்றியாதும் கூறவில்லை. இறுதியாகத்

தொல்காப்பியக்கடலில் சொற்றீபச் சுற்றளக்கப்
பல்காற் கொண்டோடும் படவென்ப - பல்கோட்டுக்
கோமிகா மற்புலனை வெல்லுங் குணவீர
நேமிநா தத்தின்நெறி (சூ-12) எனமுடிக்கின்றார்.

நன்னூல்

கங்கநாட்டரசன் சீயகங்கன் வேண்டுகோளை ஏற்றுத் தமிழ் இலக்கணநெறி முறை மரபுகளை ஆராய்ந்து தொகை வகை விரியாக ஒரு நூலைச் செய்தற்குப் பதின் மூன்றாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் சோழ நாட்டில் வந்து இந்நூலைச் செய்தவர் சமணசமயப் பெரியார் பவணந்தி முனிவர். இதனைத் தொல்காப்பியத்தின் வழி நூலாகக் கருதுவார் பலர். இது சார்புநூலே என்பது தொல்காப்பிய நெறியினின்றும் இவர் கூறும் இலக்கணநெறி முறைகள் பலவேறுபட்டிருத்தலால் அறியலாம். சில இடங்களில் இவர் இலக்கணக் கொள்கைகள் வீரசோழியத்தையும், நேமிநாதத்தையும் ஒட்டி அமைந்துள்ளமை இதற்குச் சான்றாகும்.

உயிர் எழுத்துக்களை ஆவி என்றும் மெய்யெழுக்களை உடம்பு என்றும், குற்றியலுகரம் குற்றிய லிகரங்களை உயிர்க் குற்றெழுத் துக்களின் விகாரம் என்றும் கூறுவது வீரசோழியத்தை ஒட்டியும் உயிர் மெய் வரிவடிவங்களைத் தனி எழுத்தாக எண்ணி உயிர் மெய் இருநூற்றுப்பதினாறு என்று கூறுவதும் எகர ஒகரங்கள் புள்ளி பெறும் என்பதும் பதவியலுள் வடமொழியாக்கங் கூறுவதும் நேமிநாதத்தை ஒட்டியும் அமைந்திருப்பதைக் காணலாம்.

வேற்றுமை உருபுகளே வேற்றுமைகளைச் செய்யும் என்பது வீரசோழியமும் வடமொழியும் கொண்ட கொள்கையாகும். அவற்றை இவர் பின்பற்றியுள்ளமையும் திணை விளக்கம் நேமி நாதத்தை ஒட்டி அமைந்திருக்கின்றமையும் நன்னூல் தொல்காப்பியத் தின் வழி நூலன்று என்பதை விளக்கும்.

தனிமொழி பற்றிய பத விலக்கணத்தை வடமொழியை ஒட்டித் தொடங்கி வைத்தவர் புத்தமித்திரனாரே யாவர். அவர் வடமொழியை ஒட்டிச் சொல் முதனிலைகளைப் பிராதிபதிகம் என்றும தாது வென்றும் வகுத்து இறுதி நிலைச் சொற்கள் (அந்தங்கள்) பால் இடம் எண் காலம் வேற்றுமை முதலிய யாவற்றையும் காட்டும் என்றும் கூறிச் சொற்களை இரண்டாக வெட்டி இலக்கணம் கூறினார். அது தமிழ் நெறிக்கு எவ்வாற்றானும் பொருந்தாமை கண்டு பத இலக்கணத்தைச் செம்மைப்படுத்திப் பகாப்பதம் பகுபதம் எனப் பிரித்துப் பகுபதம், பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்திவிகாரம் என அறுவகைநிலையில் அமைந்து முற்றிநிற்கும் என விளக்கிய பெருமை நன்னூலாசிரியர்க்குரியதாகும்.

மற்றும் பல்வேறு குறைபாடுகள் இருப்பினும் தொல்காப்பியர் கூறும் இலக்கணச் செய்திகளை மிகமிகச் சுருக்கமாகச் செறிவான நூற்பாக்களால் கூறியுள்ளமை இவர் நூல் நிலவுதற்குக் காரணமாகும். இனி இந்நூல் தமிழ் மரபினின்றும் பிறழ்ந்து மடைமாறிய நிலைகளைக் காண்போம்.

தமிழில் தொன்மையானதும் முழுமை யானதுமாகிய நூல் தொல்காப்பியம், அதன்பின்னர் எழுந்த பன்னிருபடலம் அவிநயம் காக்கைபாடினியம் முதலியநூல்கள் மறைந்தன. இறையனார் களவியல் மிகச் சுருங்கிய பிழை மலிந்த தொருநூல் பின்னர் வீர சோழியம் யாப்பு அணி இரண்டையும் சேர்த்துச் செய்யப்பட்ட தொரு முழுநூல் எனினும் தமிழ் நெறி மரபிற் பிறழ்ந்ததாகும். பிற்காலத்து எழுந்த இலக்கண விளக்கம் மேற்கூறிய நூல்களொடு நன்னூலையும், யாப்பருங் கலத்தையும் கலந்து பாடஞ் சொல்லும் முறையில் எழுதப் பெற்ற நூலாகும். இலக்கணக் கொத்து பிரயோகவிவேகம் வடமொழியின்றித் தமிழ் இலக்கணநூல்கள் இல்லை என்னும் கருத்தை வலியுறுத்த எழுந்த துணுக்கு நூல்களாகும். தொன்னூல் அவர் தம் சமய நோக்கில் எழுதப் பெற்றதாகும். முத்து வீரியம் புதிய செய்திகள் ஒன்றும் கூறாமையோடு பழைய நெறிகளையும் நன்குணர்த்தாத ஒரு நூல்.

தொல்காப்பியம் தவிர்ந்த வையாவும் வடமொழி இலக்கணங் களையும், தொல்காப்பியத்தையும் அவரவர்காலம் வரைத் தோன்றியிருந்த இலக்கியங்களையும் அடிப்படையாகக் கொண்டு அவரவர் பயின்றுணர்ந்த அளவில் செய்யப் பெற்றனவாக உள.

மொழி ஆக்கம் பெறும் சூழலையும் பேச்சுவழக்கு இலக்கிய வழக்கும் ஆகிய வழக்கினையும் வினாவும் செப்புமாக மொழி வெளிப்படும் நிலைப்பாடுகளையும் நோக்காமல் முன்னைய நூல்களிற் கூறப்பெற்றனவற்றுள் சிலவற்றைக் குறைத்தும், மாற்றியும் தாம் விரும்பியவற்றைக் கூட்டியும் செய்யப் பெற்றனவாகும். அங்ஙனம் செயற்கை முறையில் செய்யப்பட்டமையின் அவை மடைமாறிவிட்டன. அம்மடைமாற்றம் தமிழர்தம் தன்னுரிமை உணர்வினை அழித்து அடிமைத்தனத்தில் வேட்கையுடையவராக மாற்றிவிட்டது. இயற்கையும் செயற்கையும் பற்றிய தொரு சிறு விளக்கத்துடன் நன்னூலின் மடைமாற்றம் பற்றிய நிலையினைக் காண்போம்.

ஓர் அழகிய மாளிகை சிற்ப வேலைப்பாடமைந்த முகவாயில், அமைந்த மதில் சுற்றிலும் அழகாக அமைக்கப் பெற்ற பூங்கா அழகிய முகவாயில் உட்புறம் ஒரு பெரிய கூடம் நடுவே சிறிய தொருமேடை அதன்மேல் நெட்டியாலும், காகிதங்களாலும் புனையப் பெற்ற பூத்தொட்டிகள். சுவர்களில் வண்ண ஓவியங்கள் ஒருபக்கம் அழகிய கலைக்கூடம் மலர்வனம், மலர் வனத்தில் - மான், முயல், மயில் பறவைகள் முதலாயவை வரையப்பட்டுள்ளன.

கண்கவரும் காட்சிகள் அமைந்த இம்மாளிகையைக் கண்டு சென்ற புலவன் ஒருவன் அதன் வனப்பினை நண்பனிடம் விளம்புகிறான். தான் கண்ட பொருள்களும் மதிலுக்குள் அமைந்துள்ள பூங்காவும் ஆண்டுத் திரியும் மான், மரை, நாய், பறவைகள் மட்டுமே உயிர்ப் பொருள்கள் இயற்கையானவை. கட்டிடம் முதலிய பிறயாவும் உயிரில்லாத செயற்கைப் பொருள்கள் கட்டிடம் உண்மைப் பொருள் மேடை மேல் அமைந்துள்ள பூந்தொட்டிகளும் சுவரில் வரையப்பட்டுள்ள ஓவியங்களும் காட்சிக்குரிய போலிப் பொருள்கள்.

அவற்றுள் புலவன் தான் கண்ட செயற்கைப் பொருள்களைக் கூறுங்கால் அவற்றின் புறத் தோற்றங்கள் மட்டுமே அவன் சிந்தையினின்று உரையாக வெளிவரும். இயற்கைப் பொருள்களைக் கூறுமிடத்து சிந்தையாலும் நெஞ்சாலும் தான் கண்டவற்றை உணர்ந்தவற்றை மெய்ப்பாடு தோன்றப் புனைந்துரைப்பான் அவ்வுரையுள் அவன் துய்த்த சுவையுணர்வு வெளிப்படும் ஒரு குழந்தையின் படத்தைப் பார்ப்பதற்கும் நேரே பார்பதற்கும் வேறுபாடுண்டு நிற்படம் கண்களைத் தொடும் குழந்தை உணர்வைத் தொடும்.

தொடக்கநிலை மாணவச் சிறார்கட்கு ஒரு பொருளைக் கற்பிக்கும் ஆசிரியர் இருமுறைகளை மேற்கொள்வான் யானை இது என்று படத்தைக்காட்டிக் கற்பிப்பது ஒருமுறை அதை நேரிற் காட்டிக் கற்பிப்பது ஒருமுறை யானையைப் படத்திற்காணும் மாணவன் அதன் புறத் தோற்றத்தில் ஒரு பகுதியை மட்டுமே காண்பான் வியப்போ அச்சமோ அறிவுக் கிளர்ச்சியோ தோன்றா. நேரிற் காணுமிடத்து அதன் முப்பரி மாணங்களைகியும் இயக்கத்தையும் மெயப்பாட்டுணர்வு பொங்கக் காண்பான்.

உருவப் பொருளையும் அருஉருவப் பொருளையும் மக்களின் ஐம்பொறிவாயிலாகப் புலப்படுத்தலாம். அருவப்பொருளை மனப் பொறிவாயிலாக மட்டுமே உணர்த்த இயலும் பருப் பொருளை அதற்கே உரியே சிறப்புறுப்புக்களைக் கொண்டு அறியச் செய்யலாம். நுண் பொருளை அதற்குரிய சிறப்பியல்புகளைச் சுட்டி மட்டுமே தெரிவிக்க இயலும்.

கொம்பும் அலைதாடியும் உடையதுமாடு, முறம் போன்ற செவியும் துதிக்கையும் உடையது யானை, விரிந்து சுருங்கும் நீண்ட தோகையையுடையது ஆண் மயில் என்று இலக்கணம் கூறலாம். உள்ளதும் நிகழ்ந்ததும் பற்றிக் கூறுவது உண்மையுரை இல்லதும் நிகழாததும் பற்றிக் கூறுவது பொய்யுரை என்றும் மனமொழி மெய்களான் மாசின்றி ஒழுகுவது அறம், என்றும் ஒருவரது நெறியான

உயர்ச்சி கண்டு புழுங்குவது அழுக்காறு என்றும் இலக்கணம் கூறலாம். ஒரு பொருளை அதன் வடிவம், குணம் செயல், தன்மை பயன்பாடு ஆயவற்றைத் திரிபுபடாமல் வரையறுத்துக் கூறுவதை இலக்கணம் என்பர்.

அம் முறையில் மக்களால் பேசவும் கேட்கவும், எழுதவும் பார்க்கவும் பெறும் மொழியினது இயல்பு பற்றியும் அவற்றான் படைக்கப்பெறும் இலக்கியம் பற்றியும் அளவை முறையான் ஆராய்ந்த தெரிந்து வரையப் படுவதே மொழியிலக்கணமாகும்.

மொழியென்பது மக்களால் ஆக்கம் பெற்று வாயுறுப்புக்களால் பிறர் செவிக் குப்புலனாக இசைக்கப்படுதலான் உருவும் செவியினும் மனத்தானுமன்றிப் பிறபொறிகளான் அறியப்படாமையின் அருவுமாகத் திகழ்தலான் அஃதோர் அரு உருவப் பொருளாகும், மேலும் மக்களான் ஆக்கம் பெறுதலின் செயற்கைப் பொருளாயும் ஒருகாலத்துப் படைக்கப் பெற்றதை அப்படியே மேற்கொள்ளுதலான் இயற்கையாயும் அமைந்துள்ளது.

அன்பு அருள், அழுக்காறு, என்றாற்போல மொழி அருவப் பொருளாகாமல் நீர் ஒளி, காற்றைப் போல் அருவுருவப் பொருளாக உள்ளமையான் பருப்பொருள்களை ஓவிய வடிவாற் கண் காண வரைந்து காட்டுதல் போல வரிவடிவம் செய்து கட்புலனால் உணர்தற்கும் உரியதாக அமைந்துள்ளது. பருப்பொருள்களின் காட்சி யாவர்க்கும் ஒரே நிலையில் அமைதலின் அவற்றை வரிவடிவம் செய்யுமிடத்து யாவரும் ஒரு திறனாகவே வரைந்து காணுகின்றனர். மொழி பேசுமிடத்து அருவப் பொருளாகலின் ஒவ்வொரு மொழியினரும் ஒவ்வொரு முறையில் எழுத்து வரிவடிவம் செய்து காணுகின்றனர். வரிவடிவம் வேறுபடினும் ஒலிவடிவம் வேறுபடா. பரம்பொருள் ஒன்றே சமயங்கள் தோறும் வேறுபடுதல் போல வரிவடிவும் ஒலிவடிவும் திகழும்.

மொழி என்பது இருதிணைப் பொருள்களையும் அவற்றின் செயல்களையும், தன்மைகளையும் தம் உணர்வொடு கூட்டி உணர்வதற்கும் உணர்த்தற்கும் உரியதோர் அரியகருவியாகும். மற்று இதன் சிறப்பு மொழியாகிய தன்னைப் பாகுபட அறிவித்தற்கும் அதுவே கருவியாக உள்ளமையாகும். இதனைத் தொல்காப்பியம்.

"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிருதிணையின் இசைக்கு மன சொல்லே" என்றும்

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்றும்
"சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்" என்றும் புலப்படுத்தும் எண்ணங்களையும் அவற்றின் நிலைமைகளையும் உணர்த்தும் அதே சமயத்தில் சொல்லும் சொற்றொடருமாக நிற்கும் தன் இயல்புகளையும் உணர்தற்குரியதாக

நிற்கும் உதாரணமாக;

"கண்ணன் வெண்ணெயை உண்டான்" என ஒருவன் செப்புமிடத்து அத்தொடர் பொருள் நோக்கில், பலருள் கண்ணன் என்னும் ஒருவன் வெண்ணெய் என்றும் பொருளை உண்டு முடித்தான் என உணர உதவும். இது பொருள் உணர்வுதருதல். சொல்லிலக்கண நோக்கில் கண்ணன் என்றும் ஒருவினைமுதல் உண்டான் என்னும் முற்று வினையொடு முடிந்தது. இது செயப்படு பொருள் குன்றாவினை வெண்ணெய் செயப்படு பொருள் இரண்டாம் வேற்றுமை ஐ உருபு : என அறியுமிடத்து இது சொல்லுணர்வு தரும். சொற்பாகு பாட்டிலக்கண நோக்கில் கண்ணன் என்னும் சினையடியாகப் பிறந்ததொரு விரவுப் பெயர் உண்டான் என்றும் உயர்திணை வினையொடு முடிந்துள்ளமையின் அஃது உயர்திணை ஆடூஉ படர்க்கைப் பெயராகிறது. உண்டான் என்பது டகர இடைநிலையும் உயர்திணை ஆடூஉ ஒருமை விகுதியும் பெற்று இறந்தகாலப் படர்க்கை உயர்திணைத் தெரிநிலை வினை முற்றாக நின்றது. உண்ணுதல் வினைக்கு வெண்ணெய் செயப்படு பொருளாக அமைந்தது. இரண்டாம் உருபு விரிந்து நின்றது. என உணரப்படும் இனிக் கண் என்பது குறிற் கீழ் ஒன்றாதலின் உயிர் முதலாகிய அன் விகுதி வர இரட்டித்துக் கண்ணன் எனப்புணர்ந்து நின்றது. உண் என்னும் தொழில் முதனிலைச் சொல் டகர ஒற்றிடை நிலைபெற்று ஆன் விகுதி யொடு புணர்ந்து உண்டான் என நின்றது. வெண்ணெய் என்னும் யகர ஒற்றிறுதி ஐகார உருபினை ஏற்று வெண்ணெயை என நின்றது என உணர்வது. எழுத்திலக்கண உணர்வாகும். மற்று வெள் + நெய் என்னும் இரு சொற்கள் பண்புத் தொகையாகி ஒரு சொல் நீர்மைத் தாய்ப்புணர்ந்து நின்றது. ளகரத்தின் முன் நகரம் மயங்காதகலின் ளகரம் ணகரமாகத்திரிய நகரமும் ணகரமாகத்திரிந்து வெண்ணெய் என நின்றது. என்பது சொல்லாய்வு நோக்கு இவ்விலக்கணமெல்லாம் கண்ணன் வெண்ணெயை உண்டான் என்றும் பொருள் நிகழ் வின்றேல் இல்லையாம். எனவே பொருள் நோக்கின்றிச் சொல் நோக்கு நிகழாதென்பது விளங்கும்.

மொழி என்பது பொருளையும் அதன்நிகழ்வினையும் இடமாகக் கொண்டு தோன்றுவதாகலின் பொருள் நோக்கே அடிப்படையாகும். கருத்தினைப் புலப்படுத்தாவிடின் ஒலிவடிவம் பேச்சாகாது. ஒலிவடிவம் இன்றேல் வரிவடிவம் இல்லை. எனவே சொற்களும் சொற்றொடர்களும் கருத்துக்களை அடிப்படையாக மூலமாகக் கொண்டவை என்பது விளங்கும் அதனானன்றே வெண்ணெயை உண்டவன்யார் எனவினாவுமிடத்துக் கண்ணன் என்னும் ஒரு சொல் வாக்கியமாக விடையாகத் தொடர்மொழிப் பொருள் தருகின்றது. உண்டான் என்பதும் அவ்வாறே தொடர்ப்பொருள் உணர்த்து கின்றது.

மொழி இலக்கணநூல் செய்யப்புகும் ஓர் ஆசிரியன் நிகழ்கால மக்களின் வாழ்க்கையும் சிந்தனையும் அவை பற்றி அவர்கள் வாயாற் பேசும் மொழியமைப்பினையும், மொழி நடையையும் அம்மொழி நடை வெளிப் படையாயும் குறிப்பாயும் பொருள் தரும் பாங்கினையும் கூர்ந்து நோக்கி அவற்றை இலக்கண அளவைகளான் ஆராய்ந்து முறையாகச் சிந்தையில் அமைத்துக்

கொண்டு கடந்த கால இலக்கிய இலக்கணங்களைக்கற்றுணர்ந்து யாவும் எதிர்காலத்தில் எவ்வாறு வழங்கப் பெறுதல் வேண்டும் என எண்ணி முக்காலத்திற்கும் ஏற்ப முரணாத லின்றிச் செய்தல் வேண்டும் இது நேர்வகை

நிகழ்காலப் பார்வையும் எதிர்கால நோக்குமின்றிக் கடந்தகாலத் தினும் நிகழ்காலத்தினும் எழுதப் பெற்றுப் படிக்கப் பெறும் இலக்கிய இலக்கணச் சுவடிகளைக் கற்றுத் தான் விரும்பும் மாற்றங்களையும், தனது கோட்பாடுகளையும் குறிக்கோளையும் சேர்த்து முன்னோர் நூல்களின் ஆழத்தை நன்குணராமற் சிலவற்றை நீக்கிப் புதியவை எனத்தான் கருதுவனவற்றைச் சேர்த்து வெள்ளறிவாளர்க்கு விளக்கமாகும் வகையில் நூல் செய்தல் குறுக்குவகை.

இவற்றுள் நேர்வகை நூல் செய்யும் ஆசிரியர் பொருளை நேர்முகமாக் காட்டி அதன் இயல்புகளைக் கற்பிக்கும் ஆசிரினைய ஒப்பான் குறுக்கு வகை ஆசிரியன் ஓவியங்களைக் காட்டிக் கற்பிக்கும் கணக்காயனை ஒப்பான்.

இனி எல்லாப் பொருள்களையும் நேரே காட்டிக் கற்பிக்க இயலாவாகலின் அவற்றை முன்னோர் காட்டிய வழியினின்று கற்பித்தல் கடப் பாடாகும். தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள் என முப்பாலாக அமைந்துள்ளது. இடைக்காலத்திற் பொருளுணர்த்தும் கருவியாகிய மெய்பாடுவமங்களை அணி என்னும் பிரிவாகவும் அமைக்குங் கருவியாகிய யாப்பினை ஒரு பிரிவாகவும் கூறு செய்து தமிழிலக்கணத்தை ஐம்பாலாக விரித்தனர். இடைக்காலத்தில் சோதிடத்தையும் வருணக் கோட்பாட்டினையும் சார்த்திப்பாட்டியல் என்பதொரு இலக்கண வகையைத் தோற்றுவித்தனர் இற்றைக்கு அது வழக்கிறந்தது.

இற்றைக்கு வழக்கிலுள்ள இலக்கணநூல்களுள் பொருளையும், அவற்றின் நிகழ்வுகளையும் மக்கள் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டமைந்த நூல் தொல்காப்பியம் மட்டுமேயாம். மற்றவையாவும் எழுதப் பெற்றுள்ள இலக்கியங் களையும் இலக்கணநூல்களையும் கொண்டு செய்யப் பெற்றவை யேயாம். இனி, தொல்காப்பியத்தை அடியொற்றிச் செய்யப்பட வழிநூலாகக் கருதிப்பயிற்றுவிக்கப் பெற்று வரும் நன்னூலை இலக்கண நெறி முறைகளை ஒட்டிக் காண்போம்.

தொல்காப்பியம் இயற்றப் பெற்றதன் நோக்கத்தையும் முறைமையையும் அதற்குப் பாயிரம் வரைந்த ஆசிரியர் பனம்பாரனார்,

"வடவேங்கடந் தென்குமரி, ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிருமுதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலைத்தொடு
முந்த நூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொருத் தோன்"

என்று கூறுதலான் தொல்காப்பியர் நிகழ்காலத்து வாழும் மக்களின் பேச்சு வழக்கையும் செய்யுள் வழக்கையும் அடிப்படையாகக் கொண்டு நூலமைப்பு

முறைக்கு மட்டும் முந்து நூல்களைப் பார்த்து முறைப்பட இயற்றியுள்ளார் என்பது விளங்குகிறது.

இனிநன்னூல் எழுதப் பெற்ற முறையையும் நோக்கத்தையும் பற்றி அந்நூலின் சிறப்புப் பாயிர ஆசிரியர்,

குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனும் நான் கெல்லையின் இருந்தமிழ்க் கடலுள்
அரும்பொருளைந்தையும் யாவரும் உணரத்
தொகை வகை விரியிற்றரு கென. . . . . . .
திருந்திய செங்கோல் சீயகங்கன்
மொழிந்தனனாக; முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்
பொன் மதிற் சனகைச் சன்மதி முனியுருள்,
பன்னரும் சிறப்பின் பவணந்தி
என்னும் நாமத் திருந்த வத் தோனே"

என்று கூறுதலான் முன்னோர் நூல்களை அடிப்படையாகக் கொண்டு தொகை வகை விரியாக ஒரு சார்பு நூலாகத் தன்னூலைப் பவணந்தியார் செய்துள்ளார் என்பது விளங்குகின்றது.

தொல்காப்பியம் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இலக்கணங் கூறுகிறது. நன்னூல் எழுதப்பட்ட வரிவடிவச் சொற்றொடர்களை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டது என்பது தொல்காப்பியம் ஒலிவடிவ அடிப்படையில் தமிழ் எழுத்துக்கள் முப்பத்து மூன்றே எனக்கூறுகின்றது. நன்னூல் வரிவடிவங்களையும் எழுத்துக்கள் நிற்கும் இடங்களையும் எண்ணி முதலெழுத்து முப்பது சார்பெழுத்துப் பத்து, சார்பெழுத்து விரி முந்நூற்றறுபத்தொன்பது என்கின்றது. ஒலி வடிவையும் வரிவடையும் சேர்த்துக் குழப்புகின்றது.

இனி, தொல்காப்பியம் சில இடங்களில் சொல்வடிவங்களைச் சுட்டிஇலக்கணம் செய்துள்ளது போலவும்- நன்னூல் பொருள் வடிவங்களையும் சுட்டிஇலக்கணம் செய்துள்ளது போலவும் தோன்றும். ஊன்றி நோக்கின் தொல்காப்பியம் யாண்டும் பொருள் வடிவம் பற்றியே கூறுகின்ற தென்பதையும் நன்னூல் சொல் வரி வடிவங்களை நோக்கியே கூறுகின்றது என்பதையும் தெளியலாம் எடுத்துக் காட்டாக ஒரிரு இடங்களைப் பார்ப்போம் தொல்காப்பியம்

"ஆய்தம் என்ற முப்பாற்புள்ளியும் எழுத்தோரன்ன"
"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்"
"உட்பெறு புள்ளி உருவாகும் மே"
அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்
ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே"
செய்து செய்பு செய்யூ------அவ்வகை ஒன்பதும் வினை எஞ்சு

கிவவி என்றாற் போல்பவை வரிவடிவம் நோக்கிக் கூறிய து போலத் தோன்றும் இவையும் பொருள் நோக்கில் அமைந்தனவேயாம்

"முப்பாற்புள்ளி என்பது" வடிவம் பற்றியதன்று ஓசை பற்றியது ஆய்தம் அ இ உ என்னும் அடிப்படை உயிரிசைகளின் கூறாகப் பின் முன் அமையும் எழுத்தொலிகளுக் கேற்ப ஓசை பெறும் சார்பெழுத்து என்பது இதன் பொருள் அஃதாவது அஃகம், எஃகம், அஃகி யகன்ற, பஃறி, எஃகு, கஃசு என்னும் சொற்களில் ஆய்தம் அஃகம் என்பதில் அகர ஓசையும் பஃறி என்பதில் இகர ஓசையும், எஃகு என்பதில் உகர ஓசையும் சார்பினாற் பெற்று நிற்பதைக் காணலாம். முப்பால் = மூவகை. புள்ளி = ஒலி முப்பாற்புள்ளி = முத்திற ஓசை ஆய்த ஓசையின் ஒலி வடிவை நோக்கி உணராமையான் உரையாசிரியன்மார் வரிவடிவை நோக்கி அடுப்புக் கூட்டுப் போல மூன்று புள்ளி வரிவடிவ முடைய எழுத்தென்று கூறிச் சென்றனர் ஒலி முந்தியதா? வரிவடிவம் முந்தியதா. ஒலி வடிவைச்சுட்டும் அடையாளந்தானே வரிவடிவம்?

அவ்வாறே மெய் எழுத்துக்கள் வாயுறுப்பி னிடமாக வடிவு கொள்ளும் ஒலித்து வெளிப்படாது உயிர்ப்பிசையின்றி மெய் தனியே ஒலியாது. மெய் உயிரின் துணையால் இயங்குமிடத்து அரை மாத்திரையளவு ஒலிபெறும். அது அல் என உயிருக்கும் பின்னோ அல்லது ல்+அ = ல என உயிரோடு கூடியோ இசைத்துச் செவிப்புலனாகும் ல்+அ = ல வருமிடத்து உயிர்க்கும் மெய்யாகி விடும் அல் என வருமிடத்து உயிர்க்குப் பின் வந்து ஒலிக்கும் இது இயங்கும் நிலை. இந்நிலையில் தான் அரைமாத்திரை ஒலிக்கும் என்பதனால் ஒலி நூற்புலமை சான்ற தொல்காப்பியர் மெய்யின் இயற்கை (இயக்கம்) புலர்ளியொடு நிலையும் என்றார். ஒடு கருவிப் பொருட்டு இதனை உணராத உரையாசிரியன்மார் வரிவடிவில் எழுத்தின் மேல் வரியாகக் கருதி வரிவடிவ இலக்கணமாக மயங்கிக் கூறினார். பவணந்தி உரையாசிரியர் வழி நின்றார். "உட்பெறுபுள்ளி" என்பதும் ஒலி வடிவிற்குரிய இலக்கணமே. இதன் விளக்கத்தை எனது தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகை யுரையுள் கண்டு தெளிக.

அவ்வாறே அன் ஆன் அள் ஆள் என்பவை அவற்றின் முழுமையான சொல்வடிவங்களை உணர்த்தி நிற்பனவாம் அஃதாவது ன ஃ கான் ஒற்றே ஆடூவறி சொல், ளஃகான் ஒற்றே மகடூஉ வறி சொல் எனக்கிளவியாக்கத்திற் கூறிய னள என்பவை அன் ஆன் அள் ஆள் என்பவற்றின் குறியீடுகள். ஆண் மகனை அறிவிக்கும் சொல்லில் னகரம் பெண்மகளை அறிவிக்கும் சொல்லில் ளகரமும் வரும் அவை வினை முற்றில் வருமிடத்துப் பால் காட்டும் எனப் பொருளடிப் படையில் கூறுகின்றார். இங்ஙனம் விளக்கமால் விட்டிருப்பின், ஒலியன், தனியன், கரையான், கலுழன் பேன், மீன் என்பவை எல்லாம் ஆடூஉ அறி சொல்லாக மயங்க நேரிடும்.

அவ்வாறே செய்து முதலிய வாய்பாடுகள் பொருளடிப் படையில் ஓதிய முற்று வினைகள் ஒருவினை முதலின் வினையாகப் பலமுற்றுக்கள் வரின் அவற்றுள் ஒன்றனை முற்று வாய்பாட்டில் கொண்டு ஏனைய வற்றைக் குறைத்து விடலாம் குறைக்குமிடத்து அவற்றின் வடிவம் இவ்வாறமையும் என்கின்றார்.

பவணந்தியார் "இடுகுறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின" என்று

கூறியுள்ளது பொருளடிப்படையில் கூறியுள்ளது போலத் தோன்றும் அதும் வரிவடிவச் சொல்லடிப்படையில் கூறப்பட்ட விதியேயாகும். இதன் பொருள் பெயர் சொற்கள் இடுகுறி, காரணம் என்னும் இருவகையுள் அடங்கும். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொன்றற்கே சிறப்பாகவும் சிலவற்றிற்குப் பொதுவாகவும் வரும் என்பதாகும். உ.ம்:- இடு குறிப்பொது மரம், இடுகுறிச் சிறப்பு பனை (மரம்) காரணப் பொது அணி, காரணச் சிறப்பு, முடி (கிரீடம்) இச்சூத்திரத்திற்கு மற்றொரு பொருள் பெயர்கள் இடு குறிக்கே சிறப்பாகவும் காரணத்திற்கே சிறப்பாகவும் வரும். காரணம் இடுகுறி இரண்டற்கும் பொதுவாகவும் வரும் என்பதாகும். உ-ம்:- இடுகுறிச் சிறப்பு : பரம் காரணச் சிறப்பு. பரமன், பொது அந்தணன் (சாதிப் பெயர்) இவற்றை ஆராய்வோம். ஏரணநூல் விதிப்படி எந்த ஒரு காரியமும் காரணமின்றித் தோன்றாது. சிலவற்றிற்குக் காரணம் வெளிப்படையாகத் தெரியும் சிலவற்றிற்குத் தெரியாது. ஆராய்ந்தாற் காரணம் புலப்படும். தொல்காப்பியம் இடு குறி என்பதொரு வகை கூறவில்லை. அது தமிழ் மரபு மன்று அறிவியல் நெறியுமன்று. வடமொழி மரபு. தொல்காப்பியம் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்றும் மொழிப் பொருள் காரணம் விழிப்பத் தோன்றா என்றும் கூறுகின்றது. நன்னூல் உரையாசிரியன்மார். மரம் இடுகுறிப் பெயர் என்பர். மரம் என்பது எவ்வாறு இடுகுறியாகும். மரு என்பது மணத்தைக் குறிக்கும் அம் உடைமைத் தன்மை குறிக்கும் விகுதி மரஞ்செடி கொடிகள் ஒவ்வொன்றும் வேறு நாற்றம் (மணம்) உடையவை. மற்றும் பறவைகளும் விலங்குகளும் மருவி வாழும் இடம் என்பது இரண்டாவது காரணம் தொடக்க காலமக்கள் மரத்தை அண்டி உறைந்தமையின் இன்றும் மக்கள் தன்மை இல்லாதாரைக் காட்டு மராண்டி என்று வழங்குவதைக் காணலாம். அவ்வாறே பனை என்பதும் விரிந்த மட்டை (பன்னம் = இதழ் - மட்டை) யை உடையது என்பது பொருள்.

அடுத்துப் பரம் என்பது இடுகுறியாகுமா - எங்கும் நீக்கமறப் பரவிநிற்கும் இறைமைத் தன்மை பாம் (பாவு, பரப்பு, பரவை) எனப்பட்டது. தெய்வம் சுட்டிய பெயர்கள் உயர்திணை மருங்கின் பால் பெற்றி சைக்குமாதலின் பரமன் என ஆண்பாலாகக் கூறப்பட்டது மற்றுப் பரம் என்பது இடுகுறியாயின் பரமன் என்பது மட்டும் எவ்வாறு காரணக் குறியாகும். பரம் என்பது பொருள் குறியாமையால் இடுகுறி என்றும் பரமன் என்பது பரமத் தன்மையுடையவன் என ஆண்பாலைச் சுட்டிப் பொருள் தருதலான் காரணக் குறி என்றும் கொண்டனர். எனவே சொல் வடிவங்களின் அடிப்படையிலேயே இவ்விலக்கணம் அமைந்துள்ளமையை அறியலாம். இனி நன்னூலின் தமிழ் இலக்கண வரைவுகளை முறையே காண்போம்.

"பூமலியசோகின் புனை நிழமர்ந்த நான்முகற்றொருமுது நன்கு இயம்புவன் எழுத்தே" எனவும் முச்சகம் நிழற்றும் முழுமதி முக்குடை அச்சுதனடி தொழுதனை குவன் சொல்லே" எனவும் இவர் தொடங்கலான் இவர்சமண சமயத்தவர் என்பது நனி விளங்கும். மலர்தலையுலகின் எனத்தொடங்கும் பாயிரப் பகுதியில் ஒரு தனாகி முதலீறு ஒப்பளவு ஆசை முனிவிகந்துயர்ந்த அற்புத மூர்த்தியின் அலர்தரு தன்மையின் மனவிருளிரீயமாண் பொருள் முழுவதும் முனிவற அருளியமூவறு மொழியும் எனக்கூறுதலின் பவணந்தியார் செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும் தங்குறிப்பினவே திசைச் சொற்கிளவி" என்று கூறுவதலானும் இவர்

புராண மத நம்பிக்கையுடையவரேயன்றி உண்மை கண்டுணர்த்தும் நோக்கினார். அல்லர் என்பது புலனாகும். பாயிர ஆசிரியர் இருந் தமிழ்க் கடவுள் அரும் பொருளைந்தையும் தருகென சீயகங்கங்கன் மொழிலந்தனனாக" என்கிறார். அதனான் இவர் அவன்கட்டளையை ஏற்று இந்நூலை எழுதினார் என்பதும் தன்னார் வந்தால் சிந்தனையால் படைக்கவில்லை என்பதும் புலனாகும். கட்டளையிட்டவன் கங்க நாட்டையாண்ட கன்னட மொழியினான் என்பதனால் இவர் தாய் மொழியும் கன்னடமே என்று கருதலாம். சனகை என்னும் ஊர் பற்றியும் சன்மதி முனிவர் பற்றியும் தெளிவான வரலாறு காணப்படவில்லை. சன்மதி முனிவர் செய்ததாகத் தமிழில் யாதொரு நூலுமில்லை. நன்னூலிற் காணப்படும் பெரும்பான்மையான இலக்கணப்பகுதிகள் இளம் பூரணர் உனரயின் அடிப்படையிலே அமைந்துள்ளமை காணலாம்.

இந்நூற் பாயிரத்துள் முன்னோர் நூலின் வழியே நன்னூல் பெயரின் வகுத்தனன் எனக் காணப்படுதலான். தொல்காப்பியம் மட்டுமே இதற்கு முதல் நூல் ஆகாமை பெறப்படும். மயிலைநாதர், சங்கரநமச்சிவராயர் உரைகளுடன் நன்னூலைப் பதிப்பித்த டாக்டர். உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் "இந்நூல் அகத்தியம், தொல்காப்பியம் அவிநயம், ஆயவற்றைப்பின்பற்றியுள்ளமை நூலானும் உரையானும் அறியக்கிடக்கின்றது" என்கிறார். பிரயோக விவேக ஆசிரியர் நன்னூல் சினேந்திரன் மதத்தைப் பின்பற்றியது என்கிறார். கச்சாயனம் முதலிய பவுத்தசமய மொழியிலக்கணக் கோட்பாடுகளையும், பாணினீயத்தையும் இவர் அறிந்திருந்தார் எனலாம்.

இன்றைக்கு விளங்கும் நன்னூற் பதிப்புகளுள் பவானந்தர் கழகப் பதிப்புத் தவிர பிறயாவும் பாயிர இயலிலுள்ள ஐம்பத்தாறு நூற்பாக்களும் பவணந்தியார் இயற்றியவாகக் கருதியுள்ளமை புலனாகும். சங்கரநமச்சிவாயர், அவ்வாறே கருதி உரை எழுதியுள்ளார். இதனான் தமிழ் உரையாசிரியர் போதகாசிரியர்களுக்கும் வரலாற்றுக்கண் கண்ணோட்டமோ பொறுப்புணர்வோ இல்லை என்றாகிறது. இனி பவணந்தியார் கூறும் இலக்கண நெறி முறைகளைக் காண்போம்.

எழுத்ததிகாரத் தொடக்கத்திற கூறப்பட்டுள்ள தற்சிறப்புப்பாயிரம் "பூமலிய சோகின் புனை நிழலமர்ந்த நான் முகற்றொழுது நன் கியம்புவன் எழத்தே" என்பதாகும். இதன்கண் அசோகின் இயற்கை நிழலைச் செயற்கை போலப்புனை நிழல் என்கிறார் அதற்கு அழகெனப் பொருள் கொண்டு அமைதியுறுவோம். "மற்று முக்காலத்தினும் ஒத்தியல் பொருளைச் செப்புவர் நிகழும் காலத்தானே" என இலக்கணங்கூறும் இவர் அமர்ந்த என இறந்த காலத்தாற் கூறுகின்றார் இதனைக்கால மயக்கம் என அமைதி கொள்வோம். இயம்புவன் என்று அன் ஈறு தன்மைக்கன் வந்துள்ளதை புதியன புகுதல் எனக்கருதுவோம். கடவுள் வாழ்த்தையாவது செம்மையாகக் கூறியிருக்கலாம். அது நிற்க.

"மொழி முதற் காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்து" என்கிறார் அடுத்து "எண் பெயர் முறை பிறப்பு உருவம் மாத்திரை முதலீறிடைநிலை போலி என்றா பதம் புணர்ப்பெனப் பன்னிருபாற்று அதுவே" என்கிறார். பதவியலுட்

கூறப்படுவன எழுத்திலக்கணமா, மொழியிலக்கணமா? எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பதமாம் என்கிறார். இஃதொரு முரண்பாடு. இது நிற்க உருவம் என்றது ஒலி உருவமா வரிவடிவமா. அணுத்திரள் ஒலி எழுத்தென்றமையான் ஒலி யுருவம் எனத்தெரிகின்றது இதற்கு முரணாகப் பின்னர் "தொல்லைவடிவின எல்லா எழுத்தும் ஆண்டெய்தும் எகர ஒகர மெய்ப்புள்ளி" என்கிறார். மேலும் இவர் சார்பெழுத்தாகக் கூறும் உயிர்மெய் எழுத்திற்குப் புள்ளி விட்டவ்வொடு முன்னுருவாகியும் ஏனை உயிரோடு உருவுதிரிந்தும் "உயிரளவாய் அதன் வடிவொழித்து இருவயிற் பெயரொடும் ஒற்று முன்னாய் வரும் உயிர் மெய்" என்கிறார். இதில் மாத்திரை தவிர்ந்தவை வரிவடிவஇலக்கணம் என்பதிற்றடையில்லை. ஒற்று முன்னாய் வருமென்னுமிடத்து ஒலிவடிவைச் சுட்டுகின்றார். இங்ஙனம் ஒலியுருவையும் வரிவடிவையும் சேர்த்துக்கூறுவதனை நூல் முழுதுங்காணலாம்.

இனி மொழி முதற்காரணமாம் அணுத்திரள் ஒலி எழுத்தெனின் துணைக்காரணமும் நிமித்தகாரணமும் யாவை? அணுத்திரளாகிய காரியத்திற்குக் காரணப் பொருள்யாது? சமணமதக் கோட்பாட்டின்படி அணு என்பது ஐம்பூதங்களின் கூறு. இன்றைய அறிவியலில் ஒலி என்பது தனிப்பொருள் இல்லை. தமிழிசை நூலார் ஒலி என்பது நீர், நெருப்பு, காற்று என்பவற்றின் கூட்டாக ஆகாயத்தை இடமாகக் கொண்டு நிலமென்னும் பூதத்தால் உணரப் படுவது என்பார். எனவே பவணந்தியார் அணுத்திரள் ஒலி என்றது அறிவியல் நோக்கில் ஆராய்ந்து கூறியதன்று சமணசமய நோக்கிற் கூறப்பட்டது என விளங்குகிறது. உலகப்பொருள்கள் யாவும் அணுக்களால் ஆயவை என்பது சமண சமயக் கோட்பாடு அதனான் அவரை அணுவாதிகள் என்பர்.

வெளுத்ததெல்லாம் பாலாகக் கொள்ளும் சிலர் தொல்காப்பியர் எழுத்து என்பதற்கு வரைவிலக்கணம் கூறாமற்போனார். பவணந்தியார் அறிவியல் நோக்கில் வரைவிலக்கணம் கூறினார் எனக்களிப்புறுவர். தொல்காப்பியம் எழுத்து சொல் பொருள் என்னும் பெரும் பரப்புடைய தமிழ் இலக்கணத்தை முறைப்படுத்திச் சுருக்கமாகத் தொகுத்துணர்த்தும் பொறுப்பினை மேற்கொண்டமையின் ஒவ்வொன்றைப் பற்றிய வரைவிலக்கணங்களைத் தனியே தொகுத்துக்கூறாமல் அவற்றின் பல்வேறு இயல்புகளை நுணுக்கமாகக்கூறி அவற்றினின்றும் தொகுத்தறியுமாறு கூறிப் போந்தார். அம்முறையில் தொல்காப்பியம் கூறும் எழுத்து என்பதற்குரிய இலக்கணத்தை இனிக் காண்போம்.

முதற்கண் எழுத்துக்களை அகச் செவிக்குப் புலனாகும் எழுத்து, புறச்செவிக்குப் புலனாகும் எழுத்து என இருவகைப் படுத்துகின்றார். இப்பகுப்புபிறஎம் மொழி இலக்கண ஆசிரியரும் கூறுத அறிவியற் பகுப்பாகும். அகச்செவிக்குப்புலனாகும் மந்திர எழுத்துக்கள் ஞான யோகியர்க்கே புலனாகும். அதனால் அவற்றை விடுத்து இருதி ணைப் பொருள் உணரச் சொல்லுறப்பாகவரும் எழுத்துக்களுக்கே ஈண்டு இலக்கணங் கூறுகின்றேன் என்கிறார். இதனை

"அகத்தெழுளியிசை அரிதல்தபநாடி
அளபிற் கோடல் "அந்தணர் மறைத்தே"
அஃதிவண்நுவலாது எழுந்து புறத்திசைக்கும்
மெய் தெரிவளியிசை அளபுநுவன்றிசினே"

என்பதனால் உணரலாம். புறச்செவிக்குப்புலனாகும் எழுத்துக்கள் வளியிசையால் தோன்றும் என்கிறார். (வளியிசை = நாதம்) செவிப்புலனாம் எழுத்துக்கள் உயிர், மெய், சார்பு என முத்திறப்படும். அவற்றுள் உயிர் என்பது இசைக்குந்தன்மைத்து மெய் உயிரிசையின் சார்பால் புள்ளியாக ஒலிக்கும் தன்மைத்து. சார்பு மொழியைச் சார்ந்து வரும் தன்மைத்து என்கிறார். தொல்காப்பிய இலக்கணப்படி எழுத்திற்குரிய இலக்கணம் ஐந்து கூறுகளைக்கொண்டது. ஒன்று :- எழுத்து என்பது மக்கள் தம் முயற்சியால் உந்தி முதலாக எழும் முந்துவளி தலைமுதலாய எண்வகை உறுப்புகளின் இயக்கத்தால் உருப்பெற்று வெளிப்படும். இதனைத்

உந்தி முதலா முந்து வளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறைநிலையான்
உறுப்புற்றமைய . . . . எல்லா எழுத்தும்
சொல்லுங்காலைத் திறப்படத் தெரியும், காட்சியான

என்றும் பிறப்பியல் கூறுமுகத்தான் அறிவிக்கின்றார். இரண்டாவது :- எழுத்து அருவுருவாய் மாத்திரை என்னும் அளவைக்கு உட்பட்டு இசையாகவும் ஒலியாகவும் வெளிப்படும். இதனை.

"அஇஉஎஒ அப்பாலைந்தும் ஒரளபிசைக்கும் குற்றெழுத்தென்ப"
"ஆஈஊஏஐஓஔ ஈரளபிசைக்கும் நெட்டெழுத்தென்ப"
"மெய்யின் அளபே அரை என மொழிப"
"அவ்வியல் நிலையும் ஏனை முன்றே"
அளபிறந்திசைத்தலும் ஒற்றிசைநீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின்மறைய என்பமனார்புலவர்"

என்னும் நூற்பாக்களான் அறிவிக்கின்றார். மூன்றாவது அது, மொழியாகவும் மொழிக்குறுப் பாகவும் வரும் இதனை ஒரெழுத்தொருமொழி ஈரெழுத்தொருமொழி இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி உளப்பட மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே என்பதனால் உணர்த்தினார். நான்காவது எழுத்துத்தனித்திசைப்பினும் மொழியுறுப்பாக இசைப்பினும் கூறப்பெற்ற இலக்கணத்தினின்று திரியா தெரிந்து வேறிசைப்பினும். எழுத்தியல் திரியா என்மனார் புலவர் என்பதனால் உணர்த்துகின்றார் ஐந்தாவது கட்புலனாக வரிவடிவம் செய்து கோடற்குரியதாகவரும் ஒலியே எழுத்தெனற்குரியதாகும் இதனை.

அன்தரத்து எழுதிய எழுத்தின்மான
வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்

எனப்பொருளதிகாரத்தில் உவமமாகக் கூறுகின்றார் "எழுதியஎழுத்து" என்பதனால் எழுதப்படுவது எழுத்து என்பது விளங்கும் மேலும் ஆய்தமென்ற முப்பாற் புள்ளியும், மெய்யின் இயற்கை புள்ளியெடுநிலையில், உட்பெறுபுள்ளி உருவாகும்மே. என ஒலிவடிவத் திற்குக்கூறி வரிவடிவிற்கும் கொள்ள வைத்துள்ளமையையும் காணலாம். 'எழுத்து' என்னும் குறியீடே ஒலி உருவிற்கும் வரிவடிவிற்கும் பொதுவான பெயராகும். பிறவிளக்கங்களையும் உயிர் மெய்களின் சிறப்பிலக்கணங்களையும் எனது தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகையுரையுள் கண்டு கொள்க.

மேற்கூறிய ஐந்து கூறுகளுள் ஒன்று குறையினும் அஃது எழுத்தெனற்கேலாது. நன்னூலாரின் பொதுவிதி வரிவடிவிற்கு ஏலாமையான் அது குன்றக் கூறலாகும் மேலும் அணுத்திரள் ஒலி என்பது நாதத்தைக் குறிக்குமோ என உணர்தல் வேண்டும். எழுத்தின் நாதம், இசை, ஓசை, ஒலி என முத்திறமாக வரும் என்பதனை நன்னூலார் தெரிந்திருந்தாரா என்பதற்கு நூலுள் சான்றுகள் காணப்படவில்லை.

ஆசிரியர் தொல்காப்பியனார் குற்றிய லிகரம் மூலிய மூன்றும் சார்ந்துவரும் என்றதனால் உயிர் பன்னிரன்டும், மெய் பதினெட்டும் தனித்துவரும் எனக் கொள்ளவைத்தார். இதனை உணராத பவணந்தியார் நேமிநாத ஆசிரயரைப் பின்பற்றி தனித்துவரும் இயல்பின வான முப்பது; எழுத்துக்களை முதலெழுத்துக் கள் எனக்கூறிப் போந்தார். "உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே" என்பது அவர் கூற்று முதல் என்பதற்கு அவர்கொண்ட பொருள் மூலம் அடிப்படை என்பனவாகும். அதனால் சார்பெழுத்துக்களை அவற்றினின்றும் பிறந்தவனாகக் கூறுகின்றார். தொல்காப்பியர் சார்பெழுத்து என்பதற்கும் நன்னூலார் சார்பெழுத்து என்பதற்கும் அடிப்படையில் வேறு வேறு பொருளாகும்.

நன்னூலார் "உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே" என்னும் நூற்பாவால் மெய்யெழுத்துக்களை உடம்பு என்றும் அம் முதல் "ஈராறு ஆவி" என்னும் நூற்பாவால் உயிர் எழுத்துக்களை ஆவி (உயிர் மூச்சு) என்றும் கூறுகின்றார். உயிர் மெய் என்னும் குறியீடுகளை உவம ஆகுபெயர்களாகக் கூறுகின்றார். தொல்காப்பியத்துள் எவ்விடத்தும் உயிரை ஆவி என்றும் மெய்யை உடம்பென்றும் கூறவில்லை. தொல்காப்பியர் அறிவியல் நோக்குடையவராதலின் உயிர் மெய் என்னும் குறியீடுகள் காரணத்தால் அமைந்த பெயர்களே எனத்தெரிந்து கூறியுள்ளார். நன்னூலார் வீரசோழிய ஆசிரியரைப்பின்பற்றி ஆவி உடம்பு என்று கூறிச் சென்றார்.

உந்தியினின்று எழும் ஓசைக்காற்று கண்டத்தினின்று உயிர்த்து வெளிப்படுதலான் அகர முதலிய பன்னிரண்டும் உயிர் எனப்பெற்றன. உயிர் என்பது முதனிலைத்தொழிற் பெயர் உயிர்த்தலை உடையது உயிர். உயிர்த்தலான் மூச்சுக் காற்றிற்கு உயிர் என்ப்பெயரமைந்தது. நாஇதழ் பல் அண்ணம் முதலிய உறுப்புகளால் வடிவு கொள்ளுதலின் ககர முதலிய பதினெட்டும் மெய்

எனப்பட்டன. (மெய்த்தல் = வடிவுறுதல்) உறுப்புகள் ஒன்றோடொன்று உறுதலான் ஒற்று என்றும். அரைமாத்திரை ஒலி பெறுதலான் புள்ளி என்றும் பெயர் பெற்றன. இவற்றையெல்லாம் சிறிதும் கருதாமல் இடைக்காலப்பிற்கால இக்கால உரையாளர் ஆய்வாளர் எல்லாம் உயிர் - மெய் என்னும் குறியீடுகளை உவம ஆகுபெயர் என்றே கொள்வாராயினர். உவம ஆகுபெயராயின் உடம்பின்றி உயிர் செயற்படாது. உயிரின்றி மெய் இயங்காது இதற்கு மாறாக அணில், அறம், முதலாய செற்களில் உயிரும் மெய்யும் தனித்தும் இணைந்தும் இயங்குவதைக் காணலாம். மேலும், உயிர்ப்பிசையை சுவரம் என்றும், ஒற்றொலியை வியஞ்சன : என்றும் வடநூலார் கூறுவதனையும் இவர்கள் ஓர்ந்திலர்.

இனி, பவணந்தியார் கூறும் சார்பெழுத்துக்களையும் அவைபற்றிய இலக்கணங்களையும் சிறிது காண்போம்.

சார்பெழுத்து வகைபத்து விரி முந்நூற்றறுபத்தொன்பது என்கின்றார். அது வறுமாறு :-

உயிர்மெய் ஆயுதம் உயிரளபு ஒற்றளபு
அஃகியஇஉ ஐஔமஃகான்
தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும் இவைவகை

உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு உயர் ஆய்தம்
எட்டு உயிரளபு எழுமூன்று ஒற்றளபெடை
ஆறேழ் அஃகும் இ முப்பா னேழ்
உகரம் ஆறாறு ஐகான் மூன்றே
ஔகான் ஒன்றே மஃகான் மூன்றே
ஆய்தம் இரண்டொடு சார்பெழுத்துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபான் என்ப. இவை விரி

உயிர் மெய் எழுத்து எனத் தொல்காப்பியம் கூறுவது மெய்யின் செயற்பாட்டுநிலை உயிர்க்கும் மெய் என்பது பொருள் இவர் கூறுவது உயிரும் மெய்யும் கூடிய கூட்டத்தினான் பிறக்கும் பிறிதொரு எழுத்து உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்றமொழித்தொகை என்பர் உரையாசிரியன்மார். உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு என்பது வரிவடிவு நோக்கிய எண்ணிக்கையே தவிர அவற்றைப் பிரித்து எழுதினால் பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யுமே வரும். உயிர்மெய்யென்பது வரிவடிவில் கூட்டி ஒரே எழுத்து வடிவமாக நிற்பதல்லது மூன்றாவது வேறு ஒலியோ எழுத்தோ இல்லை ஆங்கிலத்தைப் போலப் பிரித்து எழுத நேரின் இவ்விரு நூற்றுபதினாறும் மறைந்து விடும். மெய்யின் இலக்கணம் பற்றிக் கூறிமிடத்து.

புள்ளிவிட்டவ் வொடு முன்னுருவாகியும்
ஏனை உயிரொடு உருவு திரிந்தும்
உயிரளவாய் அதன் வடிவொழித்து
இருவயிற் பெயரொடும் ஒற்றுமுன்னாய் வரும் உயிர்மெய்

என்கிறார். பின்னர், நின்ற நெறியே உயிர்மெய் முதலீறே என்கிறார்.

எனவே மெய்யும் உயிரும் தவிர மூன்றாவதொரு எழுத்து அதன்கன் இல்லை என்பதை உணர்ந்தும் இவ்வாறு கூறல் ஏன்? இவற்றான் இவர்க்கு எழுத்து (ஒலியன்) என்பதற்குரிய பொருள் தெரியவில்லை என்று தெரிகின்றது. உயிர்மெய்யை வரிவடிவிற்கூட்டிப் பெருக்கி இருநூற்றுப் பதினாறு என்று முதற்கண் நூல் செய்தவர். நேமிநாத ஆசிரியர் அதனை ஆராயாமல் சமயச்சார்பு காரணமாக இவர் மேற்கொண்டு கூறியுள்ளார் எனத் தெரிகிறது. மற்றொரு வியப்பிற்குரிய செய்தி வட மொழியில் அறு நூற்றுக்கு மேற்பட்ட வரிவடிவைப் படித்தறிந்த அவர் வடமொழியில் வரிவடிவை எழுத்தாக எண்ணப் படாமையை அறியாமற் போனதேயாகும் வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் வேறுபாடு கூறும் நூற்பாவுள் றனழஎ ஒவ்வும் உயிர்மெய்யும். உயிரளபல்லாச் சார்பும் தமிழ் பிறபொதுவே என்கிறார். இவர் நோக்கில் தமிழில் உயிர்மெய் எழுத்து உண்டு வடமொழியில் இல்லை என்பதாகும்.

மேலும் உயிர்மெய் எழுத்துக்கள் தனிஎழுத்துக்களாயின் அவற்றுள் உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் 126ம் அளபெடுக்குமிடத்து அவற்றை எண்ணிக் கூறாமல் விட்டமைக்குக் காரணம் யாது? குற்றியலிகரம் கூறுமிடத்து உயிர்மெய் வரிவடிவங்களை நோக்கி முப்பத்தேழு, முப்பத்தாறு என்கிறார். இத்தகைய முரண்பாடுகளுக்குக் காரணம் இவர் தொல்காப்பிய நெறியை உணராமையும் உணர்ந்திருப்பாராயின் அதனைப் பின்பற்றாமைமேயாகும்.

மற்று **"புள்ளியில்லா எல்லாமெய்யும்**
உருவுரு வாகி அகர மொடுயிர்த்தலும்
ஏனை உயிரோடு உருவு திரிந்துயர்த்தலும்
ஆயீரியல உயிர்த்தலாறே" எனத் தொல்காப்பியக்கூறும் இலக்கணத்தைப் பின்பற்றி நன்னூலார் உயிர்மெய்க்கு இலக்கணங்கூறித் தொகை கொடுத்தார் எனக்கருது வாருமுளர். இந்நூற்பாவின் கருத்தைத் தொல்காப்பிய உரையாசிரியன்மார் பிறழ உணர்த்தமையே இவ்விபரீதத்திற்குக் காரணமாம். இந்நூற்பா உயிர் மெய் எழுத்துக்களின் வரிவடிவம் பற்றிக்கூறுவதாக உரையாசிரியன்மார் மயங்கினர். உயிர்மெய்யை இணைத்து உச்சரிக்குமிடத்து மெய் இயல்பும சிறிது திரிந்தும் ஒலிக்கும் என மெய்யின் ஒலிநிலை பற்றிக் கூறுவது இந்நூற்பா - மெய்யெழுத்துக் கள் அகர உயிரொடு கூடி ஒலிக்குமிடத்துத் தமது சரியான உருவையும், ஏனை உயிர்களுடன் ஒலிக்குமிடத்துச் சிறிது திரிந்தும் ஒலிக்கும் என்பது இந்நூற்பாவின் பொருளாகும். வரிவடிவம் காலந்தோறும் மாறுதற்குரியதாகலின் நல்லாசிரியன்மார் வரிவடிவ இலக்கணங் கூறார் என உணர்க.

ஆய்தம்

உயர் ஆய்தம் எட்டு என்கிறார். உயர்வு என்பதற்கு நிறைவு அல்லது முழுமை (முற்று) என்பது பொருள் என்பது அஃகிய தனிநிலை என ஆய்தக் குறுக்கத்தைச் சுட்டுவதனால் தெரியலாம். முதலெழுத்துக்களின் விகாரங்களாக வருவனவே சார்பெழுத்து என்பது இவர் கருத்து அவ்வாறாயின் ஆய்தம் எந்த முதலெழுத்தி னின்றும் பிறந்தது? வீரசோழியமும், நேமிநாதமும் இச்சிக்கலை உணர்ந்து முதலெழுத்துக்களோடு கூட்டி முப்பத்தொரு எழுத்துக்கள் எனக் கூறிச்சென்றன. இவர் அவர்களையும் பின்பற்றவில்லை. தொல்காப்பியர் கருத்தையும் உணரவில்லை. தானும் சிந்திக்கவில்லை அதனான் ஆய்த இலக்கணத்தை ஆசிரியவசனமாகத் தொல்காப்பியத்தைச் சுட்டிக் கூறியுள்ளார்.

ஆய்தம் யாண்டுவரினும் குற்றெழுத்தின் முன்னரும் உயிரொடு புணர்ந்தவல்லெழுத்துக்களின் பின்னருமேவரும். "குறியதன் முன்னர் ஆய்தப்புள்ளி உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே" என்பது தொல்காப்பிய நூற்பா. ஒரு ஆய்தம் எவ்வாறு எட்டாகும். வல்லெழுத்துச் சார்பை நோக்கினும் ஆறாகவல்லது எவ்வாறு எட்டாகும். உரையாசிரியன்மார் வல்லெழுத்து ஆறன்பின் நிற்கும் ஆய்தம் ஆறு அஃகான் மஃகான் என வரும விரித்தல் விகாரம் ஒன்று இஃகுடிய அஃகுடிய எனவரும் புணர்ச்சி விகாரம் ஒன்று ஆக எட்டென்பர். ஒற்றெழுத்துக்களைத் தன்பின்வரும் எழுத்துகளை நோக்கி இவ்வாறு எண்ணலாமா. ல,ள,ண,ந,த இவை புணர்மொழிக்கண் திரிவன அவற்றையெல்லாம் எண்ணலாமா. யாண்டுவரினும் ஆய்தம் ஒன்றுதானே? மற்றுத்தொல்காப்பியம் ஆய்தம் அரை மாத்திரையிற்குறுகுமென்று கூறவில்லை மாறாகக் நிறம் பற்றியும், இசை பற்றியும் வரும் குறிப்புச் சொற்களில் சிறிதுமிகும் என்றும் கூறுகின்றது. இவர் அதுபற்றி யாதும் கூறவில்லை. இது நிற்க. ஆய்தம் அரை மாத்திரையிற் குறுகிக்கால் மாத்திரையாகும் என்று அதற்கு விதி கூறுமிடத்து, ல,ள ஈற்றியைபினான் ஆய்தம் அஃகும்" என்கிறார். லளகரப்புள்ளிகள் தகரம் வருமிடத்து றகரடகரமாகவும் ஆய்தமாகவும் திரியும் கல்+தீது = கற்றீது - கஃறீது முள்+தீது = முட்டீது - முஃடீது எனவரும். றகரடகரமாகத் திரியுமிடத்துக் குறுகாமல் நிற்க. ஆய்தமாகத் திரியும்போது மட்டும் எவ்வாறு குறுகும்? லகரளகரங்களின் திரிபுதானே இவ்வாய்தம்? ஆய்தம் குறுகுமெனக் கூறும் முந்து நூல்கள் யாதொன்றுமின்மையின் இது தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல் என்னும் சிதைவாகும்.

உயிர் அளபெடை

உயிரளபு எழுமூன்று என்று கூறி உயிர் அளபெடையின் இலக்கணமாக

"இசைகெடின் மொழிமுதலிடைகடை நிலைநெடில்
அளபெழும் அவற்றவற்றினக்குறில் குறியே"

எனக் கூறுகின்றானர் .

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன், நற்றாள் தொழாஅர் எனின்" என்னுமிடத்துத் தொழார் என்பது ஒரு நிரையசையாக நடுவேநிற்றலின் அதனைச் சீராக ஆக்குதற் பொருட்டுத் தொழாஅர் என அளபெழுந்தது.

உறாஅர்க் குறுநோய் உரைப்பாய்க்கடலைச், செறா அஅய் வாழிய நெஞ்சு என்னும் பாவினுள் உறார் என்னும் அசையைச் சீராக்குதற் பொருட்டு உறாஅர் என அளபெழுந்தது. செறாய் என்பது சீராதற் பொருட்டு செறாஅய் என அளபெடுத்தது. சீர்நிறைந்தபின் தளைசீதைதலின் தளை சிதையாமற் பொருட்டு மீண்டும் ஓர் அளபெடுத்துச் செறாஅஅய் என நின்றது. அதனாள் யாப்பருங்கலக் காரிகை ஆசிரியர் சீரும்தளையும் சிதையின் அளபெடுக்கும் எனத் தெளிவாகக் கூறினார். இவர் இசை கெடின் எனக்கூறி அவ்விரண்டையும் அடக்குகின்றார். மற்றுக்

"கெடுப்பதும் கெட்டார்க்குச்சார் வாய்மற்றாங்கே

எடுப்பதும் எல்லாம் மழை" என நிற்பினும் சீரும் தளையும் கெடா இசையும் கெடவில்லைப் பின்னர் கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என அளபெடுத்தது ஏன்? உரையாசிரியன்மார் இதனை இன்னிசையளபெடை என்பார். இதனையும் அடக்கி இலக்கணம் கூற வேண்டாமோ? தொல்காப்பியம் "நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்" எனத் தெளிவாகக் கூறியதன் அடிப்படையில் இவர் நோக்கவில்லை. தொல் காப்பியர் குற்றெழுத்துக்கும் இசை நிறைக்கவரும் என்கிறார். இவர் இதை இனக் குறில் குறியே என்கிறார் குறியாகுமெனின் எவ்வாறு அசை எண்ணப்படுகின்றன? இதற்குமுட்டுக் கொடுப்பார் சிவஞான முனிவர் நெடில் அளபெழும் என உயிர் நெட்டெழுத்துக்களை மட்டும் எண்ணி இவை மூன்றிடத்தும் வர இருபத்தொன்றாகும் என்கிறார். இவர் கணக்குப்படி சார்பெழுத்துகள் உயிர்மெய் 216. அவற்றுள் நெடில் 126. அவற்றை எண்ணிப் பெருக்காமல் உயிர் மட்டுமே அளபெடுத்தலின் உயிரை மட்டும் எண்ணினார் எனில் உயிர்மெய்களை வேறு எழுத்தாகக் எண்ணியது பிழையாகின்ற தன்றே உயிர்ஏழும் மூன்றிடத்தும் அளபெடுத்தலின் 3X7=21 என்கிறார். ஔகாரம் மொழியிடையிலும் கடையிலும் வருமா. வாராது என இவரே "ஐகான் மூன்றே ஔகான் ஒன்றே" என ஐமூவழியும் நையும் ஔவும் முதலற்றாகும் என்று கூறுகிறார். ஈண்டை இடைகடைகளைக் கூட்டி இருபத்து ஒன்று என்கிறார். அற்றன்று பொதுவாக எழுத்தையும் இடத்தையும் பெருக்கிக் கூறினார். சில சில இடங்களில் வாராமலும் போகலாம் எனின் ஒற்றளபெடை இலக்கணங் கூறுமிடத்து ஆய்தம் குறிற் கீழ்க்கடையிலும் குறிலிணைக் கீழ்க்கடையிலும் வாராது என்பதனை நினைவிற் கொண்டு ஒற்றளபு ஆறேழ் எனக் கூறுதலின் இவ்வமைதி பொருந்துமாறில்லை.

இச்சரிவிற்கு முட்டுக்கொடுக்க முற்பட்டுச் சிவஞான முனிவர் இன்னிசை அளபெடை ஒன்று சொல்லிசை அளபெடை ஒன்று அவ்விரண்டையும் கூட்டி இருபத்தொன்று என்றார் எனக் கூறுகின்றார். அவ்வாறாயின் செய்யுளிசை அளபெடை மட்டும் மொழி மூவிடத்தும் வரும் இன்னிசை அளபெடையும் சொல்லிசை அளபெடையும் ஓரிடத்தில் மட்டுமே வரும் என்றாகின்றது. அது எவ்விடம் என்றும் அவர் கூறவில்லை. இங்ஙனம் நன்னூல் செய்துள்ள பிழைகளுக்கு

அமைதி கூறுவதாக எண்ணிக் கொண்டு சிவஞான முனிவர் செய்த இலக்கணக் கேடுகள் பல. மற்று உவாஅப் பதினான்கு இரா அக்காக்கை, குரீஇ ஆடூஉ மகடூஉ என்பவற்றை எப்பிரிவில் சேர்ப்பது?

மற்றும் செய்யுளிசை அளபெடைகள் முன்பின் எழுத்துக் களோடு கூடி நிறையசையாகா தனித்தனி நேரசையாக எண்ணப் படும். சொல்லிசை அளபெடை என இவர் கூறும் வினை எச்சத் திரிபுகள், திருமழைதலைஇய எனவும் பசலைஉணீஇயர் வேண்டும் எனவும் நசைஇயினன் வந்தான் எனவும் வருமிடங்களில் பின்வரும் உயிர்மெய்யொடு கூடி நிரையசையாகும். எனவே சொல்லிசை அளபெடை என்பது ஒரு பிழையான கோட்பா டென்பது விளங்கும்.

ஒற்றளபெடை ஙஞணநமனவயலளஃ என்னும் பதினொன்றும் அளபெடுக்கும் அவை குறிற்கீழும் குறிலிணைக்கீழும் அளபெடுக்கும் என்கிறார். குறிற்கீழ் குறிலிணைக்கீழ் எனப்பிரித்து ஒற்றளபெடை நாற்பத்திரண்டு என்கிறார் இடங்காரணமாக எழுத்துக்கள் எவ்வாறு வேறுபடும்? இடங்கருதி எழுத்துக்களை எண்ணின் உயிர்எழுத்துக்கள் முதலிலும் குறில்ஐந்தும் அளபெடையாக இடையிலும் ஈற்றிலும் வரும். மெய்களுள் க்ச்ட்த்ப்ற்ங் தவிர்ந்த பதினொன்றும் இடையிலும் ஈற்றிலும் வரும் இவற்றையெல்லாம் எண்ணித்தொகை கொடுப்பின் நகைப்பிற் இடமாகுமன்றே?

குற்றியலுகரம் - குற்றியலிகரம்

"அஃகும் இ முப்பானேழ் உகரம் ஆறாறு" என்பது விரிச்சூத்திரம்.
"நெடிலோடு ஆய்தம் உயிர் வலிமெலியிடைத்
தொடர் மொழி இறுதி வன்மை யூ ருகரம்
அஃகும் பிற மேற்றெருடரவும் பெறுமே" இது குற்றியலுகரவிதி
யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய. இது குற்றியலிகரவிதி

வல்லின மெய்களைச் சார்ந்து நிற்கும் உகரம் அதன் முன்னிற்கும் எழுத்துக்கள் காரணமாகக் குறுகும் என்பது பொருள் எனவே உயிர் உகரம் பிற எழுத்துக்களின் சார்பினால் குறுகும். குற்றுகரம் என்பது தனியொரு எழுத்து (ஒலியன்) அன்று என்பது நன்னூலார் கருத்து. அவ்வாறாயின் அஇஉஎஒ என்பது ஆஈஊஏஓ என்பவற்றின் குறுக்கமா? உயிர்நிரலில் உள்ள உகரமும் அரை மாத்திரையளவினதாகிய குற்றியலுகரமும் வேறு வேறு எழுத்துக்கள் (ஒலியன்கள்) என்பதை இவர் உணரவில்லை என்பது வெளிப்படை குற்றியலிகரத்திற்கும் இஃதொக்கும் தனித்துவரும் முப்பது எழுத்துக்களும் சார்ந்துவரும் மூன்று எழுத்துக்களும் வேறு வேறு என்பதனை "அகர முதல் னகாஇறுவாய் முப்பஃதென்ப, சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே" என்றும் "மூன்று தலையிட்ட முப்பஃதெழுத்தின்" என்றும் கூறதலான் அறியலாம். ஓர் எழுத்துப்

புணர்நிலை முதலிய காரணங்களால் நீண்டோ குறுகியோ ஒலிக்குமிடத்து அது பொருள் வேறுபாடு செய்யாது. தனி ஒலியனே பொருள் வேறுபாடு செய்யும் ஏழுபத்து, ஆறுபத்து எனினும் எழுபது, அறுபது எனினும், மாஅ பூத்தது, எனினும் மாபூத்தது. எனினும் எங்கிறைவன் உளான் எனினும், எங்கிறைவன் உளான் எனினும் பொருள் வேறுபடா. மற்று நாடு என்னும் சொல் வினையாயின் ஆராய்க எனவும், பெயராயின் தேசம் எனவும் பொருள் வேறுபடும். வினையாகவருமிடத்து உகரஇறுதி முற்றி நிற்கும். உகரம் பெயராக வருமிடத்து அது குற்றியலுகரமாகும்.

முற்றியலுகரம்	**குற்றியலுகரம்**
முருகு = முதிர்க	முருகு = அழகு
கட்டு = பிணிப்பாயாக	கட்டு = பொதி
நுங்கு = விழுங்குவாயாக	நுங்கு = பனஞ்சுளை

இவ்வாறு உகர ஈற்றுச் சொற்கள் (வல்லெழுத்தூர்ந்து நிற்கும் உகரம்) வினைக்கண் முற்றுகரமாகவும் பெயர்க்கண் குற்றுகரமாகவும் செய்யுட்கண் வரும் பெயர்கள் சீர்நிலை கருதியவிடத்து முற்றுகரமாகவும், உயிர் வந்து புணருமிடத்துக் குற்றுகரமாகவும் நிற்கும், வினை எச்சங்களும் இவ்வாறே இருநிலைகளாக நிற்கும். அதனான் உரியசை பற்றிக் கூறுமிடத்துத் தொல்காப்பியர்

"இருவகை உகரமொ டியைந்தவை வரினே
நேர்பும் நிரைபும் என்றிசிற் பெயரே" என இருவகை உகரத்திற்கும் நேர்பு, நிரைபு என ஒரே வகை வாய்ப்பாடுகளைக் கூறிச் சென்றார்.

இவ்வறிவியல் நோக்குடைய தமிழ் நெறியை உணராமல் பெரும்பாலோர் குற்றெழுத்தைச் சாராமல் வல்லினமெய்யை ஊர்ந்துவரும் சொற்கள் வரும் இடமும் பொருளும் நோக்காமல் எல்லாவற்றையும் குற்றியலுகரமாகவே கொள்வாராயினர். இது நன்னூலின் தாக்கத்தால் ஏற்பட்ட விபரீதமாகும்.

இனி இந்நூற்பாவில் நெடிலோடு என நெடிற்றொடரை ஒடுக்கொடுத்துப் பிரித்தமையால் ஈரெழுத்தொரு மொழி தொடர்மொழியாகாது என உணர்கின்றார். உணர்ந்தும் "எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம்" என்கிறார். இனி அஃகும்,பிற மேற்றொடரவும் பெறுமே என்பது என்ன உம்மை? இதனைப் பிரித்துப் பிற என்பதனொடு கூட்ட வேண்டும். "பிறவும் மேற்றொடரும் மே" எனக் கூறியிருக்கலாமே. மேற்றொடர்தல் நெடிற்றொடர்க்கு ஒவ்வாமையின் ஒடுக்கொடுத்துப் பிரித்தார் என்பர் உரையாசிரியன்மார். ஒடுபிரிநிலைப் பொருட்டா உம்மைபொருட்டா? அது போகட்டும் குற்றியலுகரம் முப்பத்தாறு எனல் இடம் பற்றியா எழுத்துப்பற்றியா. சங்கரநமச்சிவாயர் ஈற்றயலாகிய இடம் ஆறு. வல்லினம் ஆறினை ஊர்ந்த உகரம் ஆறு இரண்டையும் உறழ முப்பத்தாறு என்பார். ஔகாரத்தின்பின் ஆறும் வருமா? வகரத்தின்பின் வல்லினம் வருமா. என ஆராய்ந்த சிவஞானமுனிவர். உயிர்த்தொடருள் ஔகாரத்தையும் இடைத்தொடருள் வகரத்தையும் நீக்கி இடங்களே முப்பத்தாறு என்றார். நூலாசிரியர் ஒருபுறம்

உரையாசிரியன்மார் ஒருபுறம் மயங்கவைத்தலன்றி இங்ஙனம் தொகை கூறியதனால் விளையும் இலக்கணப்பயன் ஏதேனும் உண்டா. ஏனைய சார்பெழுத்து எண்ணிக்கைகளுக்கும் இவ்வினா பொருந்தும்.

குற்றியலிகரம் புணர்மொழியுள் முப்பத்தாறு தனிநிலையில் ஒன்று என்கிறார். விதிகூறுமிடத்து யகரம் வரக்குறள் உத்திரி இகரம் என்கிறார் புணர்நிலையின்கண் திரிதல் வேறு எழுத்தாகுமா. கல்+தடம் = கற்றடம் என வருமிடத்து லகரத்திரிபுறகரம் எனலாமா? அசைச்சொல் மியா இகரம் குற்றியலிகரம் என்கிறார். மியாயிக மோமதி எனத்தன்னைச்சுட்டி மொழி முதலாக வருமிடத்தும் குறுகுமா? ஆம் எனின் குற்றியலிரம் மொழிக்கு முதலாக வரும் என்றாகிறது. தொல்காப்பியர், கேண்மியா, சென்மியா என ஒன்றை நோக்கி உரைக்குமிடத்து வரும் மியா என்பது விளக்குமாறு உரையசைக் இளவி என்கிறார் அதனை இவர் நோக்கவில்லை.

மற்று "யகரம் வரும் வழி இகரம் குறுகும் உகரக்கிகளவி துவரத் தோன்றுது" எனத்தொல்காப்பியர் குற்றியலுகரமும் குற்றியலிகரமும் சார்பெழுத்துக்களாதலின் உயிரேற இடந்தரும் குற்றியலுகரம் அரைமாத்திரை ஏற இடந்தராது கெடும் என்றும் அது கெட்டவிடத்து அது ஊர்ந்து நின்ற மெய்யின்மேல் குற்றியலிகரம் வரும் எனத் தெளிவாகக் கூறியிருத்தலை இவர் நோக்கினாரில்லை.

இனி ஐகார ஔகாரக் குறுக்கம் பற்றிக் கூறுமிடத்துத் "தற்சுட்டளபொழி ஐமூவிடத்தும் நையும் ஔவும் முதலாற்றாகும் என்கிறார்" இசைசாலாது என்பதனாற்றானே உயிர் நெடில் அளபெழுகின்றது. அதனை அளபெழுமிடத்துக் குறுகாது என்பது காளைமாடு கன்றீனாது என்று கூறுதலை ஒக்கும். மற்று மாத்திரையளவு கூறுமிடத்து ஐகார ஔகாரக் குறுக்கங்கள் ஒரு மாத்திரை பெற்றுக் குறிலோடு ஒப்ப நிற்கும் என்கிறார். அவ்வாறாயின் "ஔவித்தழுக்காறு டையானை" என்னுமிடத்து ஔவித் என்பது நிரையசையாகும். ஔவிய நெஞ்சத்தான் ஆக்கமும்" என்னுமிடத்து ஔவிய என்பது நிரைநேராய்ப் புளிமாவாகும். இரண்டு குறள் வெண்பாவும் பிழைபடும்" வைகலும் வைகல் வரக்கண்டும்" என்னும் வெண்பா பிழைபடும்.

இனி உயிரெழுத்துக்களின் வகை கூறுமிடத்து அஇஉஎஒக் குறிலைந்தே என்கிறார். குறில் என்னும் பெயர் இவற்றிற்கு எவ்வாறு வந்தது. ஆஈஊஏஐஓஔ நெடில் என்கிறார். நெடில் என்பதற்குக் காரணம் என்ன குறிலை நோக்கி இவை நெடில் எனின் ஐ ஔக்குரிய குறில்கள் எவை. தொல்காப்பியர் அஇஉஎஒ அப்பாலைந்தும் ஓரளபிசைக்கும் குற்றெழுத்தென்ப என்றும் ஈரளபிசைக்கும் நெட்டெழுத்தென்ப என்றும் காரணத்தொடு கூறியவற்றை இவர் நோக்கவில்லை. மற்று அஇஉம் முதற்றனிவரின் சுட்டே என்று சுட்டிடைச் சொற்கள் பற்றி இலக்கணங் கூறுகின்றார். சாமிநாத தேசிகர் இந்நூற்பாவை வானளாவப் புகழ்கின்றார். இதன் பொருள் அஇஉ என்னும் இம்மூன்றும் ஒரு சொல்லின்கண் உறுப்பாகாமல் தனியேவரின் சுட்டிடைச் சொல் எனப்படும் என்பதாகும். அவ்வாறாயின் "அம் முதலீராறுவி", இஈஐ வழியவ்வும்" என்னுமிடங்களில்

அகரமும் இகரமும் சுட்டிடைச்சொற்களா மற்று

"எயா முதலும் ஆஓஈற்றும்
ஏ இருவழியும் வினாவாகும்மே" என்கிறார்.

உரையாசிரியன்மார் சுட்டெழுத்து இலக்கணங்கூறிய நூற்பாவிலுள்ள 'முதற்றனிவரின்' என்பதனை அதிகாரமுறைமை என்னும் உத்தியான் இதற்கும் கூட்டுக என்பார். இந்நூற்பாவில் உள்ள யா என்பது வினா இடைச்சொல்லா, வினாப்பெயரா? ஏ இருவழியும் என்கிறார். ஏகாரம் முதற்கண் தனித்துவருமா? மற்று எப்பொருள்யார் யார் வாய்க் கேட்பினும் என்னுமிடத்து எகரம் வினாவா? ஒரு சாரார் யா என்பது யாங்ஙனம் என்னும் சொல்லின்கள் வினா எழுத்தாக வந்துள்ளது என்பார். யாங்ஙனம் என்பது யாவன், யாவள் யாவர் யாது என்பன போலப்பிரிப்பப் பிரியா ஒரு சொல் என்பதனை அன்னவர் உணராமல் ஙனம் என்னும் சொல்லை நன்னூலார் தனிச் சொல்லாகக் கொண்டதனை நம்பி இவ்வாறு அமைதி காண்பர். பவணந்தியார் கொள்கையில் அவன், இவன், யாவன், யாது முதலியவை எல்லாம் பகுபதமாதலின் ஏற்கலாமென்பார் ஒரு சாரார். இவையெல்லாம் மடைமாறிய கோட்பாடுகளே என்பதை எனது தொல்காப்பிய ஆராய்ச்சிக்காண்டி கையுரையுள்கண்டு கொள்க.

மற்றுப் பிரிப்பப்பிரியா ஒரு மொழியாக கவரும் அவன், இவன், யாது, யார் முதலியவற்றைப் பகுபதம் என்று சங்கரநமச்சிவாயர் சாதிப்பார் பகுபதம் என்பது பொருளிடம், காலம் சினை, குணம், தொழில் ஆகியவற்றை உணர்த்தும் முதலனிலை யோடு, இடைநிலை, சாரியை விகுதியாகிய இடைச்சொற்கள் புணர்ந்து ஒரு சொல்லாய்ப் பொருள் தரும் பால் காட்டும் பெயர்வினை முதலிய சொற்களையன்றி இரண்டும் மூன்றுமாகநிற்கும் இடைச்சொற் கூட்டத்தையன்று அவன் இவன் என்பவற்றைப் பிரிப்பின் அவை இரண்டும் இடைச்சொல்லாக நிற்கும். இடைச்சொல் பற்றிய இலக்கணத்தைப் பவணந்தியார்.

"வேற்றுமை வினைசாரியை ஒப்புருகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
குறிப்பென் எண்பகுதியான் தனித்தியல்வின்றிப்
பெயரினும் வினையினும் முன்பின் ஓரிடத்து
ஒன்றும் பலவும் வந்தொன்றுவது இடைச்சொல்" என்பார்.

அதனான் அவன், இவன் என்பவை நிறுத்தசொல்லும் குறித்துவரு கிளவியுமா காமையின் இவற்றைப் பகுபதம் எனல் மாறு கொளக் கூறலாக அமையும் அங்ஙனம் பிரித்துப் பகுபதமாகக் கொள்ளுதல் ஒக்குமெனில் நிலம், மலை, கடல், குருவி என்றால்போல் வன நில்+அம் = நிலம், மல்+ஐ = மலை, கட+அல் = கடல், குரு+இ = குருவி. எனப் பிரிக்கப்பெற்றுப் பகுபதங்களாகிவிடும் அவன், இவன் என்பவை ஒரு சொல்லாக்கமாக நிற்றலி னன்றே அ+அன் = அவன் என்பதுபோல இ+அன் = இயன் என்றாகாமல் இவன் என்றாயது. எனவே மொழியாக்க மரபினை உரையாசிரியன்மார் கருதவில்லை என்பது விளங்கும். நன்னூலார் அங்ஙனம்

கருதாமையான்

"சுட்டியா எகர வினாவழி அவ்வை
ஒட்டி ஙவ்வும் முதலாகும்மே"

என்று கூறிச் சென்றார்.

இவர்நோக்குப்படி அங்ஙனம், இங்ஙனம், யாங்ஙனம் முதலியவற்றைப் பிரித்து ஙனம் மொழி முதலாகும் எனக் கொள்ளின். அன்னணம், இன்னணம், என்பவையும் அ+னணம், இனணம் எனப் பிரிக்கப்பெற்று, சுட்டுவினா எழுத்துக்களைப்பற்றுக் கோடாகக் கொண்டு னகரம் அகரத்தொடு கூடி மொழிமுதலாகும் எனக் கொள்ள வேண்டும்.

எழுத்துக்களின் முறைவைப்புப் பற்றிக் கூறுமிடத்து முதலெழுத்து இவ்விரண்டாய் வரல் முறை என்கிறார். உயிருள் ஐ ஔவும் மெய்யுள் இடையினமும் இவ்விரண்டாக வருமா?

எழுத்துக்களின் பிறப்புப் பற்றிய பொதுவிலக்கணம் கூறுமிடத்து

**"நிறை உயிர் முயற்சியின் உள்வளிதுரப்ப
எழும் அணுத்திரள் உரம் கண்டம் உச்சி
முக்குற்று இதழ்நாப் பல் அ(ண்)ணத் தொழிலின்
வெவ்வே றெழுத் தொலி யாய்வரல் பிறப்பே"** என்கிறார்

தொல்காப்பியர் தலைமுதலாய எட்டு உறுப்புகளும் இடமாக அமைந்து அவற்றின் இயல்புகட்கு ஏற்பத் தொழிற்படும் என்றார். அந்நுட்பம் உணராத இவர் இடப்பிறப்பு முயற்சிப் பிறப்பு என வகைப்படுத்திக் கொண்டு உரம், மூக்குகண்டம் உச்சி இவை இடம் என்றும் இதழ் நா, பல், அண்ணம் தொழிற்படும் உறுப்புகள் என்கிறார். உரம் முதலியவை தொழிற்படாமல் அணுத்திரள்கள் எவ்வாறு வாயுறுப்புகளிடம் வரும்? புடைபெயர்ச்சிதான் தொழில் எனின் அண்ணமும் பல்லும் புடை பெயரும் உறுப்புகளா? புடை பெயர்ச்சிதான் தொழில் அல்லது வினை எனக் கொள்ளின். அறிந்தான் உணர்ந்தான் எனவருபவை எவ்வாறு தொழில் வினையாகும். இவற்றைப்பற்றி அவர் கருதவில்லை. உரையாளர்கள் சிந்திக்கவில்லை.

மேலும் உள்வளி துரப்ப எழும் அணுத்திரள் என்பதனான் வளிவேறு அணுத்திரள் வேறு எனக் கருதுகின்றார். மற்றும் தொல்காப்பியர் "தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ" என்பார் அவர்முறை மாற்றிக் கூறியுள்ளதாகக் கருதி இவர் உரம் கண்டம் உச்சி என முறைப்படுத்துகிறார். தொல்காப்பியர் கூறுவதே அறிவியலுக் கொத்தது என்பதை எனது ஆராய்ச்சிக் காண்டிகையுரையுள் கண்டு தெளிக.

பிறப்பிலக்கணம் கூறும் நூற்பாக்களில் குறைகள் இருப்பினும் அவை

பெரிதும் கேடு பயக்கவில்லை சார்பெழுத்துக்களை முதலெழுத்துக்களின் விகாரங்களாக இவர் கொண்டமையின் அவை பற்றிய இலக்கணங்களைப் பிறப்பதிகாரத்திலே கூறிச் செல்கிறார். ஆய்தம் முதலெழுத்துக்களுள் அடங்காமை எண்ணி

"ஆய்தக் கிடந்தலை அங்கா முயற்சி, சார்பெழுத்தேனவும் தம் முதலனைய"

என்று கூறுகின்றார். அதனான் இவரது தடுமாற்றம் புரிகிறது. உரையாசிரியன்மார் சார்ந்துவரலும் ஒரு வகையிற் பிறப்பேயாதலின் இங்ஙனங் கூறிச் சென்றார் என அமைதிகூறுவர். தமிழிலக்கணத்தின் அறிவியல் நெறி சிதைந்து போனதற்குப் பெரும்பான்மையும் ஆளுமையில்லாத உரையாசிரியர்களே காரணமாக உள்ளனர். அடுத்து வரிவடிவம் பற்றித்

"தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்டு
எய்தும் எகரம் ஒகரம் மெய்புள்ளி" என உருவம் என்னும் சொல்லால் வரிவடிவ இலக்கணங்கூறுகின்றார். எல்லா எழுத்தும் தொல்லை வடிவின என்று கூறியபின் ஒகரம் எகரம் மெய் புள்ளி (பெறும்) என்கிறார். எதற்காகப்புள்ளி பெற்றன? என்று கூறவில்லை.

மாத்திரை:- "இயல்பெழும் மாந்தர் இமைநொடி மாத்திரை" என்கிறார் இமைநொடி என்பது உம்மைத் தொகையா, பண்புத்தொகையா, வினைத்தொகையா உரையாசிரியர் உம்மைத் தொகையாக வைத்துப் பொருள் கூறுகின்றனர். இமை என்பது சினைப்பெயரா, தொழிற்பெயரா தொல்காப்பியர் தெளிவாகக் கண், இமை என்று கூறியிருக்கவும் இவர் சுருக்கக் கூறுவதாக எண்ணி முண்டமாக்கி மயங்க வைத்துள்ளார். அடுத்து

"மூன்றுயிரளபு இரண்டாம் நெடில், ஒன்றே
குறிலோ டையெளக் குறுக்கம் ஒற்றளபு
அரை ஒற்று இஉக் குறுக்கம், ஆய்தம்
கால்குறள் மஃகான் ஆய்தம் மாத்திரை என்கிறார்.
மூன்று உயிரளபெனின் "கடலைச் செறாஅஅய் வாழிய நெஞ்சு"

என்பது பிழையாகாதா? ஐகார ஔகாரக் குறுக்கம் ஒரு மாத்திரை என்றதன் குறைபாடு மேல் விளக்கப்பட்டது.

மொழிமுதல் எழுத்துக்கள் :- "பன்னீருயிரும் கசதநபமவயஞங ஈரைந்துயிர் மெய்யும் மொழி முதல் என்பது இவரது இலக்கணம் ஙகரத்தை மொழிமுதலாகக் கூறியது பற்றிய குறைமேற் கூறப்பட்டது. உயிர்மெய்யைச் சார்பெழுத்தாகக் கொண்டு அவை இருநூற்றுப் பதினாறு எனத்தொகை கொடுத்தவர் ஈண்டுப்பத்தே உயிர்மெய்களைக் கூறுவதனான் ஏனையவை மொழி முதலாகா என்றாகின்றது. அடுத்து "அஆஉஊஒஔ யம் முதல்" என்கிறார். இதற்கு உரையாசிரியன்மார் யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம் என

உதாரணந்தருகின்றனர். இவற்றுள் யானை என்பது மட்டுமே தமிழ் யவனர் என்பது. தொல்காப்பியத்திற்குப் பின் ஆக்கம் பெற்ற சொல். ஏனைய வடசொற்கள் இவர் தமிழ் இலக்கணம் கூறுகின்றாரா. வடமொழி இலக்கணங்கூறுகின்றாரா, அற்றன்று இவை தமிழில் பெருவழக்கமாகக் கையாளப்படுதலின் நால் வகைச் சொற்களுள் வடசொல்லும் செய்யுட்குரியவாகக் கொள்ளப் படுதலின் இங்ஙனம் கூறினார். எனின் ராமன் லட்சுமணன், லங்கை, லோபம், ரூபம் என்பவற்றை அப்படியே கொண்டு லகரமும், ரகரமும் மொழி முதலாகும் எனக்கூறலாமே. இவற்றிற்கு ஏன் அகர, இகர, உகரங்களை முன்னொட்டாகச் சேர்க்க வேண்டும்? பின்னர் இவரே வடமொழியாக்கங் கூறுமிடத்து "ரவ்விற்கம் முதலாமுக்குறிலும், லவ்விற்கு முதலிரண்டும் யவ்விற்கிய்யும் மொழி முதலாகி முன்வருமே" என்கிறார்.

இறுதிநிலை எழுத்துக்கள் :- "ஆவி ஞணநமனயரலவழள மெய்சாயும் உகரம் நாலாறும் ஈறே" என்பது இறுதிநிலை எழுத்துக்கள் பற்றிய இவரிலக்கணம் இவர் கொள்கைப்படி குற்றியலுகரம் முதலெழுத்தின் விகாரமாகும். அதனைப்பிரித்துச் சாயுமுகரம் எனக்கூறியது குற்றமன்றே. அற்றன்று அதனைச் சார்பெழுத்துத்தென்று கூறியதனான் பிரித்துக்கூறினார். எனின் உயிர்மெய் எழுத்துக்களைச் சார்பெழுத்து எனக்கூறியவர் அவற்றை எண்ணிக் கூற வேண்டாவா? அற்றன்று உயிர்மெய்யீறும் உயிரீற்றியற்றே என்பதனால் கூறவில்லை எனின். உயிர்மெய்யை ஒரெழுத்தாகக் கூறியதும். அவற்றை சார்பெழுத்து என்று கூறியதும் தவறன்றோ?

இடைநிலை மெய்ம் மயக்கம்

தொல்காப்பியம் மெய்பதினெட்டும் வல்லெழுத்து மெல்லெழுத்து இடையெழுத்து எனக் கூறப்படினும் அவை மொழியுறுப்பாக வருமிடத்து ஒலி மயங்கும் எனவும், அவ்வாறு மயங்கற்குரியனவே உடன்வரும் என்றும் கூறுவாராய் அம்மூவாறும் மெய்ம் மயக்கு - உடனிலை தெரியுங்காலை என அவற்றுள் மயங்குமாறும் உடன் நிற்குமாறும் பற்றி விளக்கிச்சென்றார். அந்நூற்பாக்களின் அறிவியல் நோக்குணராத நன்னூலார்.

> **"கசதப ஒழித்த ஈரேழன் கூட்டம்**
> **மெய்ம் மயக் குடனிலை, ரழ ஒழித்தீரெ**
> **டாகுமிவ் விருபான் மயக்கும் மொழியிடை**
> **மேவும் உயிர்மெய் மயக்கள வின்றே"** என்கிறார்.

இவர்கருத்து. எழுத்துக்கள் ஒன்றோடொன்று இணைந்துவருதலே மெய்ம்மயக்கம் என்பதாகும். அவற்றுள் தமக்கு முன்தாமே நிற்றலை உடனிலை என்றும் வேறு வந்து நிற்றலை வேற்றுநிலை, என்றும் வகைப்படுத்துகின்றார். உயிர்மெய்க்கு அளவின்றே என்கிறார். அப்படியானால் உடனிலை மெய்ம்மயக்கு இரண்டும் ஒற்றாகவே வருமென்பது இவர் கருத்தாகின்றது. இங்ஙனம் தானும் மயங்கி இலக்கணத்தையும் மயக்கியுள்ளமையை இவர்நூல் முழுதினும் காணலாம்.

போலி

போலி என்றால் உண்மைபோல் வடிவத்தால் மயக்குவது தன்மையால் வேறானது என்பது பொருள். தொல்காப்பியம் ஒரு சொல்லின்கன் பொருள் சிதையாமல் ஒரெழுத்திற்கு மாற்றெழுத்தாகப் பிறிதொன்று வரும் என்பதனை இவர் போலி எனக்கருதிவிட்டார். மனம், மனன், நிலம், நிலன், அரசன், அரைசன் என்பவற்றுள் எழுத்துமாறினும் பொருள் மாறாமைகண்டு கொள்க.

பதவியல்

வடமொழியையும் விரசோழியத்தையும் பின்பற்றி ஒரு மொழியாக்கத்தைப் பதவியல் எனப்பெயர் கொடுத்து எழுத்ததிகாரத்திலேயே கூறுகின்றார்.

"எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம் அது பகாப்பதம் பகுபதம் என
இருபாலாகி இயலும் என்ப"

இது பதம் என்பதற்கு விளக்கமும் அதன்வகையும் கூறுகின்றது. 'எழுத்தே' என்னும் ஏகாரம் இவர் கூறும் அறு வகையுள் அடங்கவில்லை. சிறப்புப் பொருளில் வந்துள்ளது. 'என்ப' என்பது வழிநூல் வாய்பாடு. தமிழ்நூல்களுல் இவர்க்கு முன் எவரும் பதவிலக்கணம் கூறியதாகத் தெரியவில்லை ஆதலின் அசைநிலையாகக் கொள்ளல் வேண்டும். 'பொருள்தரின்' என்பதற்குப் "பிறபொருள்தரின்" என உரையாசிரியர் பொருள் கூறுவர். அவர் கருத்துப்படி பெயர் வினை இடை உரி எனத்தம்மை உணர்த்தும் வழியும் பிறபொர்ருள் எனக்கொள்ள வேண்டும் போலும், பதவிலக்கணம் பின்னர்க் கூறப்பெறும் புணரியலுக்கும் சொல்லியலுக்கும் கருவி என்பது வெளிப்படை பதங்களை இவர் ஒரெழுத்தொரு மொழி, தொடர்மொழி என இரண்டே வகையாகக் கொள்கின்றார். உரையாசிரியர் இப்பகுப்பை மெச்சுவர். இது பிறநூற் குற்றங்காட்டல் என்னும் மதம் என்பார் சங்கரநமச்சிவாயர்.

புணர்மொழி இலக்கணம் நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியுமாகப் புணர்தலின் நிலைமொழி வருமொழிச் சொற்களைப் பாகுபாடு செய்து கருவியாக்குதல் இலக்கணநூலாசிரியன் கடமையாகும். அம்முறையில் நிலைமொழியை நோக்குமிடத்து ஓரேழுத்தொரு மொழியோடு வருமொழி புணருமிடத்து புணரியல் நிலை ஒரு வகையாகவும், தொடர்மொழியோடு புணரும் ஈரெழுத்துத் தொடர் முன் ஒரு வகையாகவும் இரண்டற்கு மேற்பட்ட தொடர்முன் ஒருவகையாகவும் புணர்ச்சி இயல்பு வேறுபடுகின்றது. இவற்றை ஊன்றி நோக்கிய தொல்காப்பியர் ஒன்றல்லாதனவெல்லாம் பல எனற்கு ஒக்குமாயினும் மொழி நிலையில் புணரியலை நோக்கிக்கருவி செய்யுங்கால் ஈரெழுத்தொரு மொழிகளின் நிலையை நோக்கி மூன்றாக வகுத்துக் கூறினார். எடுத்துக்காட்டாகக் கல்பெரிது, கடல்பெரிது என்னுமிடத்து மாற்றமில்லை கல்+எறிந்தான், கடல்-எழுச்சி எனவருமிடத்து, ஈரெழுத்துச்சொல் ஒற்று இரட்டுகின்றது. மூவெழுத்து முதலியவை

இயல்பாகின்றன. செழும்வயல் என்னுமிடத்துக் குறுகுகின்றது. செழுவயல் எனக் கெடுகின்றது. உகு என்பது இறந்தகால வினையாகுமிடத்து உகுத்தான் எனவரும். உருகு என்பது உருகினான் எனவரும் மூவெழுத்து முதலாய தொடர்மொழியுள் சில அறன் - அறம், நிலம், நிலன் என மாற்றெழுத்துவரும். ஈரெழுத்து மொழியுளுள்ள மகரம் மாற்றெழுத்தாகவாரா. ஆதலின் தொல் காப்பியர் கருவி கூறுதற்கண் "ஓரெழுத்தொரு மொழி ஈரெழுத்தொரு மொழி இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி உளப்பட மூன்றே மொழிநிலை" என்றார்.

இவற்றை எல்லாம் சிறிதும் எண்ணிப்பாராமல் நன்னூலார் தமிழ் மரபு நோக்கி ஒன்றுபல என்றார். தொல்காப்பியர் வடநூன் மரபு நோக்கி ஒன்று, இரண்டு பல என்றார். எனக்கூறித் தமது அறியாமையைப் புலப்படுத்தினார். சிலர் ஆசிரியர் தொடரல் இறுதி தம்முன் தான்வரின் என்றும், மகரத்தொடர் மொழி மயங்குதல் வரைந்த னகரத்தொடர் மொழி என்றும்" தெளிவாகக் கூறிச் செல்வதை இவர் நோக்கிற்றிலர்.

அடுத்து, தொல்காப்பியர் நெட்டெழுத்தேழே ஓரேழுத்தொரு மொழி என்றும் அவை தனக்கு வாய்ப்பான மெய்களோடு கூடி வரும் என்றும் உணர வைத்தார். நன்னூலார் உயிர்மெய்யெழுத்தைச் சார்பெழுத்தாகக் கொண்டமையின்.

"உயிர் மவிலாறும் தபநவில் ஐந்தும்
கவசவில் நான்கும் யவ்வில் ஒன்றும்
ஆகும் நெடில் நொது ஆம் குறில் இரண்டொடு
ஓரெழுத்தியல் பதம் ஆறேழ் சிறப்பின" என்பார்

வேண்டுமிடத்து உயிர்மெய்களைச் சார்பெழுத்து என்பார். புரியாதவிடத்து "நின்ற நெறியே உயிர் மெய் முதலீறே" என்பர். உரையாசிரியன் மார்க்குச் செக்கும் சிவலிங்கமும் ஒன்றே. அடுத்துப் பகாப்பதம் ஏழும் பகுபதம் ஒன்பதும் எழுத்தீறாகத் தொடரும் என்பார். தமிழில் ஏழெழுத்துப்பகாப்பதம் ஒன்பதெழுத்துப்பகுபதம் எவை எனப்புரியவில்லை. இவர் வடசொற்களை எல்லாம் தமிழாகக் கொண்டமையின், உரையாசிரியன்மாரும் உத்திரட்டாதீ - உத்திரட்டாதியான் என வடசொற்களையே காட்டினார். உத்திராடம் முதலியவை என்று பொருள் தரும் உத்திரரட்டாதி என்பது. எவ்வாறு பகாப்பதமாயிற்றென்பது விளங்கவில்லை. வடமொழியைத் தமிழாகக் கொண்டால் பிரத்தியாகாரம் என்பதனுள் எட்டெழுத்துக்கள் உள்ளன.

பகாப்பதம்

பவணந்தியார் பகாப்பதத்திற்குக் கூறும் இலக்கணம் வருமாறு.

பகுப்பாற் பயனற்று இடு குறியாகி
முன்னே ஒன்றாய் முடிந்தியல் கின்ற
பெயர்வினை இடைஉரி நான்கும் பகாப்பதம். என்பதாகும்.

இதனான், பொன், கண், கால், கை, அடி, முடி, கடல், களிறு, நெய்தல், மருதம், முதலிய சொற்களெல்லாம் இடுகுறிப்பெயர் என்பது இவர் கருத்தாகிறது. மற்றும்

சொற்கள் முதனிலையளவாக நிற்குமிடத்துப் பெயர்வினை, இடைஉரி என்று எப்படித் தெரியும். உதாரணமாகக் கொல் என்பது நால் வகையுள் என்ன சொல், கொல்லன், கொல்லுதச்சு எனவரின் பெயர், கொன்றான், கொல்வான் என்னுமிடத்து வினை. கற்றதனான் ஆய பயன் என் கொல் என வருமிடத்து இடைச்சொல். மேலும் காலத்தொடு புணராதவழி தொழிற்சொற்கள் தொழிற்பெயராவதன்றி எவ்வாறு வினைச் சொல்லாகும். பின்னர் இவரே, நடவாமடிசீ என்பவை வினைப்பகுதி என்றும், ஆறும் தருவது வினையே என்றும் கூறுகின்றார். இங்ஙனங் கூறுதல் மேற்கோள் மலைவு என்னும் குற்றமாகாதா?

மற்று இடைச்சொல்லுக்கு இவர் இலக்கணம் கூறுமிடத்துத் தனித்தியல்வின்றிப் பெயரினும், வினையினும் முன்பின் ஓரிடத்து ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவதிடைச்சொல் என்கிறார். ஈண்டு இடுகுறியாகி முன்னே ஒன்றாய் முடிந்தியல்கின்ற பெயர் வினையிடைஉரி நான்கும் பகாப்பதம் என்கிறார். மேலும் இவர் உரிச்சொற்கு இலக்கணம் கூறுமிடத்து பல்வகைப்பண்பும் பகர்பெயராகிச் செய்யுட்குரியனவாக வரும் என்கிறார். இத்தகைய விபரீதமான இலக்கணநூலை வேறுமொழியிற்காண இயலுமா?

இன்நூற்பாவிற்கு உதாரணம் உரையாசிரியன்மார் கூறுமிடத்து இடைச்சொல் உரிச்சொற்பகாப்பதங்களுக்கு மன், கொல் என்றும், உறு கழி என்றும் காட்டினர். மன்பெறு மரபு - கள்வனைக்கொல் இவன் நலம் உறுவான், நோய்கழிந்தது. எனவருமிடத்து இவை இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாகுமா? அற்றன்று பண்டுகாடுமன், உறுபொருள் எனவருதல் நோக்கிக் கூறினார் எனின்? முன்னே ஒன்றாய் முடிந்தியல்கின்ற என்றது பிழையன்றோ? மற்றுச் செய்கின்றான் என்னும் பகுபதத்துள் செய்+இன்று+ஆன் - என அவை காலப்பொருளும், பாற்பொருளும் தருதல் நோக்கிக் கூறினார் எனின் உண்டான், உண்பான் என்பவை எங்ஙனம் பகுபதம் என ஒருபதமாகும். அவை பகாப்பதங்கள் தொடர்ந்த தொடர் என்றாகிவிடும். பகுபதம் என்னும் பிரிவு குற்றப்படும்.

பகுபதம்

அடுத்து **"பொருளிடம் காலம் சினைகுணந்தொழிலின்**
வருபெயர் பொழுதுகொள் வினைப் பகுபதமே" என்கிறார். பொழுது கொள்வினை எனின் பொழுது கொள்ளாவினை எவை? முதனிலை எனின் அதுமேல் தொழில் என்பதன்கண் அடங்குவதல்லது வினையின் பிரிவாகுமா? அடுத்துப் பகுபத உறுப்புக்கள் கூறுகின்றார். அவை வருமாறு.

"பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியமெப்பதங்களும்" என்கிறார். இவற்றுள் சந்திவிகாரம் என்பவை. கருவியா, செய்கையா? செய்கை எனின் அவற்றை உறுப்பெனல் தருமா? ஆம் எனின் கடைத்தெரு என்பது மூன்று

சொல்லாலாகிய தொடர் எனப்படும். சந்தி பிரிந்தவிடத்து மறையும் புணர்ச்சிவிகாரங்களை உருப்பெனல் பொருந்துமா. அதுமட்டுமன்றி சந்தியில் நிகழும் செய்யுள் விகாரத்தையும் ஓர் உறுப்பாக எண்ணுகின்றார். இங்ஙனம் எண்ணுவதைப் பின்னர்க் காணலாம்.

அடுத்துப் பகுதியின் இலக்கணத்தைக் கூறப்புக்கு "தத்தம் பகாப்பதங்களே பகுதியாகும்" என்கிறார் பகுதி விகுதி, இடைநிலை சாரியை நான்குமே பகாப்பதங்கள்தாமே. இவற்றுள் எது பகுதி, சிவஞான முனிவர் முதனிலை என்பது பாரிசேடத்தாற் பெற்றாம் என்பார். இது மயங்கவைத்தல் என்னும் குற்றமாகாதோ? அடுத்துச் செம்மை, சிறுமை, வெண்மை முதலியவற்றைப் பண்பிற்கா நிலைப்தம் என்கிறார். பண்பிற்பகாநிலைப் பதங்கள் பிற சொற்களோடும், விகுதிகளோடும் புணருமிடத்து ஈறுபோதல் இடைஉகரம் இய்யாதல் முதலியவிகாரங்களை எய்தும் என்கிறார். சிறு வீடு, பெருமழை என்பவற்றைச் சிறுமை வீடு, பெருமை மழை எனப்பிரிப்பின் கருதிய பொருள்தருமா?

ஆசிரியர் தொல்காப்பியர், "உயர்திணை அஃறிணை ஆயிருமருங்கின் ஐம்பாலறியும் பண்புதொருமொழியும் செய்யும் செய்த என்னும் கிளவியின் மெய்யொருங்கியலும் தொழில்தொரு மொழியும் மருவின் பாத்திய" என்றும் புணரியல் நிலையிடை உணரத்தோன்றா" என்றும் கூறியுள்ள அறிவியல் சான்ற இலக்கண நெறியை இவர் காணவில்லை. அல்லது ஏற்கவில்லை என்றாகிறது.

மேலும் பெருவிடு, பெருமரங்கள், பெருநங்கை, பெருநம்பி பெருஞ்சான்றோர் எனவரும் பண்புத்தொகை மொழிகள் விரியுங்கால் ஐம்பாலறியவிரியும் என்பது தொல்காப்பியர் கூறும் விதி அஃதாவது பெரிதாகிய வீடு, பெரியவாய மரங்கள், பெரியளாகிய நங்கை, பெரியராகிய சான்றோர் என விரியும், பவணந்தியார் இலக்கணப்படி பெருமையாஇயாகிய வீடு, பெருமையாகிய மரங்கள் பெருமையாகிய நங்கை என எல்லாம் அஃறிணையாயே விரியும். எனவே நன்னூல் தொல்காப்பியத்தின் வழிநூலன்று என்பதும் அறிவியல் நோக்குடையதன்று என்பதும் விளங்கும்.

அடுத்து வீரசோழிய ஆசிரியர் வடமொழி பாலிமொழி இலக்கணங்களை ஒட்டி வினையடிகளைத் தாதுக்களாக எண்ணித் தொடங்கி வைத்த முறையைப்பின்பற்றி மொழியிறுதிநிலை எழுத்துக்களை வாய்ப்பாட்டு முறையில் அமைத்து வினைப்பகுதிகள் கூறுகின்றார். கூறுமிடத்து ஏவல்வினைகளே பகுதியாக வரும் என்கிறார். அவை வருமாறு.

"நடவாமடி சீ விடு வேவை
நொப் போ வெள உரிஞ் உண் பொருந்திரும் தின்
தேய் பார் செல்வங் வாழ் கேள் அஃகு என்று
எய்திய இருபான் மூன்றாம் ஈற்றவும்
செய்யென் ஏவல் வினைப்பகாப்பதமே" என்பது சூத்திரம்

மொழியிறுதியாக வரும் எழுத்து இருபத்துநான்கனுள் எகரம் அளபெடையாகவன்றி உயிர்மெய்யீறாக வராமையின் அதனைத் தவிர்த்து ஏனை இருபத்து மூன்று ஈறுகளையும் வாய்பாட்டு முறையில் கூறியுள்ளார். இவையே ஏவல் வினையாக நின்று பின்பகுதியாகச் செயற்படும் என்பது கருத்து. ஏவல் வினையாயபின் அது பிறிதொரு முற்றுவினைக்குப் பகுதியாக வரும் எனின் அது பிழையாகும் எனக்கருதி சிவஞானமுனிவர் ஏவல்வினைக்கும், ஏனைவினைக்கும் பகுதியாக வரும் என முட்டுக்கொடுக்கின்றார். பவணந்தியார் கருத்து ஏவல்வினைகளே ஏனைவினைகளுக்குப் பகுதியாகும் என்பதை.

"ஐ ஆய் இகர ஈற்ற மூன்றும், ஏவலின் வரும் எல்லா ஈற்றவும் முப்பால் ஒருமை முன்னிலை மொழியே" என்று வினையியலுள் இவர் கூறுதலால் அறியலாம். ஏவலின் வரும் எல்லா ஈற்றவும் என்றது, "நடவாமபுசீ" என்னும் நூற்பாவைச் சுட்டிக் கூறப்பட்டதே என்பதில் ஐயமில்லை. இங்ஙனம் சிவஞான முனிவர் கட்டும் சப்பைக்கட்டுகளான் அவரது இலக்கண அறிவு மாசு பட்டதாகிவிட்டது. இதுநிற்க. ஈற்றுவினைப்பகுதிக்கு 'வவ்' என்பதனை வாய்பாடாகக் காட்டியுள்ளார். உயிரீறு கூறுமிடத்து வெள என்று காட்டுகிறார். வவ் என்பது வெள என்பதன் போலியாவதன்றி வேறு வினையடியாகுமா. தொல்காப்பியர் வகரம் அவ், இவ், உவ், தெவ் என்னும் நான்கு சொற்களில் மட்டுமே ஈறாக வரும் என்று உணர்த்துகின்றார். தமிழில் வகரஈற்றில் வினை சொற்கள் இது நாள் வரை தோன்றவில்லை. இவரே முன்னர் "அவ்வோடு உவ்வும் வவ்வும் ஔ வோரன்ன" எனப் போலி இலக்கணம் கூறுமிடத்து வரைந்துள்ளார். எது கருதி இவ்வாறு மயக்குகின்றார் என்பது புரியவில்லை. இவ்வளவு பிழைமலிந்த இந்நூற்பாவைச் சங்கரநமச்சிவாயர் பவணந்தி என்னும் புலவர் பெருமான் புகழ்போல உலகமலையாமை உள்ளிட்டபத்துமகோடும் நிறைந்து நிற்கிறது இச்சூத்திரம் என்பார். ஊன்றி நோக்கின் கூறியது கூறல் மாறுகொளக்கூறல், மயங்க வைத்தல் என்பவற்றிற்கு எடுத்துக் காட்டாக இச்சூத்திரம் அமைந்துள்ளமையைக் காணலாம்.

அடுத்து வடமொழியொடு தமிழை ஒப்பு நோக்கித்தமிழ் எழுத்திற்கே சிறப்பாக உரிய எழுத்துக்களைக் கூறுமிடத்து

றனழஎ ஒவ்வும் உயிர்மெய்யும் உயிரளபு
அல்லாச் சார்பும் தமிழ் - பிறபொதுவே என்கிறார் தமிழில் உயிரளபெடை என்பது வேறு வடமொழியில் புலுதம் என்பது வேறு. அது நிற்க. உயிர்மெய் தமிழிற்கே உரிய சிறப்பெழுத்து என்கிறார். உயிருள் பத்தும், மெய்யுள் பதினைந்தும் இருமொழிக்கும் பொதுவென்கிறார். இவை பொதுவாயின் அவ்வுயிர் மெய்களும் இணைந்து அவை எவ்வாறு சிறப்பெழுத்தாகி விடுகின்றன? அதுபோகட்டும் வடமொழியாக்கம் பற்றி விரிவாகக் கூறுமிவர் வடமொழியைப் பயின்றுள்ளார் என்பதில் ஐயமில்லை. வடமொழியில் உயிர் மெய்வடிவங்கள் இல்லையா அல்லது சேர்த்து எழுதப்படவில்லையா, வடமொழியில் உயிர்மெய் வரிவடிங்களை வேறாக எண்ணுவதில்லை. இவர் அதனையும் உணர்ந்தாரில்லை. இதைத்தான் முதற்கோணல் முற்றுங்கோணல் என்கின்றனர்.

புணரியல்

நிறுத்தசொல்லும் குறித்து வருகிளவியுமாக இரு சொற்கள் இணையுங்கால் நிலை மொழியீறும், வருமொழிமுதலும் கூடுதலைப் புணர்ச்சி என்பர். அங்ஙனம் அவை புணருங்கால் இயல்பாயும் திரிந்தும் புணரும். வேண்டுமிடத்துச் சாரியை பெற்று ஆங்ஙனம் புணரும். ஒரு சொல்லாக்கத்தின்கண் பகுதியோடு சாரியை பெற்று அங்ஙனம் புணரும். ஒரு சொல்லாக்கத்தின்கண் பகுதியோடு இடைநிலை சாரியை விகுதிகள் புணர்ந்து ஒருமொழியாக ஆக்கம் பெறுமிடத்துப் புணரியல்விதிகள் மேற்கொள்ளப்படா. அது மொழியாக்க மரபின்படிப் புணரும்.

தமிழ் மொழியில் ஒரு சொல் குறித்துவரு சொல்லொடு தொடருமிடத்து அவை அல்வழி வேற்றுமை வழி என இருதிறனாகக் காணப்படும் வேறு, வேறு விதிகளும் பெறும். வேற்றுமைத் தொடரின்கண் வேற்றுமை உருபுகள் வெளிப்படையாக நின்றுபுணரின் அவற்றை உருபுபுணர்ச்சி என்றும் மறைந்து நின்று புணரின் அவற்றை வேற்றுமைப் பொருட் புணர்ச்சி என்றும் கூறுவர். இனி நன்னூலார் கூறும் புணரியல் பொதுவிலக்கணம் வருமாறு.

> "மெய்யுயிர் முதலீறாம் இருபதங்களும்
> தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
> பொருளிற் பொருந்துழி நிலைவருமொழிகள்
> இயல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே"

இவ்விலக்கணப்படி பகாப்பதம் பகுபதம் இரண்டும் தம்முள் நிலமொழி வருமொழியாக நின்று புணரும் என்றாகிறது. மன், கொல் என்னும் இரண்டு இடைச்சொற்கள் தம்முன் புணர்ந்து தொடர் மொழியாக பொருள்தருமா? கொல்-உம் என்னும் இடைச்சொற்கள் புணரின் கொல்லும் என்றாகும். இவை இடைச்சொற் புணர்ச்சி எனத்தகுமா. அது போகட்டும். இவர் இடைச்சொற்கு இலக்கணம் கூறுமிடத்துத் "தனித்தியலின்றிப் பெயரினும் வினையினும் முன்பின் ஒரிடத்து ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவதிடைச்சொல்" என்கிறார். அது இல்ககணமாயின் ஈண்டுத் "தன்னோடும் பிறிதொடும் இயைவது புணர்ப்பு" என்றது மேற்கொள்மலைவாகாதா? இடைச் சொல் தனித்துப் பொருள்தருமிடத்துப் பெயர் அல்லது வினைத் தன்மையெய்தி அவற்றுள் அடங்குமன்றி இடைச் சொல்லாகவே நில்லா என்பதை இவர் கருதவில்லை.

இனி நிலைமொழி வருமொழி என்னும் இவ்விலக்கணக் குறியீட்டுக்கலைச் சொற்கள் வினைத்தொகையாக நிற்கின்றன. அவை முக்காலத்தினும் விரியும், விரியும் வழி நிலைத்தமொழி நிலைக்கின்ற மொழி, நிலைக்கும்மொழி எனப்பொருள் தருவதன்றி நிற்கும் மொழி எனப் பொருள்தருமா? தொல்காப்பியர் நிறுத்தசொல் என்றும் குறித்து வருகிளவி என்றும் அறிவியல் நோக்கிற் கூறியுள்ள குறியீடுகளை இவர் எண்ணிப்பார்க்கவில்லை. தமிழின் அல்லூழ் நன்னூலார் கூறிச் சென்ற குறியீடுகளையே நாம் பயின்றுவருகின்றோம். அடுத்து அவ்வழி வேற்றுமை வழி பற்றிக் கூறுமிடத்து

"வேற்றுமை ஐம்முதல் ஆறாம், அல்வழி
தொழில் பண்புவமை உம்மை அன்மொழி
எழுவாய் விளி ஈரெச்சம் முற்று இடைஉரி
தழுவுதொடர் அடுக்கு என ஈரேழு" என்கிறார்.

பெயரியலுள் "வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை" என்பார் ஈண்டு ஆறு என்றதற்கும், எழுவாயையும் விளியையும் அல்வழியிற் சேர்த்துக் கூறியமைக்கும் விளிக்கந்தரவில்லை. மற்று வினைத்தொகை முதலிய ஆறினையும் ஈண்டுத்தொடர் மொழி என்கிறார். தொகை இலக்கணங்கூறுமிடத்து, ஒரு மொழிபோல் நடப்பன தொகை நிலைத் தொடர்ச்சொல் என்கிறார். இது மயங்க வைத்தலாகாதோ? அவற்றை விரிக்குங்கால் அவை தொடராகுமாதலின் அங்ஙனம் கூறினார் எனின்? மரக்கால் என்னும் வேற்றுமைத்தொகையை விரிக்குமிடத்து மரத்தாலாகிய கால் என விரியும் அவ்வாறே மதிமுகம் என்னும் உவமத்தொகையையும், பெய்வளை என்னும் அன்மொழி தொகையையும் விரிக்குங்கால் மதியை ஒக்கும் முகம், மதியை போன்ற முகம் எனவும் பெய்த வளைகளை அணித்தவள் எனவிரியும் விரிந்தவிடத்து அவை அல்வழித்தொடர்களாகுமா? எனவே இவர் தொகை மொழிக்கும் தொடர்மொழிக்கும் உரிய வேறுபாடுகளைக் கருதவில்லை என்பதுவே தகும்.

அடுத்து 'தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்' என்கிறார். விகாரம் என்பதும் திரிதல் என்பதும் வேறு வேறுபொருளினவா? தோன்றல் எனின் முன்பு இல்லாமல் பின்புதிதாகத் தோன்றுவதைக் குறிக்கும். கடைத்தெரு என்னுமிடத்து தகரஒற்று தெருவென்னும் தகரத்தின் ஒலிமிகுந்ததன்றிப் புதிய எழுத்தாகுமா. திரிதல் என்பது ஒன்று மற்றொன்றாக மாறுதலைக் குறிக்கும் கல் - கால் எனவரின் பொருள் வேறுபடும். கல்+பலகை - என்பவை கற்பலகை எனத்திரிந்த விடத்துப்பொருள் வேறுபடுமா? கெடுதல் என்பது அழிந்து போதல் புலம் என்பதற்கு அறிவு என்பது பொருள். மகரங்கெடின் புல என நிற்கும். அவ்வழி ஊடு என்பது பொருளாகும். அருள் என்பதில் ளகரம் கெடின் அருஎன்றாகும். மரம்+வலிமை என்பது மரவலிமை எனவரும். மகரம் ஆண்டில்லை எனினும் பொருள்கெடவில்லையே. அதனால் மகரம் மறைந்து நிற்கிறது என்பது கருத்து இலக்கணக்குறியீட்டுச் சொற்களை இங்ஙனம் கவர்பொருள் தருவனவாக அமைத்தல் வழுவன்றோ. முன்னூலாசிரியர் மெய்பிறிதாதல் மிகுதல், குன்றல் எனத்தெளிவாகக் கூறியிருப்பினும் அவற்றைவிட்டு இவற்றைக் கூறுகிறார். இக்குறியீடுகளின் விளக்கத்தை எனது தொல்காப்பிய ஆராய்ச்சிக்காண்டிகையரையுள்கண்டு கொள்க.

இனி மெய்யீற்றுப் புணரியலுள் "உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" உயிரும் மெய்யும் இணைவது இயல்பெனின் அதனைச்சார்பெழுத்து எனக் கொண்டது. முரணாகின்றது.

அடுத்து உருபுகள் அடிப்படையிலும் காலங்களின் அடிப்படையிலும் சொற்களைப் பெருக்கி அவை இத்தனை எனக் கூறும் வீரசோழியத்தை (பாலி மொழி மரபு)ப்பின் பற்றித் தமிழில் வேற்றுமை உருபுகள் நாற்பது என்கிறார்.

அச்சூத்திரம் வருமாறு.

"ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பலவென
வருபெயர் ஐந்தொடு பெயர் முதலிரு நான்கு
உருபும் உறழ்தர நாற்பதாம் உருபே" என்பதாகும்.

இந்நூற்பாவின்படி ஒருவன் முதலிய ஐவகைப் பெயர்க்கண்ணும் வருபவை வேறு, வேறு என்றாகிறது. இன்றேல் நாற்பது என்னும் தொகை பிழையாகும் மற்றும் இவர் பெயரியலுள் வேற்றுமை எட்டு என்று கூறியதன்றி உருபுகள் எட்டு என்று கூறவில்லை. "எழுவாய் வேற்றுமை திரிபில் பெயரே" என்கிறார். மற்றும் ஆண்டு மூன்றாவதன் உருபு ஆல், ஆன், ஒடு என்றும் ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும் பன்மைக்கு அவ்வும் என்றும் ஏழாம் வேற்றுமைக்கு இருபத்தெட்டும் உருபுகளாகக் கூறுபவர் அவற்றை எல்லாம் பெருக்காமல் ஒரு வேற்றுமைக்கு ஒரே உருபு போலவும் கூறுகின்றார். அடுத்து

பதமுன் விகுதியும் பதமும் உருபும்
புணர்வழி ஒன்றும் பலவும் சாரியை
வருதலும் தவிர்தலும் விகற்பமுமாகும்.

இந்நூற்பாவின்படி பதம் என்பது வேறு விகுதி - உருபு இவை பதமல்ல வேறு என்றாகிறது. முன்னர் இடை உரிநான்கும் பகாப்பதம் என்றதனொடு இது முரணாகும். இது நிற்க முன்னர்ப் பகுபத இலக்கணம் கூறுமிடத்து விகுதி முதலிய உறுப்புகள் புணர்ந்து நிற்கும் பதம் பகுபதம் என்றார். அது மேலும் எந்த விகுதிகளோடு புணரும்? அற்றன்று ஈண்டுப்பதம் என்றது பகாப்பதத்தை எனின் உருபினை ஏற்கும் பகுபதம் நீங்கி விடுமன்றோ?

(பெயரியல்) பெயர்

முதற்கண் சொல் என்பதற்குப்பொதுவிலக்கணம். கூறுகின்றது அது.

ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி என்றா
இருதிணை ஐம்பாற் பொருளையும் தன்னையும்
மூவகை இடத்தும் வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே. என்பதாகும்

இந்நூற்பாவின் முதல் அடி சொல்வகை யாவதன்றிச் சொல்லி லக்கணமாகாது பிற்கூறப்படல் வேண்டும். இவர் சூத்திரத்திற்கு வடமொழியோ, தொல்காப்பியமோ கூறும் இலக்கணத்தைக் கடைப் பிடிக்கவில்லையாதலின் இதுவியப்பன்று. மற்று தொடர்மொழி என்பது இரண்டு முதலாகிய சொற்களின் கூட்டம் அது எவ்வாறு சொல்லின் வகையாகும்? பொது என்றது எவற்றிற்குப் பொது? முன்இரண்டற்கும் என்று கூறி எட்டு என்பது எண்ணைக் குறிக்குமிடத்து ஒருமொழி எள்+து எள்ளைத்தின்னு என்று பொருள் தருமிடத்துத் தொடர்மொழி என உரையாசிரியன்மார் உதாரணம் காட்டுகின்றனர். எட்டு என்பது தனிமொழி.

என்+து என்பவை புணர்மொழி புணர்ந்தவழி நிற்கும் வரிவடிவைக்கருதி இவ்விலக்கணம் கூறப்பட்டுள்ளமை புலனாகும் நன்னூல் பொருவடிப்படையில் கூறுப்பெற்ற இலக்கணநூல் அன்று என்பது இதனானும்புலனாகும். சாத்தன் என்பது பொதுப்பெயர் அது வந்தான் என முடியின் உயர்திணை, வந்தது என முடியின் அஃறிணை அது வினைகாரணமாக வேறுபடுதலின் பொது எனப்பட்டது. சாத்தன் என்னும் சொல் வேறுபடாது. எனவே பொது என்பதற்குரிய இலக்கணப் பொருளை இவர் அறியவில்லை என்பது விளங்கும். இங்ஙனம் நோக்கின் தொடர்மொழிகளைப் பலவாகப் பிரித்துத் தனித்தொடர் பொதுத்தொடர் எனப்பகுக்க நேரிடும். அஃதாவது அவன்வந்தான் என்பது தனித்தொடர் அவன் மலையான் என்பது பொதுத்தொடர் எவ்வாறெனின் அவன்மலை நாட்டிலிருப்பவன் என்பது ஒரு பொருள் அவன் போரிடமாட்டான் என்பது ஒரு பொருள் மற்றும் பொதுத்தொடரைச் சிலபொருள் பொதுத்தொடர் பலபொருள் பொதுத்தொடர் எனவும் பகுக்க நேரும் அஃதாவது அருமபுதல் - தொழிற்பெயர் அரும்+புதல், அரியபுதர் இது சிலபொருள் பொதுத்தொடர். குன்றேறாமா - குன்றேறாமா, குன்று ஏறாமா குன் தேறாமா குன்று ஏறு ஆ மா எனின் பலபொருள் பொதுத் தொடர் நகைப்பிற்குரிய இலக்கணம் பலவாறு வரும் போலும்.

அடுத்து நேமிநாத நூலைப் பின்பற்றித் திணை இலக்கணம் கூறுகின்றார். அது வருமாறு

மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை என்பதாகும்

மக்கள் தேவர் நரகர் உயர்திணை என்பதனான் திணை என்பதற்கு இனம் அல்லது சாதி என்பது இவர் கொண்ட பொருள் என்பது விளங்கும். இம்மூவரும் உடம்பு, பண்பு, தொழில், தன்மை முதலியவற்றால் ஒற்றுமையுடையவர் என்பது கருத்து எனத் தெரிகிறது. இதனை இவர் பின்னர் உரியியலுள்

"வானவர் மக்கள் நரகர் விலங்குபுள்
ஆதி செவியறி வோடையறி வுயிரே" என்பதனால் அறியலாம். இதனான் தேவர், நரகர் என்னும் இனத்தார் இவ்வுலகிலோ வேறு உலகிலோ குடித்தனம் செய்து வாழ்கின்றார்கள் என்பதும், கன்மவினைகட்கு ஏற்பப்பிறப்பெடுத்து மடிகின்றார்கள் என்பதும் இவர் கொள்கையாதல் புலப்படும்.

பரம்பொருளின் பல்வேறு பேராற்றலை மக்கள் வடிவிலும் சிறிதுவேறாகவும் உருவகம் செய்து மக்கள் கூறும் தெய்வங்களை இவர் மக்களினத்தொடு சேர்த்து உயர்திணை என்கிறார். எழுத்ததிகாரக் கடவுள் வாழ்த்துள் நான்முகன் என்றும், சொல்லதிகாரக் கடவுள் வாழ்த்துள் அச்சுதன் என்றும் இவர் கூறும் கடவுளர் எல்லாம் மக்களை ஒத்த இனத்தவரே ஐயறிவுடையவரே என்பது இவர் இலக்கணத்தாற் பெறப்படுகின்றது. புராணங்களில் தேவர் நரகர் என்பவரினின்றும் வேறாகக் கூறப்படும் கந்தருவர், கின்னரர், இயக்கர், பூதர், பேய்க்கணம், கூளிச்சுற்றம் முதலிய சாதியார் எந்த இனத்தை எந்தத் திணையைச் சேர்ந்தவர் என இவர் விளக்கவில்லை.

தத்துவ அடிப்படையில் உருவகம் செய்துக்கொண்டு தெய்வங்களை ஆண்பாலராகவும், பெண்பாலராகவும் வழங்குதல் இலக்கியவழக்கு என்பதனை, பண்டைத்தமிழிலக்கண நூலர் நன்கு உணர்ந்து கூறியவற்றைத் தெரிந்த தொல்காப்பியர் "உயர்திணை என்மனார்" மக்கட்சுட்டே "அஃறிணை என்மனார் அவரலபிறவே" என்றும் தெய்வம் சுட்டிய பெயர்நிலைக்கிளவி "உயர்திணை மருங்கின "பால் பிரித்திசைக்கும்" என்றும், காலம் உலகம் முதலியவை உயரிதிணை மருங்கின் நிலையினவாயினும் அஃறிணை மருங்கின்கிளந்தாங்கியலும்" என இலக்கண வரையறை செய்து போந்தார். இவற்றையெல்லாம் கருதாமல் சமயகோட் பாட்டிற்கே முதன்மைதந்து நூல்செய்து போந்தார் இவர்.

திணைப்பொருள் பற்றிச் சொற்பாகுபாடு செய்யுமிடத்து ஆண்,பெண்,பலர், என உயர்திணைப் பால்பாகுபாடு கூறுகிறார். ஆண்பால், பெண்பால் என்னும் சொற்கள் உயர்திணையை வரைந்து சுட்டுமா? தொல்காப்பியம், ஆடூஉவறிசொல், மகடூஉஅசொல், பல்லோரறியும் சொல் எனப்பாகுபாட்டு பெயர் கூறியிருப்பதனை இவர் சிந்திக்கவில்லை. அடுத்து

"பெண்மை விட்டு ஆண் அவாவுவபே டாண்பால்
ஆண்மைவிட்டல்லது அவாவுவ பெண்பால்
இருமையும் அஃறிணை அன்னவுமாகும்" எனப்பேடுபற்றிய இலக்கணங்கூறுகிறார். ஆண்மை அவாவி ஆண்பாலையும், பெண்மை அவாவிப் பெண்பாலையும் சார்ந்து வருமாயின் அவரைப்பேடு என்று கூறுவது பொருந்துமா? பேடு என்பது ஒருவகை இனம் அஃது இருவகைப்படும். ஒன்று ஆண்மை அவாவும் பேடு மற்றொன்று பெண்மையவாவும் பேடு என்று கொள்ள வேண்டும் போல இந்நூற்பா அமைந்துள்ளது. அஃறிணை அன்னவுமாகும் என்பதனால் உயர்திணைப்பேடு, அஃறிணைப்பேடு எனப்பேடு இருவகைப்படுமென்று ஆகின்றது.

அடுத்துச் சொல் வகைகளைக் கூறுமிடத்து "இயற்சொல் திரிசொல் இயல்பிற் பெயர்வினை என இரண்டாகும் இடையுரியடுத்து நான்குமாம் திசை வடசொல் அணுகாவழி" என்கிறார். இந்நூற்பாவிற் கூறப்படும் இயற்சொல் திரிசொல் என்பவை பெயர்வினை என்பதற்கு அடைமொழிகளா? சொற்பாகுபாடுகளா? திசைவடசொல் அணுகாவழி நான்குமாம் எனின் அணுகியவழி ஆறு எனப்பொருள் தரும். இந்நூற்பாவில் சொல்வகை இத்தனை என வரையறை செய் இயலுமா? அடுத்துப் பெயர்ச்சொல் இலக்கணம் பின்வருமாறு கூறுகின்றார்.

"இடுகுறி காரண மரபோ டாக்கம்
தொடர்ந்து தொழில காலந் தோற்றா
வேற்றுமைக் கிடனாய்த் திணைபால் இடத்தொன்று
ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே"

ஆக்கம் என்பது காரியம் காரணமின்றிக் காரியமில்லை. மற்று இடுகுறியாக்கம் என்பது முரண்பாடன்றோ? அடுத்து ஆண்மைப்பெயரிலக்கணம்

"கிளை எண் குழூ முதற் பல்பொருள் திணை . . . . . .
ஆண்பாற் பெயராகுமென்ப"

இந்நூற்பாவான் பொன்னன், சாத்தன், மறவன், துறைவன், கொண்கன் புறத்தன், காரான், மாசியான், தச்சன் என னகர ஈற்றான் வருவனவெல்லாம் உயர்திணை ஆண்பாற் பெயராகின்றன என்பது "கிளந்த கிளை முதல் உற்றரவ்வீற்றவும்" என்னும் நூற்பாவான் புலனாகிறது. அவ்வாறாயின் ஆண்மைப்பொதுப்பெயர் எவ்வாறு வரும்? இவ்வினா பெண்பாற்பெயர் இலக்கணத்திற்கும் ஒக்கும். "அவற்றுள் ஒன்றே இருதிணைத்தன் பாலேற்கும்" என்பதற்குரிய ஆண்பாற் பெயர் பெண்பாற் பெயர்கள் யாவை? அடுத்து

"கிளந்த கிளை முதல் உற்றரவ் வீற்றவும்
கள்என் ஈற்றின் ஏற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதியாகும்" இந்நூற்பாவிதிப்படிக் கள்ளீற்றான் மட்டும் வரும் உயர்திணைப் பலர்பாற் பெயர்கள் யாவை? பின்னர்ப்பலவின் பாற்பெயர் பற்றிய இலக்கணத்துள் கள்ளிறு மொழியும் என்பதனால் வரும் அஃறிணைப் பலவின் பாற்பெயர்கள் யாவை? கொற்றர்கள், அரசர்கள், தேவர்கள் என்னும் சொற்களில் உயர்திணைப்பன்மை சுட்டுவது அர்விகுதியா கள்விகுதியா? அரசுகள், மனுக்கள் தேவுகள் என்பவை உயர்திணையை வரைந்து சுட்டுமா? அடுத்து

"முன்னர் அவ்வொடு வருவையவ்வும்
சுட்டிறு வவ்வும் கள்ளிறு மொழியும்" என்னும் விதிப்படி கள்ளீறு பெற்றுவரும் பறவைகள், யானைகள், மரங்கள் எனவும் வருவன பலவின் பாற்பெயர்கள் எனின் "பால்பகா அஃறிணைப் பெயர்" என்பவை யாவை. இங்ஙனம் இலக்கணங் கூறுதல் மயங்க வைத்தலாகாதா.

"அவற்றுள் ஒன்றே இருதிணைத்தன்பால் ஏற்கும்" என்னும் விதிப்படி ரவ்வீறு பெற்ற பெயர்கள் அஃறிணைப்பெயர். முத்து இது, முத்து இவை என்றும் உயிர்திணையுள் இருபெயராக முத்து இவன், முத்து இவள் எனவரும் இது அஃறிணையில் ஒருமைக்கும் பன்மைக்கும், உயர்திணையுள் ஒருமைக்கும் வருபவை இந்நூற்பாவுள் அடங்குமா? அடுத்து

யான், நான், யாம், நாம் என்னும் தன்மைப்பெயர்கள் இருதிணைப் பொது என்கிறார். பின்னர்க் "கேட்குந போலவும் கிளக்குந போலவும் இயங்குந போலவும் இயற்றுந போலவும் அஃறிணை மருங்கினும் அறையப்படுமே" என்கிறார் இதனான் அஃறிணைப் பொருள்கள் கேளாகிளவா என்பது பெறப்படும் இது முரணன்றோ?

வேற்றுமை

வேற்றுமை இலக்கணம் தொடர்மொழிகளில் வரும் பெயர்ப்பொருள் எய்தும் வேறுபாடுகளைப் பற்றிக் கூறுவது ஆதலின் அவ்வழித்தொடருள் சொற்கள் ஆக்கம் பெறுவதைப் பற்றிக் கூறியபின் தொல்காப்பியர் கிளவியாக்கத்திற்குப்பின் மூன்று இயல்களில் வேற்றுமை பற்றிய இலக்கணங்களை வகுத்துக் கூறுகிறார் பவணந்தியார் வரிவடிவு அடிப்படையில் இலக்கணங் கூறுகின்றவர் ஆதலின் பெயர்ச்சொற்கள் தாமே உருபேற்கின்றன எனக்கருதிப் பெயரியலுள் ஒருபிரிவாக வேற்றுமை இலக்கணம் கூறுகிறார். வினையும் வினைக்குறிப்புகளுமே பெயர்ப்பொருளை வேறுபடுத்தும என்பதனையோ உருபுகள் திரிபின்றி உணர்த்தவரும் அடையாளங்கள் என்பதனையோ இலக்கணம் கற்பிக்கும் ஆசிரியன்மார் அறியாமையான் நன்னூலார் செய்த பெரும் பிழையைக் கருதாமையோடு பாராட்டவும் செய்கின்றனர். இனிப் பவணந்தியார் கூறும் வேற்றுமைப் பற்றிய இலக்கணத்தைக் காண்போம்.

"ஏற்கும் எவ்வகைப்பெயர்க்கும் ஈறாய்ப் பொருள் வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை" என்பது வேற்றுமை பற்றிய பொதுவிலக்கணம். கனி உண்டான் என்னும் தொடர் இரண்டாம் வேற்றுமைத்தொடர் கனி செயப்படுபொருள் இவ்வாக்கியத்தில் ஐகாரஉருபுஇல்லை. பின்னர் இத்தொடருள் கனி என்னும் சொல் ஐகார உருபை ஏற்றுநிற்கின்றது. வினைமுடிபைச் செய்வன உருபு என்பது அறிவியல் நோக்கின்மையை உணர்த்தும் மற்றும் "ஈறாய்ப்பொருள் வேற்றுமை செய்யும்" எனின் முதல் வேற்றுமைக்கு ஈறாய் வரும் உருபு எது?

அடுத்து இவ் எட்டு வேற்றுமை உருபுகளைக் கூறுமிடத்துப், பெயரே ஐ ஆல் குஇன் அதுகண் விளியென்றும் அவற்றின் பெயர்முறை" என்கிறார் இதனான் பெயர் எழுவாய் வேற்றுமை உருபு என்றாகின்றது அவ்வாறாயின் "ஏற்கும் எவ்வகை பெயர்க்கும்" என்பதனுள் உள்ள பெயர் என்பது யாது? அடுத்து நீயிர் நீவிர் நான் எழுவாயலபெறா என்கிறார். இவைபெறும் எழுவாய் உருபு யாது? அடுத்து "எழுவாய் உருபு திரிபில் பெயரே" என்கிறார் இதனான் பெயர்தாம் எழுவாய் உருபாக நின்று பிற உருபுகளை ஏற்கும் ஏற்குமென உணர்கின்றார். இதனை ஆறன் உருபேற்கும் அவ்வுருபே" என்பதனான் தெளியலாம். இவர் சரியாகச் சொன்ன இவை இரண்டு நூற்பாக்களுக்கும் சிவஞானமுனிவர் தவிர்ந்த உரையாசிரியன்மார் பிழையாக உணர கூறிச்சென்றனர். அடுத்து,

இரண்டாவதன் உருபு ஐயே அதன் பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதியாகும். என இரண்டாம் வேற்றுமை பற்றிக் கூறுகின்றார் அதன் என்னும் சுட்டு இரண்டாவது என்பதைச் சுட்டுகிறதா ஐ என்பதனைச் சுட்டுகின்றதா? மற்று ஐந்தாம் வேற்றுமை இலக்கணம் கூறுமிடத்து "நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப்பொருளே" என்கிறார் இரண்டற்கும் வேறுபாடு யாது.

உடைமை இரண்டாம் வேற்றுமைப்பொருளாயின் ஆறாம் வேற்றுமையாகக் கூறும் கிழமைப் பொருள் என்பது யாது. உருபுகளே வேற்றுமை செய்யும் எனத்தவறாகக் கொண்டமையான் உருபு வருமிடங்களில் எல்லாம் வரும் பொருள்களை வேற்றுமைப் பொருள்களாகக் கூறிச்செல்கிறார். அடுத்து

மூன்றாவதன் உருபு ஆல் ஆன் ஒடு ஓடு
கருவி கருத்தா உடன் நிகழ்வதன் பொருள் என மூன்றாம் வேற்றுமை இலக்கணங்கூறுகின்றார். ஆல் ஆன் என்பனவும் ஒடு ஓடு என்பனவையும் வேறு வேறு பொருளினவா? இதனானும் வரிவடிவங்களின் அடிப்படையிலேயே இவர் இலக்கணம் கூறுகின்றார் என்பது விளங்கும். வேற்றுமைகள் எட்டு என்பதற்குக் காரணம் ஒவ்வொன்றும் வேறுபடுதலானன்றே. அவ்வாறாயின் கருவி, கருத்தா உடன்நிகழ்வு என்னும் மூன்று வேற்றுமைகளை ஒருவேற்றுமையாகக் கூறியது பொருந்துமா? கருத்தாமுதல் வேற்றுமை என மேற்கூறப்பட்டது. ஈண்டும் கூறப்படுகின்றது. ஒரு பொருளே இருவகையாக வேறுபடுமா? இத்தவறுகளைத் தொல்காப்பிய உரையாசிரியன்மாரும் செய்து போந்தனர் இன்றைய வரையில் இத்தவறுகளே பயிற்றுவிக்கப்படுகின்றன.

இனி இதன்கண்கருத்தா என்றது வினை முதலா, கருவியா? கருவி எனின் விதந்து கூறியதனாற் பயனில்லை விளங்குதற்கு எனின் கருவி வேறுபாடுகளை எல்லாம் கூறாமை குன்றக்கூறலாம். மற்று உடனிகழ்ச்சி என்பது வேற்றுமைப் பொருளாகுமா? கண்ணன் கனியை உண்டான் என்னுமிடத்து ஐயுருபு கனியை செயப்படு பொருள் என உணர்த்தும். கனி செயப்படுபொருளாக வேறுபடுகின்றது. கொற்றனோடு சாத்தன் வந்தான் என்னுமிடத்து ஒடு கொற்றனைச் செய்த வேற்றுமை யாது? உடன்வருவோனாக வேற்றுமை செய்தது எனின் சாத்தனும் உண்டான் என்னுமிடத்து கொற்றனும் உண்டான் என்பது பொருள். கொற்றன் வேற்றுமைப் பொருளா, உம் வேற்றுமை உருபா. அவருள் இவனே அரசன் என்னுமிடத்து ஏகாரம் வேற்றுமை உருபா. யான் அவனோடு போரிடேன், கோலொடு நின்றான் இரவு என்னுமிடங்களில் ஒடு உடனிகழ்ச்சியா? இவை எல்லாம் மூன்றாம் வேற்றுமையாகுமா. இதற்கெல்லாம் காரணம். அதனொடியைந்த ஒருவினைக்கிளவி, வேறுவினைக்கிளவி, ஒப்பல்ஒப்புரை எனத் தொல்காப்பியம் கூறும் இலக்கணத்தின் செம்பொருள் உணராமையேயாம். இவை மூன்றும் காரணப் பொருளில் நிற்பதை உணராமல் உரையாசிரியர் உடனிகழ்ச்சிப் பொருள் எனக் கூறினமையின் நேர்ந்தமையாகும். அடுத்து

"நான்காவதற் குருபாகும் குவ்வே
கொடை பகை நேர்ச்சி தகவது வாதல்
பொருட்டு முறையாதியின் இதற் இது எனல் பொருளே"
என நான்காம் வேற்றுமைக்கு இலக்கணங் கூறுகிறார். கருவூருக்கு மேற்கு மருவூர் என்னுமிடத்து உருபுகாரணமாக இத்தொடர் நான்காம் வேற்றுமை ஆகுமா? பொருட்டு என்பது பொருளா சொல்லுருபா? அடுத்து

"ஐந்தாவது தனுருபு இல்லும் இன்னும்
நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப்பொருளே" என ஐந்தாம் வேற்றுமைக்கு இலக்கணங் கூறுகிறார். நீங்கல் ஒப்பு என்பவற்றை மேல் இரண்டாவதற்கும் பொருள் என்றார் உண்மையாக இவை எதற்குரியவை? இல் இன் என்பவை வேறு வேறு உருபுகளா? உரையாசிரியன்மார் ஒப்புப் பொருளுக்கு உதாரணம் காக்கையிற் கரிது களம்பழம் எனக்காட்டுகின்றனர். காக்கையை ஒக்கும் கருநிறத்தது களம்பழம் எனப்பொருள் கூறுவர். 'இன்' என்பது ஒப்புப் பொருள்தருமிடத்து இன்ன என்னும் உவமச் சொல்லின் கடைக்குறையாக நிற்கும் உவம உருபாவதன்றி ஐந்தாம் வேற்றுமை உருபாகாது. காக்கையைக் காட்டிலும் கரியது களம் பழம் என எல்லையாகிய உறழ்ச்சிப் பொருள்தரின் அஃது ஐந்தாவதன் உருபாகும் இவர் சொற்பொருள் வேறுபாட்டினைக் கருதவில்லை என்பது இதனானும் போதரும். அடுத்து

"ஆறன் ஒருமைக்கு அதுவும் ஆதுவும்
பன்மைக் கவ்வும் உருபாம்" என்கிறார் ஏனைய வேற்றுமை உருபுகளுள் ஒருமை பன்மை உண்டா? உருபிடைச்சொல் விகுதியைப் போல் பால்காட்டுதல் தமிழ் மரபா? மற்று அது ஆது என்பவை பொருள் வேறுபட்டனவா? மன்னவன் மக்கள் என்புழி மன்னவனமக்கள் என்று வருமா. அ என்பது அது உருபின் கடைக்குறையாவதன்றி வேறு உருபாகுமா? உயர்திணை உடமைப்பொருட்கள் தொகைமொழியாக வருமிடத்து விரிப்புழி அது என்னும் உருபுவிரியாது. குவ்வுருபு விரியும் என ஆசிரியர் வேற்றுமை மயங்கியலிற் கூறும் விதியின் நுட்பத்தை இவர் காணவில்லை போலும்.

அடுத்து "ஏழன் உருபுகண்ணாதியாகும்" என்று கூறிப்பின் கண்கால் கடையிடை . . . . இடப்பொருள் உருபே என்கிறார். உருபிற்கும் உருபின் பொருள்படவரும் சொல்லுருபுகளுக்கும் உரிய வேறுபாட்டினை இவர் கருதவில்லை அடுத்து

"எட்டனருபே எய்து பெயரீற்றின்
திரிபு குன்றல் மிகுதி அயல் திரிபு" என இலக்கணம் கூறிய பின் அவற்றை விரித்துக்கூறுதல் மிகைபடக் கூறல்ன்றே? அடுத்து

"துவ்வொடு வினாச்சுட்டுற்ற னளர
வைதுத்தாம் தான் இன்னன விளியா" என்கிறார்.

வினாவும் சுட்டுமல்லாத தமன்தமர் முதலியவற்றை எடுத்துக்கூறாமை குன்றக்கூறலாகாதா? அவை எல்லாம் இன்னன என்பதனால் அடங்குமெனஅமைதி கொள்வோம். மற்றும் பல்வேறு நிலையில் வரும் வினைகள் காரணமாக வேற்றுமைப் பொருள் மயங்கிவரும் வேற்றுமைப் பொருள் மயக்கம் பற்றி இவர் வாயே திறக்கவில்லை திறப்பின் இவர்தம் வேற்றுமைக் கொள்கை வழுவாகி விடும். என்பதை இவர் நன்குணர்ந்து உருபுமயக்கம் பற்றி ஒருநூற்பாவை அதனையும் ஆசிரிய வசன மாகக் கூறித்தப்பித்துள்ளார்.

வினையியல்

"செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே" எனவினைச் சொல்லின் பொதுவிலக்கணம் கூறுகின்றார். அதன்வகை கூறுமிடத்து, அவைதாம், முற்றும் பெயர்வினை எச்சமுமாகி ஒன்றற்குரியவும் பொதுவுமாகும் என்பர். அவற்றை விரித்துக் கூறுமிடத்து முற்றுவினை இலக்கணத்தை

"பொதுவியல் பாறையும் தோற்றிப் பொருட்பெயர்
முதலறு பெயரலது ஏற்பிலது முற்றே" என்றும் பெயரெச்சத்தின் இலக்கணத்தை "காலமும் செயலும் தோன்றிப் பாலொடு செய்வதாதி அறுபொருட் பெயரும் எஞ்சநிற்பது பெயரெச்சம்மே" என்றும் வினையெச்சத்தின் இலக்கணத்தை "தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை ஒழியநிற்பது வினையெச்சம்மே" என்றும் கூறுகின்றார்.

இனி "உண்டான் உறங்க ஒழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம் கண்டான் சுவைகொள்கரும்பே சகல கலா வல்லியே" என வருமிடத்து உண்டான், ஒழித்தான், கண்டான் என்பவை இவர்கூறும் ஆறும் தருதலின் ஈண்டு இவை வினைச்சொற்கள் ஆகின்றன. இவ்வகை வினையாலணையும் பெயர்களை நீக்கும் பொருட்டுத் தொல்காப்பியர் "வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது நினையுங்காலைக் காலமொடு தோன்றும்" என வினைக்குறிப்பையும் அடக்கி இரண்டே கூறாக இலக்கணம் கூறித் தொழில் நிகழ்ச்சிக்கு அடிப்படைகளை வினையே செய்வது . . . ஆயெட்டென்ப தொழில் முதனிலையே" எனக்கூறினார். அச்சூத்திரங்களின் அறிவியல் திண்மைகளைக் கருதாது இவர்தாம் வேண்டியவாறு இலக்கணங்கூறி மயங்க வைக்கிறார். இது நிற்க.

"பொருட்பெயர் முதல் அறுபெயரலது ஏற்பில முற்றே" என்கிறார். கண்டேன் யான், கண்டனை நீ, கண்டான் அவன் என மூவிடப்பெயர்களோடு முடிவன இவர் நூற்பாப்படி முற்று வினையாகுமா? மற்றுப் பெயரெச்ச நூற்பாவும் வினையெச்ச நூற்பாவும் காலமும் தொழிலும் தோன்றிப் பால் ஒழிய நிற்கும் என்கிறார். அதனான் அவை இடஞ்சுட்டும் என்றாகிது. இவைநிற்க.

"பொருள் முதலாறினும் தோற்றி முன் ஆறனுள்
வினை முதல் மாத்திரை விளக்கல் வினைக் குறிப்பே" என வினைக்குறிப்பு இலக்கணங் கூறுகின்றார். ஏனைந்தான் என்புழிக்குடம் செயப்படு பொருளாக வந்து இயையுமாறு போலப் பொன்னன் என்புழிப் பொன் உடைமைப் பொருளாக விளங்கி நிற்கின்றது. வினைமுதல் மாத்திரை விளக்கும் எனல் குன்றக் கூறலன்றே?

மற்று, பெயரெச்சத்தை வினைவகைமூன்றனுள் ஒன்று என வினைச்சொல்லாகவே கூறுகின்றார். 'உண்ட சாத்தன்' என்னும் பெயரெச்சத் தொடரின் ஏழுவாய்யாது. இவன் அல்லது அவன் என்னும் சுட்டுப் பெயர் என்பதில் ஐயமில்லை. இவன் உண்டசாத்தன் என்புழி உண்ட என்பதன் முற்றியநிலையாது. உண்டான் எனின். வினைமுற்று அது எச்சமாயின் உண்டு என எச்சமாகுமேயன்றி உண்ட எனவராது. உண்ட என்பது உண்டவன் என வினையாலணையும் பெயராகத்தான் முற்றும் இவன் உண்டவனாகிய சாத்தன் என்பது அத்தொடரின் பொருளாகும். எனவே பெயரெச்சம் என்பது வினையாலணையும் பெயரின் குறையேயன்றி வினைமுற்றுச் சொல்லின் குறையன்று. இதனை நன்குணர்ந்த தொல்காப்பியர் வினைமுற்றின் குறையை வினைஎஞ்சு கிளவி என்றும் வினையாலணையும் பெயரினது குறையைப் பெயரெஞ்சுகிளவி எனவும் விளங்க ஓதினார். இத்தமிழ் நெறி மரபுணராத நன்னூலார் பெயரெஞ்சு கிளவியை வினையின் வகை எனக் கூறிச்சென்றார்.

பொதுவியல்

"உருபும் வினையும் எதிர் மறுத்துரைப்பினும்
திரியாதத்தம் ஈற்றுருபின் என்ப" என்கிறார் செய்யுமென்னும் முற்றுத் திரியாமல் எதிர்மறையில் வருமா? செய்து என்னும் எச்சம் செய்யாது என வருதலேயன்றிச் செய்யாமே, செய்யாமல் என்றும் வருதலின் "சொற்றரியினும் பொருள்திரியா வினைக்குறை" என்று இவரே கூறுகின்றார். இஃதொரு முரண்.

"பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை
முதலிய பொருளின் அவற்றின் உருபிடை
ஒழிய இரண்டு முதலாத் தொடர்ந்தொரு
மொழி போல் நடப்பன தொகை நிலைத் தொடர்ச்சொல்"

தொகைநிலைச்சொல் அல்லது தொடர் நிலைச்சொல் என்னாது. இரண்டையும் சேர்த்து ஒன்றற்குப் பெயரிடுவது இலக்கண நெறியாகுமா? அது நிற்க. பழந்தின்னி, பொற்றொடி, நெல்வேலி, மலையருவி, அரசாட்சி, விண்மீன் எனவும், செந்தாமரை, கனிமொழி, அரிவாள் என ஒருசொல் நீர்மையாகவரும் தொகை மொழி கட்கும், நிலங்கடந்தான், தலைவணங்கினான், ஊர்நீங்கினான், அரியணை அமர்ந்தான் எனவரும் உருபு தொக்க தொடர்கட்கும் வேறுபாடு காணாமல், உருபு முதலியவை தொக்கு வருவனவற்றை எல்லாம் ஒரு மொழிபோல் நடப்பனவென்றும், தொகை நிலைத்தொடர்ச்சொல் என்றும் கூறுகின்றார்.

தொகைமொழியுள் இணைந்துவரும் சொற்கள் யாவும் பெயராயே நிற்கும் என்பது தமிழ் மரபு. பெயரும் வினையும் கூடித்தொகையாகவரும் என்கிறார் இவர். வினைத்தொகையுள் முதற்சொல் தொழிற்பெயர் என்பதனை உணராமல் கூறுவாரைப் போல இவரும் நிலங்கடந்தான் என எழுவாய் தொக்கு வரும்

எழுவாய்த் தொடரைத் தொகைமொழி என மயங்கி இவ்வாறு கூறுகின்றார். அற்றன்று, நிலங்கடந்தான் வந்தான், என அவை தொக்கு ஒரு சொல் நீர்மையாய் எழுவாயாக நிற்றலின் அங்ஙனம் கூறினார் எனின் ஆண்டுக் கடந்தான் என்பது வினையாலணையும் பெயராவதல்லது எவ்வாறு வினைமுற்றாகும்? அடுத்து

"இரண்டு முதலாம் இடை ஆறுருபும்
வெளிப்படவில்லது வேற்றுமைத்தொகையே" என்கிறார் அவர்க்கண்டான், நிற்கண்டார். என உருபின்றி விகாரப்பட்டுவரும் தொடர்கள் வேற்றுமைத் தொகை மொழியாகுமா? அடுத்து

"காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை" என்கிறார். காலஞ்சுட்டும் உறுப்பில்லாதவழி அவை முதனிலைத் தொழிற் பெயராவதல்லது வினையாகுமா? தொழிற்பெயருக்கும் வினைச்சொல்லிற்கும் உள்ள வேறுபாட்டினை உணராமல் காலங்கரந்த பெயரெச்சம் என்கிறார். காலங்கரந்து நிற்றல் குறிப்பு வினைக்குரிய இயல்பென்பதனை மறந்து பெயரெச்சம் காலங்கரந்து நிற்குமென மாறு கொளக் கூறுகின்றார். அடுத்து,

"பண்பை விளக்கும் மொழி தொக்கனவும்
ஒரு பொருட் கிருபெயர் வந்தவும் குணத்தொகை" என்கிறார். பண்பை விளக்கும் மொழி என்பது யாது? உரையாசிரியன்மார் "ஆகிய" என்னும் இடைச்சொல் என்கின்றனர். இவர் கருத்துப்படி செந்தாமரை என்பது செம்மையாகியதாமரை என விரியும் செம்மை தாமரைக்கு இயற்கையா, செயற்கையா? ஆக்கச்சொல் செயற்கை பற்றியன்றி வருமா? தொல்காப்பியர் "ஐம்பாலறியும் பண்புதொகு மொழி எனவும் இன்னது இதுவென வரூஉம் இயற்கை" எனவும் தெளிவாகக் கூறியிருப்பவும் அவற்றை உணராமல் பண்பை விளக்கும் மொழிதொக்கன என்கிறார். தொல்காப்பிய நெறிப்படி செந்தாமரை செய்யது தாமரை என விரியும் அதனை செய்யதாகிய தாமரை என விரிக்கினும் இழுக்காது ஆண்டு ஆகிய என்பது ஆக்கச் சொல்லன்று இணைப்பிடைச் சொல்லாகும்.

மற்று ஒரு பொருட் கிருபெயர் வந்தவும் குணத்தொகை என்பதை உரையாசிரியன்மார் இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்றும், இருபெயரொட்டு என்றும் வழங்கி நிலை பெறச் செய்து விட்டனர். இருபெயரொட்டுப் பண்புத்தொகைக்கு அவர்காட்டும் உதாரணம் ஆயன்சாத்தன் சாரைப்பாம்பு முதலியன. உண்மையாக நோக்கின் ஒரு பொருளில் இருபெயர்கள் வாரா, வரின் அவை அடுக்கு எனப்படும். இவர் உதாரணங்காட்டும் இரு பெயர் ஒட்டுக்கள் யாவும் வண்ணம் வடிவு சாதி குடி முதலிய பண்புள் யாதாயினும் ஒன்றனுள் அடங்கும். ஆயன்சாத்தன் எனின் ஆயன் சாதியைக் குறிக்கும். சாரைபாம்பு என்பவற்றுள் சாரை தொழிலைக் குறிக்கும் பிற பாம்புகள் வளைந்து செல்லும் சாரைப்பாம்பு நேரே சரிந்து செல்லும். இவையெல்லாம் அடைமொழிகளே தவிர ஒருபொருள் சுட்டிவரும் இரு சொற்களல்ல. மற்று முருகவேள், சிவபெருமான் என வருவனவோ எனின். முருகவேள் என்பது வேள் வேலனைக் குறிப்பின் முருகு அழகைக் குறிக்கும். சிவபெருமான் என்பவற்றுள் சிவம் செம்மையைக்குறிக்கும்.

மற்று சிவராமன், இராமகிருட்டிணன் என்பவை இரு பெயரொட்டாகாவோ எனின் இவைபோல் வன இடுகுறிப்பெயர். குறியீட்டின் பயத்தவாய் ஒரு சொல் நீர்மையவாக நிற்கும் அன்றேல் சீதாராமன், ராதாகிருட்டிணன், மீனாட்சிசுந்தரன் என்னும் பெயர்கள் விபரீதப் பொருள்தருவனவாகிவிடும். இன்னோரன்ன வற்றைத் தெய்வப் பெயர்களாக மக்களைச்சுட்டி வரும் அடையடுத்த ஆகுபெயர் எனலே சாலும். அடுத்து

"ஐந்தொகை மொழி மேல் பிற தொகல் அன்மொழி" என அன்மொழித்தொகைக்கு இலக்கணங் கூறுகிறார். இருசொற்கள் கூடி ஒருதொகையாய் ஒன்றற்கு உரிமையுற்றபின் அதுவே வேறொரு தொகைக்கும் உரியதெனல் பொருந்துமா? 'பொற்றொடி' என்பது வேற்றுமைத் தொகையாயின் பொன்னாலாகிய தொடி என்பது பொருள் அன்மொழித் தொகையாயின் (தொடியை அணிதற் குரியவளாகும்) பெண்மகள் என்று பொருள் அதனான் அறிவியல் நோக்குடைய தொல்காப்பியர், "பண்புதொக்க பெயர் வயினானும் உம்மை தொக்க பெயர் வயினானும் வேற்றுமை தொக்க பெயர் வயினானும் ஈற்று நின்றியலும் அன் மொழித் தொகையே" என்றார். ஒரு தொகையானபின் அதுவே பிறிதொரு தொகையாகாது என்பதனை இந்நூற்பாவிற்குச் சேனாவரையர் வரைந்த உரையானும் அறிக.

இனி இறப்பு, எதிர்வு நிகழ்வெனக்காலம் மூன்றே என்பது நால் வகைச் சொற்களுக்கும் பொதுவிலக்கணமா? இதனைப் பொதுவியலுள் கூறுவது இலக்கண நெறியாகுமா? அடுத்து இடையியலுள்

"வேற்றுமை வினை சாரியை ஒப்புருகள்
தத்தம் பொருள இசைநிறை அசைநிலை
குறிப்பு என் எண்பகுதியில் தனித்தியல் வின்றிப்
பெயரினும் வினையினும் முன்பின் ஓரிடத்து
ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச்சொல்" என்கிறார்.

வினையுருபுகள் என்பவை எவை? உரையாளர் அன் ஆன் முதலிய பால்காட்டும் விகுதிகளை வினையுருபுகள் எனக்கொள்கின்றனர். கண்ணன், அந்தணன், அரசன், சேரமான், மலையமான் எனப்பெயர் விகுதியாகவும் வருவனவற்றை வினையுருபுகள் எனல் பொருந்துமா? கால இடைநிலைகள் பெயரிடை நிலைகள் என இடைச் சொற்கள் இடையிலும் வரும். ஈண்டு முன் பின் ஓரிடத்து வரும் எனல் குன்றக் கூறலன்றே? அடுத்து உரிச்சொல் இலக்கணமாகப் "பல்வகைப்பண்பும் பகர்பெயராகி, ஒருகுணம் பல குணம் தழுவிப் பெயர்வினை ஒருவாசெய்யுட் குரியன உரிச்சொல்" என்கின்றார். பெயர்ச் சொற்களுள் பல பல் பொருள் தருதலின் அதனை உரிச்சொற்கே உரிய இலக்கணம் போலக் கூறுதல் மயங்க வைத்தலாம். மற்றும் நுவற்சி (சூ-458) முழக்கிரட்டு (சூ-459) என்னும் நூற்பாக்களில் கூறப்பெறும் உரிச்சொற்கள் எல்லாம் பெயராகவே வருமா? உயிர்க்குணம் (சூ-452) பொருட்குணம் (சூ-454) தொழிற்குணம் (சூ-455) பற்றிய சொற்கள் எல்லாம் செய்யுட்கு மட்டுமே உரியவையா? இவையெல்லாம் பிறழ உணர்த்தலாகாவோ?

மற்று "வானவர் மக்கள் நரகர் விலங்குபுள் ஆதி செவியறிவோடையறி வுயிரே" என்கிறார் இது அறிவியலாகுமா? அற்றன்று பொறியும் புலனும் பற்றி இவ்வாறு கூறினார் எனின் அறிவருள், மானம், நிறை, பொறை, ஓர்ப்பு கடைப்பிடி (சூ-452) முதலிய குணங்களை ஐயறிவுயிர்கட்குரியவையாகுமா? இங்ஙனம் தொடக்க முதல் இறுதிவரை இலக்கணம் கூறும் முறைமையும், நூற்பாயாப்பு நிலையும் பிழையாகவே இருத்தலை நோக்கிய அறிஞர். பா.வே. மாணிக்கநாயக்கர் அவர்கள் நன்னூலைக் குற்றமே மலிந்த குறுஞ்சுவடி என்று உணர்த்தினார். நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் பவணந்தி தமிழிலக்கணச் செம்மாப்பிற்கும் பெருங்கேடு செய்துவிட்டார் என வருந்தினார்.

இங்ஙனம் தமிழ் மொழியமைப்பினையும் தொல்காப்பிய இலக்கண நெறியினையும் ஓராமல் சினேந்திர மதத்தை மேற்கொண்டு வீரசோழியம், நேமிநாதம், அவிநயம் முதலிய நூல்களின் அடிப்படையில் செய்யப் பெற்றுள்ள நன்னூலைத் தமிழறிஞர் பலர் மேற்கோள் நூலாகப் போற்றி வருதலைக் காணுங்கால் வியப்பே மேலிடுகிறது. தமிழர்கள் எதையும் தாங்கும் வீறுடையார் போலும்.

இந்நூலாசிரியர் தஞ்சாவூர் கரந்தையில் விசயாம்பாள் சந்திரசேகரனார்க்கு இரண்டாவது மகனாக 18.1.1924 இல் பிறந்தார் கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவர் கல்லூரியிற் பயின்று 1950 இல் புலவர் பட்டயம் பெற்று அக்கல்லூரியிலேயே பேராசிரியராகவும் துணை முதல்வராகவும் பணியாற்றி 1982 இல் பணியினின்று ஒய்வு பெற்றார். பின்னர்த் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சங்க இலக்கிய அகராதித்துறையில் பணியாற்றினார் கரந்தை தமிழ்ச் சங்கப் பணிகளிலும் நூல் வெளியீடுகளிலும் பங்கேற்றும் "தமிழ்ப் பொழில்" பதிப்பாசிரியராகவும் அமர்ந்து தொண்டாற்றி வருகிறார்.

தஞ்சைத் தொல்காப்பியர் கழகத்தின் தலைவராக இருந்து பல்லாண்டுகள்தொண்டு புரிந்தார். "கரந்தைக் கோவை" முதலிய இலக்கியங்களையும் "புலவருள்ளம்" "ஆதிமந்தி" முதலிய கவிதை நாடகங்களையும் படைத்துள்ளார் இவை தமிழகப் பல்கலைக் கழகங்களில் இளங்கலை, முதுகலைப் பாடநூல்களாக ஏற்கப்பெற்றுள்ளன. பல்வேறு இயல் இசைக்கருத்தரங்கங்களில் பங்கேற்றுக் கட்டுரைகள் அளித்துள்ளார் இலக்கண இலக்கிய ஆய்வுக்கட்டுரைகள் பலவரைந்துள்ளார் பன்னூறு கவியரங்குகளிற் பங்கேற்றும் தலைமை தாங்கியும் கவிதைப் பணியாற்றியுள்ளார் தமிழிசைப் பாடல்கள் பல படைத்துள்ளார் வானொலியில் பல இலக்கியப் பேச்சுக்கள் நிகழ்த்தியுள்ளார், நாடகங்களில் நடித்துள்ளார் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்திற்குப் பல நூல்கள் பதிப்பித்துத் தந்துள்ளார்.

தொல்காப்பியம் மூன்றதிகாரங்கட்கும் அறிவியல் நோக்கில் ஆராய்ச்சிக் காண்டிகையுரை வரைந்து வெளியிட்டுள்ளார். தென்னூல் என்னும் பெயரில் புதிய இலக்கண நூலைப் படைத்துள்ளார் முத்தமிழ்த் தொண்டாற்றி வரும் இவருக்கு இலக்கிய மன்றங்கள் பல பாவலரேறு, கவிஞர் கோ செஞ்சொற் கவி வலவன் தொல்காப்பியப் பேரறிஞர், தொல்காப்பியச் சுடர் தொல்காப்பியச் செம்மல் முதலிய பட்டங்கள் வழங்கிப் பாராட்டியுள்ளன. தமிழக அரசு பாரதிதாசன் விருதும் மதுரைப் பல்கலைக் கழகம் தமிழ்ப் பேரவைச் செம்மல் விருதும் வழங்கிச் சிறப்பித்துள்ளன. உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் விருதளித்துப் பாராட்டியுள்ளது.

அன்னைத் தமிழுக்கு அரிய பணிகள் ஆற்றி உலகப் புகழை ஈட்டியுள்ள புலவர் பாவலரேறு பாலசுந்தரனார் வளமெலாம் பெற்று வாழ்க என வாழ்த்துவோமாக.

இந்நாள் இருவகை வழக்கிலும் பயின்று வரும் சொற்களுள் ஏறத்தாழ மூவாயிரம் சொற்களுக்குப் பொருள் விளக்கங்கள் தரும் "மொட்டும் மலரும்" என்னும் மூன்று தொகுதிகளும், எழுத்து, சொல், பொருள், யாப்பு பற்றிய இலக்கணக் கலைச் சொற்பொருள் விளக்க அகராதிகளும் "மொழியாக்க நெறி மரபிலக்கணம்", "மடைமாறிய தமிழ் இலக்கண நூல்கள்" "மொழி இலக்கண வரலாற்றுச் சிந்தனைகள்" என்னும் நூல்களும் வெளிவருகின்றன.

தமிழ்த் தொண்டர் கோ. முத்துப்பிள்ளை—சென்னை.